**அன்று காலை எழும்போதே உதய ரேகாவுக்கு ஒரே குதூகலம்!**

**தன் பெயர்க் காரணம் என்று, சூரியன் அவனது காலைக் கதிர்களை அனுப்பி இருளைக் கலையச் செய்வதை பார்த்து ரசிப்பது அவளுக்கு பழக்கம்.**

**வேகமாக இருள் கலைந்து, இங்கும் அங்கும், விரிந்து பரந்த வானவெளி யெங்கும் வெளிச்சம் பரவுவதை, ஆவலுடன் கண்டு ரசிப்பாள்.**

**அவளுடைய தாயார் அது பற்றிச் சொல்லியிருக்கிறாள். அவளுக்கு ஏன் அந்தப்பெயர் வைத்தார்கள் என்று.**

**இருட்டிக் கிடந்த பெற்றோரின் வாழ்வின் விடியலின் வெளிச்சத்தைக் கொண்டு வந்தவள் அவள்தானாம். அதனால்தான் உதய ரேகை என்று அந்தப் பெயராம்.**



அடுத்தவள் பானுரேகா. சூரியனின் ஒளியாகவே பிறந்தவள். பார்க்கவும் அப்படித்தான் இருப்பாள்.

ஆனால், உதயரேகா பிறந்த பிறகுதான் வெளிச்சம்..... "அதற்குமுன் மிகவும் கஷ்டப்பட்டீர்களா?" என்று உதயா ஒரு தரம் தாயிடம் விசாரித்திருக்கிறாள்.

அவள் அறிந்து வீட்டில் கஷ்டம் கிடையாது. ஓகோ என்று பணத்தில் புரளவில்லை என்றாலும், இல்லை என்று இழுத்துப் பிடிக்கவும் நேர்ந்தது இல்லை.

வீட்டில் கார் இல்லை என்றாலும், தந்தையிடம் ஸ்கூட்டர் இருந்தது. அவசரத்துக்கு அவளும் எடுத்துக் கொள்வாள். சேர்ந்து வெளியே செல்லும்போது, ஆட்டோ, டாக்ஸி செலவை அவர்கள் பெரிதாக எண்ணியது இல்லை. எண்ணும்படியாக இருக்கவுமில்லை.

அந்த வீட்டில் செலவை இழுத்துப் பிடித்த ஒரே தருணம், தங்கை, பானுரேகாவைப் படிப்புக்காக வெளிநாட்டுக்கு அனுப்பியபோதுதான். அதுவும், உதயா வேலையில் சேர்ந்து சம்பாதிக்கத் தொடங்கியதும் சரியாகிப் போயிற்று...

சின்ன வயதில் இருந்தே, பானுதான் கெட்டிக்காரி. பெயருக்கேற்ற பிரகாசம். பேரழகி. படிப்பில் முதல். எனவே அவள் விரும்பிய படிப்பை படிக்க வைப்பதுதான் முக்கியமான கடமை என்று வீட்டில் எல்லோருக்குமே தோன்றியது.

உதயரேகா உட்பட.

அதிலும், வெறும் எழுபது சதவீத மதிப்பெண்களை வைத்துக் கொண்டு, எந்தவிதமான பெரிய படிப்புக்கும் உதயா ஆசைப்படவில்லை.

அலுவலக நிர்வாகம் பற்றி ஒரு 'கோர்ஸ்' செய்து கொண்டிருந்தாள். அதையுமே, இடையில் விட்டுவிட்டு வேலையில் சேர்ந்ததையும், அவள் பெரிதாகக் கருதவே இல்லை.

எனவேதான், தாயார் இருட்டு பற்றிக் கூறியதைத் தெளிவுப்படுத்திக் கொள்ள அவள் விரும்பியது. ரேவதியும் மறைக்காமல் சொன்னாள்.

"அப்போதெல்லாம், என்ன காரணம் என்று தெளிவாகச் சொல்ல இயலாது. ஆனால், எப்போதும், உள்ளே ஒரு கலக்கம், எப்போதும் இருக்கும். வாழ்க்கையே இருட்டடித்துப் போனது போன்ற மனநிலை. இருட்டுக்குள்ளேயேதான் இருக்கப் போவது போன்ற உணர்வு. எங்கே என்ன நடந்தாலும், பழி அப்பா மீதோ, என் மீதோதான் விழும். போதிற போக்கில், மழை பெய்தால் கூட, அது நானோ, அப்பாவோ செய்த தப்பாகத்தான் ஆகிவிடும். குறைந்த பட்சமாக, அன்று துவைத்த துணிகளையாவது, வெளியே உலர்த்தி வைத்து, அவை நனைந்து வாங்கிக் கட்டிக் கொள்வோம். அது... ஒருவேளை, அப்பா சம்பாதித்துக் கொண்டு வந்தது, அவருடைய மற்ற சகோதரர்களின் வருமானத்தைவிட, மிகவும் குறைவாக இருந்ததால் அப்படியெல்லாம் நடந்ததோ, என்னவோ?"

"போங்கம்மா! எவ்வளவு பணம் கொண்டு வந்தால் என்ன? தப்பு, சரி, நியாய அநியாயம் எப்படிப் புரியாமல் போகும்?" என்று எதிர்ப்புக் குரல் கொடுப்பாள் உதயரேகா.

"அது அப்படித்தானம்மா. மகாபாரதக் கதை நெடுகிலும், அமைச்சரான விதுரர், அவருடைய அண்ணனும் அரசருமான திருதராஷ்டிரனுக்கு அவ்வப்போது, உலக நடப்பு, நியாய அநியாயங்கள் பற்றியும், நீதி, நெறிமுறை பற்றியும் எடுத்துரைப்பது போல வந்துகொண்டே இருக்கும். அவற்றைத் திரட்டி, விதுர நீதி என்பார்கள். அதில் அவர் அப்படித்தான் கூறுகிறார். ஓர் இடத்தில், ஒரு தப்பு நேர்ந்தது என்றால், அங்கே இருப்பவர்களுள் யார் ஏழையாவும் பலமற்றவனாகவும் இருக்கிறானோ, அவன் மீதுதான் அந்தப்பழி விழும் என்கிறார். நீயே யோசித்து பார். யாராவது, தோற்றவன் நல்லவன் என்று எதிலாவது வருகிறதா?" என்று கேட்டாள் அன்னை.

சற்று யோசித்து பார்த்துவிட்டு இல்லை என்பது போலத் தலையசைத்துவிட்டு கண்கள் விரிய, "அப்படியானால், ராவணனும் துரியோதனனும் கூட, நல்லவர்களாகவே இருந்திருக்கலாமா, அம்மா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் உதயா.

"அது தெரியாதம்மா! ஆனால், அப்பாதான் ஒருதரம் இந்த விதுரநீதியைப் படித்துவிட்டு என்னிடம் சொன்னார். நமக்கு நல்ல காலம் வரும்போது, எல்லாம் சரியாகிவிடும். இப்போது பொறுத்துப் போவோம், என்பார். அதேபோல, நீ உருவான மறு மாதம், அப்பாவுக்கு பெரிய வேலை கிடைத்தது. எல்லாம் நன்றாகவும் ஆகிவிட்டது."

"பணத்துக்காக வருகிறார்கள் என்று ஆத்திரம் வரவில்லையாம்மா?"

"உலக நடப்பு இது என்று தெரிந்த பிறகு, எப்படிம்மா கோபம் வரும்? அத்தோடு? இருளை நீக்கி வாழ்வில் வெளிச்சத்தைக் கொண்டு வந்த நீ இருக்கும் இடத்தில், எதிர்மறை உணர்வுகள் எப்படி வரும்? எந்நேரமும் சிரித்த முகமாக இருப்பாயா, எல்லோரும் உன்னைத் தூக்கித் தூக்கி வைத்துக் கொஞ்சுவார்கள். நம் பிள்ளையைத் தூக்கி கொஞ்சுகிறவர்களிடம் எப்படிடா கோபப்பட முடியும்?"

"என்னைவிட, பானுவை அதிகம் கொஞ்சியிருப்பார்கள். இல்லையாம்மா?"

கேள்வி என்பதைவிட, பூமி சுழலும் என்பது போன்ற ஒரு நிச்சயமான உண்மையை அறிவிப்பது போன்று கூறினாள் பெண்.

"அதுதான் இல்லை." என்றுரைத்து, மூத்த மகளை வியக்க வைத்தாள், தாயார்.

"என்னது?" என்று ஆச்சரியப்பட்டாள் பெண். "பானுதானேம்மா, ரொம்ப அழகு? ஃபோட்டோக்களில் பார்த்தால் தெரிகிறதே. அத்தோடு, என்னைவிட நல்ல நிறம் வேறு. படங்களில் பார்க்கும்போதே, தூக்கிக் கொஞ்ச வேண்டும் போல இருக்கிறதே" என்று காரணமும் காட்டினாள்.



"அழகுதான். ஆனால், அவளைத் தூக்கிக்கொண்டு நிம்மதியாக... அதைவிட, சுகமாக இருக்க முடியாது எனலாம். சிறு வயதில் உன்னைத் தூக்கினால் தூக்குகிறவர்களுக்கும் சுகமாக இருக்கும் விதமாக, அப்படியே பொருந்திக் கொள்வாய். ஆனால், நம் வீட்டுச் சின்னது இருக்கிறதே. அவளை வைத்துக் கொண்டு, நானே பாடாகப் பட்டுப் போவேன். தூக்கிக் கொஞ்சினாலே, முகத்தில்தான் அடிப்பாள். நானும் அப்பாவும் என்றால், பொறுத்துக் கொள்வதோடு ரசிக்கவும் செய்வோம். ஆனால், மற்றவர்கள்?

"சித்தப்பாவின் மீசையைப் பிடித்து, அவள் ஒரு தரம் வலிக்க இழுத்ததில், அவர் அதன்பிறகு, அவளைத் தூக்கியதே இல்லை.

"உன் பெரியம்மா, விரல் நீளச் சரமாவது தலையில் கட்டாயம் வைப்பார்கள். இவளோ, அடுத்தவர் பூ வைத்திருந்து பார்த்தாள் என்றால், கைவெட்டினாலே பிய்த்தெறிந்து விடுவாள். தலைமுடியோடு சேர்த்து இழுத்துப் பிய்ப்பதில் வலி வேறு. பூவைப் பிய்த்துப் போய்விட்டாளே என்று மனக் கஷ்டம் வேறு.

"பெரியப்பா கண்ணாடியை பானு பிடித்து இழுத்து வீசியதில் உடைந்தே போயிற்று. இப்படி எத்தனை தரம் பொறுப்பார்கள்? உடனே 'ஈ'யென்று சிரிக்கும்போது, நமக்கு மறந்து போகும். ஆனால் அவர்களுக்கு அப்படியா? அவள் பிறந்த பிறகே, மெல்ல மெல்ல உறவினர் வருகை குறைந்து, நின்றே போயிற்று எனலாம்?" "ஓகோ. இப்போது புரிகிறது" என்று விழுந்து விழுந்து சிரித்தாள் உதயா. "காரணம் புரிகிறதாம்மா? அவ்வளவு சின்ன வயதிலேயே, எல்லோர் குணமும், நடத்துகொண்ட விதமும் புரிந்து, உங்களைக் கஷ்டப்படுத்தியவர்களைப் பழிவாங்கி, விரட்டி அடித்திருக்கிறாள். அப்போதே எவ்வளவு கெட்டிக்காரியாக இருந்திருக்கிறாள், பாருங்களம்மா!" என்று பரவசமாகப் பெருமைப்பட்ட மூத்த பெண்ணைப் பிரியமாகப் பார்த்தாள் ரேவதி.

இவளுக்குத்தான் தங்கையிடம் எவ்வளவு பாசம்.

அதே போல, உதயா சொன்னது மெய்யாகவே இருக்கக் கூடும். என்றே, அவளுக்குத் தோன்றியது.

தோன்றி, சின்ன மகளிடம் நன்றியுணர்வு கூட உண்டாயிற்று எனலாம்.

ரேவதியாக யாரையும் தண்டிப்பதற்கு விரும்பியிருக்க மாட்டாள்தான். ஆனால், அன்று பட்ட வேதனைகளை அடியோடு மறப்பதும், இயலாதுதானே?

செல்ல மகள் பானுவின் வரவை, இன்னமும் அதிக ஆவலோடு எதிர்பார்க்கலானாள் அன்னை.

ஏற்கனவே, ஆவலான எதிர்பார்ப்புதான்.

மகளை நேரில் பார்த்து, நீண்ட நாலு ஆண்டுகள் கழிந்துவிட்டன!

படிப்பில் கெட்டிக்காரி என்று பள்ளித் தலைமை ஆசிரியையே பானு ரேகாவை 'ஸாட்' எழுதச் சொன்னார்கள். அதில் அவள்

பிரமாதமாகத் தேறிவிடவே, வெளிநாடு போய்த்தான் தீருவேன் என்று அடம் பிடித்துப் போகவும் செய்தாள்.

எப்படியோ, பானு ஒன்றை நினைத்துவிட்டால், அது எப்படியோ நடந்துவிடும். நடத்திக் காட்டிவிடுவாள்.

தலைமை ஆசிரியை தயவில், தங்கும் இடத்தோடு, உதவித் தொகைகள் கொஞ்சம் கிடைத்தன. வீட்டினர்... முக்கியமாக மூத்தவளின் தியாகம் பற்றாக்குறையை ஈடுகட்டியது.

இரண்டு ஆண்டுகள் படிப்புக்காகக் கிளம்பிப்போனவள், உடனே வேலை கிடைத்துவிட, அங்கேயே தங்கிவிட்டாள். வேலை பார்த்தபடியே இன்னமும் படித்து, பதவி உயர்வும் கிடைத்ததால், இடையில் இந்தியாவுக்கு வருகிற எண்ணமே அவளுக்கு வரவில்லை.

இங்கிருந்து எல்லோருமாகப் போய்வரலாம் என்று கிளம்ப, அமெரிக்கா என்ன அருகிலேயா இருக்கிறது? போய் வரும் செலவுதான், கொஞ்சமா?

அதுவும், பானுவின் படிப்புக்காக வாங்கிய கடனையே, ஓர் ஆண்டுக்கு முன்பாகத்தான் கட்டி முடித்தார்கள்.

அப்போதும் மகளைப் போய்ப் பார்த்துவிட்டு வருவதாக, கேசவன் கிளம்பினார்தான்.

ஆனால், அதற்குள்ளாக, உதயாவை மகனுக்குக் கட்டித் தருமாறு, ரேவதியுடைய நெடுநாள் தோழி, பாக்கியம்கேட்டாள். மகனே கேட்கச் சொன்னானாம்.

பலகாலமாக இரு குடும்பங்களும் ஒட்டுறவாகப் பழகுகிறவைதான்.

செல்வம் அங்கே ஒரே பையன். இங்கேயே நல்ல பெரிய வேலையும் கிடைத்துவிட்டது. பார்வைக்கு ஆளும் நன்றாக இருப்பான்.

எல்லாவற்றையும் விட முக்கியமாக, குணம் கேடற்றது. சாது. நன்கு சம்பாதிக்கத் தொடங்கியதுமே, இளைஞர்கள் எப்படியெப்படியோ நடந்து கொள்கிற இந்தக் காலத்தில், அவனை நல் முத்தாகத்தான் கருத வேண்டும்.

உதயாவின் நடத்தையும் அப்பழுக்கற்றது என்பதே பாக்கியத்தையும், அவளுடைய மகனையுமே ஈர்த்திருக்கக் கூடும் என்பது, ரேவதியின் கருத்து.

வீட்டுத் தலைவர் கேசவனுக்கும் அதே கருத்துதான்.

கூடவே, அழகிலும் உதயா ஒன்றும் குறைவில்லை. தங்கையைப் போலப் பார்த்ததுமே இழுக்கும் தகதகப்புக் கிடையாது என்றாலும், கண்ணுக்குக் குளிர்ச்சியாகப் பார்க்கப் பார்க்க மிகுகிற அழகு.

சொல்லப் போனால், அந்த அழகே செல்வத்தைக் கவர்ந்தது எனலாம்.

உதயாவுக்கும் மறுக்கத் தோன்றவில்லை. சிறு வயதிலிருந்தே, செல்வத்திடம் பிரியமும் உண்டு. இப்போது, பெரியவர்களும் பச்சைக்



கொடி காட்டவே, சின்னவர்களுக்கு ரொம்பவும் சந்தோஷமாக இருந்தது.

வேலையில் இருந்து திரும்பும்போது, இருவருமாக எங்கேனும் போய்ச் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, வீட்டுக்குப் போவார்கள். கொஞ்சம் தாமதமாகி விட்டாலும், உதயாவை, செல்வமே வீடுவரை கூட்டி வந்து விடுவான்.

கேசவனுடனும் உட்கார்ந்து பேசிவிட்டுப் போவான்.

பாக்கியம் திருமணத்துக்கு நெருங்கியபோதுதான், ரேவதி கொஞ்சம் தயங்கினாள்.

இரண்டே மக்கள். ஒருத்திக்கு நல்லது செய்யும்போது, மற்றவளும் கூட இருக்க வேண்டும் என்று பெற்றவர்கள் விரும்புவது இயற்கையே அல்லவா?

எதற்கும், எதற்கும் முடிச்சுப் போடுகிறார்கள்? உன் தங்கை எப்போது வந்து, நம் திருமணம் எப்போது நடப்பது என்று செல்வம் எரிச்சல் பட்டுப் பேசியபோதுதான், ஒரு நல்ல சேதியாக, அலுவல் காரணமாக, பானுவே இந்தியாவுக்கு வரப் போவதாகத் தகவல் வந்தது.

இருவாரங்கள் வீட்டில் இருந்து, வேலையைப் பார்க்கும் வாய்ப்பும் அவளுக்குக் கிடைத்திருந்தது.

வீட்டினர் எல்லோருக்கும் ஓர் உற்சாகம்.

திருமணத்தையே முடிப்பதற்கு அவகாசமோ, வசதியோ இராது என்றாலும், உதயரேகாவின் திருமண நிச்சயத்தார்த்தையேனும், சின்னப் பெண் பானுரேகா இந்தியாவில் இருக்கும்போதே, செய்து முடித்துவிட வேண்டும் என்பதில், ரேவதி உறுதியாக இருந்தாள்.

எனவே சின்ன மகள் வரவுக்கு, மேலும் மேலும் முக்கியத்துவம் அதிகரித்துக் கொண்டே போயிற்று.

அன்று அலுவலகத்துக்கு வந்த பிறகே, அன்று மாலையில் அவனோடு வெளியே செல்ல இயலாது என்று செல்வத்திடம் சொல்லவில்லை என்பது, உதயாவுக்கு நினைவு வந்தது

அவசரமாக அவனுக்கு ஃபோன் செய்து விஷயத்தைச் சொன்னாள். "இன்றைக்குப் பூங்காவுக்கு வர என்னால் முடியாது, செல்வம். இன்றுதான் பானு வருகிறாள் என்று நினைவிருக்கிறதில்லையா? வேலை முடிந்ததும், நான் நேரே வீட்டுக்குப் போய்விடுவேன்." என்று விவரம் தெரிவித்தாள்.

"என்ன, நீ" என்று எரிச்சல் பட்டான் அவன் "அவளால் கல்யாணத்தைத்தான் தள்ளிப் போடுகிறார்கள் என்றால், இப்போது என் தேவியின் முக தரிசனத்தைக் கூடத் தடை செய்ய வருகிறாளா? ஆனால் ஒன்று. பானுரேகா கிளம்புமுன், திருமண நிச்சயத்தை முடித்து விடலாம் என்று, உன் அம்மா சொன்னதாக, என் அம்மா சொன்னார்கள். அதற்காக அவளை மன்னித்து, உன் கோரிக்கைக்குச் சம்மதம் தெரிவிக்கிறேன்." என கடுப்பாகப் பதில் சொல்லிவிட்டு கலகலவென்று செல்வம் நகைத்தான்.

கூடச் சேர்ந்து நகைத்தபடியே செல்லை அணைத்துக் கைப்பையுள்

வைத்தாள் உதயா. வேலை நேரத்தில் செல்ஃபோன் சத்தம் கேட்டால், புது முதலாளிக்குப் பிடிக்காது. அதனால் 'ஆஃப்' பண்ணித்தான் உள்ளே வைக்கலாம். மற்றபடி, வேளை கெட்ட வேளையில் அது கூப்பிட்டுத் தொலைத்தால், அதற்காக ஒரு தரம் வாங்கிக் கட்ட நேரும்.

சிரித்துக் கொண்டே செல்ஃபோனை உள்ளே வைத்தாள், அவ்வளவு நேரம் அவளைப் பார்த்தபடியே சென்றவன் போல, மெல்லத் தலையைத் திருப்பியவாறே, அவளுடைய பாஸ் செல்வது தெரிந்தது.

அவள் பேசியதைக் கேட்டிருப்பானா?

தப்பாக ஒன்றும் பேசவில்லைதான். சரியாகச் சொல்லப் போனால், அலுவலகத்துக்குள் வந்து, அங்கே அவனது பகுதிக்குச் சென்று கொண்டிருக்கும் இவ்வளவு நேரத்தில், அவளது சிரிப்பை மட்டும்தான், யோகேந்திரன் கேட்டிருக்க முடியும்.

அத்தோடு, அவளுக்கு இன்னமும் வேலை நேரமும் தொடங்கவில்லை.

யோகேந்திரன் அலுவலகத்துக்கு வந்து, அவனது அறைக்குச் சென்று, அழைத்த பிறகுதான் அவளது வேலை தொடங்கும்.

என்றாலும்... உதயாவுக்குக் கொஞ்சம் உறுத்தலாகத்தான் இருந்தது.

சும்மா என்றால், இப்படி ஓர் உறுத்தல் தோன்றத் தேவையே இல்லைதான். ஆனால் யோகேந்திரனின் பி.ஏ.வாக அவள் வேலை செய்யத் தொடங்கிய முதல் நாளில் இருந்தே, அவன் தன்னிடம் ஒரு சிறு குறை கூடக் கண்டுபிடிக்க விட்டு விடக் கூடாது என்பதில், அவள் பிடிவாதமாக இருந்தாள்.

அதற்காகவே, வேலையில் வெகு கவனமாக இருந்தாள். சுறுசுறுப்போடு செய்தாள்.

இத்தனைக்கும், கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி உணர்வதற்கு, அந்த வேலை ஒன்றும் தெரியாத புதிய வேலை அல்ல.

அவளது கெட்டிக்காரத்தனத்தினாலேயே வேலையில் உயர்ந்து, மகன் படிப்பை முடித்துவிட்டு வரும்வரை எம்டியாக இருந்தவரான பெரியவருக்கு, அதாவது இந்த யோகேந்திரனுடைய தந்தைக்குப் பி.ஏ.வாக இதே வேலையைத்தான் கடந்த ஓர் ஆண்டு காலமாக அவள் செய்து கொண்டிருந்தாள்.

அதுவும் பாராட்டுதற்குரிய விதமாக, பெரியவர் அவ்வப்போது மனம்விட்டுப் பாராட்டியும் இருக்கிறார்.

அப்படியிருந்தும், யோகேந்திரன் பொறுப்பேற்றபின் இந்த ஆறு மாதங்களாக அதிகக் கவனத்துடன் இருந்தாள் என்றால் அதற்குக் காரணம் இருந்தது.

தந்தையின் எம்டி பொறுப்பை யோகேந்திரன் ஏற்றபோது, வேலை நடக்கும் ஹாலில் வைத்து, எல்லா அலுவலர்களுக்கும் மகனை எம்டியாக அறிமுகப்படுத்திவிட்டு, மகனை அவரது கேபினுக்குள் நாராயணமூர்த்தி



அழைத்துச் சென்றார்.

அப்போதெல்லாம் எம்டி அறைக்குள் செல்லும்போதே, நோட்பேடு, பேனாவோடு உதயரேகாவும், பின்னோடு சென்று விடுவாள். வீட்டிலிருந்து வரும்போதே, அன்றைய வேலைகளைத் திட்டமிட்டபடியே அலுவலகத்துக்கு வரும் பெரியவரும், உடனேயே வேலையைத் தொடங்கிவிடுவார்.

அந்தப் பழக்கத்தில், அன்றும் உதயரேகா குறிப்புப் புத்தகம், பேனா சகிதம், அவர்களைத் தொடர்ந்து சென்றும் விட்டாள்.

கம்ப்யூட்டரில் அவள்வேலை செய்யும், வெளிப் பகுதியை தாண்டி, எம்.டி.யின் அறைக்குள்ளே தந்தையும் மகனும் சென்றிருக்கும் வேளையில் அங்கிருந்து பேசும் குரல் மட்டும் கசிந்து வெளியே வந்து கொண்டிருந்தது.

"என்னப்பா நீங்கள். கொஞ்சம் உருப்படியான, வயதானவளாக ஒருத்தியை பி.ஏ.வாக, ஆக்கியிருக்கக் கூடாதா? விஷயம் தெரிந்தவளாகவும், கூடவே, பொறுப்புடனும் இருப்பாளே!" என்று எரிச்சலுடன் மொழிந்து கொண்டிருந்தான், புதிதாக வந்த வெளிநாட்டுப் படிப்புக்காரன் யோகேந்திரன்.

என்ன அநியாயம்? இந்த யோகேந்திரனுக்கு உதயரேகா எந்த அளவுக்குப் பொறுப்புடன் வேலை செய்வாள் என்று என்ன தெரியும்? அவளைப் பற்றி எந்த விவரத்தையும் அறியும் முன்பாகவே, அவள் பொறுப்பற்றவள் என்று முடிவு கட்டிவிட்டானே.

உண்மையில், பொறுப்பு யாருக்கு இல்லை என்று கொதித்தது உதயாவின் மனம்.



## இந்த மனம் எந்தன் சொந்தம் 2

"இனி, இந்த அலுவலகத்தில் நிர்வாகப் பொறுப்பை, இதற்காகவே, படித்துவிட்டு வந்திருக்கும் இவன்தான் கவனிக்கப் போகிறான். நிறுவனத்தின் எம்.டி. பொறுப்பை என் மகனான இவனுக்குக் கொடுத்துவிட்டேன்" என்று சற்று முன்தான், 'யோகம் இன்டர்நேஷனல்ஸ்' நிறுவனத் தலைவரான நாராயணமூர்த்தி, அங்கே பணிபுரியும் அனைவரையும் திரட்டி, அறிவித்திருந்தார்.

எல்லோரையும் தனித்தனியே அறிமுகம் செய்து வைத்தார் என்றாலும், அந்த முதல் அறிமுகத்திலேயே இவனுக்கு எத்தனை பேரை நினைவிருக்கப் போகிறது என்று, உதயரேகா சற்று அலட்சியமாகத்தான் நினைத்திருந்தாள்.

ஆனால், அவனது ஞாபக சக்தி நன்றாக இருந்து என்ன பயன்? அவளைத் தவறாக அல்லவா மதிப்பிட்டுவிட்டான்.

அவளது வேலையை ஒருதரம் அவன் பார்க்கக்கூட இல்லை.

அதற்குள், எல்லாம் தெரிந்த மாதிரி,

இந்த மாதிரி அவசரமும், அதிகப் பிரசங்கித்தனமும் இந்தத் தொழிலுக்கு நல்லது அல்லவே.

அவளது கொதித்த மனம் குடி தணியும் விதமாக, "நீ நினைக்கிற விதமாக, இவன் இல்லை யோகன். வேலையில் ரொம்பவும் கெட்டிக்காரி. எவ்வளவு வேலை கொடுத்தாலும், பொறுமையாக உட்கார்ந்திருந்து, செய்து முடித்துவிட்டுத்தான் வீட்டுக்குப் போவாள். வேலை சரியாகவும் இருக்கும்" என்றார் நாராயணமூர்த்தி.

வேலை என்றுதான், உதயரேகா அங்கே வந்தது. வேண்டும் என்று அவர்கள் பேச்சைக் கேட்கவுமில்லை. ஆனால், மேலும் நிற்பது ஒட்டுக் கேட்பது போல ஆகும் என்று எண்ணி அவள் திரும்பும்போதே, மகன் மீண்டும் பேசினான்.

பெற்றவர் அவ்வளவு சொல்லியும், அதை ஏற்க மனமில்லை என்று தெளிவாகக் காட்டி, "இதையெல்லாம்,நீங்கள் சரியாகக் கவனித்திருக்க மாட்டீர்கள், அப்பா. இப்போதே கூட, அழகாகத் தெரியவேண்டும் என்று, அவள் தன்னை எவ்வளவு அலங்கரித்துக் கொண்டிருக்கிறாள், தெரியுமா? இந்தக் காலத்து இளம் பெண்களுக்குத் தன்னை அழகுப் படுத்திக் கொள்ளவே, பொழுது சரியாகிப் போகும். பாதி நேரம், முகம் கழுவ போவதாகச் சொல்லி, மேக்கப் தான் செய்து கொண்டிருப்பார்..." என்று மேலே மேலே அவன் கருத்திலேயே உறுதியாகப் பேசிக் கொண்டிருந்தான்.

இடையே, பெரியவர் குறுக்கிட முயன்றதையும் மதிப்பதாகத் தெரியவில்லை.

இருமுறை முயன்றுவிட்டு, தொண்டை கனைத்து, "உதயாவின் வேலையைப் பார்த்தால் உனக்கே..." என்று சற்று அழுத்தமான குரலில் பெரியவர் இடைவிட்டுச் சொல்லலானார்.

அவள் இருப்பது தெரியாமல் பேசுகிறார்கள். இப்போது தெரிந்தாலோ, அவள் வேண்டுமென்று ஒட்டுக் கேட்டதாகவே முடித்துவிடும்.

குறைந்த பட்சம் இந்த யோகேந்திரன் அப்படி யேதான் முடிப்பான்.

அடிப்படையே இல்லாமல் குறை சொல்லுகிறவன், அதற்கொரு வாய்ப்புக் கிடைத்தால் விடுவானா?

அப்படியொரு வாய்ப்பை, அவனுக்கு கொடுக்கவே கூடாது என்று எண்ணி, அவள் வந்த சுவடே தெரியாமல் சத்தமின்றி வெளியேறினாள்.

பெரியவர் வெகு அழுத்தமாகச் சொன்னாரோ என்னவோ, உதயரேகாவின் வேலையில் எந்த மாற்றமும் நேரவில்லை. அவள் எம்.டி.யின் பி.ஏ.வாகவேதான் இருந்தாள்.

முன்பு, பெரியவர் நாராயணமூர்த்திக்கு இப்போது அவருடைய மகன் யோகேந்திரனுக்கு.

ஆனால், முதல் நாளன்று, இப்படித் தொடங்கியதுதான். இன்று



வரையிலும் யோகேந்திரன், அவளிடம் குறையே காண முடியாதபடி அவள் நடந்து வந்திருக்கிறாள்.

வெகு கவனமாக.... மிகவும் திறமையோடு!

ஆனாலும், இந்த ஆறு மாத காலத்தில், அவன் குறைபட்டது இல்லையே தவிர, அவளது வேலையைப் பாராட்டியதும் கிடையாது.

ஆனால், அது பற்றி, உதயா கவலைப்பட்டது கிடையாது.

நரி இடமாகப் போனாலும், வலமாகப் போனாலும் மேலே விழுந்து பிடுங்காதவரை அவளுக்கு எல்லாம் ஒன்றாகத்தான் தோன்றியது.

நல்ல ஊதியம். அனாவசியமாக, அதை விட்டுவிட முடியாது. அப்படியே விட்டுவிட்டு இன்னோர் இடத்தில் வேலைக்குப் போனாலும், அங்கே இவனுக்கு மேல் முசுடாக இன்னொருவன் இருந்து விரட்டமாட்டான் என்று என்ன நிச்சயம்?

தெரியாத கனவானுக்கு தெரிந்த திருடன் மேல். குறைந்த பட்சமாக, இவன் இப்படி என்கிற தெளிவேனும் இருக்கும். அதற்கேற்ப எச்சரிக்கையோடு நடந்துகொள்ளலாம்.

இப்போது போல.

அன்றும் அதே கவனத்துடன் அன்றைக்கு வந்த கடிதங்களைப் பிரித்துப் படித்து, அவைகளை ரகம் வாரியாக உதயா பிரித்து வைத்தாள்.

கடைசியாக இருந்தது அந்தக் கடிதம்.

மேல் முத்திரையை பார்த்ததுமே, ஒரு வாரமாக யோகேந்திரன் பரபரப்பைக்காட்டிக் கொள்ளாமல் அடக்க முயன்றபடி எதிர்பார்த்த கடிதம் என்று அவளுக்குப் புரிந்து போனது.

அவனது பரபரப்பு அவளையும் தொற்றிக் கொள்ள, அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு? அவசரமாக அவனது பகுதிக்குள் சென்று, அவன் முன் வைத்துவிட்டு வந்தாள்.

அவன் படித்துவிட்டான் என்பதற்கு அடையாளமாக, அவன் தனது மற்ற வேலைகளை வேகமாக முடிப்பதில் ஈடுபட்டான்.

அதே வேகத்துடன் உதயாவும் அவன் சொல்லுவதைக் குறிப்பெடுப்பதும், அறிக்கை அல்லது கடித வடிவாக்கி, அந்தந்தத் துறைக்கு அனுப்புவதும், ஃபைல் பண்ணுவதுமாக அன்றைய வேலையைச் செய்து முடிக்கும்படி ஆயிற்று.

வேக வேகமாக வேலை செய்யும்போதே., அவளுக்கு யோசனைதான்.

இதுவேலையை முடித்துவிட்டு வெளியே செல்வதற்காகத் தோன்றவில்லை. இந்த அன்றாட வேலைகளை முடித்துவிட்டு ஒதுக்கிவிட்டுப் பெரிதாக ஒன்றைத் தொடங்கப் போகிறானோ என்று சிறு கலக்கம்.

கலக்கமும், அவன் புதிய வேலையைத் தொடங்குவதற்காக அல்ல. புது வேலை தொடர்பான குறிப்புகளை எடுத்துப் பதிவு செய்வதற்காக, அவள் அங்கேயே இருக்க நேருமோ என்றுதான்.

இருந்திருந்து, அவளுடைய அருமைத் தங்கை வரும் இன்றைக்குப் போய்அதிக வேலையா?

என்ன கஷ்டம் என்றால், தங்கை நினைவில் கவனம் கலைய, அவளுக்கு அதிக நேரம் எடுத்தது.

வழக்கமான வேலையை,

நல்லவேளையாக அவள் எடுத்துக் கொடுத்திருந்த ஃபைல்களில் ஆழ்ந்திருந்தால், யோகேந்திரன் அந்தத் தாமதத்தைக் கவனிக்கவில்லை.

அவள் கம்ப்யூட்டரில் பிரிண்ட் எடுத்துக் கொணர்ந்தவற்றை வேகமாகப் பார்வையிட்டுக் கையெழுத்திட்டுக் கொடுத்துவிட்டு, "எங்கெங்கே அனுப்ப வேண்டுமோ, பார்த்து அனுப்பிவிடு, உதயரேகா. அனுப்பி முடித்துவிட்டு நகலை ஃபைல் பண்ணினால், மணி ஐந்தேகால் ஆகிவிடும். ஆஃபீஸ் பையனை மட்டும்இருக்கச் சொல்லிவிட்டுக் குறிப்புப் புத்தகத்துடன் வா. மேலும் ஓர் அரை... ஆறு மணி வரை வேலை இருக்கிறது" என்றான் யோகேந்திரன்.

அவள் அஞ்சியது போலவே ஆகிவிட்டது. இருந்திருந்து, இன்றைக்கு பார்த்தா, அதிக வேலை?

தயக்கத்துடன், "இந்த வேலை, நாளைக்குக் காலையில் சீக்கிரமாக வந்து செய்யட்டுமா, சார்?" என்று மெல்லக் கேட்டாள், அவள்.

எரிச்சலாக முகம் சுளித்து, "ஏன்? இப்போது ஏதேனும் அழகு நிலையத்துக்குக் கட்டாயம் போவதாக முன்பதிவு இருக்கிறதாக்கும்?" என்று ஏளனமாகக் கேட்டான் யோகேந்திரன்.

இந்நேரம் பானுரேகா வீட்டுக்கு வந்திருப்பாள். அம்மா, அப்பா இருவரும் அவளோடு சளசளவென்று அளவளாவிக் கொண்டிருப்பார்கள்.

தங்கையோடு பேசிச் சிரிக்க, அவளது உடலின் ஒவ்வோர் அணுவும் துடித்துக் கொண்டிருக்கையில் இவனுக்கு அழகுநிலையமாம். முன்பதிவாம்!

அதே எரிச்சலை முகத்தில் காட்டி, "அதில் தப்பு என்ன சார்?" என்று விழி தளராமல் பார்த்து உதயரேகா கேட்கவும், அவன் முகம் லேசாகக் கன்றியது.

"தப்பு எதுவுமில்லை. ஆனால் இந்த வேலை சற்று அவசரம். தவறின்றி இருப்பதோடு ரகசியம் காக்கப் படவும்வேண்டும். அதற்காகத்தான், உன்னைக் கேட்டேன்." என்று அவளுக்கு அளித்த அதிக நேரத்து வேலையின் காரணத்தைத் தெளிவுப்படுத்தினான்.

அநியாயமாகக் குற்றம் சாட்டியதற்காக, யோகேந்திரன் மன்னிப்பு கேட்கவில்லை. அதற்கான விளக்கமும் தரவில்லைதான்.

ஆனாலும் உதயாவின் கோபம் மறைந்து போயிற்று. சற்று மகிழ்ச்சி கூட எட்டிப் பார்த்தது எனலாம்.

விஷ்டர் வாயால் பிரம்ம ரிஷிப் பட்டம் என்பது போல, அவளது



வேலையைப் பாராட்டிவிட்டானே.

தவறற்ற வேலை அவளுடையது. ரகசியம் காக்கிறவளும் கூட.

"ஐந்தே காலுக்கு வருகிறேன் சார்" என்று சுருக்கமாக உரைத்துவிட்டு, ஃபைல்களுடன் வெளியேறினாள் அவள்.

அன்றாட வேலைகளை முடித்தபோது, திரும்பிச் செல்லுவது பற்றிய யோசனை அவளுக்கு வந்தது.

ஆறு மணிக்கு மேல், இங்கிருந்து பஸ் நிறுத்தத்திற்குப் போய், பஸ் கிடைத்து வீட்டுக்குப் போவதானால், ரொம்பத் தாமதம் ஆகிவிடும்.

அதுவும், சரியாக ஆறு மணிக்கு அந்த நிறுவனத்திற்கு வரும் பஸ்ஸை விட்டுவிட்டால், அடுத்த பஸ் எப்போது வரும் என்று சொல்ல முடியாது.

எம்.டி. ஆறு மணிக்கே வேலையை முடித்து அனுப்பிவிட்டாலும் அந்த பஸ்ஸைப் பிடிக்க முடியாது.

தவணை முறையில் பணம் கட்டியாவது, சீக்கிரமாக ஒரு ஸ்கூட்டி வாங்கியே தீர வேண்டும் என்று அன்று முடிவு செய்தாள் உதயா. ஆனால், அது இன்றைக்கு உதவாதே.

யோசித்துவிட்டு, செல்வத்துக்கு ஃபோன் செய்தாள் உதயா.

நல்ல வேளையாக அவன் வரவேண்டாம் என்று சொன்னதால், அவன் தாமதமாகவே கிளம்பப் போவதாகச் சொல்லியிருந்தான். ஓர் ஐந்து பத்து நிமிஷ அதிகத் தாமதத்திற்கு அவன் ஆத்திரப் பட மாட்டான்.

திரும்பிச் செல்வதற்கு ஏற்பாடு செய்து விட்டதாலோ என்னவோ, உதயரேகாவுக்கு வேலையில் ரொம்பவே ஈடுபட்டுச் செய்ய முடிந்தது.

யோகேந்திரன் சொன்ன விவரங்களைக் குறிக்கும்போதே, அவளுக்குப் பிரமிப்பாக இருந்தது.

ஓர் இத்தாலிய நிறுவனத்துடன் சேர்ந்து, 'ஆட்டோ மொபைல்' உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் பெரிய தொழிற்சாலை ஒன்றை தொடங்குவதற்கான ஏற்பாடு.

அடிப்படைப் பேச்சு வார்த்தைகள் முடிவடைந்து, ஒப்பந்தமே கையெழுத்தாகிற நிலை.

கொள்கை ரீதியான ஒப்பந்தம் ஒன்று ஏற்கனவே கையெழுத்தாகி இருந்தது.

இதில் சிறப்பு என்னவென்றால், இரு நிறுவனங்களுமே, இதே பொருட்களைத் தயாரித்து, ஓரளவு பெரிய அளவிலேயே விற்பனை செய்து கொண்டிருப்பவைதாம். இப்போதே, பெரிய பெரிய கார், பைக், ஸ்கூட்டர் நிறுவனங்கள், தரத்துக்காகவே இவர்களிடம் பல பொருட்களை வாங்கிக் கொண்டுதான் இருந்தார்கள். எனவே, தயாரித்த பொருட்களுக்கு, முழுக்க முழுக்க புது வாடிக்கையைத் தேடிப் போகிற கட்டாயம் அவர்களுக்கு இல்லை. ஏற்கனவே தயாரித்து விற்றுக்

கொண்டிருப்பவற்றை, தேவைக்கு ஏற்ப, அதிகமாகத் தயாரிக்கப் போகிறார்கள். அவ்வளவே.

ஆனாலும் எவ்வளவு!

"ஏன் உதி உன் பாஸ் என்ன 'ரியல் எஸ்டேட்' தொழிலில் இறங்கப் போகிறாரா? பயங்கரமாக நிலம் வாங்கிக் கொண்டே போவதாகத் தெரிகிறதே" என்று செல்வம் ஓரிரு முறை சொன்னது அவளுக்கு இப்போது நினைவு வந்தது.

அவ்வ.. வளவு நிலம் ஏன் என்றும் இப்போது புரிந்தது.

இந்தப் பிரமிப்பினூடே, இதை அவளை மட்டுமே நம்பி, விஷயமறிய விட்டிருக்கிறான் என்ற எண்ணம் தோன்றி, அவளுக்குப் பூரிப்பைத் தந்தது.

வேலைக்காகத்தான்.

என்றாலும், சில மதிப்பீடுகள் கசிந்து போட்டி நிறுவனங்களுக்குப் போகுமானால், அதை விடவும் குறைத்துக் காட்டி, இந்த ஒப்பந்தத்தையே கெடுத்து அவர்கள் பெற்றுவிடக் கூட வாய்ப்பு இருந்தது.

லஞ்சமாகச் சில பல லட்சங்கள் கிடைக்கக் கூடும்.

ஆனால், பணத்துக்காக உதயா அப்படித் துரோகம் செய்ய மாட்டாள் என்ற நம்பிக்கை யோகேந்திரனுக்கு இருப்பதால்தானே, இந்த வேலையைச் செய்வதற்கு அவளைக் கூப்பிட்டிருக்கிறான்.

என்னவோ, தலையில் மகுடமே சூட்டிவிட்ட உணர்வோடு, வேலையை வேகமாகவும் கவனத்துடனும் செய்யலானாள் உதயா.

தங்கையின் நினைவு கூட, இப்போது அவ்வளவாகத் தோன்றவில்லை.

யோகேந்திரன் கொடுத்திருந்த குறிப்புகளை வைத்துக் கொண்டு, தொழிற்சாலைஅமைப்பு, உற்பத்திச் செலவு, எல்லாவற்றிலும் இருவரின் பங்களிப்புகள் எல்லாவற்றையும் தோராயமாகக் கணக்கிட்ட உதயாவுக்கு, ஒரு முரண்பாடு உறுத்தியது.

இன்றையக் கணக்கு எல்லாம் தோராயம்தான். சுமார் எவ்வளவு ஆகும் என்று ஓர் இலகு மதிப்பீடு. இதை இருபுறமும் ஒத்துக் கொண்டால், இன்னமும் தெளிவாக அமைத்துக் கொண்டு ஒப்பந்தத்தைத் தயாரிக்க வேண்டும்.

எனவே, அந்தக் கடைசிப் பக்கத்தை மட்டும் காப்பி எடுத்துக் கொண்டு யோகேந்திரனிடம் சென்றாள்.

லேப்டாப்பில் மூழ்கி இருந்தவன், அவளை நிமிர்ந்துகூடப் பாராமல், "என்ன?" என்றான் ஒற்றைச் சொல்லாக.

உன்னிடம் பேச எனக்கு நேரமில்லை என்று, சொல்லாமல் சொல்கிறானாம்.

அவளும் மொட்டையாகவே "இந்த மதிப்பீட்டில் தப்பு இருக்கிறது. இதன்படி நடந்தால், நாம் அதாவது உங்கள் பக்கமாக அதிகப் பணம் செலுத்த நேரும் சார்..." என்றாள் உதயா. "சுமார் பத்து கோடி!"

இப்போது அவன் நிமிர்ந்து பார்த்தான்.

முகத்தில் லேசாகப் புன்னகை கூட எட்டிப் பார்த்தது எனலாம்.

அந்த முறுவலே வியப்பு என்றால் நஷ்டத்தைச் சொன்னால் சிரிக்கிறானே என்று, அது வேறு ஆச்சரியமாக இருந்தது அவளுக்கு.

"இதைக் கண்டுபிடிக்கத்தான் இவ்வளவு கணக்குகளையும் பார்க்கச் சொன்னேன்" என்றான் யோகேந்திரன் திருப்தியோடு. "இது இறுதி மதிப்பீடு அல்ல. கண்டுகொள்கிறோமா? கண்டுகொண்டாலும், பெரிய ஒப்பந்தத்துக்காக விட்டுக் கொடுத்து ஒத்துக் கொள்கிறோமா என்று நூல் விட்டுப் பார்க்கிறார்கள். இன்னின்ன உருப்படிகளில், இவ்வளவு கூடுதலாக இருக்கிறது என்று குறிப்பெடுத்துக் கொண்டு வா. அனுப்பி வைப்போம்" என்றான் தொடர்ந்து.

அவன் சொன்னபடி வேலையைச் செய்து முடிக்கும் போது, மணி ஆறு பத்து.

செல்வம் கீழே இருந்து, பைக் ஹாரனை அடிப்பது கேட்டது.

எழுந்து வெளியே சென்று, ஜன்னல் வழியே பார்த்து, விரைவில் வந்துவிடுவதாகச் சைகைக் காட்டிவிட்டு வந்தாள், யோகேந்திரன் அவள் முடித்து வைத்த வேலையை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கொண்டுபோய், அவனிடம் காட்டுகிற நேரம் மிச்சம்.

தங்கையின் நினைவு முழு வீச்சில் வந்தது. "அவ்வளவுதானே, சார்? இனி நான் கிளம்பட்டுமா?" என்ற குரலில் கட்டுப்படுத்திய அவசரம் தெரிந்தது.

ஒரு கையசைவால் சம்மதத்தைக் காட்டிவிட்டு, கையிலிருந்த காகிதங்களில் கவனமாக இருந்தான் யோகேந்திரன்.

அவசர அவசரமாகக் கைப்பை, மதிய உணவு பாத்திரம் முதலியவற்றை எடுத்துக் கொண்டு, அலமாரியைப் பூட்டிவிட்டு, வெளியே விரைந்தாள்அவள்.

அவளது வேகம் வியப்பைத் தூண்ட, வெளி அலுவலறைக்குச் சென்று, வெளிப்புற ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த யோகேந்திரனின் முகம் சுருங்கியது.

பைக்கின் பக்கவாட்டுப் பையில் தன் பொருட்களை வைத்து விட்டு, ஓர் இளைஞனின் பைக்கில், பின் இருக்கையில் அவனது தோளைப் பற்றியவாறு அமர்ந்து கொண்டிருந்தாள் உதயரேகா.

எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். பார்வைக்கு நல்ல பெண் போலத் தெரிகிறவள்கூட, உறிஞ்சுவதற்கு இப்படி எவனாவது கிடைத்தால் விடமாட்டாள் போல என்று அருவருப்போடு எண்ணியவாறு மீண்டும் உள்ளே சென்று வேலையில் ஆழ்ந்தான் யோகேந்திரன்.



# இந்த மனம் எந்தன் சொந்தம் 3

தன்னைப் பற்றி யோகேந்திரனின் புதிய கணிப்பு தெரியாததால், அவனது முதல்நாள் அபிப்பிராயத்தை மாற்றிவிட்டோம் என்ற உற்சாகத்துடனேயே அலுவலகத்தை விட்டு வெளியே வந்த உதயரேகாவுக்கு விரைவிலேயே அலுவலகம் அடியோடு மறந்து போயிற்று.

மாடல் மாதிரி எழிலான போஸ்களில் தங்கை அனுப்பியிருந்த அவளது புகைப்படங்கள் நினைவு வந்தன.

நாலு ஆண்டுகளுக்கு முன்பு இங்கிருந்து கிளம்பியபோதும் அவள் அழகிதான். ஆனால் கொஞ்சம் கொழு கொழு அழகி.

'உனக்கு மட்டும்இடுப்பு ஒல்லியாக இருக்கிறதே' என்று எரிச்சல் படுவாள்.

நிலா மாதிரி அழகான முகத்தையும் நிறத்தையும் வைத்துக் கொண்டு, இதற்குப் போய் வருத்தப்படுகிறாளே என்று உதயாவுக்கு வேடிக்கையாக இருக்கும்.

இப்போது பார்த்தால், 'பொய்யோ எனும் இடையாள்' என்று அவளைத் தாராளமாகச் சொல்லலாம்.

பொன்மலர் நாற்றமுடைத்து என்பது போல, பானுரேகா புத்திசாலியும் கூட.

மற்றபடி, வேலையில் சேர்ந்து இரண்டே ஆண்டுகளில் நிறுவனத்தில் தொழில் விரிவாக்கம் பற்றிய வேலையைப் பார்க்கவென்று, அவளை நாடுவிட்டு நாடு அனுப்புவார்களா

இப்படி, அழகு, திறமை எல்லாம் ஒரே இடத்தில் குவித்திருப்பது அவளுடைய தங்கையிடம் மட்டுமாகத்தான் இருக்கும்.

வீடு வந்து சேரும்வரை, தங்கையின் பெருமையை, செல்வத்தின் காது புளிக்கும் அளவுக்குச் சொல்லித் தீர்த்துவிட்டாள் எனலாம்.

இரண்டு மூன்று முறை குறுக்கிட முயன்றுவிட்டு, வேறு வழியின்றிக் கடனே என்று அந்தப் பேச்சைக் கேட்கலானான் அவன்.

வீடு வந்து சேர்ந்ததும், செல்வத்தோடு அவனது பைக்கில் இருந்த தன் பொருட்களைப் பற்றிய நினைவும் அவளுக்கு அடியோடு மறந்துவிட, ஆர்வமும் பெருமையுமாக, "பானு..." என்ற கூவலுடன் வீட்டினுள் ஓடிச் சென்றாள் உதயா.

பெரிய சோபாவில் எழிலாகச் சாய்ந்திருந்தவாறே தமக்கையைப் பார்த்து முறுவலித்த பானுரேகாவின் பார்வை, உதயாவின் பின்னே, அவளது பொருட்களோடு வந்து நின்ற செல்வத்தின் மீது யோசனையாகப் படிந்தது.

பானுரேகாவின் பார்வை சென்ற இடத்தைக் கண்டதும்,

இன்னொரு வகைப் பெருமையோடு, செல்வத்தை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தாள் உதயா.

"நம் பார்வதி ஆன்ட்டி மகன், பானு. செல்வம். குச்சி குச்சியாகக் கையும் காலுமாக பிலானிக்குப் படிக்கப் போனாரே. அங்கே கொஞ்சம் சதை ஏற்றிக் கொண்டு வந்திருக்கிறார். உனக்கு நேர்மாறு" என்று சிரித்தாள் தமக்கை.

"என்ன மாறு? படிப்பை முடித்தார்தானே?" என்று ஒரு மாதிரிக் குரலில் வினவினாள் தங்கை.

ஒரு கணம் திகைத்தவளுக்கு, உடனே புரிந்து போயிற்று.

தான் சற்றுப் பூசினாற் போல் இருந்ததை நினைத்துப் பார்க்க, பானுவுக்கு மனமில்லை.

அதுவும் சரிதானே? உணவில் விருப்பம் உள்ள அவள், எவ்வளவு கஷ்டப்பட்டு இப்படி மெலிந்தாளோ? அதை நினைவுப்படுத்தியது தப்புதானே?

"மாறு என்றால், உன்னைப் போலப் படித்த இடத்திலேயே வேலைப் பார்க்காமல், படித்து முடித்ததும் இங்கே திரும்பி வந்துவிட்டார் என்பதுதான். எல்லோருக்கும் சந்தோஷமாக செல்வத்துக்கும் இங்கேயே நல்ல வேலையும் கிடைத்துவிட்டது.

"அப்படியானால் நான் அங்கே பெரிய வேலை பார்ப்பது உனக்கு சந்தோஷம் இல்லை போலப் பேசுகிறாயே" என்று அப்போது பானு திருப்தியற்றே பேசினாள்.

ஒரு தரம் யோசியாமல் வார்த்தைகளை விட்டதற்கு பட வேண்டியதுதான் என்று தனக்குத் தானே அறிவுறுத்திக் கொண்டு, மேலும் சமாளிக்க முயன்றாள் உதயா.

"ஒரு வகையில், நீ சொல்கிற மாதிரிதான் என்றே கூறலாம், பானு" என்றவள், பானுவின் விழிகள் அகலவும், அவசரமாகத் தங்கையின் அருகே சென்று, அவளது கன்னங்களைக் கைகளில் ஏந்தினாள். "இந்த அழகான முகத்தை நாலு ஆண்டுகளாகப் பார்க்க முடியாமல் எவ்வளவு கஷ்டமாக இருந்தது தெரியுமா? ஃபோனில் குரல் கேட்கும் ஃபோட்டோவில் முகம் தெரியும். ஆனால், இப்படிப் பக்கத்தில் பார்த்து, தொட்டு...." என்றவாறு அன்போடு வருடி, அவளது கைகளைப் பற்றி மென்மையாக முத்தமிட்டாள்.

மனம் இளகி விட, பானுவும் உதயாவை லேசாக அணைத்துக் கன்னத்தில் உதடுகளை ஒற்ற, மூத்தவளின் கண்கள் கலங்கின.

இரு சகோதரிகளின் உணர்ச்சி மயமான சந்திப்பைப் பார்த்து, செய்வது அறியாமல் செல்வம் விழித்துக் கொண்டு நின்றான்.

இரு பெண்களுக்கும், குறைந்த பட்சமாக, உதயரேகாவுக்கு அவன் ஒருவன் அங்கே இருக்கும் எண்ணமே இல்லை என்பது மிகத் தெளிவாகவே தெரிந்தது.

அடுத்தவளாவது, அவன் பக்கம் அவ்வப்போது ஒரு பார்வையைச்

செலுத்தினான் எனலாம்.

அத்தோடு, அவன் நிறுத்திக் கொண்டது கூடப் பெரிய விஷயம் இல்லை அவளுக்கு. அவன் எப்போதோ பழகிய யாரோதான்.

ஆனால் உதயா? விரைவிலே அவனை மணக்கப் போகிறவள். அவளுக்கு, அவனது நினைவே இல்லை என்பது, அவளை உறுத்தவே செய்தது.

ஆனால், இந்த நிலைமையை மாற்ற என்ன செய்வது என்றுதான் அவளுக்குத் தெரியவில்லை.

நல்லவேளையாக இந்தச் சங்கடமான நிலைமையை முடிவுக்குக் கொண்டு வருகிறவளாக, ரேவதி அங்கே வந்து சேர்ந்தாள்.

"உதயா வந்துவிட்டாளா? அவள் குரல் மாதிரி...." என்றவாறு,கையில் கரண்டியுடன் வந்தாள், செல்வத்தைப் பார்த்துவிட்டு "அடடே, நீங்களாதம்பி? வாருங்கள்... வாருங்கள்! நீங்கள்தான் உதயாவைக் கூட்டி வந்தீர்கள் போல. இன்னும் அவள் பையைக் கையிலேயே வைத்துக் கொண்டு... இங்கே கொடுங்கள்... ஏய் உதி, என்னம்மா? தம்பியிடம் வாங்கி வைக்க வேண்டாம்? உட்காருங்கள் செல்வம். இவள்.. பானு... அடையாளம் தெரிகிறதில்லையா? நாலு ஆண்டுகளில், ஆளே மாறிவிட்டாள். பானும்மா, உனக்குச் செல்வம் தம்பியைக் கண்டு பிடிக்க முடிந்ததா? நான் சொன்னேனே... என்னவோ, பெரியவர்கள், எங்கள் ஆசை! கடவுள் அருளால் எல்லாம் நல்லபடியாக நடக்க வேண்டும்" என்று முடித்தாள்.

சமையல் அறையில், எதையோ ஊறிக் கொண்டு இருந்திருக்கிறாள் என்பது நன்றாகத் தெரிந்தது.

கையிலிருந்த கரண்டியை வைப்பதற்கு அவள் இடம் தேட, அதற்குள் "அச்சோ சாரி செல்வம். உங்களை மறந்தே போனேன். கொடுங்கள்" என்று உதயா அவனிடம் இருந்து தன்னுடைய பொருட்களை அவசரமாக வாங்கினாள்.

தொடர்ந்து, "சாரிம்மா! பானுவைப் பார்த்து நாலு ஆண்டுகள் ஆகிவிட்டதா? என்னவோ, கொஞ்சம் ஒரு மாதிரியாகி விட்டது. உட்காருங்கள். என்னம்மா டிஃபன்? ம்ம்ம்... காரட் அல்வாதானே? வாசனையே சொல்கிறதே. உங்களுக்குப் பிடித்ததும்மா. நொடியில் எடுத்து வருகிறேன். சாப்பிட்டுவிட்டு, அப்புறமாக போகலாம் என்ன?" என்று அவள் உள்ளே விரையவும், செல்வத்தின் சிறு எரிச்சல், வெய்யில் கண்ட பனியாக, அடையாளமே இல்லாமல் மறைந்து போனது.

உதயாவைப் பின் தொடர்ந்த செல்வத்தின் பார்வையில் இருந்த கனிவையும் மயக்கத்தையும் கவனித்த பானுவின் திருத்தப்பட்ட புருவங்கள், சற்றே உயர்ந்து வில்லாய் வளைந்தன.

அவள் இருக்கும் இடத்தில், ஓர் ஆண்மகன் இன்னொருத்தியை, அதுவும் உதயாவைப் பார்க்கிறானா?

என்ன ஆச்சரியம்!

கடைக் கண்ணால் குறும்பாக நோக்கி " உதயரேகா கண் பார்வைக்கு மறைந்து உள்ளே போய் வெகு நேரம் ஆயிற்று. ஒரு வேளை இடைக் கதவின் திரையின் வண்ண அமைப்பு உங்களுக்கு மிகவும் பிடித்துப் போயிருந்தால், கல்யாணச் சீரோடு, இந்தத் திரையையும் உங்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கச் சொல்லுகிறேன்" என்று கிண்கிணியாகச் சிரித்தாள் பானுரேகா.

அக்கா வீட்டுக்காரனாகப் போகிறவனைக் கேலி பண்ணத் தொடங்கிவிட்டாள்.

உள்ளூர மகிழ்ச்சியோடு முறுவலித்து, "இருவரும் பேசிக் கொண்டிருங்கள். நான் போய், இனிப்போடு காரமும் சேர்த்து உதிவிட்டு அனுப்புகிறேன்." என்று விட்டு, தேவகியும் உள்ளே சென்றாள்.

சிறு வெட்கமும், ஆவலுமாக, அரைப் பார்வையாக, வருங்கால மைத்துனியை திமிராமல் பார்த்தான் செல்வம்.

"அட சும்மா பாருங்கள் சார். உங்களைக் காதைப் பிடித்து முறுக்குவதற்கு, அக்கா கூடப் பக்கத்தில் இல்லையே. இவ்வளவு பயப்படுகிறீர்களே" என்று மறுபடியும் கிணுகிணுவென்று சிரித்தாள் பானுரேகா.

சதங்கை குலுங்குவதைப் போல, வெள்ளி மணி ஓசை போல, அந்தச் செல்லச் சிரிப்புக்குத் தனி வலிமை உண்டு என்பது அவள் அனுபவத்தில் அறிந்த விஷயம்.

அவள் எதிர்பார்த்தது போலவே, செல்வத்தின் முகமும் மலர்ந்தது. கூடவே ஆவலும்.

கண்ணில் குறுகுறுப்புடன் அவளை நோக்கி, "பயமா? நானா? அதெல்லாமில்லை. சின்ன வயதில் பார்த்தது. திடுதிப்பென்று பேசினால், நீ பயந்துவிடக் கூடாதே என்றுதான்..." என்று முடிக்காமல் நிறுத்தினான் அவன்.

சற்றும் பொருந்தாத அசட்டுப் பேச்சு. நாலு ஆண்டுகளாக, அமெரிக்காவில் தனியே இருந்து படித்து முடித்து வேலையும் பார்க்கிறவன்.

அவள், இவன் திடுமெனப் பேசுவதாலேயே அப்படிப் பயந்துவிடுவாளா? இந்த அச்சம், நாணம், மடம், பயிர்ப்பைப் பெண்களிடம் எதிர்பார்ப்பதை, இந்தத் தமிழ்நாட்டு ஆண்களால் ஒருபோதும் விடவே முடியாது போலும்.

உள்ளூரச் சிரித்தபோதும், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், "இங்கே பெரிய பெரிய 'ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்' எல்லாம் வெளிநாடு போலவே கட்டியிருக்கிறார்களாமே. என்னை ஒரு நாள், அங்கெல்லாம் கூட்டிப் போக உங்களால் முடியுமா, செல்வம்? தனியாகப் போனால், என்னால் அதையெல்லாம் கண்டுபிடிக்க முடியுமோ, என்னவோ? உதயாவைக் கூட்டிப் போகலாம் என்று நினைத்தேன். ஆனால், அவளுக்கு வேலை அதிக முக்கியமாகத் தெரிகிறதே. அதனால்...." என்று சின்னக் குரலில் கேட்டு, முடிக்காமலே இழுத்து, சோகமாக அவனைப் பார்த்தாள் பானுரேகா.. "ஆனால், உங்களுக்குச் சிரமம் என்றால் வேண்டாம். விட்டுவிடுங்கள்!" என்றாள் தொடர்ந்து...

"சே..ச்சே....! சிரமம் எ..என்ன, எனக்கு? உ..உதயாவே கூட்டி..." என்று தடுமாறிக் கொண்டிருந்தவன், கையில் பலகாரத் தட்டுகளோடு உதயா வரவும், அவசரமாக எழுந்து, அவற்றை வாங்கிக் கொண்டு அமர்ந்தான்.

"உனக்கும் அம்மா முறுக்கு அனுப்பினார்கள்." என்று ஒரு தட்டை தங்கையிடம் கொடுத்துவிட்டுத் தானும் அமர்ந்தாள் உதயரேகா.

"உம்.... என்னைப் பலகாரமாகவே செய்து கொடுத்து அம்மா என்னை குண்டாக்கிவிடப் போகிறார்கள்" என்று குறைபட்டாலும், ஒரு முறுக்கை எடுத்து நொறுக்கத் தயங்கவில்லை சின்னவள்.

தங்கை முறுக்கை விரும்பி உண்பதை ரசித்தவாறு, "என்ன செல்வம்? என்னவோ என் பெயர் அடிப்பட்டதே. என்ன விஷயம்?" என்று ஆவலோடு வினவினாள், தமக்கை.

"அ.. அது..அது...." என்று வாய் நிறைய அல்வாவை வைத்துக் கொண்டு செல்வம் திணறும்போதே, "பெரிதாக ஒன்றுமில்லை.. அக்கா, என் வேலை தொடர்பாக, இங்குள்ள பெரிய 'ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்'களைக் கொஞ்சம் சுற்றிப் பார்க்க வேண்டியிருக்கிறது. உனக்கு வேலை அதிகமாக இருந்தால், என்னைக் கூட்டிப் போக முடியுமா என்று கேட்டேன். நீ தப்பாக நினைப்பாயோ என்று மனிதர் அந்தப் பயம் பயப்படுகிறார். என்னைக் கூடத் தப்பாக நினைப்பாயா அக்கா?" என்று கண்களை அகல விரித்துத் தமக்கையை வெள்ளையாக நோக்கி கேட்டாள் பானுரேகா.

"சேச்சே... என்ன பேச்சு இது?" என்று எதிர்மறையாகத் தலையசைத்தாள் உதயா.

"உன்னையும் தப்பாக நினைக்க மாட்டேன். அதே போல, செல்வத்தையும் நான் தப்பாக நினைக்க மாட்டேன். அதற்கு தேவையே இராது என்று எனக்குத் தெரியாதா, என்ன? ஆனால், உங்களுக்கு ஏன் செல்வம் இந்தப் பயம்? உங்களை நான் நூறு சதவீதமாக நம்புவேன் என்று உங்களுக்குத்தான் நன்றாகத் தெரியுமே." என்றவள் தங்கையின் பக்கம் மீண்டும் திரும்பி, "சும்மா பானு வேடிக்கைக்குச் சொல்லியிருப்பாள். அப்படித்தானே?" என்று சிரித்தாள்.

அதற்குள் வாயில் இருந்ததை விழுங்கிவிட்டு "பயம் பற்றி நான் பேசவே இல்லை, உதய். தங்கையை விட்டுப் பிரிய மனம் இல்லாமல், நீயே கூட்டிப் போக விரும்புவாய் என்றுதான் சொல்ல நினைத்தேன். சொல்லி முடிக்குமுன் நீ பலகாரத்தோடு வந்ததில் பேச்சை நிறுத்தினேனா? வாயில் போட்ட அல்வாவை விழுங்குவதற்குள் என்னென்னவோ வளர்ந்து விட்டது" என்றான் செல்வம்.

ஆஹா! எங்கள் அம்மாவின் அல்வாவை ஜாடையாகக் குறை

கூறுகிறீர்களா? இருங்கள். அம்மாவிடம் போட்டுக் கொடுக்கிறேன்... ம்ம்ம்... அத்தையிடம் கூட... வீட்டுக்குப் போய் வாங்கிக் கட்டுவீர்கள்" என்று உதயா மிரட்டுவது போல மொழிய, செல்வம் நடுங்குவது போல நடிக்க இருவருமே கலகலத்து நகைக்கலாயினர்.

சிரிப்பினூடே உதயா தங்கையைப் பார்க்க, "நான் சொன்னதுபோல் இல்லை என்றார். இப்போது நடுநடுங்கி, அவரே நிரூபிக்கிறாரே" என்று பானு சொல்ல, மீண்டும் சிரிப்பு பரவியது.

"ஆனால், ஒன்று சொல்லவேண்டும் உதயா. ஆள் நல்ல அழகனாகத்தான் பிடித்திருக்கிறாய். அமெரிக்காவில் என்றால் எப்போதோ இவரைக் கொத்திக் கொண்டு போயிருப்பார்கள். அதுவும் சிரிக்கும்போது ஆள் சூப்பராக இருக்கிறார். பாராட்டுக்கள்! என்று செல்வத்தின் கையைப் பற்றிக் குலுக்க, அவன் மீண்டும் பல்வரிசையைக் காட்டினான்.

காஃபியோடு வந்த ரேவதியிடமிருந்து, காஃபி ட்ரேயை வாங்கியவாறே உதயா, செல்வத்தைக் கேலி செய்தாள்.

"ஹையோ, சாருக்கு உச்சி குளிர்ந்து விட்டது போல. மேல் படிப்புக்கு அமெரிக்காவுக்குப் போகாமல் விட்டுவிட்டோமே என்ற ஏக்கம், முகத்தில் அப்படியே அப்பி வைத்த மாதிரி தெரிகிறதே, பானு" என்று சிரித்தாள்.

அவளுக்குச் சரியாக, அவனது முகத்தைப் பற்றித் தன்புறம் திருப்பி "எங்கே? ஏக்கம் தெரிகிறதா என்று நன்றாகப் பார்ப்போம்" நெருங்கிப் பார்த்து ஆராய்ந்தாள் பானுரேகா.

"என்ன உதய், இந்த முகத்தை விட்டு விட்டு, அலுவலகத்தில் அதிக நேரம் இருந்துவிட்டு வருகிறாய்? அங்கே, இதைவிட அதிக அழகான முகம் இருந்து உன்னைப் பிடித்து வைக்கிறதா?" என்று தமக்கையும் விடாமல் கிண்டலடித்தாள்.

"சேச்சே... அங்கே வெறும் புளி முகம்தான் இருக்கிறது. நம் மேல் பார்த்து விடக் கூடாதே என்றுதான் பயந்து பயந்து வேலை செய்ய வேண்டியிருக்கிறது."

"என்னவோ நீ சொன்னால் நம்புகிறோம். எதற்கும் ஜாக்கிரதையாக இருங்கள், செல்வா. ஆனால், எனக்கு உதவி செய்வீர்கள் அல்லவா? ப்ளீஸ்..." என்று கெஞ்சலாகக் கேட்டாள் பானுரேகா.

ஏற்கனவே எல்லோரும் ஒத்துக் கொண்டது என்பதால், அவன் இலகுவாகத் தலையாட்ட செல்வம் கிளம்பிச் செல்லும்வரை, வீட்டின் பேச்சும் சிரிப்புமாகக் கலகலப்பாக இருந்தது.

இரவில், இளைய மகளிடம் ரேவதி பேசினாள். "கேலிப் பேச்சு சிரிப்பெல்லாம் சரிதான், கண்ணு. ஆனால் அங்கே போலக் கை குலுக்குவது, தொட்டுப் பேசுவது எல்லாம் இங்கே அவ்வளவாகச் சரிப்பட்டு வராது. கொஞ்சம் பார்த்து நடந்துகொள்" என்று மகளுக்கு அறிவுரை கூறினாள்.



"உதயாவே தப்பாக எண்ணக் காணோம்.. நீங்கள் ஏனம்மா அலட்டிக் கொள்கிறீர்கள்? முன்னைக்கிப்போது ரொம்ப பழங்காலம் ஆகிவிட்டீர்கள் போலத் தெரிகிறதே" என்றாள் முகத்தில் க்ரீம் தேய்த்து மஸாஜ் செய்து கொண்டிருந்த பானுரேகா.

"அதில்லை பானும்மா...."

"அம்மா ப்ளீஸ்...." என்றாள் மகள் எரிச்சலைக்காட்டி" நாலு ஆண்டுகளாக என்னை நானேதான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். எது எனக்கு நல்லது, எது கெட்டது என்று எனக்கே தெரியும். என் விஷயத்தில் அனாவசியமாகத் தலையிட்டு, வீட்டுக்கு ஏன் வந்தோம் என்று என்னை வைத்து விடாதீர்கள். போங்கள்... போய் படுங்கள். நாளைக்கு ஏதோ ஆப்பமோ இடியாப்பமோ செய்யப் போவதாகச் சொன்னீர்களே. அதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று யோசித்துக் கொண்டே படுத்தீர்களானால், ருசி பிரமாதமாக அமையும். போய், அதைச் செய்யுங்கள். போங்கள்" என்று முடித்தாள்.

ஒரு திகைப்புடன், சத்தமில்லாமல் திரும்பிச் சென்றாள் ரேவதி.

அவளுடைய சின்னமகள் சின்னவளாக இருக்கும் போதே, அவளது விருப்பம்போலத்தான் நடந்து கொள்வாள். கொஞ்சிக் குழைந்து, சிரித்து அழுது... நடக்க வைத்துவிடுவாள்.

எல்லோரும் விருப்பமாகவே நடத்தியும் வைப்பார்கள்.

அவளை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தது போல...

இந்த நாலு ஆண்டுகளில், அதிகார பாவனை வந்திருக்கிறது போலும்.

ஆனால், பழக்கமே இல்லாத ஓர் அன்னிய நாட்டில், ஒரு சின்ன பெண் தன்னந்தனியே இருந்துகொண்டு, தன் காரியங்களை வெற்றிகரமாக நடத்திக் கொண்டு வந்திருக்கிறாள் என்றால், அதிகார பாவனைதானே சரியாக இருக்கும்?

வீட்டு மனிதர்களிடம் போலக் கொஞ்சிக் குழைந்தால், தப்பாக நினைத்துவிட மாட்டார்களா?

வீட்டிலுள்ள மற்ற மூன்று பேரின் கெட்டிக்காரத்தனத்தையும் சேர்த்து வைத்து யோசித்து செயல்பட்டிருக்கிறாள்.

இதைப் பாராட்டுவதை விடுத்து, வருத்தப்படுவதா?

அதேபோல, ஆண் பெண் வேறுபாடு இல்லாமல் சேர்ந்து பழகுவதும், இந்தக் காலத்தில், இங்கேயுமே இயல்பாகி விட்டதுதானே?

பழைய இதிகாச காலத்திலேயே 'எடுக்கவோ கோக்கவோ' என்று துரியோதனன் கேட்டதாகக் கதை இருக்கிறதே.

அக்காவுக்கு வரப் போகிறவனோடு, அன்பாகப் பழகுகிறாள்.

அவளே சொல்லுகிற மாதிரி, இந்தக் காலத்துப் பெண்ணாக உதயாவே தவறாக எண்ணாதபோது தான் மட்டும் எதற்காகப் புகுந்து குட்டையை குழப்ப வேண்டும்?

தேவையே கிடையாது.

தனக்குத்தானே விளக்கங்கள் கொடுத்து ரேவதி அமைதி அடைந்துவிட்டவே, மறுநாளும் உதயாவுக்கு வேலை அதிகமாக இருந்ததால், செல்வத்தின் பின்னே அமர்ந்து, அவனது தோளில் தொற்றிக் கொண்டு பானு வெளியே சென்றபோது, சந்தோஷமாகவே கையாட்டி அனுப்பி வைத்தாள் அன்னை.



# இந்த மனம் எந்தன் சொந்தம் 4

மெய்யாகவே உதயரேகாவுக்கு வேலை மிகவும் அதிகமாகத்தான் இருந்தது.

முதலில் சற்று அப்படி இப்படிக் கணக்குகள் அனுப்பிய போதும், யோகேந்திரன் அதை அப்படியே ஒப்புவதாகவோ போகிறது என்று ஏற்பதாகவோ இல்லை என்று தெளிவாகக் காட்டி விடவும் அதற்குமேல் பிரச்சினையற்று இரு நிறுவனங்களும் ஒப்பந்தத்தை முடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டன.

யோகேந்திரனைப் பொறுத்தவரையில், உதயரேகா இன்னொரு கம்ப்யூட்டராகவே தோன்றினாள் எனலாம். ஒரே ஒரு வித்தியாசமாக, அவளது 'லாப்டாப்பில்' அவள் கையால் வேலை செய்தாள். அவனிடம் வாயால் உத்திரவுகள் பிறப்பித்தான்.

இரண்டுமே வேகமாகத்தான்.

கூப்பிட்டுக் கூப்பிட்டு சொல்வதில் நேரம் விரயமாவதாகக் கூறி, அவளுக்கும் யோகேந்திரனின் அறையிலேயே இடம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இது பற்றி அலுவலகத்தில் தவறான ஊகங்களும் பேச்சும் பரவக் கூடும் என்ற எண்ணமே அவனுக்கு வரவில்லை.

முதலாளி அல்லவா? அவனுக்கு வேலை நடப்பதுதான் முக்கியமாகத் தோன்றியது என்று உள்ளூர எண்ணிக் கொண்டாலும், உதயாவுக்குமே அந்த வதந்திகளைப் பொருட்படுத்த தோன்றவில்லை.

அந்த அளவுக்கு அவளையுமே இந்த இரு நிறுவனங்களின் இணைப்பு வேலை வெகுவாக ஈர்த்துவிட்டிருந்தது.

வேலை செய்யும் போது உற்சாகமாகவே இருந்தாலும், வேலை முடிந்து மேஜையை ஒதுக்கும்போது, அவள் முகம் வாடிவிடும்.

இன்னும் பத்து நாட்கள் கூட இல்லை. பானு கிளம்பிப் போனால், அவள் மறுபடியும் இந்தியாவுக்கு வருவதற்கு எத்தனை ஆண்டுகள் ஆகுமோ?

அவள் கேட்கும் இடங்களுக்குக் கூட்டிப் போவதும், வருவதும் கூடவே வீட்டில் அரட்டை அடிப்பதுமாக, அவள் கூடவே இருக்க முடியவில்லையே.

இப்போது போனாலும் செல்வத்தோடு பானு, அவளது வேலை



விஷயமாக வெளியே போயிருப்பாள். திரும்பி வருவதற்கு வெகு நேரம் ஆகும்.

ஆனால், நல்ல வேளையாக அவளை அழைத்துப் போக, செல்வத்துக்காவது அவகாசம் கிடைத்ததே. அந்த மட்டும் கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

அது மட்டும் இல்லை. பானுவுக்குச் செல்வத்தை பிடித்தும் இருந்தது. மறுநாளே, சின்ன வயது பழக்கத்தை நினைவுப்படுத்தி எஸ்.எம்.எஸ். அனுப்பத் தொடங்கிவிட்டாளே.

அவனோடு வீடு வரை சென்று, பாக்கியம் ஆன்ட்டியைப் பார்த்துப் பேசி, அவர்களுடைய சமையலைப் பாராட்டி, கரண்டி, கத்தி என்று பரிசுகள் கொடுத்து, வருங்காலத்தில் அக்காவுடைய குடும்பம் அது என்பதால், இப்போதே நல்லுறவை வளர்த்துவிட்டாளே.

ஆன்ட்டியே சாப்பாட்டுக்குப் பானுவை அழைத்து வருமாறு, செல்வத்திடம் சொல்லுகிற அளவுக்கு.

இதெல்லாம் அவளுக்கு ரொம்ப பெருமைதான்.

ஆனாலும், தன் அன்புத் தங்கையோடு விரும்பிய அளவு பொழுதைச் செலவழிக்க முடியாதது உதயாவுக்கு பெரும் வருத்தமாகவே இருந்தது.

விடுமுறை எடுத்துக் கொண்டு உடன் பிறந்தவளோடு இருக்க எண்ணியவளுக்கு, இப்போது வேலை நேரம் போக சாதாரணமாக இருந்து பேசக் கூடப் பொழுது கிடைக்கவில்லை என்றால்?

ஒருநாள் அந்த வருத்தத்துடன் உதயா கடிகாரத்தைப் பார்த்தபோது, சிறு எரிச்சலுடன் "ஏன் இந்தப் பெருமூச்சு? சேர்ந்து ஊர் சுற்றத் தாமதம் ஆகிறதே என்று ஆசைக் காதலர் கோபித்துக் கொள்வாரா?" என்று ஏளனக் குரலில் யோகேந்திரன் வினவினான்.

அவனது ஏளனம் உறைக்க, உதயா நிமிர்ந்தாள்.

இவர்கள் எல்லாம் கதைகளில் காதல் என்றால் ரசிப்பார்கள். நடப்பில் என்றால் ஏளனமாக்கும் . அத்தோடு, அவனது ஆசைக் காதலனில் ஏதோ உட்குறிப்பு இருந்து அவளை உறுத்தியது.

என்னவோ வெறுமனே ஊர் சுற்றுவதற்காக மட்டுமே, அவள் செல்வத்தோடு பழகுவதுபோல ஒரு குற்றச்சாட்டு அதில் இருந்தது.

திரும்பி "பெரியவர்கள் விருப்பத்தோடு, செல்வம் என் வருங்காலக் கணவராகப் போகிறவர்" என்றாள் எடுப்பாக.

யோகேந்திரன் இதை எதிர்பார்க்கவில்லை என்று நன்றாகவே தெரிந்தது. திகைப்பும் வியப்புமாக நோக்கி, "சாரி" சொன்னவன், உடனேயே வாழ்த்தும் தெரிவித்தான்.

ஆனால், வாழ்த்துத் தெரிவித்ததால் அவளது வேலையைக் குறைத்து சீக்கிரமாக ஒன்றும் அனுப்பி விடவில்லை.

மாறாக, "இந்த வேலை எவ்வளவு முக்கியம் என்று உனக்கும் புரிந்திருக்கும். அதனால், வேலையைக் குறைத்து, உன்னை விரைவாக

வீட்டுக்கு அனுப்பி வைப்பது சாத்தியம் அல்ல. ஆனால் இந்த அதிகப்படி வேலைக்குரிய பணம் தனியாகத் தரப்படும்" என்று முடித்துவிட்டான்.

இன்னொன்றும் நடந்தது!

ஒருநாள் வேலை முடிய ஆறரை மணிக்கும் மேலே ஆகி இருட்டவே தொடங்கிவிட்டது.

பஸ் நிறுத்தத்தில், தன்னந் தனியே நிற்கையில் அவளுக்கு அழுகை குறைதான்.

இனி வீடு போய்ச் சேரக் குறைந்தது மணி எட்டாகும். அலைந்தது அலுப்பாக இருப்பதாகச் சொல்லி பானு தூங்கப் போய்விடுவான். மறுநாள் காலையில் இவள் கிளம்பி வரத்தான் பொழுது சரியாக இருக்கும்.

ஒவ்வொரு நாளும் இப்படியே போய்விடும் போல இருக்கிறதே.

சுமார் இருபது நிமிஷங்களுக்கு மேலாக உதயரேகா அங்கேயே நின்றிருந்தும், அவள் செல்ல வேண்டிய பஸ், அந்த நிறுத்தத்துக்கு வரும் ஒரே பஸ் வரக் காணோம்.

இதற்கு மேல், பானு நிச்சயமாகப் படுக்கப் போய்விடுவான்.

அவன் படுக்கப் போய்விட்டால், காலையில் அவனாக எழுந்து வரும்வரை அவன் அருகே யாரும் போவதில்லை. எழுப்பினால் அவனுக்குப் பிடிக்காது என்று, முதல்நாளே வெகு கண்டிப்பாக எல்லோரிடமும் சொல்லிவிட்டான்.

எனவே, காலையில் அவன் முகத்தைப் பார்ப்பது கூட அபூர்வம், என்ன அநியாயம்!

அவள் குமுறிக் கொண்டு நிற்கையில், வேகமாக ஒரு கார் அந்த வழியே சென்றது.

எரிச்சலாக முகம் திருப்பி, பஸ் வரும் திசையை அவள் பார்க்கையில், 'சடன் பிரேக்' போட்டு அந்தக் கார் பின்னோக்கி வருவது கேட்டது.

இது வேறு, ஏதேனும் தொல்லையா என்று எண்ணியவாறே போராடத் தயாராக அவள் உடல் இறுக நிற்கும்போதே, "ஏறிக் கொள் உதயா, இன்னும் கொஞ்சம் நகர்ப்புறமாகக் கொண்டு விட்டுவிட்டுப் போறேன்" என்று பக்கவாட்டுக் கதவைத் திறந்துவிட்டான் யோகேந்திரன்.

மறுக்காமல் அவள் ஏறிக் கொண்டதும், காரை ஓட்டியவாறே அவன் கேட்டான். "கராத்தேயா? குங்ஃபூவா? தற்காப்புக் கலைகள் தெரியும் போலிருக்கிறதே? தயாராக நின்றாயே!" என்று கேட்டான்.

பாராட்டும் குரல்தான்!

ஆனால், முதலிலேயே கார் நம்பரைக் கவனித்திருக்கலாம். பஸ் பஸ் என்று அதே கவனமாக நின்றதில் யார் கார் என்ன என்று அவள் கவனிக்கவே இல்லை.

"பள்ளி கல்லூரி இரண்டிலுமே கற்றுக் கொடுத்தார்கள். அது



போகக் கொஞ்சம் கூடுதலாகவும் கற்றுக் கொண்டேன்" என்றாள் அவள்.

"வருகிறவர்கள் உன்னைவிட இதில் கெட்டிக்காரர்களாக இருந்தால்?"

"இதிலெல்லாம் தேர்ச்சி பெற, சுய கட்டுப்பாடு அதிகம் வேண்டும். அவர்கள் கண்டபடி மனதை அலைய விடமாட்டார்கள்" என்றாள் அவள்.

"நல்ல பதில்தான். ஆனால் எதிலுமே விதி விலக்குகளும் இருக்கலாம் என்று மனதில் வைத்திருப்பது நல்லது." என்று எடுத்துரைத்தான் யோகேந்திரன்.

"உண்மைதான் ஆனால் சில சமயம், அதையெல்லாம் எண்ணிப் பார்க்க முடிவது இல்லை. அது போன்ற தருணங்களில், நம் பலத்தைக் காட்டத் தயாராக இருக்க வேண்டியதுதான். எதிர்பாராத தாக்குதலே பல சமயங்களில் ஜெயிக்க வைத்துவிடும்" என்று அவள் கூறவும், "அதுவும் உண்மைதான். எதிரி தயாராகு முன்பே தாக்குவது, அவனது பலத்தில் பாதியைக் குறைத்துவிடும். அப்புறம் வெற்றி நிச்சயம்தானே?" என்று ஒத்துக் கொண்டு அந்தப் பேச்சை முடித்தான் மகேந்திரன்.

என்னதான் யோகேந்திரனின் உதவியால், உதயாவின் பயணத் தூரம்பாதி குறைந்துவிட்டபோதும், அவள் வீட்டுக் கதவைத் திறந்தபோது, பானுவின் அறையில் விளக்கு அணைந்து விட்டது.

நாளை மாலையாவது சற்று சீக்கிரமாக வீடு திரும்ப முடியுமா என்று ஏங்கியவாறே உணவு, குளிப்பு முதலியவற்றை முடித்துக் கொண்டு, உதயரேகா உறங்கப் போனால், முகத்தில் சிறு கவலையோடு அன்னை வந்து நின்றாள்.

தாயின் முகம் வாடியிருப்பதைக் காணவும், தன் ஏக்கம் மறந்தவளாக, "என்னம்மா?" என்று கலக்கத்துடன் வினவினாள்.

மகளின் கட்டிலில் ஓரமாக அமர்ந்து, "சொல்லப் போனால், பெரிய விஷயம்அல்ல... பானு அமெரிக்காவுக்குக் கிளம்புமுன் உனக்குத்தான் திருமணம் நிச்சயத்தை வைத்து விடலாம் என்று நினைத்தேன்..." என்று ஏதோ புரியாத கலக்கத்தைக் குரலில் காட்டத் தொடங்கினாள் ரேவதி.

ஏதோ காரணமாகத் தள்ளிப் போகிறது போலும். தங்கையுடன் பேசவே நேரமில்லையே என்று உதயா தவித்துக் கொண்டிருக்கும் இப்போ நிச்சயதார்த்தத்தை வேறு வைத்தால், அந்த விழா தொடர்பான வேலை, கூட்டத்தில், இன்னமும் அவகாசம் கிடைக்காமலேயே போய்விடாதா?

இதை தாய்க்கு நோகாமல் சொல்வது என்று உதயா யோசிக்கையில், ரேவதி, மேலும் சொன்னாள். "இதுப் பற்றி பேசலாம் என்று பாக்கியத்துக்கு ஃபோன் செய்தால், டெலிபோனை எடுக்கவே காணோம். வீட்டில்தான் இருப்பாள் என்று செல்வம் தம்பி சொன்னார். என்னவோ, ஏதோ என்று பயந்து, மறுபடியும்தம்பிக்குப் போன்

செய்தேன். அம்மாவுக்கு ஒன்றும் இல்லை. அவ்வப்போது டெலிபோன்தான் ஏதோ பழுதாகி விடுகிறது என்கிறார் அவர். திரும்பவும் போன் போட்டால் அப்போதும் 'ரிங்'தான் போகிறது. நீயும் மிகவும் தாமதமாக வருகிறாயா? என்ன செய்வது என்று கேட்கக் கூட வழியில்லை. மகன் சொல்லி, பாக்கியமாவது ஃபோன் செய்வாள் என்று பார்த்தால், அவளும் பண்ணவே இல்லை. என்னவோ அபசகுனம் மாதிரி மனதை உறுத்துகிறது கண்ணு" என்று எப்போதும் போல, மனதில் இருப்பதை மூத்த மகளிடம் கொட்டினார் தாயார்.

பெற்றவள் மெய்யாகவே கலங்கியிருப்பது தெரிய, எழுந்து தாயிடம் ஒட்டி அமர்ந்து, "இது அபசகுனம் இல்லை, அம்மா. கடவுள் என் பக்கமாக வேலை செய்கிறார் என்று அர்த்தம். நிஜம்மா, அலுவலகத்தில் அதிக வேலையாக இருக்கிறதே. பானுவிடம் அமைதியாக உட்கார்ந்து இரண்டு வார்த்தைப் பேச முடியவில்லையே என்று கலங்கிக் கொண்டிருந்தேன். இன்னும் விசேஷத்தையும் வைத்துக் கொண்டால், அடியோடு நேரமே இராதே.. தள்ளிப் போடலாம் என்று உங்களிடம் எப்படிச் சொல்வது என்று ஒரே யோசனை. இப்போது பாருங்கள். தானாகவே அதற்கு தோதாக நடக்கிறது. பானுதான் பாவம்மா. நாலு ஆண்டுகள் கழித்து வந்தால் சகோதரிகள் என்று சேர்ந்திருக்க முடியவில்லையே" என்றாள்.

"இதில் பானு என்னடி 'பாவம்?' அவள்தான் செல்வம் தம்பியைப் பிடித்துக் கொண்டு நாள் பூராவும் சுற்றுகிறாளே. வீட்டில் இருந்து அம்மாவோடு பேசுவோம் என்பதே இல்லையே." என்று தன் ஏக்கத்தைத் தெரிவித்தாள் தாயார்.

"அப்படியில்லை அம்மா! இங்கே உள்ள 'ஷாப்பிங் மால்'களில் என்னென்ன எப்படியெப்படி விற்கிறது என்பது பற்றி ஒரு நேரடி அறிக்கைக்காகத்தானே அவள் இங்கே வந்திருப்பதே. விடுமுறைக்கு விடுமுறையாக, வேலைக்கு வேலையாகக் கெட்டிக்காரத்தனமாக, இரண்டையும் சேர்த்துச் செய்கிறாள். அவளைப் பார்க்கவாவது முடிகிறதே என்று சந்தோஷப்படுங்கள். நான் லீவு போட்டு விட்டு அவளைக் கூட்டிப் போக வேண்டியது. நல்ல வேளை செல்வத்தாலாவது முடிகிறதே என்று ஆறுதலாக இருக்கிறது" என்றாள் உதயா.

மகள் சொன்னதையெல்லாம் ஏற்றவள் போல, மற்றதை விடுத்து, "ஆமாம் உனக்கு என் உதி இப்போது இவ்வளவு அதிக வேலை? வருஷக் கடைசி கூட இல்லையே!" என்று கேட்டாள் ரேவதி.

"அது... " என்று தயங்கினாள் மகள். "ஒரு முக்கியமான பெரிய வேலை, அம்மா! அது பற்றி வெளியே விவரம் கசிந்து விடக் கூடாது என்றுதான் என்னிடம் தனியாக ஒப்படைத்து இருக்கிறார்கள். தனியாகப் பணம் கிடைக்கும். கிட்டத்தட்ட வேலை முடிந்து விட்டது. ஆனால், அது பற்றிய விவரம் உங்களிடம் கூடச் சொல்லக் கூடாதும்மா..." என்று கெஞ்சலும், கொஞ்சலுமாக இழுத்தாள் மகள்.



முறுவலித்து, "சரி, சரி... சொல்ல வேண்டாம். ஆனால், பணம் கிடைத்தாலும் கூடுதல் வேலை என்றால், கூடுதல் ஓய்வு தேவை அல்லவா? படுத்துத் தூங்கு." என்று எழுந்து, மகளின் கன்னத்தைச் செல்லமாகத் தட்டிவிட்டுப் போனாள் தாய்.

மறுநாள் காலையில், எவ்வளவு முடியுமோ, அவ்வளவு தாமதமாக உதயா வீட்டை விட்டுக் கிளம்பியபோதும், பானு விழித்தெழுந்து அறையை விட்டு வெளியே வந்தாளில்லை.

வந்த முதல் மூன்று நாட்கள், அவள் இவ்வளவு தாமதமாக விழித்ததில்லை. அந்த நம்பிக்கையில் உதயா முடிந்தவரை நின்று பார்த்தாள்.

ஆனால், அந்த முதல் சில நாட்களைப் போலன்றி, இப்போது வேலையையும் சேர்த்துக் கவனிப்பதால், தங்கை அசந்து விட்டாள், பாவம் என்று பரிதாபப் பட்டபடியே தாயிடம் சொல்லிக் கொண்டு வேலைக்குக் கிளம்பினாள் அவள்.

அதிசயத்திலும் அதிசயமாக, ஒரு விதமாக அவளது ஏக்கம் நிறைவேறு மாதிரியாக, அன்று இன்னொன்று நடந்தது.

அன்றைய மதிய இடைவேளையின் போது உதயாவை அழைத்தான் யோகேந்திரன்.

தொழிலில் இணைய இருக்கும் இத்தாலிய நிறுவனத்துக்கும், அவனுக்கும் இடையே பாலமாக இருந்து செயல்படுகிற நண்பர், சென்னைக்கு வந்திருக்கிறார். மாலையில் அவரோடு சந்திப்பு இருப்பதால், இன்று மாலையில் உதயாவுக்கு அதிகப்படி வேலை கிடையாது. அத்தோடு தேவைப்பட்டால், அவன் கிளம்பும் அதே நாலு மணிக்கே, அவளும் வீட்டுக்குக் கிளம்பி விடலாம் என்றான்.

தன் காதுகளையே நம்ப முடியாத சந்தோஷம் உதயாவுக்கு.

இன்றைக்கு நிச்சயமாகத் தங்கையோடு அளவளாவி மகிழலாம்.

அவள் வீடு திரும்பும்வரை பொறுத்திருக்க கஷ்டமாக இருந்தால், அவளது செல்லுக்கு ஃபோன் செய்துவிட்டு, அவள் இருக்கிற இடத்துக்கே போய்விட வேண்டியதுதான்!

வீட்டுக்குப் போய் முகத்தைக் கழுவிக் கொண்டு, கிளம்ப வேண்டியதுதான்.

முகத்தின் மலர்ச்சியை யோகேந்திரன் பார்த்துக் கொண்டிருப்பது தெரியவும், "மிஸ்டர் பீட்ரோவா சார்" என்று கேட்டுவிட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

இரு பக்கத்துக்கும் பொதுவான சில 'மெயில்'களில் பீட்ரோவின் பெயரைப் பார்த்த நினைவு அவளுக்கு. ஆனால் யோகேந்திரனாக யாரைப் பற்றியும் அவளிடம் பெயரைக் குறிப்பிட்டுப் பேசியிராததால், அதிகப் பேச்சாக எடுத்துக் கொள்வானோ என்ற கலக்கமும் உடனே வந்துவிட்டது.

நல்லவேளையாக யோகேந்திரன் தவறாக எடுத்துக் கொள்ளாது

முகம் மலர, "அவரேதான்!" என்றான் உற்சாகத்தோடு. "... நிறுவனத்தைப் பெரிதாக்கி உலக மார்க்கெட் பிடிக்க வேண்டும் என்... பீட்டரிடம் தான் சொல்லியிருந்தேன். அதற்குப் பொருத்தமான... ஒரு நிறுவனம் அதே போலக் கேட்டு வரவும், இரண்டையும் இணைத்... விட்டார். இரு பக்கத்திலும் அவருக்கு கமிஷன்தான் என்றாலு... யாருக்கும் ஒன்றுமில்லாத நிறுவனத்தைக் கை காட்டி விடவில்லை!

யோசனையோடு பார்த்தவன், மேலே பேசாமல் வாயை மூடிக் கொண்டான்.

இந்த ஒரு வாரத்து வேலையில், அவனிடம் ஓரளவு சகஜமாக... யோகேந்திரன் பேசத் தொடங்கியிருந்தாலும் ரொம்பவும் சோதிக்க... கூடாது.

ஆனால் அவளைக் கவனித்து, "என்ன?" என்று கேட்டான் யோகேந்திரன்.

"அதில்லை சார்... பொருத்தமான நிறுவனம் என்றீர்களே, முதலி... ஏமாற்றத்தானே முயன்றார்கள்...." என்று மெதுவாக கேட்டாள் உதயரேகா.

"இதுவாகத்தான் இருக்கும் என்று நினைத்தேன்! என்று... முறுவலித்தான் அவன். "கால தேச வர்த்தமானங்களுக்குத் தக்கபடி நியாய அநியாயங்களும் அவற்றின் மதிப்புகளும் மாறிப் போகின்றன. ஒ... காலத்தில் கொலை களவுக்கு இணையாகப் பஞ்சமா பாதகங்களு... ஒன்றாக மதிக்கப்பட்ட பொய்யை இப்போது அப்படியா நினைக்கிறோம்? அது போலத்தான் தொழிலில் இதுபோன்ற இ... முயற்சிகளும்! ஏமாறாமல் ஜெயிப்பது அவரவர் சாமர்த்தியம். கவனமா... இருந்து கொள்ள வேண்டுமே தவிர, குற்றமாகக் கருதி ஒதுக்கக் கூடாது... ஒதுக்க முடியாது. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை. உறவுக்குள்ளேயே... அப்படி என்றால், வெளியே தொழில் நடத்துகிறவர்களும் அ... மனிதர்கள்தானே?"

இவன், இவ்வளவு நீளமாகப் பேசுவானா என்று ஆச்சரியமா... இருந்தது உதயரேகாவுக்கு.

ஆனால், என்னதான் நீளமாகப் பேசி நியாயப்படுத்தினாலும் தப்... ...ப்படிச் சரியாகும்?

குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லையாம். அதெப்படி என்று... ...ன்றும்போதே, பழைய வாழ்வு பற்றித் தாயார் சொன்னது நினை... ...ந்தது. பிழை புரிந்தவர்களைக் கூட பெற்றோர் ஒரு போதும் ஒதுக்கியதி... ...ல்லை. இன்னும், எல்லோருடனும் பிரியமான சுமுக உறவுதான்... ...னால், அவளால் முடியுமா?

"ஊகூம்.. முடியாது என்றே அவளுக்குத் தோன்றியது.

நல்ல வேளையாகக் கடவுள் அருளால், அவளுடைய நெருங்கிய... ...ம், சுற்றமாகப் போகிறவர்கள் எல்லோரும் மிகவும் நல்லவர்களே.

எனவே, அவளுக்குப் பிழை இழைப்பவர்களைச் சகித்து வாழு...

துன்பம் அவளுக்கு வராது. நிம்மதி.

குற்றமற்ற தன் நெருங்கிய சுற்றம், சுற்றமாகப் போகிறவர்களை நினைக்கையில் உதயரேகாவின் மனம் துள்ளிக் குதித்தது!

இன்று சீக்கிரமே போய், அவர்களோடு கலகலத்துச் சிரிக்கப் போகிறாள்.

ஐம்பதுமுன் கடைசி வேலைகளைப் பார்வையிட்ட யோகேந்திரன், அவளது முகத்தைப் பார்த்துப் புருவங்களை உயர்த்தினான். "என்ன? முகத்தில் ஆயிரம் வாட் பல்ப் எரிகிறது?" காதல்.. சாரி, கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவரோடு இன்றேனும்.. வந்து... சுற்றலாம் என்றா?" என்று கேட்டான்.

என்னவோ ஒத்துக் கொள்ள முடியாதபடி உதயாவை உறுத்தியது.

தப்புச் சொல்ல முடியாத வார்த்தைகளே என்றேனும் , தவறான அகத்தை வெளியிட்ட சொற்கள்!

முதலாளியிடம் ஏற்பட்டிருந்த பிரமிப்பு மறைய, "செல்வம் மட்டுமல்ல நாலு ஆண்டுகளுக்கு பிறகு, வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்திருக்கும் தங்கையோடு, இருந்து பேசக் கூட முடியாமல் ஒரு வாரமாகத் தவித்திருக்கிறேன் சார். இன்றைக்குச் சீக்கிரமாகப் போவதால், அவளோடு நன்றாகப் பேசிக் கொண்டிருக்கலாம் என்பதுதான்!" என்று குரலில் குறையைக் காட்டியே சொன்னாள் உதயா.

ஆனால், அதை ஏற்க மறுத்து "ஏன் ஓர் ஒரு மணி, ஒன்றரை மணி நேரத் தாமதத்தில் உன் தங்கையோடு அளவளாவவே முடியாமல் போய்விடுமா, என்ன?" என்றான் அவன்.

ஒன்று சொன்னால், இவனுக்கு ஏன், அதை அப்படியே நம்பவே முடிவதில்லை என்று ஆத்திரம் வந்தது அவளுக்கு.

நம்ப வைத்துவிடும் வேகத்தில் வீட்டின் நடப்புகளை வேகமாகச் சொல்லி முடித்தாள். தங்கையின் படிப்பு கெட்டிக்காரத்தனம், வேலை, இப்போதும் வேலைக்கு நடுவே குடும்பத்தையும் தேடி உறவாட வந்தது. வேலையையும் குறையின்றிச் செய்வது.. எல்லாம்...

சற்று வியந்த புன்னகையுடன்" ஓ.கே. ஓ.கே. நீ சொல்வதை ஒத்துக் கொள்கிறேன். ஆக, இங்கே ஒழுங்கற்று வருகிற பஸ்கள்தான், முக்கியக் குற்றவாளிகள் என்று தெரிகிறது. ஆனால், உன் அன்பான தங்கை, தன் தூக்கத்தைக் கொஞ்சம் தியாகம் செய்து உன்னோடு பொழுதைக் கழிக்கலாம் என்று என் புத்திக்குத் தோன்றினாலும், உன் தங்கையால் அது முடியாது என்று நீ சொன்னால் அதையும் அப்படியே ஒத்துக் கொள்கிறேன், சரிதானா? இப்போது... வேலை இவ்வளவுதானே? கிளம்பு. இந்த மோசமான பஸ் நிறுத்தத்தை விடுத்து நகர்ப்புறமாக, நிறைய பஸ் வரும் இடத்தில் விட்டுப் போகிறேன். மேலும் ஒரு மணி நேரமே மிச்சமாகக் கூடும்!" என்று எழுந்தான் யோகேந்திரன்.

அவள் சந்தேகமாக பார்க்கவும், "மெய்தான் உதயரேகா. ஆருயிர் சகோதரிகளை, இதுவரை பிரித்து வைத்த பாவத்துக்கு, இன்றேனும் சிறு

பரிகாரம் பண்ணுறேனே. ஜெம்ப்" என்று, தன் 'லாப்டாப்'பை மூடினா
அவள்.

அவன் சொன்னது போலவே, உடனே பஸ் கிடைத்து. வி
இருக்கும் பகுதியும் நெருங்கிக் கொண்டு இருந்தது.

சந்தோஷமாகச் சாலையைப் பார்த்தவண்ணம் வந்தவளி
கண்ணில், பஸ் நிறுத்தத்தை ஒட்டி இருந்த ஐஸ்கிரீம் பார்லர் பட்ட
இங்கே வாங்குகிற கஸாட்டா ஐஸ் பானுவுக்கு ரொம்பப் பிடிக்கும்.
எண்ணியதும் உதயா எழுந்துவிட்டாள்.

"நிறுத்தம் வரும்போதே எழுவதற்கென்ன?" என்ற கண்டக்ட
எரிச்சலைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் பஸ்ஸை விட்டிறங்
ஐஸ்கிரீம் பார்லரை நோக்கி விரைந்தாள்.

உருகிவிடாமல் இருப்பதற்காக, அதைவைக்கத் தனியா
தெர்மோக்கூல் பெட்டிக்கு பணம் கொடுத்து ஐஸ்கிரீமை வாங்கி
கொண்டு வீட்டை நோக்கி விரைந்தபோது அவளுக்கு மிகவு
குதூகலமாக இருந்தது.

இப்போது ஒரு நிறுத்தம் முன்னதாக இறங்கியதற்காக அதிக
நடக்க நேர்ந்து. அதனால் தாமதம் ஆகப் போவதும் இல்லை. இ
சாலைகளுக்கும் இடையே இருக்கும் பூங்காவினுள் இந்தப் பக்கம் புகுந்
அந்தப் பக்கம் வெளியே வந்தால்.. அவளது வீடு இருக்கும் தெரு.

புன்னகையோடு அவள் காலை எட்டிப் போட்டு விரைந்தபோது,
சிணுங்கலுடன் கூடிய சிரிப்புச் சத்தம் கேட்கவும் சட்டென நின்றாள்.

பானுவின் சிரிப்பு. கூடவே செல்வமும் பானுவும் வீடு திரும்பு
வழியில் இங்கே வந்திருக்கிறார்கள்.

இனிய அதிர்ச்சியாக ஐஸ்கிரீமை கொண்டுபோய்க் கொடுத்தா

ரொம்பத் தூரத்தில் இல்லாமல் அருகில்தான் குரல் கேட்டது.

இரண்டெட்டு நடந்து அடுத்திருந்த குறுமரத்தை தாண்டி எட்டி
பார்த்தால்... உதயரேகாவின் நெஞ்சுக்குள் எல்லாம் நொறுங்கி
போயிற்று...



## இந்த மனம் எந்தன் சொந்தம் 5

இது ஒன்றுமில்லை... யு.எஸ்.ஸில் இருந்து பழைய சகஜ பாவ
என்று எண்ணுவதற்கு வழியே இல்லாத தோற்றம்.

அவர்களுக்கு ஐஸ்கிரீம் வாங்கி வந்திருக்கிறார்கள்.

ஒருவருக்கொருவர் ஊட்டிக் கொண்டு.

தன்னையறியாமல் பின்வாங்கிய உதயாவுக்கு சில வினாடிகள்
ஒன்றும் புரியாத நிலை.

இப்போது என்ன செய்ய வேண்டும்?

மரத்துப் போன மூளையைக் கசக்கி யோசிக்க முயன்றாள்.



எப்படியும் அவர்கள் முன்னே போய் நிற்க முடியாது.

திடுமென சந்தேகம் வந்தது. அவள் சரியாகத்தான் பார்த்தாளா?

அவர்கள் அறியாதவாறு கவனத்துடன் மீண்டும் எட்டிப் பார்த்தாள்.

சந்தேகப்படாதே பெண்ணே என்று, முன்னிலும் அதிகமாகத் தெளிவுப்படுத்தும் நிலை.

செல்வத்தின் உதட்டோரமாக லேசாக வழிந்திருந்த ஐஸ்கிரீமை, ஒற்றை விரலால் வழித்தெடுத்து..அவளது வாயில் வைத்துச் சுவைத்து, "இது ரொம்ப ருசி!" என்று சப்புக் கொட்டினாள் பானுரேகா.

செய்வதற்கு ஒன்றுமில்லை. சொல்வதற்கு ஒன்றுமில்லை!

நினைப்பதற்கும் ஒன்றுமில்லாதது போன்று, மூளை மறுபடியும் வேலை நிறுத்தம் செய்தது.

அவர்களது சிரிப்புச் சத்தம் மீண்டும் அவளைத் தட்டி எழுப்பி விரட்டியது.

யோசிக்க வேண்டும். என்ன செய்வது என்று, சற்று அமைதியாக இருந்து யோசிக்க வேண்டும். எங்கேயாவது போய்த் தனியே இருந்து!

வந்த வழியே திரும்பிப் போனாள்.

கால் கடுக்க நடந்தால் சுரணை வருமோ என்று தோன்றியது.

ஆனால், அவர்கள் இருவரும் கூடக் கிளம்பி வந்து, அவளைப் பார்த்துவிட்டால்?

வீடு மறு பக்கம்தான் என்றாலும், இன்னும் கொஞ்சம் ஐஸ்கிரீம் வாங்க இந்தப் பக்கமே வரலாமே.

இந்த எண்ணம் தோன்றியதும், பேய் துரத்துவது போல உணர்ந்து, அவசரமாக ஓர் ஆட்டோவை நிறுத்தி வேகமாக ஓட்டச் சொன்னாள்.

"ஏம்மா? யாராச்சும் பசங்க விரட்டுறாங்களா? இந்தக் காலத்திலே எல்லாம், உன்னைப் போலப் பொண்ணுங்க தனியாவே வரப்படாதும்மா..." என்றபடி வாகனத்தை வேகமாகவே ஓட்டினார், ஆட்டோ ஓட்டுனர்.

சற்று நேரம் பேச்சின்றி வேகமாக வண்டியை ஓட்டிவிட்டு "வீடு எங்கேம்மா இருக்குது?" என்று கேட்டார் டிரைவர்.

வீட்டில் அவளது அறையினுள் கதவை உட்புறமாகப் பூட்டிக் கொண்டு, கட்டிலில் விழுந்து கிடக்க முடியுமானால், அந்த நிமிஷத்தில் அதை விட வேறு எதுவும் உதயாவுக்குத் தேவையில்லை.

ஆனால், அது முடியாதே.

வீட்டுக்குப்போனதும், உண்ணக் குடிக்க எதையாவது எடுத்துக் கொண்டு வந்து பேச உட்காரும் தாயார். படிக்கிற காலத்திலிருந்தே அது பழக்கம்.

அப்புறம் வரும் பானுவும் செல்வமும்.

எதிர்பாராமல் உதயாவை பார்த்தால், அவர்கள் இருவரும் எப்படி அதிர்ந்து போவார்கள்?

சட்டென நிலைமைப் புரிந்தது அவளுக்கு.

உதயா வருமுன் பானு தூங்கப் போய்விடுவது, காலையில் தமக்கை வேலைக்குக் கிளம்பும் வரையிலும் எழுந்து வராதது, செல்வம் செல்லில் கூடத் தொடர்பு கொள்ளாதது... அம்மாவின் அழைப்புக்கு பாக்கியம் ஆன்ட்டி பதில் தராததும் கூட...

குற்றக் குறுகுறுப்பு!

அ...அது.. பற்றியும் அவன் யோசித்தாக வேண்டும். அதுவும் சீக்கிரமாக வீடு செல்லும் முன்பாக.

எந்த இடமும் அதற்கு தோதாகத் தோன்றாமல் போக, ஒரு கணம் கலங்கினான்

"கோயில் வாசலின்னா, போற வர்ற வண்டிங்களைப் பார்க்க வேணாமா?" என்று குறுக்கே விழப்போன சிறுவனை அதட்டி விட்டு "வீடு எங்கேன்னு சொல்லலியேம்மா?" என்று மீண்டும் கேட்டார் ஆட்டோ ஓட்டுனர்.

கோயில்! பிரகாரங்கள் உள்ள பெரிதான கோயில்.

சட்டென முடிவெடுத்து "இங்கேதான் இறங்க வேண்டும், டிரைவர் கோயிலில் ஒரு கும்பிடு போட்டுவிட்டுப் போக வேண்டும். எவ்வளவு?" என்றுகேட்டுப் பணத்தைக் கொடுத்ததோடு. கையில் இருந்த ஐஸ்கிரீமையும் "உங்கள் குழந்தைகளுக்குக் கொண்டு போய்க் கொடுக்கறீங்களா? நான் கொடுக்க எண்ணியவர்கள் வீட்டில் இல்லை" என்று அவரிடமே கொடுத்துவிட்டு, ஆலயத்துக்குள் சென்றான்.

அவன் எதிர்பார்த்தது போலவே, அங்கங்கே அமர்ந்திருந்த ஓரிருவர் தவிர, பிரகாரம் காலியாகக் கிடந்தது.

உட்புறச் சுவரைப் பார்த்தபடி, ஒரு தூணில் சாய்ந்து அமர்ந்தபோதுதான் உடம்பின் சோர்வு தெரிந்தது.

உடம்பின் சோர்வா? உள்ளத்தின் சோர்வு உடம்பில் பிரதிபலித்ததா?

எப்படி இருந்தாலும், அதைப் பற்றிய ஆராய்ச்சி அனாவசியம். இப்போது என்ன செய்வது? இன்றைய நிலையில், அவன் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

திரும்பத் திரும்ப மனதில் தோன்றி அலைக்கழித்த பூங்கா தோற்றத்தைச் சிரமப்பட்டு ஒதுக்கிப் பிடிவாதமாக யோசித்தான்.

செல்வம், உதயாவுக்காக நிச்சயிக்கப்பட்டவன். உரிமை அவளுக்குத்தான்.

ஆனால், அவளுக்காக ஓர் ஆணுக்காகப் போராட வேண்டும் என்றால், அவளுக்கு அருவருப்பாக இருந்தது. அதுவும் தங்கையோடு போட்டி போடுவதா? சீ!

ஆனால், பஞ்சையும் நெருப்பையும் பக்கத்தில் வைத்த குற்றவாளி அவனே அல்லவா?

பானுவைக் கூட்டிப்போ, கூட்டிப்போ என்று செல்வத்தை விரட்டி, செல்வத்தோடு போ என்று பானுவிடம் கூறி இருவரையும்



சேர்ந்தே அலைய வைத்து... கடைசியில் பஞ்சும் நெருப்பும் பற்றிக் கொண்டது என்று வேதனையோடு நினைக்கும்போதே எங்கோ இடித்தது.

பக்கத்தில் இருந்தாலே பற்றிக் கொள்வது என்றால், முன்னே அவளிடம் இருந்ததை அன்பு என்று எப்படிச் சொல்வது?

ஆனால், அன்பு இருப்பதாகச் சொல்லித்தான் மணக்கக் கேட்டான் என்று மீண்டும் உதயாவிடம் மனம் குமைந்தது.. ஆனால்...

இந்த செல்வம் சொன்ன அன்பு எந்த அளவுக்குச் சரி....?

இந்தத் திருமணப் பேச்சைத் தொடங்கியதும் பாக்கியம் ஆன்ட்டிதான்.

ஆன்ட்டிக்குப் படிக்கிற காலத்திலிருந்து பழகிய தோழி அம்மா ரேவதி.

அம்மாவைப் பற்றியும் தெரியும். அவளுடைய மகளான உதயாவைப் பற்றியும் தெரியும்.

இந்த உதயரேகா மருமகளானால் குடும்பத்தில் பிரச்சினை இராது என்று. ஆன்ட்டி எண்ணினார்கள் போலும்.

ஆனால் செல்வம்....

திருமணப் பேச்சு எழவும் பக்கத்தில் கண்ணில் பட்ட அவள் சிறப்பாகத் தெரிந்தாளோ?

ஆன்ட்டியும் தூண்டி விட்டிருக்கலாம்.

இப்போது பக்கத்தில் இன்னும் அழகாகப் பானுவைப் பார்த்ததும், மனம் அங்கே தாவி விட்டது.

பானுவுக்கும் கூடவே சுற்றிய செல்வத்தை பார்த்துக் கொண்டே இருக்கவும் மனம்... இல்லை.. அவன் யோசிக்கும் முறை தவறு.

பானுரேகா ஆண்களோடு பேசியறியாத பாமரப் பெண் அல்ல. வேறுபாடற்று வெகு சகஜமாகப் பழகும் நாட்டில் படித்து வேலையும் பார்ப்பவள். அவன் ஒன்றும், நாலைந்து நாட்கள் கூடவே அலைந்தான் என்பதற்காக, ஒருவனிடம் கிறங்கிப் போய்விட மாட்டாள்.

அக்காவுக்குக் கணவனாகப் போகிறவன் என்று தெரிந்தும் இப்படிப் பழகுகிறாள் என்றால், அவன் உண்மையிலேயே மனதைப் பறிக் கொடுத்திருக்க வேண்டும்.

முதல்நாளே, செல்வத்தை அழகன் எனவில்லையா?

செல்வத்துக்கும் இது உண்மைக் காதலாகவே இருக்கலாம். ஏனெனில், இந்த அளவுக்கு உதயாவைத் தொட்டுப் பழகியதே... பழக அவன் முயன்றதே கிடையாது. அவன்வேலை செய்யும் இடத்திலும் இளம் பெண்கள் இருக்கத்தானே செய்கிறார்கள்.

அப்படியிருந்தும் பானுவிடம் செல்வம் மயங்கிப் போனான் என்றால் அவர்கள் இருவருக்கும் இருப்பதுதான் உண்மையான அன்பு. அவர்கள் இருவரும்தான் வாழ்வில் இணைய வேண்டும். அதுதான் நியாயம்.

அப்படியானால், உதயாவின் கதி?

நடந்த திருமணப் பேச்சும், பல மாதங்களாக இவன்தான் கணவன் என்று எண்ணியிருந்ததும் நினைவு வர, அவளது மனம் ரொம்பவே கலங்கிப் போயிற்று.

ஊரறிந்த விஷயம். இப்போது அவர்கள் எல்லோரும் என்ன பேசுவார்கள் என்று நினைக்கையில், இன்னமும் வேதனையாக இருந்தது.

ஆனால், வெறுமனே தன்னை எண்ணிக் கலங்குவதற்காக அவள் இங்கே வரவில்லை. இப்போது அவள் எப்படி நடந்துகொள்வது? அதை முடிவு செய்ய வேண்டும்.

இந்த யோசனையில் ஈடுபட்ட போதுதான் தனக்கு ஒரு மாபெரும் கடமையே இருப்பது, உதயாவுக்குப் புரிந்தது.

உடன் பிறந்த தங்கைக்கும், பல ஆண்டுகளாக நல்ல நண்பனாக இருக்கும் செல்வத்துக்கும் செய்ய வேண்டிய கடமை.

இழப்பின் வேதனையை உள்ளேயே அடக்கி, யாரும் அறியாமல் மறைத்து, அதற்கு மேல், இதை எப்படிச் செய்து முடிக்கப் போகிறாள்?

செய்துதான் தீரவேண்டும்!

ஆனால், இன்றைக்கே அல்ல. உள்ளிருக்கும் வலியை மற்றவர்கள் அறியாமல் மறைப்பதற்கே இப்போது அவள் பெரும்பாடு படவேண்டியிருக்கும். அதற்கு மேல், காயத்திலேயே கத்தியை திருகுவது போல, செல்வத்தைத் தங்கைக்குத் தாரை வார்ப்பது பற்றிப் பேசுவது...இப்போது முடியவே முடியாது.

இப்போதைக்கு எதையும் அறிந்திராத மாதிரி நடிப்பதே கடினம்! குறைந்த பட்சமாக இன்றைக்கு.

கோயிலிலேயே கிடந்துவிட்டு, வழக்கமான நேரத்துக்கு வீடு திரும்பினாள் பானு தூங்கப் போயிருந்தாள். செல்வமும், ஏதோ வேலை என்று, அவன் வீட்டுக்குச் சென்று விட்டிருந்தான்.

யோகேந்திரன் சொன்னது போல, காத்திருந்து அக்காவுடன் அளவளாவும் எண்ணம் தங்கைக்கு இல்லை. ஆனால், காரணம்தான்நேர் மாறு.

பாசம் அதிகமாக இருப்பதால்தான் இந்தக் குற்ற உணர்ச்சியே வந்திருக்கிறது.

குற்ற உணர்ச்சியில், கண்ணில் படாமல் ஒளிகிறாள், பாவம். செல்வமும் பாவம்தான். ஆசைப்படும் பானுவுடன் இருந்து பேசக் கூட முடியாமல், உதயா வருமுன் அவசரமாக ஓட வேண்டியிருக்கிறதே.

என்னதான் இயல்பாக எண்ணமிட முயன்றாலும் உள்ளே வலித்தது.

ஒருவர் முகத்தையும் பாராமல்,அறைக்குள் சென்று பூட்டிக் கொள்ள நினைத்து நடக்கையில், "என்னக்கா, இன்னைக்கும் லேட்டா?" என்றது ஓர் இளங்குரல். அடுத்த மாடியில் வசிக்கும் நாலு வயதுச் சிறுமி. கம்லா என்றால்.. சற்று நேரம் நின்று, அவளைக் கொஞ்சி விட்டுத்தான்.



உதயா உள்ளே போவாள்.

ஆனால், இன்று முடியவில்லை!

மகளுக்குச் சாதம் ஊட்டிக் கொண்டிருந்த தாயார், "கொஞ்ச நாளாகவே நீ கொஞ்சம் லேட்தானில்லை, உதயா?" என்று மகளுக்குச் சொல்வது போல சந்தேகம் தெளியக் கேட்டாள்.

"புதிதாக, அதிகப்படி வேலை, அக்கா" என்றுவிட்டு, நில்லாமலே உள்ளே போனாள் உதயா.

பார்த்த உடனேயே தாயார் கேட்டாள். "என்னடா முகம் ஒரு மாதிரி வாடி இருக்கிறது? உடம்பு ஏதும் சரியாக இல்லையா?" என்று நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்.

அப்படியே தொட்ட கையில் முகம் புதைத்து அழ வேண்டும்போல் எழுந்த தவிப்பை அடக்கி, "த...தலைவலிம்மா..." என்றாள் மெல்லிய குரலில்.

"அடடா, மாத்திரை போட்டுக் கொள்கிறாயா? சூடாகக் காஃபி தரவா? சோஃபாவில் சாய்ந்துகொள். தைலம் தடவுகிறேன்" என்று பரபரத்த தாயின் பரிவு எவ்வளவோ ஆறுதலாக இருந்தது.

ஆனால், தன்னை மீறிக் கொட்டிவிடுவோமோ என்ற பயத்தில், "ஒன்றும் வேண்டாம்மா. படுத்திருந்தாலே சரியாகிவிடும். ரொம்பப் பசித்தது என்று அலுவலகக் கான்டீனில் இரண்டு சமோசா சாப்பிட்டுவிட்டேன். வயிறும் டொம்மென்று இருப்பதால், அப்படியே தூங்கி விடுகிறேம்மா..." கெஞ்சுதலாகக் கேட்டவாறே அவளது அறையை நோக்கி நகர்ந்தாள்.

தாயின் முகத்தில் பரவிய சிறு ஏமாற்றம் உடனே மறைந்தது.

உடனேயே கரிசனமே உருவாகி, "செய் கண்ணு" என்று கூடவே சென்று படுக்கையைத் தட்டிப் போட்டு, தைலத்தை எடுத்து மகளின் நெற்றிப் பொட்டுகளில் தடவி, விளக்கையும் அணைத்துவிட்டு, அறையிலிருந்து வெளியே சென்றாள்.

தாயின் அன்புச் செய்கை உதயாவுக்கு ஆறுதலை அளித்தபோதும், கண்ணீரை அடக்குவது கடினமாகவும் இருந்தது.

ஓசையற்று வெகு நேரம் கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தவள், தந்தை வீடு வந்து சேரும் அரவம் கேட்டதும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

ஒருவேளை, தாயார், தந்தையையும் அழைத்துக் கொண்டு அவளைப் பார்க்க வருவாளோ என்ற பயம் வந்துவிட்டது.

பெரிய நகைக்கடை ஒன்றில், முக்கியமான வேலை அவருக்கு. எல்லாக் கணக்குகளையும் சரிபார்த்து முடித்துவிட்டு, இரவு பதினோரு மணிக்குத்தான் வீட்டுக்கு வந்து சேருவார்.

வந்ததும், குளித்து சாப்பிட்டுவிட்டு, சற்று நேரம் மனைவியுடன் அளவளாவிவிட்டு அதன் பிறகே, கேசவன் தூங்கப் போவார்.

இன்று இடையில் புகுந்து, மகளைப் பாருங்கள் என்று, அப்பாவை

அம்மா பிடித்து வந்துவிட்டாள்?

உதயா எதிர்பார்த்தது போலவே, அவளது அறைக் கதவு மெல்லத் திறக்க, அன்னையும் தந்தையும் கதவருகில் நிற்பது, கோடாகத் திறந்து பார்த்த உதயாவின் கண்களில் தெரிந்தது.

அதையும் மூடிக் கொண்டு அவள் தூங்குவது போல அசைவின்றிப் படுத்திருக்க "அசந்து தூங்குகிறாள், பார். காலையில் சரியாகி விடும்" என்று தாழ்ந்த குரலில் கேசவன் முணுமுணுத்தார்.

"சரியாகித்தான் விடும். ஆனால் அவளிடம் பேச முடியாமலே போகுமே பாக்கியவும் ஒன்றும் சொல்லக் காணோம். அத்தோடு பானு வந்ததில் இருந்து செல்வ...

மனைவியின் பேச்சில் குறுக்கிட்டு "சும்மா நீயும் குழம்பி, மற்றவர்களையும் அனாவசியமாகக் குழப்பாதே ரேவ். பானு ஒன்றும், அக்காவின் மகிழ்ச்சியைக் கெடுக்கக் கூடியவள் அல்ல. உதிக்கு அலுவலகத்தில் அதிக வேலை. அதைப் பற்றி அவளே சொல்லித்தானே, செல்வம் பானுவோடு செல்வதே. இது உன் சிநேகிதி பாக்கியத்துக்கும் தெரிந்திருக்கும். இப்போது திருமணம் பற்றிப் பேசித் தட்டிப் போவதை விடப் பேசாமல் பொறுத்திருக்கலாம் என்று எண்ணியிருப்பார்கள். ஒன்றுமே இல்லாத சாதாரண விஷயம் இதற்குப் போய், என்னென்னவோ வர்ணம் பூசிக் கலக்குவார்களா? நல்லவேளை.உதியையும் குழப்பாமல் விட்டு வைத்தாயே. வா போகலாம். அவள் நன்றாகத் தூங்கி எழட்டும்" என்று மனைவியை அழைத்துக் கொண்டு போனார் கேசவன்.

தந்தையின் பேச்சு முழுவதுமே உதயாவுக்கு அடி. மேல் அடி விழுவது போலத்தான் இருந்தது.

யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வது போல, அவளேதான். பானுவோடு செல்லுமாறு செல்வத்தை அனுப்பி வைத்தாள். அத்தோடு, இது சாதாரண விஷயம் அல்ல என்பதும், அவளுக்கு நன்றாகவே தெரியும்!

பெற்றோரின் உரையாடலைப் பார்த்தால், அம்மாவுக்கும் ஏதோ சந்தேகம் தோன்றியிருக்கும் போல இருக்கிறதே.

இப்போது, பிரச்சினையை எப்படிக் கையாள்வது?

பானு, செல்வம் பற்றி இப்போது சொன்னால், பெற்றவர்கள் இருவரும் அதை எப்படி ஏற்கக் கூடும்?

சந்தோஷமாக அல்ல என்பது புரிகிறது. பானு, செல்வத்திடம் கோபப் படலாம் என்றும் தெரிகிறது.

தனக்காக என்பது ஓரளவு ஆறுதலைத் தந்தபோதும், தங்கையின் மகிழ்ச்சி தன்னால் கெடுவதா என்று உதயாவுக்கு வேதனையாக இருந்தது.

அப்பா சொன்னது போல, அக்காவின் மகிழ்ச்சியைக் கெடுக்க, பானுவுக்கு மனம் துணியாது போகலாம். ஆனால், அவளாகவே விட்டுக் கொடுத்தால் கூட இனிமேல் செல்வத்தை உதயாவால் எப்படி மணக்க முடியும்?



முடியவே முடியாது என்பது உதயரேகாவுக்கு நிச்சயம்.

தங்கை விழித்தெழ மாட்டாளா என்று காத்துக் கிடக்காமல், மறுநாள் உதயா சீக்கிரமே கிளம்பிவிட்டாள்.

தமக்கையின் முகம் பார்த்துப் பேசும் நெஞ்சுரம் இல்லாததால் அவள் கிளம்பும் வரை பானுரேகா எழுந்திருக்கப் போவதில்லை என்பதும் அவளுக்குத் தெரியும்தானே?

"என்னம்மா, அவள்தான் கும்பகர்ணி மாதிரித் தூங்குகிறாள் என்றால், நீயும் சீக்கிரமாகக் கிளம்புகிறாயே" என்று மேலும்ஏதோ சொல்லத் தவித்தாள் ரேவதி.

அன்னை மனதில் இருப்பது ஓரளவு தெரிந்ததினாலேயே, அதைக் கேட்கும் திடமற்று, "பாஸ் இன்றைக்கு இன்னமும் சீக்கிரமாக வரச் சொல்லியிருக்கிறார், அம்மா" என்று காலில் கொதிநீர் ஊற்றினாற்போலத்துள்ளித் துடித்துக் கொண்டு விரைந்து சென்று விட்டாள் பெண்!

அவள் சென்ற பிறகு எழுந்து, கிளம்பி, வெளியே செல்லத் தயாராக வந்த சின்னவளிடம் "இன்னும்நாலைந்து நாட்களில் கிளம்பப் போகிறாய். உனக்குப் படிப்பையும் அதன் மூலமா இந்த வேலையையும் தந்த அக்காவுடன், சற்றுச் சீக்கிரமாக எழுந்தேனும் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்று, உனக்குத் தோன்றவே இல்லையா?" என்று சிறு கண்டனம் தொனிக்கும் குரலில் வினவினாள் தாயார்.

"அடடா! என்னம்மா, உங்களோடு ஒரே ரோதனை? உதயாவுக்கே என்னோடு பேசிக் கொண்டிருக்கும் ஆர்வம் இல்லாமல்தானே, வேலை, வேலை என்று ஓடிவிடுகிறாள். என்னுடைய பதவிக்கு, நான்இந்தியாவுக்கு வந்ததே, பெரிது. வந்தாலும், மும்பையை அசைவேண்டியவள். வீட்டு ஆசையில் சென்னைக்கு வந்தால், எல்லோரும் வெறுப்பேற்றுகிறீர்களே. இன்னும் நாலே நாலு நாட்கள். அப்புறம் சிங்கப்பூர் போய்விடுவேன். அதுவரை, என்னிடம் பிரியமாக இருங்களேன்மா." என்று பானுரேகா வருத்தம் காட்டவும், ரேவதியின் மனம் சின்ன மகளிடம் உருகிவிடு.

"இப்படி வேலையையும் சேர்த்துக்கொண்டு வராமல், முழு விடுமுறை எடுத்துக் கொண்டு ஓர் இரண்டு மாதம் சேர்ந்தாற் போல வந்து இருந்துவிட்டுப் போடா செல்லம். அப்போது ஒரு நல்ல பையனாகப் பார்த்து, உன் திருமணத்தைக் கூட நடத்தி விடலாம். இரண்டு பேர் திருமணமும் முடிந்துவிட்டால், நான் நிம்மதியாக இருப்பேன். சரி சொல்லு..., உனக்கு இன்று மதியத்துக்குச் சாப்பிட என்ன உணவு வேண்டும்? மீனுக்குச் சொல்லி அனுப்பட்டுமா?" என்று கேட்டபடி உள்ளே சென்றாள் தாய்.

சின்ன மகள் கெட்டிக்காரி. ஜாடையாகச் சொன்னதைப் புரிந்துகொண்டு, அதற்கேற்ப நடந்து கொள்வாள்.


அதற்கேற்ப, வாசலில் நிழலாட, யோசனையோடு பானு அந்தப் பக்கம் பார்த்தால், பேயறைந்த மாதிரி முகத்துடன், செல்வம் அங்கே

நின்று கொண்டிருந்தான்.

அன்னையின் பேச்சு அவன் காதிலும் விழுந்திருக்கிறது.

வேகமாக அவன் அருகே சென்று "அம்மா சொன்னது காதில் விழுந்தது அல்லவா? அதை மீறி, உதயாவின் மனதை முறிக்க என்னால் முடியாது. என்னை மறந்து விடுங்கள்!" என்றாள் பானுரேகா, வேதனை தோய்ந்த குரலில்.

அதிர்ந்து விழித்தான் செல்வம்!



## இந்த மனம் எந்தன் சொந்தம் 6

செல்வம் அதிர்ச்சியுற்று விழித்தது ஒரு சில கணங்களே! அதற்குள் சமாளித்துக் கொண்டு "பானு, என்ன பேச்சு பேசுகிறாய்? உணர்ந்துதான் சொல்கிறாயா? உன்னை இழந்து நானும், என்னைப் பிரிந்து நீயும் வாழ முடியுமா?" என்று அவளுக்கு மட்டும் கேட்கும்படியாக மெல்லிய குரலில் தவிப்புடன் கேட்டான்.

அதற்குள் உள்ளே அரவம் கேட்கவே, "உஷ்" என்று அவனை அடக்கினாள் பானுரேகா. "இப்போதும் எதுவும் வேண்டாம். அப்புறமாகப் பேசலாம்" என்றாள் அவசரமாக.

அவன் காதில் வேகமாக முணுமுணுத்துவிட்டு, அன்றைய பத்திரிகையைப் பிரித்துத் தலைப்புச் செய்திகளைப் பார்வையிடுவது போல அவள் பாவனை செய்யும்போது, வெளியே செல்வதற்கு தயாராகக் கேசவன் வந்து சேர்ந்தார்.

செல்வத்தைப் பார்த்ததும், "வாப்பா செல்வம்" பானுவை அழைத்துப் போக வந்தாயா? என்னவோ, இவள் உன்னுடன் செல்வதால், எந்தக் கவலையும் இல்லாமல் நிம்மதியாக இருக்க முடிகிறது. மற்றபடி, ஊர் தெரியாத பானு எங்கே, எப்படி மாட்டிக் கொள்வாளோ என்று நடுங்கிக் கொண்டுதான் இருக்க வேண்டும். இப்போது பார்... எந்த விதமான பிரச்சனையிலும் பானு மாட்டிக் கொள்ள மாட்டாள் என்று நிம்மதியாக இருக்க முடிகிறது இல்லையா?" என்று கூறினார்.

அவரது செருப்பை எடுத்துக் காலில் மாட்டியவாறே, "பாரேன், னக்கு 'சேல்' சமயம். உதிக்கு வேலை அதிகம். நல்ல வேளையாக ம்பிக்கையாக நீ இருப்பதால், பொறுப்பை உன் தலையில் கட்டிவிட்டு, ங்கள் நிம்மதியாக இருக்கிறோம். பார்த்துக் கொள்!" என்றவர், மனைவி கொணர்ந்த உணவுப் பாத்திரத்தை வாங்கிக்கொண்டு வெளியேறினார்.

காலை உணவு முடிந்து, பானுவும் செல்வமும் வெளியே செல்லும் ரையிலும், அவர்களிடையே வேறு பேச்சு வார்த்தை எதுவும் ருக்கவில்லை. ஆயினும், அவர்கள் இருவரும் சேர்ந்து செல்வதைப் ர்த்துக் கொண்டு நின்ற ரேவதியின் முகம் இறுகிப் போயிற்று.



அந்தச் சுற்று வட்டாரத்தை விட்டு வெளியேறும் வரையில் பொறுமை காத்த செல்வம், அதன்பின் பக்கத்து சந்து ஒன்றில் காரைத் திருப்பி ஒரு புறமாக நிறுத்திவிட்டு அருகில் இருந்தவளிடம் திரும்பினான்.

நல்ல வேளையாக கார்தான். பைக்கில் போனால், வெய்யில் பட்டு சருமத்தை கெடுத்து விடும் என்று, வெளியே சுற்றுவதற்கு அவன் வீட்டுக் காரை எடுத்து வருமாறு பானு சொன்னது. இப்படித் தனியாகப் பேசுவதற்கு எவ்வளவு வசதியாக இருக்கிறது.

"பானு, வீட்டில் சும்மாதானே சொன்னாய்?" என்று அவ்வளவு நேரமும் மனதைக் குடைந்து கொண்டிருந்த கேள்வியை, அவளிடம் கேட்டான் அவன்.

ஆனால், அவளது சோக முகம் திகிலூட்டவே, "என்ன பானு? உதயாவுக்கு வேறு யாருடனாவது திருமணம் ஆகிற வரையில் நாம் காத்திருக்க வேண்டும் அவ்வளவுதானே? அவளுக்கு நல்ல மாப்பிள்ளையாக, நானே பார்த்துத் தருகிறேன்! அதற்குப் பிறகு நாம் மணந்து கொள்ளலாம். அப்படித்தான் என்று சொல்லு பானு. பிரிவு, முறிவு என்றால் என்னால் தாங்க முடியாதும்மா! என் மனம் உடைந்து போகும்!" என்றான் தவிப்புடன்.

"எனக்கு மட்டும் எப்படி இருக்கும் என்கிறீர்கள், செல்வா? ஆனால் என் அக்கா. என் வெளிநாட்டுக் கல்விக்காகத் தன் படிப்பைத் தியாகம் செய்தவள்! அவளது வாழ்வை நான் அபகரிப்பது என்றால்.. ஐயோ! எப்படிப்பட்ட பச்சைத் துரோகம். உங்கள் மேல் உதயா உயிரையே வைத்திருக்கிறாள். ஊகூம்! அவள் மனதை முறிப்பதைவிட, நான் உயிரையே விடுவது கூட மேல்தான். விடுங்கள் செல்வா உங்கள் நினைவிலேயே நான் காலத்தைக் கழித்து விடுவேன்..."

குறுக்கிட்டு, "ஆனால் என் மனம்? என் வேதனை, உனக்கு ஒன்றுமில்லையா? நெஞ்சைத் தொட்டுச் சொல்லு?" என்று கேட்டான் செல்வம்.

"இப்படிக் கேட்டால் நான் என்ன சொல்வேன்?" என்றாள் அவள் வருத்தமாக. "ஆனால் உதயாவையும், என் பெற்றோரையும் வேதனைக்குள்ளாக்க என்னால் முடியவே முடியாது, செல்வா. கண் பார்க்காதது, மனம் மறந்து விடும் என்பார்கள். இதோ, இன்னும் நாலு நாட்களில் நான் கீழ்த்திசைப்பக்கம் பறந்துவிடுவேன். திரும்பும்போது.. இன்னும் ஒரு தரம்... முடிந்தவரை வராமலே போய்விட முயற்சிக்கிறேன். நீங்களும் உதயாவும் மணந்து..." என்று அவள் மேலே சொல்கையில், செல்வம் மறுபடியும் குறுக்கிட்டான்.

"அந்த வார்த்தையை சொல்லாதே" என்றான் கோபமும் தவிப்புமாக.

ஓரக் கண்ணால் பார்த்து, "ஏனோ? முன்பு அவளை மணக்க ஒத்துக்

கொண்டவர்தானே?" என்றாள் பானுரேகா.

"அது உன்னை அறியும் முன்பு. இப்போது உன்னை பார்த்து, பழகி, உன் மனதையும் அறிந்த பிறகு, உதயாவை.....வேறு யாரையுமேதான், என்னால் எப்படி மணக்க முடியும்?" என்றான் செல்வம்.

"ஆனால்... வேண்டாம் செல்வா. உதயாவை வருத்த என்னால் முடியாது. இதற்குமேல் இந்த விஷயம் பேசினால், நான் காரிலிருந்து இறங்கிப் போய்விடுவேன். இப்போது எனக்கு, என் வேலையைப் பார்க்க வேண்டும். காரை எடுங்கள்" என்றாள் ஒரு தீர்மானமான குரலில்!

அவன் மேலும் தயங்கவும், அவள் பிடிவாத முகத்துடன் கார்க் கதவில் கையை வைக்க, வேறு வழியின்றிக் காரைக் கிளப்பினான் செல்வம்.

பானுரேகா இந்த மாதிரிப் பிடிவாதம் பிடிக்கும்போது, பணிந்துதான் ஆக வேண்டும். ஆனால், அவன் மனதிலும் ஆசை இருப்பதால்...

வழக்கத்துக்கு வெகு முன்னதாகவே, உதயரேகா அன்று அலுவலகத்தை அடைந்து விட்டாள்.

"சீக்கிரமே வந்துட்டீங்க?" என்ற வாயிற் காவலனிடம் வெறுமனே தலையை மட்டும் ஆட்டிவிட்டு, அவளது வேலைப் பகுதியை அடைந்த உதயா அதற்கு மேல் தவித்துப் போனாள்.

தங்கை, தங்கை என்று எவ்வளவு சந்தோஷமாக முந்திய நாள் வீட்டுக்குக் கொண்டுவந்தாள். இன்று, அதற்கு நேர்மாறான உணர்ச்சியோடு, எவ்வளவு சீக்கிரமாக வீட்டை விட்டு ஓடி வந்திருக்கிறாள்.

ஆனால், இது எத்தனை நாள் நடக்கும்? பானு வெளிநாட்டுக்குக் கிளம்பும் வரை நடத்தி விடலாம்.

ஆனால், அது சரியல்லவே. ஒன்றுபட்ட இரு உள்ளங்களைப் பிரிப்பது... அதுவும் உடன் பிறந்த தங்கையின் மகிழ்ச்சியைப் பறிப்பது... கூடவே கூடாது.

இழக்கப்பட வேண்டியவை அவளது கனவுகள்.

பழைய குடும்பத்தில், அழகும் குணமும் உள்ள செல்வத்தை மணப்பதும், அம்மா அப்பா பக்கத்திலேயே இருப்பதும்... அதெல்லாம் கனவாகவே முடியப் போகிறவை.

முடியப் போகிறதா? அதுதான் முடிந்தே விட்டவை என்று கசந்தது, அவளது மனம்.

ஆனால், இதெல்லாம் ஒன்றுமில்லை. பானுவின் மகிழ்ச்சிதான் முக்கியம் என்று தனக்குத் தானே, உதயா பல முறை சொல்லிக் கொண்டாள்தான்.

ஆனால், அதனால் வலி குறையவில்லையே.

அவள் இருக்கப் போவதாக நினைத்த இடத்தில், பானு குடும்பம் நடத்த. அதைப் பார்த்தபடி..... கடவுளே....



"என்ன விஷயம்? காத.. இல்லை, தங்கையுடன் இரவெல்லாம் கண்விழித்து, விட்ட நாட்களுக்கும் வட்டியும் முதலுமாகச் சேர்ந்து ஆட்டம் போட்டதன் விளைவாக்கும்."

மனதில் வலியை அடக்கும் முயற்சியாகக் கண்கள் ஈறுக மூடித் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்த உதயா, தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு விழித்தாள், யோகேந்திரன்.

அவளுடைய முதலாளி.

இருக்கட்டுமே. அவளுடைய முதலாளியாகவே இருந்தாலும், அவளது உலகமே தலைகீழாகப் புரண்டு கிடக்கும் இந்த நேரத்தில் இது என்ன பேச்சு?

அத்தோடு, அவளுடைய தங்கைக்குத்தான், அக்காவின் முகத்தைப் பார்க்கவே பிடிக்கவில்லையே.

காதல் வந்தால், உடன் பிறந்தவள் கூட, இல்லை என்று ஆகிவிடுமா? என்ன அநியாயம்.

ஆனால் உதயா இப்படி நினைக்கவில்லையே. அவளும் இதேபோல் எண்ணியிருந்தால், இந்தப் பிரச்சினையே ஏற்பட்டிராது. யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டது போல... சே....! இப்படி நினைக்கக் கூடாது.

ஒரே தங்கை. சின்னப் பெண். நீண்ட காலம் வேற்று மண்ணில் தனியே வாழ்ந்துவிட்டுப் பாசத்தில் வந்தவள், முகம் பார்த்துப் பேச முடியாத அளவு குற்ற உணர்வில் தவிக்கிறாள் என்று பரிதாபம்தான் பட வேண்டும்.

படலாம்தான். ஆனால் என் நிலைமை... என்ற நினைவில், உதயாவின் மனம் மீண்டும் தவிக்கலாயிற்று.

அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவன் போல, "என்ன உதயா? அப்படி என்ன பிரச்சினை?" என்று யோகேந்திரன் கேட்க, அவன் இருப்பதை அடியோடு மறந்து கலங்கிக் கொண்டிருந்தவளுக்கு மீண்டும் தூக்கி வாரிப்போட்டது.

பிரச்சினையா? பிரச்சினை என்ன என்றா கேட்டான்?

அவளுக்கு ஆயிரம் பிரச்சினைகள் இருக்கக் கூடும். அதையெல்லாம் இவனிடமா சொல்வது?

சும்மாவே, இளம்பெண்கள் என்றால் இவனுக்கு இளக்காரம். வந்த முதல் நாளே, ஒட்டு மொத்தமாக அவர்களை இவன் மட்டம் தட்டிப் பேசவில்லை?

இன்னும்.... ஊகூம்! இவனிடம் ஒன்றும் சொல்லத் தேவையில்லை.

இயன்றளவு நிமிர்ந்து நின்று, "அதெல்லாம் ஒன்றும் இல்லை சார். நீங்... நீங்கள் சொன்ன மாதிரி, இரவு சரியாகத் தூங்காததால் லேசாகத் தலைவலி. அதுகூட, இப்போது குறைந்துவிட்டது. வேலையைத் தொடங்கலாமா?" என்று மேஜையைத் திறந்து, பால் பேனாவையும்,

குறிப்பும் புத்தகத்தையும் எடுத்தாள்.

சொல்லப் போவதில்லை என்கிறாளாம்!

நல்லதுதான் என்று எண்ணினான் யோகேந்திரன். அவளிடம் பணி புரிகிறவர்களின் சொந்தப் பிரச்சனைகளை ஆராய்ந்து, தீர்வு சொல்லுவதைக் காட்டிலும் அவனுக்கு எத்தனையோ முக்கியமான வேலைகள் இருக்கின்றன. வளம் பெருக்கக் கூடிய வேலைகள்.

என்ன துன்பம் என்றாலும், அவளாகவே சமாளித்துக் கொண்டால், மிகவும் நல்லதுதான்.

ஆனாலும் இந்தப் பெண் உதயா.... பரவாயில்லைதான்.

உதட்டோரம் சன்னமான முறுவலுடன், இன்னமும் அவன் வரவில்லையே என்று பார்த்தால், பால் பென்னுக்குப் புது 'ரீஃபில்' ஒன்றைப் போட உதயா வெகுவாக முயன்றுகொண்டிருந்தாள். வெகுவாக என்றால், வெகுவாகத்தான்!

இலகுவான வேலை! ஆனால் அதற்குரிய துவாரத்தில் 'ரீஃபி'லைச் செருக முடியாமல் உதயா திணறிக் கொண்டிருந்தாள். சரியான இடத்தில் வைக்காமலே அழுத்தியதில், ஒரு 'ரீஃபில்' வளைந்து, அதுவேறு அருகில் கிடந்தது.

சட்டென எழுந்தான் அவன்.

"விட்டுவிடு..." என்று அவள் கையிலிருந்தவற்றை அவன் அகற்றவும், நனைந்த இமைகளைத் தூக்கி "இ...இது...கூடப் போட வரமாட்டேன் என்கிறது..." என்று சொல்லி முடிக்குமுன், உதயாவின் கண்களிலிருந்து பெரி பெரிய நீர்மணிகள் அரும்பி, மளமளவென்று விழலாயின.

"உட்கார்" என்று அவளது தோளை ஒரு தரம் அழுத்தி, அவளை நாற்காலியில் அமர வைத்துவிட்டுச் சென்றவன், டம்ளரில் நீருடன் திரும்பி வந்தான்.

தம்ளரைக் கையில் திணித்து, "குடி" என்றான் சற்று அழுத்தமான குரலில்.

தண்ணீரைக் குடித்து முடித்தபோது, உதயாவின் கண்ணீர் கட்டுப்பட்டு நின்றிருந்தது.

"நேற்று என்ன நடந்தது?"

புரியாத திகைப்பாக அவன் முகத்தைப் பார்த்தவளுக்கு, அதற்குமேல் மறைப்பதற்கு எதுவும் இருக்கவில்லை.

உதயா கூறி முடிக்கும் வரை குறுக்கிடாமல் கேட்டிருந்தவன், அவளது மரத்த குரல் பேச்சை நிறுத்தியதும், "இதை நான் எதிர்பார்த்தேன்." என்றான்.

அவள் திடுக்கெனத் திகைத்து நிமிரவும், "சில தினங்களுக்கு முன்பாக நான் தொழில் முறை 'லஞ்ச்'க்காக வெளியே சென்றிருந்தேன். நினைவிருக்கிறதா? அன்று அதே ஹோட்டலில், நீ முன்பு மணக்கப்



போவதாகச் சொன்ன மனிதரும், ஒரு பெண்ணும், சற்று நெருக்கமாகப் பழகுவதை பார்த்தேன். அந்தப் பெண்ணிடம் அப்பட்டமான புகை வாடை. சற்று உன் ஜாடையும் கூட. உன்னிடம் எச்சரிக்கலாமா என்று யோசித்தேன். ஆனால், உன் தங்கை சீக்கிரமாகக் கிளம்பிவிடுவாள் என்று நீ சொன்ன நினைவு. அத்தோடு, அவளிடம் ஆழமுமில்லை. சரி, அங்குள்ள பழக்கம் போலப் பொழுது போக ஏதோ பழகுகிறாள், கிளம்பியதும் மறந்துவிடுவாள். அவள் விட்டுப் போனதும், உன் ஆளுக்குப் புத்தி வந்து, உன்னிடமே திரும்பிவிடுவார். உனக்கு ஒன்றும் தெரியாமல் போய்விடக் கூடும். இடையில் உன்னைப் போட்டுக் கலக்குவானேன் என்று எண்ணிச் சும்மா இருந்துவிட்டேன். அப்படியே நடந்தும் இருக்கும். இடையில் நீ பார்க்க நேர்ந்ததுதான் துரதிருஷ்டம்" என்று யோகேந்திரன் விளக்கம் சொன்னான்.

ஆனால், உதயா அவன் சொன்னதை ஒப்புக் கொள்ள மறுத்தாள். அவளுடைய தங்கை அப்படிச் 'சும்மா'ப் பழகுகிறவள் அல்லவாம்.

அவள் அப்படிப்பட்ட மோசமான பெண் என்றால், உடன் பிறந்தவளை நேருக்கு நேர் பார்க்கக் கூட முடியாமல் குற்ற உணர்ச்சியில் குறுகுவாளா? 'என் வெற்றியைப் பார்' என்று பெருமையல்லவா அடிப்பாள்.

செல்வமும் ஓடி ஒளிகிறான்!

எனவே, அவர்கள் இருவருக்கும் இடையே தோன்றியிருப்பது உண்மையான நேசமோ என்பது அவளுக்கு நிச்சயம்.

ஒரு குறுகுறுப்புடன் அவளை நோக்கிவிட்டு "அதனால்?" என்று கேட்டான் யோகேந்திரன்.

"நீங்கள் ஒத்துக் கொள்ளவில்லையா?" என்று அவள் குறைப்பட்டாள்.

"நான் ஒத்துக் கொண்டாலும், இல்லாவிட்டாலும், அதைப் பற்றி ஒன்றுமே இல்லையே, இப்போது, நீ என்ன செய்வதாக உத்தேசம்?"

"வேறு என்ன செய்வது?" என்றவளின் முகம் மறுபடியும் கசங்கியது. "எல்லோரிடமும் சொல்லி, அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைக்க வேண்டியதுதான்." என்றாள் சோர்ந்த குரலில்.

"பாவம், உன் தங்கை. அதிர்ந்து போவாள்" என்றான் அவன்.

புரியாமல் பார்த்தவளிடம், "எப்படிச் சொல்வாய்? தங்கைக்காகத் தியாகம் செய்யப் போவதாகவா? வெகு உருக்கமாக?" என்று தொடர்ந்து கேட்டான்.

யோகேந்திரன் தன்னைப் பார்த்துச் சிரிக்கிறானோ என்று சந்தேகம் தோன்றியது, உதயாவுக்கு. ஆனால், அவனது கேள்வி வேறு யோசிக்க வைத்தது.

உதயாவின் தியாகத்தைப் பானு எப்படி ஏற்பாள்? தமக்கையின் மேல் உள்ள அன்பு காரணமாக, ஏற்கனவே குற்ற உணர்ச்சியில் அக்காவின்

முகம் பார்க்க முடியாமல் தவிக்கும் அவனுடைய அன்புத் தங்கை தமக்கைகாகத் தானே நியாயம் பண்ண முன்வர மாட்டானா?

அப்புறம், உண்மை நேசம் ஒன்று சேராமல், எல்லாம்... எல்லாம் வாழ்வும் கெட்டுப் போகும்.

ஐயோ! இது சரி வராது. வேறு மாதிரிதான் இதைக் கையாள வேண்டும்.

அவர்கள் இருவருமேனும் நன்றாக இருக்க வேண்டாமா?

தனக்கு ஏனோ திருமணம் பிடிக்கவில்லை என்று சொல்லி... அல்லது, செல்வத்தை மணக்க மனமில்லை என்று... அவளால் சொல்ல இயலுமா? ஆனால், சொன்னால்தானே, இதிலிருந்து தொடங்கி, பானு செல்வம் திருமணம் பற்றி மேலே பேச முடியும்?

ஆனால், எப்படிச் சொன்னாலும், பெற்றோர் நம்புவார்களா? ஒத்துக் கொள்வார்களா?

கலக்கத்துடன் மீண்டும் யோகேந்திரனைப் பார்த்தாள் உதயா.

அவன் கைக் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு நிமிர்வதைக் கண்டதும், "சாரி சார். உங்களுக்கு வேலை நேரம் வீணாகிறது. வேலையைப் பார்க்கலாம். என் கதை... அது... இப்போதைக்கு முடியாது என்று நினைக்கிறேன்." என்று சின்னக் குரலில் சலிப்புடன் கூறினாள்.

"இல்லை" என்றான் அவன். "இதற்கு ஒரு தற்காலிக முடிவேனும் காணாமல், உன்னால் வேலையில் கவனம் செலுத்த முடியாது. உன் தங்கை விரைவிலேயே வெளியூர் போவதாகச் சொன்னாயில்லையா?"

"ஆமாம்... இன்னும் நாலு நாட்களில்!"

"நாலே நாட்கள்! இதற்குள், நீ விஷயத்தை உன் பெற்றோரிடம் சொல்லி, அவர்கள் இந்தப் புது உறவுக்கு ஒத்துக் கொண்டு, அந்த இருவருக்கும் திருமணம் செய்து வைப்பது இயலாது. அவகாசம் இராது அல்லவா?"

யோகேந்திரன் சொல்வது சரிதான். இருப்பது, நாலே நாட்கள் அல்லவா? இந்த விஷயம் அவள் யோசிக்கவில்லை.

வெறுமனே தலையாட்டினாள் உதயா.

"எப்போதுமே, மனது கலங்கி இருக்கும்போது எடுக்கும் முடிவுகள் அவ்வளவு சரியானதாக இருப்பதில்லை. அதையும் அவசரத்தில் எடுப்பது சற்றும் உசிதமில்லை. எனவே, வீட்டில் புதுக் குழப்பம் எதையும் ஏற்படுத்தாமல், இப்போது இருப்பது போல, இப்படியே இருக்கட்டும் என்று விட்டுவிடுவது மேல்" என்றான் அவன்.

"ஆனால், அவர்கள் இருவரும் குற்ற உணர்வில் தவித்துக் கொண்டே இருப்பார்களே"

"தவிக்கட்டும். நியாயம்தானே?"

அதிர்ச்சியில் தன் மூளையின் செயல் வேகம் குறைந்து விட்டதோ என்று எண்ணியவாறே, புரியாமல் பார்த்தாள் அவள். "ஏ...என்ன



நியாயம்?"

"தமக்கைக்கு நிச்சயம் ஆனவன் என்று தெரிந்த பிறகும், அந்த மனிதனோடு உன் தங்கை தொடர்ந்து பழகலாமா? ஒரு பெண்ணிடம் வாக்குக் கொடுத்த பின், அவளுடைய தங்கையுடனேயே சரசமாடுவதும் சரியில்லைதானே?"

"காதல் இதையெல்லாம் பார்த்து வருவதில்லை என்று படித்திருக்கிறேன்"

"ஏட்டுச் சுரைக்காய். 'ஏற்பது இகழ்ச்சி' என்பார்கள். அடுத்த வரியிலேயே 'ஐயம் இட்டு உண்' என்றும் சொல்வார்கள். நமக்குத் தேவையானதை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும். இப்போதைக்கு, இந்தக் காதல் விவகாரம் தெரிந்த மாதிரி நீ காட்டிக் கொண்டால், இந்த இரண்டு பேருக்கும் குற்ற உணர்ச்சி அதிகமாகும் என்பதோடு, குடும்பத்திலும் குழப்பம், பிரச்சினை ஏற்படக் கூடும்."

"ஆனால், செல்வத்தைப் பிரிந்து, பானு வெளி நாட்டுக்குப் போய் விடுவாளே!"

"என்னவோ, உன் பானு இந்தக் கிரகத்தை விட்டே போகப் போவது போலப் பதறுகிறாயே. தகவல் தொடர்பு வளர்ந்திருக்கும் விதத்தில், இந்த உலகத்தையே ஒரு 'குளோபல் வில்லேஜ்' என்கிறார்கள். தொட்டுத் தடவுவது தவிர, இருவரும் தினம் தினம் பார்த்துப் பேசி மகிழ முடியும் என்கிறபோது, பிரிவு எங்கிருந்து வரும்? அத்தோடு, இந்த விவகாரம் பற்றி, உன் பெற்றோரிடம் சாதாரணமாகப் பேச உன்னால் இப்போது முடியுமா? கட்டுப்பாட்டை மீறி அழுது வைத்தாய் என்றால், அப்புறம் என்ன ஆகும் என்று யோசி..."

உதயாவின் கண்கள் விரியவும், "அதனால்தான் இப்போதைக்கு விஷயத்தை ஆறப்போட்டு, உன் மனது சற்று அமைதியடைந்தபின் பேசச் சொல்கிறேன்" என்று முடித்தான் அவன்.

யோகேந்திரன் சொன்ன இதையும், உதயா யோசித்திருக்கவில்லைதான்.

அவளுடைய தாயார் முட்டாளல்ல. பாசமும் அதிகம். மனதை மறைத்து அவளிடம் பேசுவது கடினமே. அவளுக்கு மட்டும், உதயாவின் உண்மையான மனநிலை கொஞ்சம் தெரிந்தாலும், அப்புறம் எல்லாம் பிரச்சினை ஆகிவிடும்.

அவளது முகத்திலிருந்தே, அவளது முடிவைக் கண்டவன்,போல, "இனி வேலையை பார்ப்போமா?" என்று புன்னகையோடு கேட்டான் யோகேந்திரன்.

என்னவோ, அந்தப் புன்னகை உதயாவை ஒரு விதமாய் அமைதிப்படுத்தியது.



# இந்த மனம் எந்தன் சொந்தம் 7

தொடர்ந்த சில நாட்கள் உதயரேகாவுக்கு அலுவலகம் மட்டுமே மனதிற்கு அமைதி அளிப்பதாக இருந்தது.

வேலை வேலை என்று, வேறு! எதையும் நினைக்க நேரமில்லாமல் பணி புரிவது சொர்க்கமாக தோன்றியது.

ஆனால், ஓர் ஐந்து நிமிஷம் ஓய்வு கிடைத்தாலும், தப்பு செய்கிறோமோ, தங்கைக்கு அநியாயம் செய்கிறோமோ என்று அவளது மனமே அவளை வதைத்து எடுத்தது!

தன் கோழைத் தனத்தை நினைத்து, அவளுக்குத் தன்மீதே கோபமும் வந்தது. அவளுக்கு மட்டும் நெஞ்சில் தேவையான இடம் இருந்திருந்தால், நேரே பெற்றோரிடம் போய், எனக்குக் கல்யாணம் இப்போது வேண்டாம். பானுவுக்கும் செல்வத்துக்கும் மண முடித்து வையுங்கள் என்று சொல்லியிருக்கலாமில்லையா?

அதற்கு துணிச்சல் இல்லாமல், தானும் வாடி, சந்தோஷமாக இருக்க வேண்டிய அந்த இளம் ஜோடியையும் வருத்தி தானும் சேர்ந்து இப்போது குற்றக் குறுகுறுப்பில் வாடுவதுதான் மிச்சமாயிற்று.

அதற்கு ஏற்றாற்போல, 'என் அக்காவுக்குத் துரோகம் பண்ண என்னால் முடியாது. அதனால், அவளையே மணந்து கொள்ளுங்கள், செல்வா' என்று குரல் தழுதழுக்க பானுரேகா சொல்வதை, அவள் ஒருதரம் கேட்கவும் நேர்ந்தது.

அவள் வீடு வந்தது தெரியாமல், அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

பானு இப்படிச் சொல்ல, "அவளுக்கு ஒருநல்ல மாப்பிள்ளை, நானே பார்த்துக் கொடுப்பேன். அதன் பிறகு, அடுத்து நீ வரும் வரை, உனக்காக நான் காத்திருப்பேன். இது சத்தியம்" என்று செல்வம் சபதம் செய்தான்.

'ஊகும். அதெல்லாம் நடக்காது செல்வா. இவ்வளவு நாள் நீங்கள்தான் மாப்பிள்ளை என்று இருந்துவிட்டு, இப்போது வேறு தேடினால், யார் ஒத்துக் கொள்வார்கள்? அதுவும் நீங்களே தேடினால், உதயாவுக்கு என்ன குறையோ என மாட்டார்களா? எனவே, அவளை நீங்கள்தான் மணந்தாக வேண்டும். என்னை மறந்து விடுங்கள். வேறு வழியில்லை' என்று பானுவின், கண்ணீர் குரல்.

உதயாவின் உடலும் உள்ளமும், சேர்ந்து கூனிக் குறுகிப் போயின. இந்தக் காதலர்கள் இணைய முடியாமல், அவளல்லவா, நந்தியாகக் குறுக்கே நிற்கிறாள்.

சத்தமின்றி வெளியே போய்விட்டு, செல்வம் கிளம்பும்வரை



காத்திருந்து, அதன் பிறகு வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தாள்.

பானு செல்வத்தின் உரையாடல் தந்த வேகத்தில் ஏதாவது செய்யலாம் என்று பார்த்தால், அதற்கும் வழியின்றி, அன்றிரவே பானு பயணம் கிளம்பி விட்டிருந்தாள்.

சொல்லப் போனால், அவள் கிளம்புகிறாளே என்று தாயார் சொல்லித்தான் உதயா அன்று சற்று சீக்கிரமாக வீடு திரும்பியதே. வந்ததற்கு நன்றாகவே கிடைத்தது.

இத்தனைக்கும் 'கிரில்' கதவைச் சத்தமாகத் திறந்து கொண்டுதான் உள்ளே போனாள். ஆனால், அவர்கள் பேசிய பேச்சின் தீவிரம், மற்றதைக் கவனிக்கவிடவில்லை போலும்.

கீழ்த்திசை நாடுகளின் முக்கிய நகரங்களை முடித்துக் கொண்டு பானு இரண்டு மாதங்களில் மறுபடியும் இந்தியாவுக்குத் திரும்புகிறாள்.

இந்த இரு மாதங்களில், பிரச்சனையைத் தீர்த்தாக வேண்டும்.

ஆனால் எப்படி?

முன்பு நினைத்தது போல, திருமணத்தில் நாட்டம் இல்லை. அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வையுங்கள் என்று முடிக்க முடியாது என்று புரிந்தது. தங்கையின் பாசம், அக்காவை வேறு யாரும் மணக்க மாட்டார்களோ என்று கவலைப்பட வைத்ததல்லவா. முட்டுக்கட்டை போடுகிறது.

தங்கையின் அன்பு பன்னீரைத் தெளித்தாற்போல மனதைக் குளிர்வித்தாலும், தீர வழியின்றிப் பிரச்சினையை இன்னமும் பெரிதாக்குகிறதே!

அவள் முகத்தில் சிந்தனையைக் கண்டு, என்னவென்று கேட்ட யோகேந்திரனுக்கோ, இதில் பிரச்சினை இருப்பதாகவே தோன்றவில்லை.

"இன்னமும் இரண்டு மாதங்கள் இருக்கின்றன. அதற்குள் நீ யாரையாவது மணந்து கொள்ள வேண்டியதுதானே? அதாவது உன் தங்கையின் நிம்மதியும் திருமணமும் அவ்வளவு முக்கியம் என்றால்."

"என்ன சார், நீங்கள்?" என்றாள் உதயா அலுப்பாக. உங்களுக்குப் பிரச்சினையின் தீவிரமே தெரியவில்லை."

"தெரியாததை நீதான் எடுத்துச் சொல்வது!" என்றான் அவன் இலகுவாக.

பிரச்சினை அவனுக்கு இல்லையே.. எல்லாம்இலகுவாகத்தான் தெரியும்.

ஆனால், இந்த விஷயம் பற்றி அறிந்தவன் என்பதோடு, இதை வேறு யாரிடமும் கலந்து ஆலோசிக்க முடியாத காரணத்தினால், தன் எரிச்சலை அடக்கிக் கொண்டு, உதயா அவனுக்கு விளக்கலானாள். "சார், முதலில் எனக்குத் திருமணம் செய்து கொள்ளவே விருப்பம் இல்லை.."

"அப்படியானால் விட்டுவிடு. உன் தங்கையும் பழைய காதலனும் எப்படியோ போகட்டும்."

அவளது 'பழைய காதலன்' என்ற வார்த்தை முரண்பா உறுத்தியதை ஒதுக்கி "அப்படியெல்லாம் விட முடியாது சார். அப் பானுவின் வாழ்வு வீணாகி...." என்றவளை மீண்டும் குறுக்கி "இதைத்தான் முதலிலேயே சொன்னேன். அவளது நிம்மதி திருமணமும் முக்கியம் என்றால், உன் விருப்பத்தைத் தூக்கித் தூ போட்டுவிட்டு வேறு யாரையாவது கல்யாணம் செய்துகொள்." என்ற யோகேந்திரன்.

அவளது விருப்பத்தைத் தூக்கிப் போடுவது, இவனுக்கு அவ்வளவு சாதாரணமாக இருக்கிறதா? ஆனால், இதைப் பெரிதாக எடுத்து வாதா முடியாது. இரண்டில் ஒன்றை நீதான் தேர்ந்தெடுக்க வேண்டும் என் இப்போது போல சாதாரணமாகவே சொல்லிவிடுவான்.

மனதின் மென்மை தெரியாத இயந்திரம். இவனிடம் மனதை பற்றிச் சொல்லி ஒரு பயனும் கிடையாது. ஆனால்...

"என்ன சார்... புரியாமல் பேசுகிறீர்கள். நான் ஒரு சாதாரண பெண். நானாகத் திருமணம் செய்வது என்று முடிவு செய்தாலும் திடுதிப்பென்று என்னை மணக்க அப்படி யார் முன் வருவார்கள்?" என் கேட்டாள் அவள்.

புருவம் உயர்த்தி "ஏனோ? உன் தங்கை இடறி விடா இருந்திருந்தால், ஒருவர் மணப்பதாக இருந்தார்தானே?" என் கேட்டான் யோகேந்திரன்.

இடறி விடுவதா?

மீண்டும் அவளது வார்த்தைகள் சங்கடப் படுத்தியபோதும், "அ சின்ன வயதில் இருந்து பழக்கம். குடும்ப சிநேகிதம். அது வேறு என்றாள் அவள்.

அப்படித்தான் இருக்க வேண்டும் என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொள்ள முயன்றாள். அதுவும் வேதனையைத் தந்

அப்படியானால், அவள் படு சாதாரணம்தானா? கண்ணாடியி பார்த்து, தானும் அழகாகவே இருப்பதாக நினைப்பாளே. அதெல்லா தன்னையே ஏமாற்றிக் கொண்டதுதானா?

தன்னம்பிக்கை அதல பாதாளத்துக்கே சென்றபோ யோகேந்திரன் சொன்னான். "நீயா சாதாரணப்பெண்? ஐந்து இலக்கத்தி சம்பாதிக்கிற அழகான பெண். அப்புறமென்ன?"

அவளது பேச்சின் முன் பகுதியை ஒதுக்கி, "அழகா? நீங்கள் எ தங்கையைப் பார்த்துவிட்டு, அப்புறம் பேசவேண்டும்" என்றாள் அவ

"பார்த்திருக்கிறேனே!" என்று, சலனமற்று நினைவூட்டினா அவன். "அங்கே அவள் வாழும் இடத்து பழக்கப்படி, ஒப்பனையோ கூடிய அழகு. தப்பென்று சொல்லவில்லை. ஊரோடு ஒத்து வா வேண்டியதுதான். ஆனால், அவளுக்கு நீயும் ஒன்றும் குறைவில்லை."

பாவம் என்று அவளைத் தேற்றுவதற்காகச் சொல்லியிருப்பானோ



என்ற எண்ணம்தான். ஆனாலும், கொஞ்சம் இதமாகவே இருந்தது.

எது, எப்படி இருந்தபோதும், இன்னொருவரோடு திருமணம் என்பதெல்லாம் நடக்கிற காரியமாக அவளுக்குத் தோன்றவில்லை. இன்றையப் பிரச்சினைக்கு வேறு என்ன தீர்வு என்பதும் ஒன்றும் புரியாமல், உதயாவின் மனம் குழம்பிக் கொண்டே இருந்தது.

இந்தக் குழப்பம் வேலையைப் பாதித்துவிடாமல் உதயா கவனமாகவே இருந்தபோதும், "பேசாமல், யாருக்காவது பணம் கொடுத்து, உன்னைக் காதலிப்பது போல நடிக்கச் சொல்லேன்." என்று யோகேந்திரன் ஒரு நாள் யோசனை சொன்னான்.

"ரொம்பக் கெட்டிக்காரத்தனமான யோசனைதான்" என்றாள் அவள் ஏளனமாக.

"இல்லையா, பின்னே?"

"அப்படியே என் பெற்றோர் ஒத்துக் கொள்ளக் கூடிய மாதிரியான ஓர்ஆளைப் பிடித்து, நடிக்க வைத்தாலும், காதலித்தால் கல்யாணம் செய்து கொள்ளேன் என்று சொல்ல மாட்டார்களா?" என்று கேட்டாள் அவள்.

"ம்ம்ம்... அவருடைய நாலைந்து தங்கைகளுக்கு ஒரு வழிகாட்டி விட்டுத்தான் திருமணம். அதனால் உன் தங்கைக்கு முதலில் முடித்துவிடச் சொல்லு."

"அப்புறம், அந்த நாலைந்து தங்கைகளைப் பார்க்கலாம் என்று என் பெற்றோர் கிளம்பினால், அத்தனை பேருக்கு எங்கே போவது? முதலில், இந்த மாதிரி நடிப்பதற்கெல்லாம் எவ்வளவு பணம் கேட்பார்களோ? என் சம்பளத்தில் இதெல்லாம் கட்டுப்படி ஆகாது சார்!" என்றாள் அவள் கறார்க் குரலில்.

"சம்பளம் தருவது நான்தானே? கூட்டித் தருகிறேன். இப்படி என்ன, என்ன என்று யோசித்துக் கொண்டே இருக்கிற முகத்தைப் பார்ப்பதற்கு, ஊதியத்தை உயர்த்தித் தந்து பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பது மேல்." என்றான் அவன்.

"நான் ஒன்றும்..." என்று தொடங்கிவிட்டு நிறுத்திக் கொண்டாள் உதயா.

நெஞ்சறிய எப்படிப் பொய் சொல்வது? அடி மனம், அதே சிந்தனையில் இருப்பது மெய்தானே? எவ்வளவோ கவனமாக இருந்தும் கண்டு பிடித்துவிட்டானே.

"சாரி சார்! பானு கிளம்பிப் போய் இன்றோடு ஒரு வாரம் ஆகிறதா? ஒன்றும் செய்யாமல் இருக்கிறோமே என்று மனம் குத்துகிறது" என்று விளக்கம் கூறினாள்.

"இனிமேல் கவனமாக இருக்கிறேன்" என்றும் சேர்த்துச் சொன்னாள்.

ஒரு தலையசைப்போடு நிறுத்திக் கொண்டான் அவன்.

மேலும் இரு தினங்கள் சென்ற பிறகு, வீட்டுக்கு விருந்தாளி
வந்திருப்பதாகக் கூறி, மதிய உணவுக்கு வீடு சென்ற யோகேந்திர
சீக்கிரமே அலுவலகத்துக்குத் திரும்பி வந்துவிட்டான்.

மாலையில், பொதுவாக வேலை நேரம் முடிந்து எல்லோரு
சென்றபின் உதயாவை அழைத்தான்.

இணைப்பு வேலை தொடர்பாக என்று பேனா, குறிப்பு
புத்தகத்தை எடுத்துக் கொண்டு சென்றாள் அவள்.

"இல்லை, உதயா. இன்று அலுவலகப் பணி இல்லை. ஒரு.. ஒ
சொந்த விஷயமாகப் பேச வேண்டும். அது...அதை நான் சொல்லுகி
விதமாகச் செய்தால், நம் இருவருக்கும் லாபமாக முடியக் கூடும் என்ப
என் கருத்து" என்று யோகேந்திரன் தொடங்கினான்.

"எங்கள் வீட்டைப் பற்றி உங்களுக்குத் தெரியும் என்று
நினைக்கிறேன். அம்மா, அப்பாவுக்கு நான் மட்டும்தான். அதனாலேயே
பாசமும், கூடவே பிரச்சினைகளும் அதிகம். இப்போது உடல்
நலத்துக்காக, நீலகிரி மலைச் சரிவில் இருக்கும் எங்கள் பண்ணைக்கு
போய், அப்பா ஓய்வு எடுத்துக் கொண்டு இருக்கிறார். ஆனால்
சாப்பாட்டுப் பிரச்சினை. அம்மாவைப் போகச் சொன்னால், எனக்கு ஒரு
வழி பண்ணாமல் போக முடியாதாம். பெரிய வழி. புரிகிறதில்லையா?

எரிச்சலோடு கூறியவனை வியப்புடன் பார்த்தவளுக்குச் சிரிப்பு
வந்தது.

திருமணம் செய்துகொள் என்று அவனிடம் எவ்வளவு
சாதாரணமாகச் சொன்னான்!

இத்தனைக்கும், இன்னொருவனை மணப்பதாக இருந்தவள்.

அவளைச் சொன்னது போல, இப்போது இவனும் பண்ணிக்
கொள்ள வேண்டியதுதானே?

புன்னகை விரிய, "வாழ்த்துக்கள் சார்! என்றாள் எப்போது
கல்யாணச் சாப்பாடு போடப் போகிறீர்கள்?" என்று மிகுந்த ஆவல்
காட்டி வினவினாள் உதயா.

முகம் கனித்து. "ஒருபோதுமில்லை!" என்றான் அவன்
எரிச்சலோடு. "திருமணம் எனக்கு அடியோடு பிடிக்காத விஷயம். என்
எதிர்காலத்தை எந்தப் பெண்ணிடமும் ஒப்படைக்க நான் தயாரில்லை"
என்றான் தீர்மானமாக.

ஆச்சரியமாக அவனைப் பார்த்தாள் உதயா.

முதல் நாளின் நினைவு வந்தது. இளம்பெண் என்றாலே மோசம்
என்றானே.

இன்றையப் பெண்களிடம், இவனுக்கு ஏன் இந்த வெறுப்பு? காதல்
தோல்வியாக இருக்குமோ? பாவம், இவனுக்குமா?

அவனது கண்களில் மனதைப் படித்தானோ?

"போதும், போதும்.. கற்பனையை ரொம்பவும் ஓட



விட வேண்டாம். நான் எந்தப் பெண்ணையும் காதலிக்கவுமில்லை.
ஏமாறவுமில்லை. ஆனால், பார்த்த அளவிலேயே போதும் போதும் என்று
ஆகிவிட்டது." என்று அருவருப்புடன் தோளைக் குலுக்கினான்.

உடனேயே தலையசைத்து "ஆனால் இப்போது அதெல்லாம்
அவசியமில்லை. விஷயத்துக்கு வரலாம்: எனக்கு இன்றையப்
பெண்களிடம் வெறுப்பு வரக் காரணமான பெண்களில் ஒருத்தியை
குடும்பத்தோடு வீட்டுக்கு அழைத்து, இன்றைக்கு விருந்து
வைத்திருக்கிறார்கள் என் தாயார். முக்கியமான விருந்து.. கலந்து
கொண்டே ஆக வேண்டும் என்று என்னையும் வரச் சொன்னதின் உள்
நோக்கம், அந்தப் பெண்ணுக்கும் எனக்கும் திருமண நிச்சயம் செய்வதாம்.
வீட்டுக்குப் போன பிறகுதான் அதைச் சொன்னார்கள். முடியாது என்று
மறுத்ததற்கு காரணம் கேட்டார்கள். நான் சொன்னால், ஏற்க முடியாது
என்கிறார்கள். சின்னப் பெண்கள் ஆசையில் அப்படி.- இப்படி
இருப்பதுதானாம். அதையெல்லாம் ஒரு பெரிய காரணமாக ஒத்துக்
கொள்ள முடியாதாம். உருப்படியான காரணம் இல்லாததால் அந்தப்
பெண்ணுடைய பெற்றோரிடம் திருமண ஏற்பாடுகளைச் செய்யச்
சொல்லப் போவதாக பிடிவாதம் செய்தார்கள். வேறு வழியில்லாமல்
நான் வேறு ஒருத்தியைக் காதலிப்பதாகச் சொல்லிவிட்டேன்." என்றான்
யோகேந்திரன்.

விழிகள் மீண்டும் விரிய "வாவ்.. நல்ல ஐடியா சார்...! இன்னொரு
பெண்ணை நேசிப்பவரை பிடித்து, இந்தப் பெண்ணைத்தான் மணந்தாக
வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாதுதானே. அருமையான
யோசனை." என்று அவனைப் பாராட்டினாள் உதயா. ஆனால், உங்கள்
அம்மாதான் பாவம்!" என்று இரக்கமும் காட்டினாள்.

"ரொம்பவும் அவசரப்பட்டுப் பரிதாபப்படாதே! என்னையும்
பாராட்டாதே" என்றான் அவன்.

தொடர்ந்து காரணம் சொன்னான். "அம்மாவை அவ்வளவு
எளிதாக ஏமாற்ற முடியாது. அவர்கள் என்னை நம்பவில்லை, உதயா!
அப்போதைக்கு நிலைமையைச் சமாளிப்பதற்காக பொய் சொல்லுகிறேன்
என்கிறார்கள். சொல்வது உண்மை என்றால், அந்தப் பெண்ணைக்
கூட்டி வந்து காட்ட வேண்டும். இல்லாவிட்டால், இந்தப் பெண்ணோடு
நிச்சயதார்த்தமாம். ஒரே பிடியாய் நிற்கிறார்கள்.

"ம்ம்ம்.... சொல்வதுதானே சார், அவள் பெரிய குடும்பத்து மூத்த
பெண். ஐந்தாறு தம்பி, தங்கைகளைக் கரை சேர்த்த பிறகுதான் இந்தக்
காதலைப்பற்றி வெளியே சொல்லக் கூட முடியும் என்று... அப்படிக்
கூடச் சொல்லலாம்தானே சார்....?"

"பழி வாங்குகிறாய் போல? உன்னை நல்ல பெண் என்று உதவ
எண்ணினேன்" என்றான் யோகேந்திரன்.

கோபம் போலச் சொன்னாலும், அவனது கண்ணோரப்

பளிச்சிடல், அது கோபமில்லை என்று, உதயாவுக்கு நன்றாகவே காட்டியது.

பொறுமை இழுத்துப் பிடித்துக் கொண்டும் இருக்கவில்லை... ரசனைதான் என்பது அவளுக்கு ஆறுதலாகவும் இருந்தது.

ஏனெனில், இது அவளுக்கு மட்டுமான உதவியல்ல. அவனுக்கும் தேவைதான்.

மேலும், இது சாதாரண உதவியும் அல்ல.

யோகேந்திரன் என்ன செய்யச் சொல்லுகிறான் என்று புரியாத அளவுக்கு, உதயா முட்டாள் அல்ல!

அவளது பிரச்சினைக்கும், இப்போதைக்கு இது நல்ல தீர்வுதான்.

ஆனால், நிரந்தரத் தீர்வு ஆகாதே!

இப்போதைக்குப் பிரச்சினையைத் தள்ளிப் போடலாம். ஆனால் பிறகு?

யோகேந்திரனைப் பொறுத்த வரையில், பிற்பாடு இதனால் பெரிய பாதிப்பு ஏதும் ஏற்படுதற்கு இல்லைதான்.

ஆனால், உதயா? அவளது பாதிப்பு அதிகமாக இருக்கும் என்பது நிச்சயம்.

பிற்காலத்தில் திருமணம் செய்வது கடினமோ, இல்லற வாழ்வு இன்னலாகிவிடுமோ என்றெல்லாம் அவள் பயப்படவில்லை.

சொல்லப் போனால், அப்படியொரு வாழ்வை அவள் எண்ணிக் கூடப் பார்க்கவில்லை எனலாம்!

ஆனால், அவளது பொருளாதாரம்?

முதலாளியைக் காதலிப்பது போல நடித்துவிட்டு, அந்தக் காதல் முறிந்ததாகவும் காட்டிவிட்டு, அங்கேயே தொடர்ந்து வேலை செய்வது எப்படி சாத்தியம்?

இந்த வேலை போனால் இன்னொன்று என்று அலட்சியமாகச் சொல்வதற்கு, அவள் ஒன்றும் பெரிய படிப்புகள் படிக்கவில்லையே.

இங்கானால், அவளது உண்மையான உழைப்பைப் பார்த்துவிட்டு, யோகேந்திரனுடைய தந்தை, அவளுக்கு நிறையவே வருமானத்தைக் கூட்டிக் கொடுத்திருக்கிறார்.

வெளியிடங்களில் வேலை கிடைத்தாலும், இந்த அளவுக்கு வருமானம் கிடைக்காது என்பதோடு 'யோகேந்திரனை காதலித்துப் பிரிந்தவள்' என்கிற பட்டம், வேறு எங்கும் வேலை கிடைக்க விடுமா என்பது சந்தேகம்.

அதனால், அவளது பிற்காலத்தில் நஷ்டம் மிக அதிகமாகவே இருக்கும்!

ஆனால், இதெல்லாம் யோகேந்திரனுக்குத் தோன்றியிருக்குமா?

யோகேந்திரன் மோசமான முதலாளி அல்லதான். ஆனால், அவன் நினைத்ததை நடத்தும்போது, மற்றவர்களுக்காகப் பார்க்கிறவன் இல்லை.



ஆனால், இது வாழ்க்கைப்பிரச்சினை. இதற்கெல்லாம் ஒரு வழி தேடாமல், முதலாளி தருவதை ஏற்கிற மாதிரி, அவளது கை தாழ இருக்கக் கூடாது.

"என்ன, ஆட்சேபனைகள் நிறைய இருப்பதுபோலத் தெரிகிறதே" என்றுரைத்து, அவளைத் திடுக்கிட வைத்தான் யோகேந்திரன்.

இவனோடு இது ஒன்று. அவளது எண்ணங்களில் பாதியை, அவள் முகத்தைப் பார்த்தே படித்து விடுகிறான்.

இவனிடம் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என்று எண்ணமிடும்போதே, எல்லாமே அவனிடம் பேசியாக வேண்டியதுதானே என்றும், அவளுக்குத் தோன்றிவிட்டது.

நினைத்தது எதையும் மறைக்காமல் அவள் கூற, அவன் பதில் சொன்ன பிறகுதான், அவளுக்காகவும் அவன் யோசித்திருந்தான் என்பது தெரியவந்தது!

யோகேந்திரனின் திட்டப்படி அவனுடைய தாயாரிடம் அவனது நேசத்துக்கு உரியவளாக நிற்க வேண்டும். சில நாட்களில் இந்த விஷயம் மெல்லக் கசிந்து, உதயாவின் வீட்டை எட்டும். என்ன என்று கேட்கும்போது, உரிய விதமான தயக்கங்களுடன் ஒத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து, இந்த இணைப்பு வேலை முடிந்த பிறகு திருமணம் என்று கூறி, சிங்கப்பூர்க் கிளையின் மேற்பார்வையாளராக பதவி உயர்வோடு, உதயா சிங்கப்பூருக்குச் செல்ல வேண்டும்.

பள்ளியில் சந்தேகம் கேட்கிற பாவனையில் உதயா கையை உயர்த்தினாள்.

"குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும், சார். இந்த ஆட்டோமொபைல் பொருட்களை மேற்பார்வை இடுவது பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. இப்போதே சொல்லி விட்டேன்" என்றாள் உதயா.

"அதற்குரிய பயிற்சி தராமல், உன்னை அனுப்புவேன் என்றா நினைத்தாய்? எனக்குத் தொழில் ரொம்ப முக்கியம், உதயா!"

படக்கென்று தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு, "கேட்டிருக்கக் கூடாது சார் சாரி" என்றாள் உதயரேகா.

"கேட்டிருக்கக் கூடாதுதான்" என்று சற்று அழுத்தமாகச் சொல்லிவிட்டுத் தொடர்ந்தான்.

சிங்கப்பூருக்குச் செல்லும்போது, இந்த வேலை கொஞ்சம் நாள் பிடிக்கும், அதனால் தங்கையின் திருமணத்தை, அவள் வரும்போது நடத்தி விடுங்கள் என்று உதயா, அவளுடைய பெற்றோரிடம் சொல்ல வேண்டும். ஒரு பெரிய நிறுவனத்துக்கே அதிகாரியாக மகள் போகிறாள் எனும்போது, சந்தேகம் தோன்ற வாய்ப்பில்லை. அப்புறமாகக் கொஞ்ச காலம் கழித்து, அங்கிருந்தபடியே, நாம் இருவரும் நண்பர்களாகவே பிரிந்துவிட்டதாக அறிவித்து விட வேண்டியது. உதயா சிங்கப்பூரிலேயே

இருந்துவிட்டால், பெற்றோர் கோபம், ஊரார் பேச்சு எதையும் தாங்க வேண்டியிராது. சற்றுப் பொறுத்து, சலசலப்புகள் அடங்கிய பிறகு வேண்டுமானால், மெல்ல ஒரு தரம் வந்து போகலாம்.

எல்லாம் சொல்லி முடித்துவிட்டு "எப்படி ஐடியா?" என்று யோகேந்திரன் கேட்டான்.

உதயாவுக்குப் பிரமாதமாகத்தான் தோன்றியது.

அவளைப் பொறுத்தவரையில், அவளது பிரச்சினை நல்லபடியாகத் தீர்வதோடு, வெளிநாட்டு வேலையும், அதிக ஊதியமும் போனஸ்.

ஆனால், இதில் என்னவோ குறை இருப்பதாகவும் அவள் உணர்ந்தாள்.

என்ன அது?

யோகேந்திரனின் யோசனையை மனதுள் ஓடவிட்டுப் பார்த்துவிட்டு "உங்கள் அம்மா, சார். அவர்கள் இதில் ஏமாறுவார்களா? அவர்களை லேசில் ஏமாற்ற முடியாது என்று நீங்களே சொன்னீர்களே" என்றாள் உதயா.

"அதற்காகத்தான் இவ்வளவு யோசித்து திட்டம் போட்டிருப்பது. உனக்குப் பயிற்சி கொடுத்து, சிங்கப்பூருக்கு அனுப்புவதன் நோக்கமே, இங்கேயே இருந்தால், திருமணம் பற்றிய அம்மாவுக்கு நினைவு மறக்காதே என்றுதான்! உன் பெற்றோருக்கும் தான். கொஞ்ச நாட்கள் கண்ணில் படாமல் இருந்தால், இந்த வேகம் குறைந்து விடும். அப்புறம் நாம் சொல்வதை ஏற்றுக் கொள்வார்கள்"

அவன் என்ன சொன்னபோதும் உதயாவின் மனதில் இருந்த உறுத்தல் மறைவதாகவே இல்லை!

யோகேந்திரன் பதினாறடி பாய்கிற கெட்டிக்காரக் குட்டியாக இருக்கலாம். ஆனால் 'தாய் அறியாத சூல்' என்றும் சொல்வதுதானே!

இப்போது, அவளுடைய தாயாரே சோர்ந்து இருக்கிறாயே, களைத்துத் தெரிகிறாயே என்று கேட்பதில்லையா? அதிக வேலை என்று வேலையின் மீது பழியைப் போட்டல்லவா உதயா சமாளித்து வருகிறாள்.


அதே போல, அவனுடைய தாயாரும், மகனை நன்கு அறிந்து வைத்திருந்தால்?

காதலிக்கிற பெண்ணைக் கூட்டி வந்து கண்ணில் காட்டு என்பதே அப்படி அறிந்து வைத்திருப்பதின் அறிகுறி என்றுதான் அவளுக்குத் தோன்றியது.

ஆனால், இந்த மகனும் ஒன்றும் கெட்டிக்காரத் தனத்தில் குறைந்தவன் அல்ல என்பதைத்தான் இந்த ஆறு மாதங்களாகப் பார்த்துக் கொண்டே இருக்கிறாளே.

அடுத்த கட்டமாக, மறுநாள் யோகேந்திரனின் வீட்டுக்குப் போவது பற்றி இருவரும் திட்டமிடலாயினர்.





# இந்த மனம் எந்தன் சொந்தம் 8

**யோ**கேந்திரனுடைய தாயார் விஜயாவை உதயா ஏற்கனவே பார்த்திருக்கிறாள்.

கணவர் நாராயணமூர்த்தி தொழிலைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, அவ்வப்போது அங்கே வந்து போய் உதயா பார்த்திருக்கிறாள். ஒரு தரம், கான்டீனில் இருந்து காஃபி வாங்கிக் கொண்டு போய்க் கொடுத்திருக்கிறாள்.

புன்னகைப் புரிந்து 'நன்றி' சொன்னபோதும், கணவருடைய உடல்நலத்தைப் பற்றி ஏதோ முக்கியமாகப் பேசிக் கொண்டிருந்ததால், அவளை அந்த அம்மா சரியாகக் கவனித்திருப்பது சந்தேகமே.

கீழே வேலை செய்கிற பெண்ணைப் போய்க் காதலிப்பதா என்று விஜயா ஆட்சேபிக்கக் கூடுமோ?

ஆனால் 'நீ ஒரு கழுதையைக் கூட்டி வந்து கல்யாணம் செய்வதாகச் சொன்னாலும் சந்தோஷமாகச் சம்மதிப்பேன்' என்று தாயார் சொன்னதாக, யோகேந்திரன் சொல்லுகிறானே.

அந்த அளவுக்கு மகனின் திருமணத்துக்காக ஏங்குகிறார்கள், பாவம்.

இவ்வளவு ஏங்குகிறவர்களை ஏமாற்றுவது, பாவம் இல்லையா?

யோகேந்திரனுக்குத்தான் முன் காதல், கண்ணறாவி என்று ஒன்றும் இல்லையே. அம்மாவின் ஆசைக்காகப் பேசாமல் கல்யாணம் செய்து கொள்ள வேண்டியதுதானே என்று எண்ணிவிட்டு, அவசரமாக வேறு நினைக்க முயற்சித்தாள் உதயா.

இவன்வேறு, இந்த மாதிரி எண்ணங்கள் அவளுள் ஓடுவதை, அவளது முகத்திலிருந்து கண்டுபிடித்து வைத்தான் என்றால், ஆபத்து.

அவனால் முடியாது என்பதும் இல்லை. ஏனெனில் அவ்வப்போது அப்படி எதையாவது கண்டுபிடித்துக் கேட்கிறானே

நரி இடமாகவோ, வலமாகவோ, எப்படிப் போனாலும் அவளுக்கு ஒன்றுதான். மேலே விழுந்து பிடுங்கக் கூடாது. அவளது தேவை அவ்வளவுதான் என்பது, அவள் முன்பே முடிவு செய்ததுதானே?

அதேபோல, யோகேந்திரன் திருமணம் செய்து கொண்டாலும், இல்லாவிட்டாலும், அவளுக்கு ஒன்றுமில்லை!

ஆனால், அவள் இப்படியெல்லாம் நினைப்பதை அவன் கண்டுபிடித்துவிட்டான் என்றால், அவளுக்கு நிச்சயமாக 'டோஸ்' விழும்! அதை வாங்கித்தான் ஆக வேண்டும் என்று அவளுக்கு என்ன அவசியம்?

மறுநாள் என்னென்ன, எப்படிப் பேசவேண்டும் என்றெல்லாம் திட்டமிட்டபடியே அன்று அவளது வீட்டின் அருகே கொண்டு வந்து விட்டுவிட்டுப் போனான் யோகேந்திரன்.

வழக்கமாக அலுவலகத்துக்கே அவள் சற்றுப் பளிச்சென்று இருக்குமாறுதான் உதயா உடுத்துவது. பார், பார் என்று கண்ணைக் கவரும் விதமாக இராதே தவிர, ஒரு குறை சொல்ல முடியாத, கச்சிதமான, நல்ல ஆடையாகத்தான் இருக்கும்.

கூடவே, பொருத்தமாக அணிந்திருக்கும் அணிகலன்களும் அப்படித்தான் இருக்கும். அதைக் குறிப்பிட்டுச் சொன்ன யோகேந்திரனும் "உன் உடையைக் குற்றம் சொல்ல முடியாது உதயா. அலுவலகம் வருவதற்கு மிகவும் பொருத்தமானவையே. இப்போது என்னோடு அம்மாவைப் பார்க்க வருவதாக இருப்பதால்...." என்று அவளது முகத்தைப் பார்த்தவன், லேசாக முறுவலித்து, "சொல்லத் தேவையில்லையோ?" என்று கேட்டான்.

சொல்லிவிட்டு வருத்தம் தெரிவிப்பதற்கு இடமின்று முந்திக் கொண்டான். அவளை விடப் பரவாயில்லை என்று எண்ணியவாறு, "தேவையில்லைதான்!" என்றாள் அவளும்.

சுமார் ஒரு மாத காலமாகவே அதிக வேலை காரணமாக தாமதமாக வீடு திரும்பிக் கொண்டிருந்ததால், அன்றைக்கும் தாமதமாகக் கூடும் என்பது தவிரத் தாயாரிடம் உதயா எதுவும் தனிப்படச் சொல்லவில்லை.

விவரம் மெல்லக் கசிந்து பரவட்டும் என்றுதானே, யோகேந்திரனும் சொல்லியிருந்தான்.

எனவே, அலுவலக நேரம் முடிவதற்குச் சற்று முன்னதாகவே மாற்றுவதற்காகக் கொண்டு வந்திருந்த உடையில், தன் ஒப்பனைகளை முடித்துக் கொண்டு அவள் தயாராகி வந்தபோது, சக ஊழியர்களின் பார்வையையும், உதயா பிடிவாதமாகப் பொருட்படுத்தவில்லை.

ஏனெனில், விஷயம் கசிந்து பரவ வேண்டியது என்பதோடு, அப்படிப் பரவப் போகும் செய்தியோடு ஒப்பிடும்போது இது ஒன்றுமே இல்லைதானே?

இதெல்லாம் இல்லாமலே பிரச்சினை தீர்வது என்றால், மிகவும் நன்றாகத்தான் இருந்திருக்கும். ஆனால் அதற்கு வழி இல்லை […]னும்போது, இந்தக் கஷ்டங்களையும் சகித்துத்தான் ஆக வேண்டும். அதற்காக வருத்தப்படுவது முட்டாள்த்தனம். விளையப்போகும் […]ன்மையை மட்டுமே நினைத்துச்செயல்படுவதுதான் புத்திசாலித்தனம்.

தனக்குத்தானே இப்படிப் பல முறை சொல்லிக் கொண்டதால், […]கேந்திரனோடு காரில் செல்லும்போது, வெளிப் பார்வைக்கு உதயா […]மைதியாகவே இருந்தாள்.

அவளை ஒருதரம் நோட்டமிட்டுவிட்டு, "வீட்டில் அம்மாவை […]ட்டுமின்றி, மாலன் அங்கிளின் குடும்பத்தையும், அதுதான் அந்த நீதா, […]ளுடைய அம்மா, அப்பாவையும் எதிர்கொள்ள நேரும் என்று […]கிறது, உதயா. ரொம்பவும் நிச்சயத்தோடு வந்திருப்பார்கள் போல. […]போது, அவர்களும் என்னுடைய இந்தத் திடீர் காதலை நம்பத் […]ராக இல்லை. இருந்து உன்னைப் பார்த்துவிட்டுப் போவதாக



உட்கார்ந்திருக்கிறார்களாம். அம்மா சொன்னார்கள்." என்றான் யோகேந்திரன் யோசனையோடு

"ஓ!" என்றாள் உதயா.

திருமதி நாராயணமூர்த்தியைப் பற்றி அவளுக்கு நினைவிருந்த அளவில், அவளது ஆடை, அணிமணிகளைத் தேர்வு செய்திருந்தாள். ஆனால், அங்கே ஓர் இளம்பெண் இருந்து.. அவளும் சேர்ந்து எடை போடுவாளாமே....

உதயாவைப் போட்டியாகக் கருதித் தன்னை அலங்கரித்துக் கொண்டிருப்பாளா?

ஒரு பணக்காரப்பெண்ணின் அணிமணிகளோடு, உதயா எப்படிப் போட்டி போட முடியும்?

சிறு கலக்கத்துடன் அவள் தன்னைத்தானே அளவிடுவதைக் கவனித்து, "உன் ஆடை, அலங்காரத்தில் ஒரு குறையும் இல்லை, உதயா" என்றான் யோகேந்திரன். "நீதாவின் அலங்காரம் ஒரே பளபளவென்று கண் கூசும்படியாக இருக்கும். அதனால், தோற்றத்தை பொறுத்தவரையில் நீ கவலைப்பட ஒன்றும் கிடையாது. ஆனால், அம்மா மட்டுமில்லாமல், அந்தக் குடும்பம் வேறு, நம்மை... முக்கியமாக உன்னை ஓரேடியாக அலசி ஆராய்வார்கள் என்று அதுதான் சங்கடமாக இருக்கிறது. நான் பக்கத்தில் தான் இருப்பேன். என்றாலும், மாலன் அங்கிள் அம்மாவுடைய ஒன்றுவிட்ட தம்பி. ஓரேடியாக முகத்தில் அடித்தாற்போலப் பேச முடியாது. ஆனால், நான் அருகில் இருக்கும்போது, அவர்களும் யோசித்துதான் பேசுவார்கள்...."

அவன் தனக்காக யோசிக்கிறான் என்பது ஏதோ விதமாக உதயாவுக்குத் தெம்பூட்டியது.

முறுவலித்து, "அதைவிடவும், உங்கள் அம்மா முன்னிலையில் யாரும் அளவு மீற மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆனால், எப்படி இருந்தாலும், சமாளித்துக் கொள்ளலாம். பேச்சு இரு சாராருக்கும் முடியும்தானே?" என்று அவள் கூற, அவன் முகமும் தெளிந்தது.

அவனது பங்களாவை அடைந்து உள்ளே சென்றதும், உதயாவை எல்லோருக்கும் அறிமுகம் செய்து வைத்தான்.

உதயாவைக் கூர்ந்து பார்த்துவிட்டு, "உன்னைப் பார்த்திருக்கிறேன்" என்றாள் யோகேந்திரனுடைய தாயார் விஜயா.

அவள் யார், என்ன என்று தாயாரிடம் யோகேந்திரன் இதுவரை தெரிவிக்கவில்லை என்று உதயாவுக்குத் தெரியும். எனவே, "நா..ன்...அலுவலகத்தில் என்னைப் பார்த்திருக்கிறீர்கள்" என்று முறுவலித்தாள்.

"ஓஹோ.. நீ அத்தானின் அலுவலகத்தில் வேலை பார்ப்பவள் என்று சொல்லு. இப்போதல்லவா விஷயம் புரிகிறது. பரவாயில்லை, வசதிதான்!" என்றாள் அங்கிருந்த ஓர் இளம் பெண்.

ஏக வசனம், சற்றே ஏளனம் விரவிய குரல் கிண்டல் போலக்

கூறப்பட்ட வார்த்தைகளின் மட்டமான உள்ளர்த்தம் உதயாவுக்குப் புரியாமல் இல்லை.

ஆனால், நேரடியாக மோத முடியாதபடி, மறைமுகமான தாற்றல், என்னடி சொல்கிறாய் என்று கேட்டால், இன்றைக்கு அழைத்து வர வசதியாய் இருந்திருக்குமே, அதைச் சொன்னேன் என்று அப்பாவியாய்க் கண்களை விரித்து, எளிதாக நழுவி விடலாம்.

ஆனால் உதயவுக்குச் சண்டைக்காரி என்ற பட்டம் கிட்டும்.

ஆனால் சும்மா விடவும் மனமின்றி, "யார்? நீ.... நீங்கள் நீதா தானே? உங்களைப் பற்றி, சார் சொல்லியிருக்கிறார். நீங்கள் சொன்னது ரொம்ப சரி. நீதா. சும்மா சும்மாத் தேடி ஓடி வர அவசியம் இல்லாமல் நினைத்த நேரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளலாமே. புரிந்து பேசுகிறீர்கள்!" என்று முறுவலித்தாள் உதயா.

நன்றாகவே சமாளித்துவிட்டதாக அவள் தன்னைத்தானே தட்டிக் கொடுத்துக் கொண்டபோது, நீதா இன்னொரு குத்துக் கொடுத்தாள்.

"என்னது? சாரா? நானெல்லாம், அத்தானை 'இந்தர்' என்றுதான் கூப்பிடுவது. உனக்கு இன்னமும் வேலைக்கார புத்தி மாறவில்லையா, அல்லது, அத்தான் ஊழியக்காரியாகத்தான் நடத்துகிறாரா?"

எப்போதும் 'சார்' என்பது, இப்போதும் உதயாவின் வாயில் வந்துவிட்டது. ஆனால் அதற்காகவே எங்கே, எங்கே என்று தேடிக் கொண்டிருந்தவளுக்கு வாய் நிறையவே அவலை அள்ளிக் கொடுத்த மாதிரி ஆகிவிட்டதே.

யோகேந்திரன் என்ன நினைப்பான், இந்த மண் குதிரையைப் போய் நம்பினோமே என்றா... என்று கலவரமடையும்போதே, நிலைமையைச் சமாளிக்கும் உத்தியும் உதயாவுக்கு தோன்றிவிட்டது.

அத்தோடு, கடைநிலைப் பணியாள், போல, நீதா 'வேலைக்கார புத்தி ஊழியக்காரி' என்று உதாசீனமாகச் சொன்ன விதமும் மனதை உறுத்த, "பெரிய நிறுவனம். நிறுவனத்தின் அலுவலர்கள் அத்தனை பேருமே அவரை 'சார்' என்றுதான் அழைப்பது. ஒருவருக்கொருவர் குறிப்பிடுவதும் அப்படித்தான். ஆனால், என்னது தனி. சொந்த விஷயம். சொல்லக் கொஞ்சம் கூ....ச்சமாகத்தான் இருக்கிறது. ஆனால் கேட்டுவிட்டீர்களே. சந்தேகம் தெளியாதவரை, உங்களுக்குத் தப்பு தப்பாக ஏதாவது நினைக்கத் தோன்றும். அதனால்..." என்றவள் யோகேந்திரனைப் பார்த்து முறுவலித்து, "சொல்லி விடட்டுமா?" என்ற சலுகைக் குரலில் அனுமதி கேட்டாள்.

அவள் என்ன சொல்லப் போகிறாள் என்று அவனுக்குத் தெரியாது! சொல்வதற்கு ஏதையேனும் கண்டுபிடித்திருக்கிறாளா என்றும் தெரியாதுதான். ஆனால், நீதாவின் முதல் அம்பை உதயா சமாளித்த விதம் அவனுக்கு நம்பிக்கை அளித்தது.

அத்தோடு கவனியாதது போன்ற பாவனையுடன் தாயாரும் கவனிப்பது புரிய, ஒரு பெருமித முறுவலுடன் 'நடத்து' என்பதான



சைகையோடு ஒதுங்கிக் கொண்டான் யோகேந்திரன்.

சொல்ல மனமற்றவள் போல "சரி..." என்று இழுத்துவிட்டு "முதல் முதலாக இவரைப் பார்த்ததும் எனக்குள் ஏதோ நடந்ததா? 'சார்' என்று நான் யோகனை அழைத்த விதமே, என்னவோ வித்தியாசமாக அவருக்குப் பிடித்துப் போயிற்றாம். அதனால் எப்போதும் 'சார்' என்றே கூப்பிடச் சொன்னார். அவ்வளவுதான் விஷயம்" என்றதோடு நீதாவிடம் பேச்சை முடித்துவிட்டு, மீண்டும் யோகேந்திரனிடம் திரும்பினாள் உதயா.

"பாருங்கள், நீங்கள் சொன்ன மாதிரி அழைத்தால், மற்றவர்களுக்கு அவ்வளவாகச் சரியாகத் தெரியாது போல இருக்கிறதே" என்று குறையும் பட்டாள்.

"ஆமாம்... அப்படித்தான் தோன்றுகிறது!" என்று ஒத்து ஊதிவிட்டு, "அதனால், இந்த 'சாரை' நாம் தனியாக இருக்கும்போது மட்டும் வைத்துக் கொள். உதி. மற்றவர் முன்னிலையில், உனக்குப் பிடித்த வேறு ஏதாவது பேர் சொல்லி அழை!" என்று யோகேந்திரன் புன்னகையோடு கூறினான்.

"ஏய்...ஏய்.. ஜாக்கிரதைடா. இப்படி மொத்தமாக, ஏதாவது பேர் என்று சொல்லி மாட்டிக் கொள்ளாதே. அப்புறம் அனுமதிதான் இருக்கிறதே என்று, உதயா ஏதாவது மோசமான வார்த்தையைப் பயன்படுத்தத் தொடங்கி விடப் போகிறாள். பெற்று வளர்த்தவள் நான். எப்போதும் பொறுமையாகக் கேட்டுத் தாங்கிக் கொண்டிருக்க, என்னால் முடியாது!" என்று இலகுக் குரலில் உரைத்த தாயை, யோகேந்திரன் ஆச்சரியமாகப் பார்த்தான்.

இன்னோரன்ன வார்த்தைகளால், உதயாவை ஏற்றுக் கொண்டுவிட்டதாக கூறுகிறாள். ஐயம், மறுப்பு எதுவும் இல்லை.

விதம் விதமான சோதனைகளை எதிர்பார்த்திருந்தவனுக்கு ஒரே ஆச்சரியமாகிப் போயிற்று!

அத்தோடு நில்லாமல், "எல்லோருமாகப் பேசிக் கொண்டிருங்கள். நான் அப்பாவிடம் சொல்லிவிட்டு வருகிறேன்." என்று செல்லை எடுத்துக் கொண்டு திரும்பினாள் தாயார்.

"பேசுவதா? அதற்கு யாருக்கு இருக்கிறது நேரம்?" என்று கிரீச்சிட்டாள் நீதா. "அல்லது நான் என்ன பணம் காசு இல்லாதவளா, செலவழிக்கப் பயந்து, பேசிப்பேசிப் பொழுதைக் கழிப்பதற்கு?"

திகைப்புடன் எல்லோரும் அவளைப் பார்க்கையில், "என்னப்பா முழிக்கிறீர்கள்? நாளைக் காலையிலேயே ஊருக்குப் போயாகவேண்டும். அதற்குள் எனக்கு எவ்வளவு 'ஷாப்பிங்' பண்ண வேண்டியிருக்கிறது. தெரியுமா மசமசவென்று உட்கார்ந்திராமல், இரண்டு பேரும் கிளம்புங்கள். இரண்டு பேரின் 'கிரெடிட் கார்டு'களையும் எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு நிறையவேப் பணம் தேவைப்படும். என்ன, நான் சொல்லிக் கொண்டே இருக்கிறேன். இரண்டுபேரும் கல்லுப் பிள்ளையார் மாதிரி அசையாமல் உட்கார்ந்து கொண்டே இருக்கிறீர்கள்.

நடந்தாள் நீதா.

மன்னிப்புக் கோரும் பாவனையில் விஜயாவை நோக்கித் தலையாட்டிவிட்டு நீதாவுடைய பெற்றோர் இருவரும், மகளின் பின்னே விரைந்தனர்.

பெரிய ஏமாற்றமாக இருக்கும் போல. ஆனால், இதை இவ்வளவு வெளிப்படையாகக் காட்டுவது? அவளது இறுக்கமான உடைகளில் இயலாது என்பது மட்டும் இல்லையென்றால், சின்னப் பிள்ளைகள் போலத் தரையில் விழுந்து கைகால்களை உதைத்துக் கொண்டு கத்தக் கூடச் செய்வாள் போல இருக்கிறதே!

நல்லகாலம். இந்தப் பெண்ணிடம் மாட்டிக் கொள்ளாமல், யோகேந்திரனைக் காப்பாற்றினோம் என்று உள்ளூரப் பெருமிதமாக நினைத்தபடி, அவனைப் பார்த்தால், அவன் தன் தாயைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இவளையா மணக்கச் சொன்னீர்கள் என்பது போல....

ஆனால், வருத்தமேதும் காட்டாமல் முறுவலித்து, "நல்லதாகிப் போயிற்று. நீங்கள் இருவரும் நிம்மதியாகப் பேசிக் கொண்டிருங்கள். நான் போய், உங்கள் இருவருக்கும் கொறிக்க குடிக்க ஏதாவது அனுப்பும்படி சமையல்காரம்மாவிடம் சொல்லிவிட்டு, அப்பாவிடமும் இரண்டு வார்த்தை விவரம் சொல்லிவிட்டு வருகிறேன். அம்மா உட்கார்ந்திருக்கப் பிடிக்கவில்லை என்றால், மருமகளுக்கு வீட்டைச் சுற்றிக்காட்டு யோகா" என்று மகனைப் பணித்துவிட்டு உள்ளே சென்றாள் அன்னை.

"மருமகளாம்!" என்று சத்தமின்றிச் சொல்லிக் காட்டினான் யோகேந்திரன்.

சற்று யோசித்துவிட்டு, "இப்படி யாரையாவது கூட்டி வரட்டும் என்றுதான், அந்த நீதாவைக் கொணர்ந்து உங்களை மிரட்டியிருப்பார்களா?" என்று மெல்லிய குரலில் இளம்பினாள் உதயா.

"அப்படியும் இருக்கலாம். அம்மா செய்யக் கூடியவர்கள்தான்! இதற்கு, எதுவானாலும் மேல் என்று, இன்னும் வேறு யாரையேனும் காட்டினால் உடனே தலையாட்டி விடுவேன் என்றும் எண்ணியிருக்கலாம்" என்றபடி யோகேந்திரன் எழுந்தான்.

"சும்மா உட்கார்ந்து, இப்படி பயனற்ற யோசனை செய்வதற்கு, வீட்டைச் சுற்றிப் பார்க்கலாம் வா. எங்கள் வீடு பார்க்கவும் அழகாக இருக்கும். வந்து பார்!" என்று அவளை அழைத்துச் சென்றான்.

அழகாகத்தான் இருந்தது.

வேலைப்பாட்டுடன் கூடிய வழவழப்பான கைப்பிடிப் பகுதியுடன் கூடிய அகன்ற மாடிப்படிகள், வளைந்து சென்று மாடிப்படியின் பக்கச் சுவரில், அழகான சட்டங்களில் தொங்கிய கண்ணைக் கவரும் சித்திரங்கள். அமைதியூட்டும் இளம் வண்ணச் சுவர்கள், எழிலான கிரில்



அமைப்புகளால் பாதுகாக்கப்படும் சுற்று வராந்தா...

வீட்டைச் சுற்றிக் காட்டும் பாவனையில் செல்லும்போதே, "நீதாவின் தாக்குதலை அழகாகச் சமாளித்தாய் உதயா! அதுதான் அம்மாவுக்கும் பிடித்துப் போயிருக்கும் என்று நினைக்கிறேன். மருமகள் என்றே சொல்லிவிட்டார்களே. எதிர்காலத்தில் வீட்டுப் பிரச்சனைகளை எல்லாம் நீ பார்த்துக் கொள்வாய் என்று எண்ணமாக இருக்கும். ஒரு வகையில்..." என்று இன்னும் ஏதோ சொல்லத் தொடங்கியவன் அதை இடையில் நிறுத்தி, "அந்தப் பக்கமாகப் போகலாம்" என்று அழைத்துச் சென்றான்.

கூட நடந்தபடி, பேச்சைத் தொடர்ந்தாள் உதயா. "உங்கள்மேல் உள்ள பாசம் காரணமாகவும் இருக்கலாம். நீங்கள் வெறுமனே தட்டிக் கழிப்பதற்காகப் பொய் சொல்லவில்லை, மெய்யாகவே ஒருத்தியைத் தேர்ந்தெடுத்து விட்டீர்கள் என்று தெரிந்தபின் அதை மறுக்கக் கூடாது என்றும் எண்ணியிருக்கலாம்."

"இருக்கலாம்..." என்றான் அவன் யோசனையாக.

"என்ன? அப்படி இராது என்கிறீர்களா?"

"ஊகூம்... அதில்லை. அப்பாவுடன் இதுபற்றி பேச என்று தனியாக போனார்களே. மருமகள் என்று அம்மா மனதாரச் சொல்லியிருந்தால், அதை நம் முன்னிலையிலேயே அப்பாவிடமும் சொல்லியிருக்கலாம். அம்மா ஒன்று சொல்லி அப்பா மறுக்கப் போவது இல்லை எனும்போது, தனியாக என்ன... என்று இருக்கிறது" என்றான் அவன் இன்னமும் யோசனையாகவே.

பேசியபடியே, முதல் மாடியில் இருந்த ஒரு பெரிய அறையின் அருகே இருவரும் வந்திருந்தனர்.

அந்த அறையைக் காட்டி "முன்பு இந்த அறையைத்தான் அப்பா அலுவல் அறையாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தார். இதயத்தில் லேசாகப் பிரச்சினை என்று தெரிந்ததுமே, படி ஏற வேண்டாம் என்று, அப்பாவுக்கான அறையை கீழே மாற்றிவிட்டோம். வேலைப் பொறுப்பையும் நான் வந்து எடுத்துக் கொண்டேன். வாழ்க்கையை இலகுவாக எடுத்துக் கொள்ளப் போவதாகச்சொல்லி, அப்பா பண்ணைக்குப் போனார். ஆனால், அம்மாவால், என்னை விட்டுக் கிளம்பவும் முடியவில்லை. அப்பா அங்கே தனியாக இருப்பதைத் தாங்கவும் முடியவில்லை. அதற்காகத்தான் என்னை இப்படி விரட்டிக் கொண்டிருக்கிறார்கள்!" என்றான் யோகேந்திரன்.

முதலாளி என்பதை மறந்து எல்லாவற்றையும் சொல்கிறானே என்று நினைத்தாள் உதயா.

அவன் நடிக்க வந்தவள் மட்டும்தானே?

கூடவே, தனியாக விட்டுவிட்டுத் தாயால் கிளம்ப முடியவில்லை என்றால், மகனின் நடத்தையில் நம்பிக்கை இழந்திருக்கிறார்களா என்று ஒரு தரம் நினைத்துவிட்டு, அப்படி இராது என்று ஒதுக்கினாள்.

அலுவலகத்தில் பல பெண்கள் பணிபுரிந்தபோதும், அவர்களில் யாரையும் யோகேந்திரன் திரும்பிப் பார்த்ததாகப் பேச்சே இடைகாதே. அதனால், குணக் கேடாக இருக்கவே முடியாது என்று நிச்சயமாக நினைத்தாள். அவனைத் தப்பாக நினைப்பது மடத்தனம். முழு முடத்தனம்.

வீடு முழுவதையும் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்தாள். அப்போதும் விஜயா ஹாலுக்கு வந்து சேரவில்லை.

சிறு புருவச் சுருக்கத்துடன் ஒரு கணம் நின்றான் யோகேந்திரன்.

ஆனால்.. அதற்குள் ட்ரேயில் குளிர் பானமும், சிற்றுண்டித் தட்டுகளும் வந்து சேர்ந்தன. "காஃபி வேணுமான்னு சமையல்காரம்மா கேட்டு வரச் சொன்னாங்கய்யா" என்றாள் ட்ரேக் கொண்டு வந்த பெண்.

கேள்வியாய் நோக்கிவிட்டு, உதயா மறுப்பாகத் தலையசைக்கவும், "இதுவே போதும்" என்று பணிப் பெண்ணை அனுப்பி வைத்தான் அவன்.

குளிர் பானத் தம்ளர் ஒன்றை எடுத்து அவளிடம் கொடுத்துவிட்டு அடுத்ததை எடுத்து ஒரு பெரிய மடக்காகக் கிட்டத்தட்டப் பாதியைக் குடித்தான். பிறகு, கையில் டம்ளரோடு தொப்பென ஓர் இருக்கையில் அமர்ந்தான்.

"என்ன? இன்னும் யோசனை தீரவில்லை போல..." என்று கேட்டாள் உதயா. "அம்மா என்ன செய்துவிடக் கூடும் என்று கவலைப்படுகிறீர்கள்?" என்று மேலும் வினவினாள்.

லேசாக முறுவலித்தான் யோகேந்திரன். "மூடு மந்திரத்தைப் பார்த்தால், கவலையாகத்தான் இருக்கிறது. ஆனால், அம்மா கெடுதலுக்கு எதையும் செய்ய மாட்டார்கள். அந்த நம்பிக்கையோடு காத்திருக்க வேண்டியதுதான் பார்ப்போம்."

அதற்கு மேல் அதிகம் காத்திருக்க நேராமல் விஜயாவும் வந்து சேர, யோகேந்திரன் தாயைக் கூர்ந்து பார்த்தான்.

"என்ன யோகன், அப்பா என்ன சொன்னாரோ என்று கவலையா? அவசியமே இல்லை. ஜாம் ஜாமென்று நடத்தச் சொல்லிவிட்டார். எல்லாம் முடிவு பண்ணிக் கொண்டு சொன்னால், உடனே கிளம்பி வந்து விடுகிறோராம்" என்று உற்சாகத்தோடு கூறினாள் அன்னை.

என்னத்தை முடிவு செய்வது? என்னத்தை நடத்துவது? உதயா திகைப்புடன் நோக்க, யோகேந்திரன் கண் இடுங்கப் பார்த்தான்.

"அம்மா... நீங்கள் இப்போது ஏதோ வம்பு செய்து வைத்திருக்கிறீர்கள் போலத் தெரிகிறதே. என்ன அது?" என்று ஒரு மாதிரிக் குரலில் வினவினான்.

அப்பாவியாகப் பார்த்தாள் அன்னை. "வம்பா? நானாம்மா? சேச்சே!" என்று மறுத்தவள் உதயாவிடம் திரும்பினாள். "நீயே சொல்லும்மா.நல்ல பெற்றவர்கள் என்றால், பிள்ளைகள் ஆசைப்பட்டதை நடத்தி வைக்க வேண்டும்தானே? நல்ல வேளையாக, உன் அம்மாவும்



அதை முழு மனத்தோடு ஒத்துக் கொள்வதால்..."

தூக்கிவாரிப் போட்ட வேகத்தில், உதயா சோஃபாவிலிருந்து துள்ளிக் கீழே விழாத குறை.

"ஆமாம்மா.... ஆனாலும் நீ சுத்த மோசம், மருமகளே! என்னதான் இது போல விஷயங்களைத் தனக்குள்ளேயே வைத்துக் கொள்ளத் தோன்றும் என்றாலும், கொஞ்...சமாக... லேசுபாசாகவேனும் அம்மாவுக்கு ஒரு சிறு ஜாடை காட்ட வேண்டாமா? விஷயத்தைச் சொன்னால், முதலில் சம்பந்தி அப்படித் திகைக்கிறார்கள். ஆனால்அன்று என்னை போலவே அவர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சி!"

"ம..மகிழ்ச்சியா?"

உதயா இன்னமும் திகைத்தாள்.


மகிழ்ச்சி எப்படி இருக்க முடியும்? சிநேகிதி பாக்கியத்துக்கும், அவளுடைய மகனும் கிட்டத்தட்ட உதயாவுடைய வருங்கால கணவனாக நிச்சயிக்கப்பட்டவனுமான செல்வத்துக்கும் என்ன பதில் சொல்வது என்று ஆத்திரமல்லவா, அம்மாவுக்கு வரவேண்டும்? இது எப்படி?

"முதலில் பிரமிப்பு... ஆனால், மகிழ்ச்சியேதான். இப்போது வருவார்கள். நீயே கேட்டுத் தெரிந்துகொள். அதோ வந்துவிட்டார்கள்."

மெய்தான்! வாயிலில் வந்து நின்ற காரிலிருந்து இறங்கி வருவது உதயாவுடைய பெற்றோரான ரேவதியும், கேசவனும்தான்.

முகத்தில் புன்னகை தவழ...

மீண்டும் உதயா துள்ளி விழாத குறைதான்!



## இந்த மனம் எந்தன் சொந்தம் 9

ரேவதியின் புன்னகையின் பின்னே ஒரு கதை இருந்தது.

அவளுடைய சின்ன மகளின் வரவுக்குப் பின், அவளுக்கு ஏகப்பட்ட மனக் குழப்பம். மனக் கலக்கம்.

மூத்த மகளுக்காக நிச்சயிக்கப்பட்டிருந்த மாப்பிள்ளை, செல்வம்.

ஆனால், அவன் சின்னவளைக் பார்க்கும் பார்வையும் சரியில்லை. அதற்குச் சின்ன மகளின் பதிலோ கொஞ்சம் சரியாகப்படவில்லை. இந்தத் திருமணத்தை முன் மொழிந்த தோழியோ, இப்போது ஒரு வார்த்தை பேசாமல், நழுவி ஓடிக் கொண்டிருந்தாள்.

பெரிய மகளிடம், இவன் மணமகன் என்று செல்வத்தைக் காட்டி அவளும் அதில் திருப்தியாகவே இருக்கும் வேளையில் இது என்ன சலசலப்பு?

பானு சின்னப் பெண், செல்வம் விலகி நின்றால் எல்லாம் சரியாகப்போகும் என்ற எண்ணத்தில், ஒத்த கருத்தையும், அதற்கேற்ற

நடவடிக்கையையும் நாடித்தான், ரேவதி தன் சிநேகிதியை தேடிச் சென்றது.

ஆனால், பெரியவளுக்கு வேறுதுணை தேடச் சொன்னாள் பாக்கியம்.

அவளது பேச்சிலிருந்து ரேவதிக்கு, நிறையப் புரிந்தது.

பொன் கொழிக்கும் சொர்க்கபுரியான யு.எஸ்.ஸில் இருந்து சம்பாதித்துக் கொண்டிருக்கிறவன், பானுரேகா. அவளை மணந்தால், மகளுக்கும், சொர்க்கபுரி வாழ்வு கிட்டும். இருவருமாகச் சேர்ந்து, பின்னர் சிங்காரச் சென்னையையே விலைக்கு வாங்கி விடுவார்கள்!

சின்ன வயதிலிருந்து கெட்டிக்காரி. இன்னும் எவ்வளவு உயரம் போவாளோ?

திருமகளே தேடி வந்து கதவைத் தட்டும்போது, அதை எப்படி விடுவது?

பெரியவளுக்கு வேறு இடம் தேடு என்ற பாக்கியத்தை ஒன்றும் சொல்ல மாட்டாமல் திரும்பி வந்த ரேவதிக்குச் சொல்லவொண்ணாத மன உளைச்சல்.

இதே தங்கைக்காக, எவ்வளவோ தியாகம் செய்தவள் உதயா. ஆனால், இந்தத் தியாகம் கேட்கக் கூடியதா?

அத்தோடு கேட்பதற்கு ரேவதிக்கு மனமும் இல்லை. ஒருத்தி விட்டுக் கொடுக்கிறாள் என்றால், அவள் தலையிலேயே மிளகாய் அரைப்பதா? உதயாவும், அவள் வலித்துப் பெற்ற மகள்தானே?

நாலு ஆண்டுகளாகத் தன் காரியத்தை தானே பார்த்துத் தனித்து வாழ்ந்து பழகியிருந்த சின்ன மகளிடமோ, எதையும் பேச முடியவில்லை.

உள்ளூரக் குற்ற உணர்ச்சி குத்தினாலும், பானுரேகா, கொம்பிலேறு, அவளுக்கு ஓரளவு ஆறுதலே.

ஆனால், இரண்டு மாதங்களில் திரும்பி வந்து விடுவாளே!

அறுபது நாட்கள் இருக்கின்றனதான். ஆனால், பாக்கியம், செல்வத்தின் துணையின்றி, இந்த அறுபது நாட்களில் என்ன செய்ய முடியும்?

இந்த அழகில், பாக்கியம் வேறு ஃபோன் செய்து, உதயாவுக்கு வரன் பார்த்துவிட்டாயா என்று தொணதொணக்கலானாள்!

ரேவதியும், மனைவியின் புலம்பலில் விவரம் தெரிந்த கேசவனும், சேர்ந்து செய்வது அறியாமல் தவித்துக் கொண்டிருந்த போதுதான், உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும்போது தீவ அமுதம் கிடைத்தது போல என்பார்களே, அது போலத் திருமதி விஜயா நாராயணமூர்த்தி, அவளுக்கு போன் செய்து சில விவரங்கள் கூறினாள்.

கூறிய விஷயம் மெய்யாகவே அமுதம். மெய்யாய் இருந்தால்.

மகளைப் பற்றி விஜயா கூறியதை. முதலில் ரேவதியால் நம்ப



முடியவில்லைதான்.

உதயா அவ்வளவு எளிதில் மனதை மாற்றிக் கொள்வாளா?

ஆனால், முதலிலேயே அவள் மனம் முழுமையாக ஈடுபட்டிராமல், பெற்றோர் விருப்பம் என்று செல்வத்தை ஏற்றிருந்தால் அவளிடம் குறைகள் இல்லை என்பதால், ஏற்பது எளிதாக இருந்ததோ, என்னவோ?

யோசித்துப் பார்க்கும் போது, திருமதி நாராயணசாமி சொன்னது உண்மையேதானோ என்றே அவளுக்குத் தோன்றலாயிற்று.

யோகேந்திரன் சொன்ன வேலையை ஈடுபாட்டுடன் செய்தது பெரிதாக இராமல் இருக்கலாம். ஆனால், அந்த வேலையைத் தடையின்றிச் செய்வதற்காக, தங்கையை அழைத்துச் செல்லுமாறு செல்வத்தை ஏவியது அவள்தானே? வருங்காலக் கணவன், தங்கையைக் காட்டிலும், யோகேந்திரனின் அருகாமை அவளுக்குப் பிடித்திருந்ததே இதன் காரணமாக இருக்கலாம் அல்லவா?

ஒளிவு மறைவின்றி பேசும் மகள், இதுபற்றி மூச்சுக் கூட விடவில்லையே என்று ஒரு துணுக்கம் ஏற்பட்டபோது, அதற்குரிய காரணமும் அவளுக்கு உடனேயே தெரிந்து போயிற்று.

தோழியுடைய மகனான செல்வத்தை, உதயாவுக்குப் பொருத்தமான வரனாக எடுத்துப் பேசியவள் ரேவதி. அம்மா சொல்வதை ஏற்று அப்போது தலையாட்டிவிட்டு, இப்போது வேறு ஒருவனிடம் மனம் சென்றுவிட்டதை அந்த அம்மாவிடம் எப்படிச் சொல்வது என்று கலங்கித் தயங்கியிருப்பாள்.

இப்போது, அவளது காதலுக்கு உரியவன், துடிப்பான இளைஞனாகச் செயல்பட்டு, அவனுடைய தாயார் மூலமாகக் கெட்டிக்காரத்தனமாக உதயா வீட்டுக்கு விஷயத்தை வெளிப்படுத்துகிறான்.

அப்படித்தான் இருக்க வேண்டும்! எல்லாமே!

இத்தனை காரண காரியங்களை யோசித்து, புதிரின் பாகங்களை ஒன்றோடொன்று இணைத்து, உருவத்தை உண்டாக்குவது போல, எல்லாம் இப்படித்தான் நடந்திருக்க வேண்டும் என்ற நிம்மதியுற்ற ரேவதிக்கு, அவளது மன நிம்மதிக்கு ஏற்ற வகையில் எல்லாவற்றையும் யோசித்து முடிவு செய்திருக்கிறோமோ என்ற சந்தேகம் சிறிதும் வரவே இல்லை.

அஞ்சியது போல அல்லாமல், மூத்த மகளின் வாழ்வு மகிழ்ச்சிகரமாக இருக்கப் போகிறது என்று மட்டுமே எண்ணிப் பூரித்துப் போனாள் அந்த தாய்.

அதே பூரிப்பை முகத்தில் காட்டியபடியே, "நாராயணமூர்த்தி சார் சொன்னார்" என்று கூறிக்கொண்டு கேசவனும் வந்து சேர, யோகேந்திரனுடைய பெற்றோரின் விருப்பப்படி இருவரும் அவர்கள்

வீட்டுக்குச் சென்றனர்.

ஆனால், சற்றும் எதிர்பாராத விதமாகப் பெற்றோர் வந்து சேரவும், உதயா திகைத்து நின்றாடிப் போனாள்.

பெற்றவள் ஏதோ செய்கிறாளோ என்று யோகேந்திரன் திரும்பத் திரும்ப யோசித்தது ஏன் என்று இப்போது புரிந்தது!

தாயின் குணம் தெரிந்தவன். ஆனால், இந்த வேகம், அவனுமே எதிர்பார்க்கவில்லை என்று தெரிந்தது. எதிர்பார்த்திருந்தால், வேறு மாதிரி திட்டம்...

ஆனால், அதை யோசிப்பதை விடவும் இப்போது என்ன செய்வது?

புது விருந்தாளிகளை வரவேற்பதாக விஜயா வாயிற்புறம் சென்றுவிடவே மறைக்காமல் திகைப்பை முகத்தில் காட்டி யோகேந்திரனைப் பார்த்தாள் அவள்.

"இப்போது என்ன செய்வது?" என்று நெஞ்சு படபடக்கக் கேட்டாள்

அவனும் வேகமாகவே பேசினான். "வெறுமனே வீட்டைப் பார்த்துவிட்டுப் போவதற்காக உன் பெற்றோரை என் அம்மா வரவழைத்திருக்க மாட்டார்கள். அவர்களே பேசப் பேச, அதை அறிந்து அதற்கேற்பச் செயல்படலாம். இப்போதைக்குச் சட்டென எதையும் மறுக்க வேண்டாம்" என்றான்.

வேகமாக உள்ளே வந்த ரேவதியும், கேசவனும், ஆவலும் மகிழ்ச்சியுமாக, யோகேந்திரனை ஆர்வமாகப் பார்த்தனர்.

விஜயா, மகனை அறிமுகப்படுத்த, யோகேந்திரனின் குவித்த கரத்தைப் பற்றி, "ரொம்ப சந்தோஷம் மாப்பிள்ளை" என்று திக்கித் திணறினார் கேசவன்.

மகளை அணைத்து, "ஏன் கண்ணு அம்மாவிடம் சொல்லவே இல்லை? அம்மா புரிந்து கொள்ள மாட்டேன் என்றா நினைத்துவிட்டாய்?" என்று கேட்டுவிட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டாள் ரேவதி.

சொல்வதறியாமல் உதட்டைக் கடித்துக் கொண்டு உதயா நிற்கையில், "அந்தப் பிழை என்னுடையதுதான் அம்மா. என் அம்மாவிடம் முதலில் சொல்ல வேண்டும். அவர்கள் சம்மதத்தைப் பெற்ற பிறகு உங்களிடம் தெரிவிக்கலாம் என்று நான் கூறியதால்தான்..." என்று யோகேந்திரன் காரணம் கற்பித்துக் கொண்டிருக்கையில், விஜயா குறுக்கிட்டுப் பேசினார்.

"இன்னும் என்ன யோகன், 'அம்மா?' அத்தை என்று சொல்லு. சரி. இப்போது இந்தக் காரணம் எல்லாம் எதற்கு? மேலே ஆக வேண்டியதைப் பார்ப்போம். முதலில் உட்காருங்கள். பாருங்கள் சம்பந்தி. ஏதோ நல்லவிதமாக, என் பையனும், உங்கள் பொண்ணும், ஒருவர் மீது ஒருவர்



ஆசைப்பட்டிருக்கிறார்கள். இது வெறும் மோகமோ என்று பொறுத்திருந்து பார்க்க, இருவரும் பதினெட்டும் இருபதுமான சின்னப் பிள்ளைகள் அல்ல. எதிர்காலம் எல்லாம் யோசித்துதான் முடிவு செய்திருப்பார்கள். இப்போது, பெற்றவர்கள் நம் பொறுப்பாய், இவர்கள் திருமணத்தை சீக்கிரமாக நடத்தி வைக்க வேண்டும். இதுவே கல்யாண மாசம். இந்த மாதக் கடைசியில் நிறைய நல்ல நாட்கள்...."

யோகேந்திரனுடைய தாயார் சொல்லச் சொல்ல, ஆழம் காண முடியாத தண்ணீருக்குள் இன்னும் கீழே கீழே போய்க் கொண்டே இருப்பது போன்ற உணர்வு உதயாவுக்கு.

யோகேந்திரன் திட்டமிட்டது என்ன? இப்போது அது மாறிக் கொண்டிருக்கும் விதம்தான் என்ன? என்னவோ சொல்வார்களே, ஆப்பு அசைத்த குரங்கு போல என்று. அது போலல்லவா இருவருமே இப்போது மாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

யோகேந்திரன் சொன்ன ஒரு வார்த்தையைப் பிடித்துக் கல்யாணத்தையே நடத்தி முடித்து விடுவார்கள் போல இருக்கிறதே.

மூச்சடைத்துப் போய், யோகேந்திரனைப் பார்த்தாள் அவள்.

அவனுக்கும் அதே உணர்வுதான் இருக்கும்?

அப்படித்தான் என்பது போல, "அம்மா, ப்ளீஸ்" என்று தாயின் பேச்சில் யோகேந்திரன் குறுக்கிட்டான். என்னதான் வீட்டில் ஒரு விசேஷத்துக்காக நீங்கள் ஏங்கிப் போயிருந்தாலும், வந்தவர்களுக்கு உண்ண, குடிக்க ஏதேனும் கொடுக்கலாமா, இதெல்லாம் பேசுவது? உங்கள் அவசரத்தைப் பார்த்து, எனக்கு என்ன குறையோ என்று உதயாவுடைய பெற்றோர் பயந்துவிடப் போகிறார்கள்." என்று வேடிக்கைப் போலப் பேசிப் பெற்றவளைக் கட்டுப்படுத்த முயன்றான் அவன்.

ஆனால், "ஐயய்யோ அப்படியெல்லாம் கனவில்கூட, உங்களைத் தப்பாக கருதமாட்டோம், மாப்பிள்ளை" என்று கேசவன் அவன் காலை வாரிவிட, "தப்பாக நினைப்பதா? உங்களைப் பற்றி, எங்கள் உதிம்மா எவ்வளவு உயர்வாகப்பேசுவாள் தெரியுமா? அதற்கு மேலும், உங்களைத் தவறாக எண்ணுவதா? மாட்டவே மாட்டோம், மாப்பிள்ளை" என்று தன் பங்கைக் குறைவின்றி நிறைவேற்றினாள் ரேவதி!

இதற்கும் மேலாக, எஜமானியம்மா ஏற்கனவே சொல்லி வைத்திருந்தபடி, புதிய விருந்தினருக்கு, காபி பலகாரமும் வந்து சேர்ந்தன.

"உதயா அப்பாவுக்குக் காபிதானே பிடிக்குமாம். அதனால் உங்களுக்குக் காபி உங்களுக்குப் பழச்சாறு. எடுத்துக் கொள்ளுங்கள்" என்று விஜயா உபசரிக்க, "சாரிம்மா... உங்கள் விருந்தோம்பல் பற்றித் தெரிந்திருந்தும், நான் அது பற்றி யோசித்திருக்கவே கூடாது.

உதயாவுடைய அப்பா, அம்மாவைத் திடுமெனப் பார்த்ததும் சற்று திகைப்பாகி விட்டது என்று தோன்றுகிறது." என்று, யோகேந்திரனை மன்னிப்புக் கேட்கும் தொனியில் பேசும்படி ஆயிற்று.

"அது சரிதான். திடுதிப்பென்று மாமனார், மாமியாரைப் பார்க்கும்போது தலை சுற்றிப் போவது இயற்கைதான்." என்று மகளை ஒட்டிப் பேசுவது போலத் திருமண உறவை மீண்டும் உறுதி படுத்திவிட்டு, "நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சம்பந்தி உபசாரத்தைத் தாயார் தொடர்ந்தார்.

அப்பாவுக்குக் காபி பிடிக்கும், அம்மாவுக்குப் பழச்சாறு இதெல்லாம் இவ்வளவு நேரத்துக்குள் கேட்டுச் செய்வது என்றால், யோகேந்திரனுடைய தாயாரை எதிர்த்து, யாரால் வெல்ல முடியும்?

மீண்டும் தலைக்கு மேல் வெள்ளம் போவது போன்ற உணர்வு தோன்ற, யோகேந்திரனைப் பார்த்தாள் உதயா.

தாயின் இயல்பு தெரிந்த பிள்ளை. அவனாக ஏதாவது செய்தால்தான் உண்டு. மற்றபடி, உதயா இதில் தலையை நீட்டவே முடியாது.

இன்னும் கொஞ்சம் தெளிவுப்படுத்திக் கொள்ள விரும்பியவன் போன்று, "இதெல்லாம்மும் கூடச் சற்றுமுன் உதயா வந்ததும் கொஞ்ச நேரம் காணாமல் போனீர்களே, அப்போது ஏற்பாடு செய்ததுதானம்மா?" என்று கேலி போன்று கேட்டான் யோகேந்திரன்.

"ஆமாம்ப்பா!" என்று உடனே ஒத்துக் கொண்டாள் தாய். "சீக்கிரமே திருமணத்தை நடத்த வேண்டும் என்றால், அசமஞ்சமாக இருந்தால் முடியுமா? நீயே பச்சைக்கொடி காட்டிவிட்டப் பிறகு, எல்லாவற்றையுமே விரைந்து கவனித்தாக வேண்டும்தானே? இந்த மாதம் கடைசியிலேயே..."

"அம்மா, கொஞ்சம் பொறுங்கள்!" என்று தாயின் வேகத்தைத் தடுத்து நிறுத்த முயன்றான் மகன். "நாங்கள் உடனே திருமணம் செய்துகொள்ள நினைக்கவில்லை..."

"ஏன்?"

'ஸ்விட்சை' அணைத்தாற்போல, மூன்று பெரியவர்களின் முகத்திலும் மலர்ச்சி சட்டென மறைந்தது. மூவரின் பார்வையும் அவன்மீது கூர்மையுடன் பதிந்தது.

"சொல்லுப்பா... உங்கள் திருமணத்துக்கு என்ன தடை?" என்று கேட்டபோது விஜயாவின் குரலே மாறிவிட்டிருந்தது.

"பெரிய தடை ஒன்றும் இல்லையம்மா... என்றான் அவன் எளிதாக. "இந்த இணைப்பு வேலை தெரியும்தானே? அதில், சிங்கப்பூர் வேலையில் நிறைய வேலை இருக்கிறது. அதை..."

"இருவரும் திருமணம் செய்துகொண்டு, தேனிலவுக்கு அங்கே



போய், அந்த வேலையைப் பாருங்களேன்..."

"அதில்லையம்மா... இப்போதுதான் உதயாவுடைய தங்கை வந்துவிட்டுப் போயிருக்கிறாள். அவள் போன உடனே நாங்கள் மணந்து கொண்டால் நன்றாயிருக்குமா?" என்று உதயாவைப் பார்த்தான் யோகேந்திரன்

பார்வை புரிந்து உடனேயே, "ஆ... ஆமாம்.. பானு இரண்டு, மூன்று மாதங்களில் திரும்பவும் வருவாள்..அ... அதன் பிறகு.... என்று உதயா சொல்லும்போதே, "வேண்டாம்" என்று, குரலில் அழுத்தத்துடன் ரேவதி குறுக்கிட்டாள்.

வியப்புடன் மற்றவர்கள் நோக்கவும் லேசாக முகம் சிவந்து, "அப்.. அப்போது, அவளுக்கும் கல்யாணம் பண்ணி வைத்துவிடலாம் என்று ஒரு திட்டம் இருக்கிறது. தெரிந்த இடத்தில் கேட்டும் இருக்கிறார்கள். நம் செல்வத்துக்குத்தான், உதிம்மா... அதனால்...." என்று தாயார் விளக்கவும், உதயாவின் வாய் மூடிப் போயிற்று.

வலிதான், என்றாலும், வியப்புதான் மிகுதியாக இருந்தது. இதைத் தாயிடம் எப்படிச் சொல்லி சம்மதிக்க வைப்பது என்றெல்லாம் குழம்பினாளே... ஆனால், ஏற்கனவே அன்னைக்குத் தெரிந்திருக்கிறது.

ஆனாலும் ஒன்று. அவள் விலகிவிட்டாள் என்றுதானே, தாயாரும் இப்போது அதைப் பற்றித் தைரியமாகச் சொல்லுகிறாள்.

போட்ட திட்டத்தின் முதல் பலனாக, அவள் பற்றிய தடை ஏதும் இல்லாமல், தங்கைக்கு முடிவாகி இருக்கிறது.

அது நல்லபடியாக நடக்கு மட்டும் இன்னொருவனைக் காதலிப்பது போலத் தாராளமாக நடிக்கலாம். ஆனால் அவனைக் கல்யாணம் செய்து கொள்ள முடியுமா?

எப்படியும் அதற்கு, யோகேந்திரன் ஒத்துக் கொள்ள மாட்டானே என்று எண்ணியவள் சட்டென அதிர்ந்தாள்.

அவன் ஒத்துக் கொள்ள மாட்டானே என்றால், அவள் மட்டும் ஒத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறாளா, என்ன?

தாயார் தொடர்ந்து பேசுவது காதில் விழ, உதயா கவனத்தை அதில் செலுத்த முயன்றாள்.

"..... இவர்கள் திருமணத்தை உடனே முடித்து விடுவதில் எங்களுக்கு விருப்பமே மேடம்" என்று முடித்தாள் ரேவதி.

"மேடமா? சம்பந்தி என்று சொல்லுங்கள்" என்றார் விஜயா உற்சாகத்துடன்.

திருமணத்தைப் பற்றி யோகேந்திரனின் கருத்துத் தெரிந்திருந்ததால், உதயா தலையை மறுத்துப் பேசினாள். "அம்மா இப்போது, இந்தத்தொழில் இணைப்பினால், இ.... இருவருக்கும் நிறைய வேலை. அது ஒரு நாலு மாதமேனும் இழுக்கும். இந்த நேரத்தில்

திருமணம் அது, இது என்று பொழுதை வீணாக்க முடியாதும்மா. அதனால், பானு வரும்போது அவளுக்கு முடித்து விடுங்கள். எனக்குத்தான் முதலில் நடக்க வேண்டும் என்று ஒரு கட்டாயமும் கிடையாது."

"அதெப்படி, உனக்குப் பண்ணாமல் அவளுக்குச் செய்ய எங்களுக்கு மனம் வரும்?" என்று கலக்கத்துடன் கேசவன் கூற, யோகேந்திரன் எழுந்தான்.

"உதி... ஒரு நிமிஷம் என்னோடு வருகிறாயா?" என்று அவளிடம் கேட்டவன், மற்ற மூவரையும் பார்த்து, "நாங்கள் ஒரு திட்டம் வைத்திருந்தோம். இப்போது.. உங்களின் இந்தத் திட்டம் அதற்கு ரொம்பவும் வேறுபட்டதாக இருக்கிறது. அதனால், இதுபற்றி, நாங்கள் இருவரும் தனியாகச் சற்றுப் பேசிவிட்டு, அதன் பிறகு எங்கள் முடிவைச் சொல்லுகிறோம்" என்று கூறிவிட்டு உதயாவை அழைத்துச் சென்றான்.

மற்றவர்களின் கண்ணில் படாத, காது கேளாத தூரத்துக்கு அவளைக் கூட்டிச் சென்று அவளிடம் கேட்டான். "உதயா, செல்வத்தை மணந்து கொள்ள, உனக்கு இன்னமும் ஆசை இருக்கிறதா?" என்று.....

"டென்னது..?" என்று நினைத்துவிட்டு, "ஒரு நாளுமில்லை" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினாள் அவள்.

"அப்படியானால், வேறு யாரையேனும்? அல்லது, செல்வத்தை மிகவும் நேசித்ததால், வேறு யாரையும் கணவனாக நினைக்கக் கூட முடியாது என்கிறாயா?"

"ஐயோ...இப்படியெல்லாம் நான் நினைத்துப் பார்த்ததே கிடையாது. செல்வத்துடன் திருமணம் என்று இவ்வளவு நாளும் முடிவாகி இருந்தால், எல்லோரும் என்ன சொல்லுவார்கள். கழித்துக் கட்டிய மாதிரி நம் நிலை என... என்று இப்படி நினைத்து வேதனையாக இருக்கும். ஆனாலும் பானுவும் செல்வமும் நேசிப்பதால், நான் கௌரவமாக ஒதுங்கிக் கொண்டு, அவர்களுக்குத் திருமணம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்றுதான் எண்ணினேன். அதற்குமேல் ஒன்றும் நினைத்துப் பார்த்தது இல்லை" என்றாள் அவள்.

"இப்போது அதை யோசித்துப் பார்த்துச் சொல்லு. ஏனென்றால், அங்கே மூன்று பேருக்கு நாம் பதில் சொல்லியாக வேண்டும். மூவருமே, அவரவர் மக்களுக்காக இப்போது அதிகப்படியாக கூர் நுனையோடு இருப்பதாகத் தெரிகிறது. என் தாயார் படு வேகத்தோடும்"

இவன் என்ன சொல்ல வருகிறான்? இந்தப் பெற்றோருக்காகத் திருமணமே செய்து கொள்ளலாம் என்றா? எப்படி முடியும்? இவனுக்கோ பெண்களையே பிடிக்காது. அவளைப் பொறுத்தவரையில், செல்வம்தான் மணமகன் என்று ஊரெல்லாம் அறிவித்துவிட்டு.... எல்லோரும் என்ன சொல்லுவார்கள்?

"என்னவோ, இந்தக் காதல், கல்யாணம் எல்லாமே வெறும் கசடாகத் தெரிகிறது" என்றாள் கலங்கிய குரலில்.



"அப்படித்தான் எனக்கும் இருக்கிறது. ஆனால், நம் பெற்றோரின் கருத்து வேறாக இருக்கிறதே."

"அதற்காக... அதற்காக நாம் இருவரும் திருமணம் செய்து கொள்ளலாம் என்கிறீர்களா, சார்?" என்று நம்ப முடியாமல் கேட்டாள் அவள்.

ஒரு கணம் தயங்கி, தோளைக் குலுக்கினான் யோகேந்திரன். "கிட்டத்தட்ட அப்படித்தான் என்று வைத்துக் கொள்ளேன்" என்று அவன் மெதுவாகக் கூற, உதயா பிரமித்தாள்!



## இந்த மனம் எந்தன் சொந்தம் 10

சற்று நேரம் உதயாவுக்கு ஒன்றுமே புரியாத நிலை!

அவளது காதுகள் சரியாகத்தான் செயல்படுகின்றனவா?

திருமணம் செய்து கொள்ளலாம் என்றா சொன்னான்?

வட்டமாக விரிந்த விழிகளுடன் உதயா அசையாமல் நிற்கவும், சற்று அழுத்தமான குரலில், "உதயா!" என்று அழைத்தான் யோகேந்திரன்.

அவள் திடுக்கிட்டு நோக்கவும் "பார் உதயா, நீ திகைத்து நின்ற தோற்றம் பார்க்க அழகாகத்தான் இருந்தது. ஆனால், அப்படி நீ நிற்கவோ அதை நான் பார்த்து ரசிக்கவோ, இப்போது சமயம் இல்லை. சற்று நேரம் என்றால், நிஜமாகவே சிறிது நேரத்தில் அவர்களுக்கு நாம் பதில் சொல்லியாக வேண்டும். நம் ஆலோசனைகள், ஆட்சேபணைகள் எல்லாவற்றுக்கும் கொஞ்சம் நேரம்தான் அவகாசம் இருக்கிறது.

"கண்டதை எண்ணி நீ கலங்காதிருக்குமாறு, முதலில் நான் ஒன்றைத் தெளிப்படுத்தி விடுகிறேன். நீ ஒருவரை நேசித்தவள். இன்னமும் அவர் உன் மனதில் இருக்கவும் கூடும். அவரை மணக்க இயலாது என்றாலும், இன்னொருவரோடு திருமணம் என்றால், உனக்கு வெறுப்பாக இருப்பது நியாயமே. எனவேதான், 'கிட்டத்தட்ட அப்படித்தான்' என்று சொன்னான். அதாவது, இது முழுமையாக திருமணம் அல்ல. ஊராருக்கும், நம் பெற்றோருக்கும், முக்கியமாக உன் தங்கை, செல்வத்துக்கும் மட்டுமே இது உண்மையான திருமணம்.

"ஆனால், நம் இருவரைப் பொறுத்தவரையில், இது ஒரு சாதாரண ஒப்பந்தமே. இதுவரை, உன் பெற்றோருடைய மகளாக, உங்கள் வீட்டிலிருந்து அலுவலகத்துக்கு வந்ததற்குப் பதிலாக, என் மனைவி என்ற பெயரில், இந்த வீட்டிலிருந்து என்னோடு பணிக்கு வருவாய். அவ்வளவே. உன்னைப் பொறுத்தவரையில், வேறு மாற்றம் எதுவும் இருக்கப் போவதில்லை. எனக்கும் எந்நாளுமான இயல்பு வாழ்க்கைதான்" என்றான் யோகேந்திரன்.

அதாவது, எனக்கொரு காதல் மனைவியாக நீ இருக்கத்

தேவையில்லை என்கிறான். அந்த அளவுக்கு இவனுக்குப் பெண்களிடம் என்ன வெறுப்பு என்ற கேள்வி உள்ளத்துள் எழ, யோசனையோடு அவனைப் பார்த்தாள் உதயா.

அவளது எண்ணத்தின் போக்குப் புரியாமல் முறுவலித்து, "என்னை, இதுவரை உனக்குப் பிரச்சினை இல்லைதானே?" என்று கேட்டான் அவன்.

அவளது பிரச்சினைப் பற்றி கேட்கிறானா?

இல்லை என்பது போல அவள் தலையை ஆட்ட, "ஆனால், இதனால் வரும் லாபத்தை எண்ணிப்பார். என் வீட்டைப் பொறுத்த வரையில், எனக்குத் திருமணம் நடக்கவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருந்த என் பெற்றோருக்கு நிம்மதி. அப்பாவுக்கும் எனக்கும் இடையில் ஊசலாடித் தவித்துக் கொண்டிருந்த என் தாயார், இனி நிம்மதியாக, அப்பாவிடம் ஊட்டி எஸ்டேட்டுக்குக் கிளம்பி விடுவார்கள். அப்பா உணவுப் பிரச்சினைத் தீரும்.

"அதே போல, உன் வீட்டிலும், உன் பெற்றோருக்கும் இந்தத் திருமணம் ஏகப்பட்ட ஆறுதலைத் தரும். அக்காவுக்கென்று நிச்சயம் செய்த பையன், தங்கையை விரும்புகிறானே, பெரியவளின் மனம் என்ன பாடுபடும். அவளது வாழ்வு என்ன ஆகும் என்று உன் பெற்றோர் பட்ட கவலையெல்லாம் அடியோடு தீர்ந்துவிடும். இதைவிடவும் நீ எப்படிச் சரியாகும் என்று ஏங்கிய இன்னொன்றும் நடக்கும்!" என்று நிறுத்தி அவளைப் பார்த்தான் யோகேந்திரன்.

"ஏங்கியதா? என்ன அது?"

"உன் தங்கையும் மிஸ்டர் செல்வமும் குற்ற உணர்ச்சியில் குறுகிக் கொண்டிருப்பதாக கூறினாயே, நினைவிருக்கிறதா? அந்தக் குற்ற உணர்ச்சி அடியோடு மறைந்து போகும். நாம் இருவரும் காதலர்கள் என்றால் கூட முழுமையாக நம்புவார்களோ என்னவோ? கணவன் மனைவி ஆகிவிட்டால், நம்பித்தானே தீர வேண்டும்? நம்பி, அவர்கள் இருவரும் மகிழ்ச்சியோடு மணந்து கொள்வார்கள். இது, உனக்கு முக்கியம் இல்லை?" என்று வினவினான் யோகேந்திரன்.

கொஞ்சநஞ்ச முக்கியமா? கடந்த சில நாட்களாக அவளது வாழ்க்கையில் பெரும் பிரச்சினையே இதுதானே? தங்கைக்காக அவள் செய்ய வேண்டிய பெரும் கடமை.

"முக்கியம்... முக்கியம் ரொம்பவும் முக்கியம். அத...அதற்காகத்தானே மனதில் இந்தப்பாடு பட்டுக் கொண்டிருந்தேன். செல்வமும், பானுவும் எந்த விதக்குற்ற உணர்ச்சியும் இல்லாமல், மகிழ்ச்சியோடு மணந்து கொள்வார்கள் என்றால், அதற்காக நான் எந்த விதமான தியாகம் செய்யவும் தயார், சார்.... நாம் இருவரும் சீக்கிரமே மணந்து கொள்ளலாம் சார்" என்று அவசரமாகக் கூறினாள்.



அவளை விசித்திரமாக நோக்கினான் அவன். "என்னை மிகவும் பெருமைப்படுத்தி விட்டாய், உதயா. இவ்வளவு மகிழ்ச்சியும், ஆவலுமாக, இதுவரை இந்த உலகில் யாருமே, ஒரு திருமணத்துக்குச் சம்மதம் சொல்லியிருக்க மாட்டார்கள். மி...மிக்க நன்றி!" என்றான் நிறைக் குரலில்.

என்ன சொல்கிறாய் என்பது போல ஒரு கணம் திகைத்து நோக்கிய உதயா, மறுகணம் தன்னை மீறிக் கலீரென்று நகைத்தாள். சிரித்து முடித்துவிட்டு, "ச்சு போங்கள் சார். நான் ஒன்றும் உங்களைக் குறைவாகப் பேசவில்லை. ஒரு பெரிய பிரச்சினை இந்தத் திருமணத்தால் தீரும் என்றால், அதைத்தானே, பெரிதாகச் சொல்லவும் தோன்றும்?" என்று விளக்கம் கொடுத்தவள், இன்னொன்று யோசித்து, "ஆனால் நீங்களும் காதலினால் கசிந்துருகிக் கண்ணீர் மல்கத் திருமணத்துக்குக் கேட்கவில்லையே. வேறேதோ காரணங்களைத்தானே அடுக்கினீர்கள்?" என்று திருப்பிக் கேட்டாள்.

புன்னகையோடு தலையசைத்தான் யோகேந்திரன், "உண்மைதான். ஆனால், நீ இப்படிச் சிரிப்பதைப் பார்க்கும்போது, அந்தக் காரணங்கள் எல்லாம் எனக்கே மறந்துவிடும் போல இருக்கிறது!" என்றான் நகை முகத்துடன்.

"ச்சு.... ப்ளீஸ், இப்போது வேடிக்கை வேண்டாம், சார். சீரியசாகப் பேசுவோம். இ...இந்த திருமண விஷயம்.. அது, நீங்கள் நிஜமாக, சீரியசாகத்தானே பேசினீர்கள்?" என்று அவன் முகத்தையே பார்த்துத் திடீரென மூண்ட கலக்கத்துடன் வினவினாள் உதயா.

மீண்டும் முறுவலித்தான் அவன். "இதைவிட நிஜமாக, சீரியசாக நான் இன்று வரை எதையும் பேசியதே இல்லை என்று நினைக்கிறேன்" என்று உற்சாகத்துடன் பதிலுரைத்தான்.

"ச்சு, திரும்பவும் வேடிக்கைப் பண்ணுகிறீர்களே, சார்!" என்றாள் அவள் கவலையோடு.

"கடவுளே! உன்னை எப்படி நம்ப வைப்பது உதயா?" என்றவன் அவளது கையைப் பற்றித் தன் நெஞ்சின் மீது வைத்து அழுத்தி, "உள்ளே துடிக்கும் என் இதயத்தின் மீது சத்தியமாக, நான் சீரியசாகத்தான் சொன்னேன். போதுமா?" என்று கேட்டான்.

உள்ளே ஆரோக்கியமாகச் செயல்பட்ட இதயத்தின் துடிப்புகளை உள்ளங்கை உணர்கையில் அவளுக்கு என்னவோ செய்தது.

ஓர் ஆண்மகனின் நெஞ்சத் துடிப்பை அவள் அறிந்ததே இல்லை என்பதாலா?

ஆனால், திடுமென இப்படிப் பண்ணிவிட்டானே! இருந்திருந்து இதயத்தின் மீதா சத்தியம் செய்வது?

"சார்... சார்.. விட்டேன் என்று சொல்லுங்கள் சார். சத்தியம்

எல்லாம். அதுவும் இதயத்தின் மீது சும்மா சத்தியம் செய்யக் கூடாது, சார்!" என்று பதறிப்போய்க் கேட்டாள் உதயா.

அவளது பதற்றமும் அவனுக்கு வேடிக்கையாகவே இருந்தது போலும்!

முறுவலித்து, "சும்மாதானே சத்தியம் செய்யக் கூடாது? உண்மையாக உணர்ந்து செய்யலாம் அல்லவா? என் சத்தியம் அப்படிப் பட்டதுதான்!" என்று அவன் கூறிய விதத்தில் அவளது படபடப்பு மெல்ல மறைந்தது.

அவளது ஆறுதல் பெருமூச்சைக் கவனித்துவிட்டு, "என்னை போய், விட்டேன் என்று சொல்லச் சொன்னாயே. ஆனால், உண்மையாக விட வேண்டியது, நீதான்" என்றான் யோகேந்திரன் புன்னகையோடு.

"நானா? எதை, சார்? என்று விசாரித்தாள் அவள்.

"இந்த 'சாரை' என்றான் அவன். "என்னதான் நீதாவின் காதில் பூ சுற்றி, அப்போதைக்கு நீ சமாளித்தபோதும், இந்த 'சார்' அழைப்பினாலேயே எல்லாம் கெட்டுவிடுமோ என்று எனக்குத் தோன்றுகிறது. அவளுக்கு வந்த சந்தேகம் எல்லோருக்கும் வரும்தானே! எத்தனை பேரிடம் இந்த விளக்கம் சொல்வாய்?"

"நீங்கள் சொல்வது சரிதான், சார். கேட்டால் கூட, ஏதோ சொல்லலாம். கேளாமல் மனதுள்ளேயே வளர்க்கிறவர்களை என்ன செய்வது?" என்றாள் அவளும், கவலையோடு.

"ஆனாலும், சாரை' விடக் காணோமே" என்று தோளைக் குலுக்கினான் யோகேந்திரன்.

"விட்டுவிடலாம்! ஆனால் என்ன சொல்லி அழைப்பது?" என்றவளின் கண்கள் சட்டெனப் பளிச்சிட்டன. "ஊரில் எனக்கு ஒன்று விட்ட பெரியம்மா இருக்கிறார்கள். அவர்கள் பெரியப்பாவை 'ஏங்க' என்று அழைப்பார்கள். அதுபோல ஏதாவது அல்லது, அதுவே தேவலாமா?" என்று யோசித்தாள் அவள்.

"உன் பெரியப்பா, மனைவியை எதற்காக ஏங்கவிட்டாரோ எனக்குத் தெரியாது. ஆனால் என் மனைவி எதற்காகவும், 'ஏங்க'க் கூடாது. நினைவிருக்கும்தானே?" என்று இலகுக் குரலிலேயே மறுத்தபடி அவளைப் பார்த்தான் அவன்.

என்ன சொல்லுகிறான்? அவள் மிகவும் விரும்பியது நடக்கப் போகிறது எனும்போது, அவள் ஏன் ஏங்கப் போகிறாள்?

நினைத்து நோக்கும் போதே, செல்வத்தை நினைத்து ஏங்கக்கூடாது என்று குறிப்பாகச் சொல்லுகிறானோ என்றும் அவளுக்குத் தோன்றிவிட்டது.

என்ன இவன்? தங்கையுடைய கணவனை நினைத்து, ஒருத்தி ஏங்குவாளா? மூளையோடு உடன் பிறந்த பாசமும் சேர்ந்து தடுக்காது?



"'ஏங்க'க் காரணம் இல்லாதபோது, ஏக்கம் எப்படி வரும்? இல்லாததை எண்ணி, ஏங்கி, எங்கள் வீட்டில் பழக்கமும் கிடையாது. ஆனால் இப்போது உங்களை வேறு எப்படிக் கூப்பிடுவது என்று அதைச் சொல்லுங்கள். எல்லோரையும் போல யோகன் எனட்டுமா?"

"செய்யலாம்... ஆனால், இந்தர் என்றால், வித்தியாசமாக... தனியாகத் தெரியாது.....? யாரும் கூப்பிடாத தனியான பெயர் மாதிரி..."

தனியானதா? அந்த நீதா அப்படி அழைப்பது வழக்கம் என்றுதானே சொன்னாள்.

"சே.. அது நன்றாகவே இல்லை. அதற்கு யோகன் என்று கூப்பிட்டுவிட்டுப் போகலாம்" என்றாள் அவள்.

"உன் விருப்பம். "இந்த 'சாரை' விட்டுவிட்டால், எனக்கு அது போதும். இப்போது போகலாமா? போய்த் திருமணத்துக்கு சம்மதம் என்று பெரியவர்களிடம் சொல்லி விடலாமா?"

"சொல்லி விடலாம். ஆனால்..."

"உங்களிடம் ஒன்று கேட்கலாமா?" என்று சின்னக் குரலில் கேட்டாள் அவள்.

"ஒன்றென்ன? ஒன்பதுகேட்கலாம். ஆனால், வெறுமனே 'ஒன்று' என்று மட்டும் சொல்லிக் கடித்துவிடாதே" என்றான் அவன்.

"அப்படியில்லை." என்றுவிட்டு, ஒரு சிறு மௌனத்தின் பின், "நீங்கள் திருமணத்தை மிகவும் வெறுக்க, அந்த நீதாவும் கா.... காரணம் என்கிறீர்களே, எதனால் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று கலக்கமும், தயக்கமுமாகக் கேட்டாள்.

அவளை ஒரு தரம் பார்த்து "இது உனக்குத் தேவை இல்லாததுதான். ஆனால், மணக்கப் போவதாக இருப்பதால், நீ கேட்ட பிறகு, சொல்லாதிருக்கவும் முடியாது. ஆனால், எப்படியும் மாலன் மாமாவுடைய மகள். அவள் பெயர் கெட்டுவிடக் கூடாது என்பதால், இது வெளியே போகக் கூடாது" என்று எச்சரித்துவிட்டு, விவரம் சொன்னான்யோகேந்திரன்.

"என் நண்பன் ஒருவனுக்கு நிச்சயமாயிருந்த பெண், இந்த நீதா எல்லோரும் சிநேகிதிகள். கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள் என்று கேள்வி. அவனது நிச்சயத்துக்குச் சென்றபோது, அப்பாவின் சொத்துப் பற்றித்தெரிந்து, எல்லாப் பெண்களும்... சொல்ல வருத்தமாகத்தான் இருக்கிறது, உதயா... ஆனால், எல்லோரும் அதிகப்படியாக என்னைச் சுற்றினார்கள். வெட்கத்தைவிட்டு என்றே சொல்லலாம். பேச்சு எல்லாம் விரசம் என்கிற அளவில்! நீதா உரிமையாக வேறு. நண்பனுடைய வருங்கால மனைவியிடம், தோழிகளைக் கொஞ்சம் அடக்கி வைக்கக் கூடாதா என்றுகேட்டேன். பிடித்திருந்தால் சொல்லு, நானே உன்னோடு வந்துவிடுகிறேன் என்றாள்அவள்!"

“என்னது?

“அந்த மாதிரி விழாவின்போது ஏற்படுகிற உற்சாக மனநிலையில் கொஞ்சம் தடம் புரண்டு போயிருக்கலாம். ஆனால், எனக்கு கூடிப் போயிற்று. ஏதோ காரணம் சொல்லிக் கிளம்பிப் போய்விட்டேன். திருமணத்துக்குக் கூட இருக்கவில்லை.

“ஆனால்... எல்லோரும் சேர்ந்து விலாங்கு மீனாய் நழுவி ஓடிவிட்டான் என்று பேசினார்களாம். நழுவிய மீனை வலையில் பிடித்துக் காட்டுகிறேன் என்று நீதா சவால் விட்டாளாம். அப்போது பெரிதாக எண்ணவில்லை நான்.

“ஊரில் நமக்குப் பண்ணை வீடு ஒன்று உண்டு. அதைப் பொறுப்பாகக் கவனிக்கிறவர் ராமையாத் தாத்தா. என்னிடம் மிகுந்த அன்பு. திருவிழா சமயங்களில் ஊருக்குப் போவது பழக்கம். உறவினரும் வருவார்கள். மூன்று ஆண்டுகளுக்கு முன் அந்த முறை சென்றபோது, மாலன் மாமா குடும்பத்தோடு வந்திருந்தார். நீதாவின் தூண்டுதலாக இருக்கலாம். அங்கே செல்லும்போது, ஊரின் அந்த செட்டோடு சுற்றுவது, இரண்டாம் ஆட்டம் சினிமா போவது எல்லாம் நடக்கும். ஒரு நாள் அப்படிப் போய்விட்டு வந்தால், ராமையாத் தாத்தா வாசலிலேயே என்னை வழி மறித்துக் கூட்டிப் போனார். பக்கவாட்டு ஜன்னல் வழியே பார்த்தால், என் படுக்கையில் நீதா. ஒரு மாதிரி நைட்டியில் பாம்பு மாதிரி நெளிந்து கொண்டிருந்தாள். அவள் சொன்ன வலை. மாமா, அத்தைக்கு தெரியாது என்பதுதான் என் ஊகம். எனக்கு ரொம்பவும் அருவருப்பாக இருந்தது. அப்போதைக்குத் தாத்தாவை விட்டு, என் அறையில் தண்ணீர் எடுத்து வைக்கச் சொன்னேன். அவரைக் கண்டதும், அவள் ஓடிவிட்டாள்.

“ஆனால், எனக்கு இந்தத் தலைமுறைப் பெண்ணினமே வெறுத்துவிட்டது. அதனால் திருமணம் பற்றி நினைக்கக் கூட முடியவில்லை. அதிலும் இவளை!” என்று, தன் விளக்கத்தை முடித்தான் யோகேந்திரன், அருவருத்த குரலில்!

இப்போது, உதயாவுக்குமே கூச்சமாகத்தான் இருந்தது. இவ்வளவு மட்டமாக, அந்தப் பெண்கள் ஏன் நடந்து கொண்டார்கள்? என்னதான் திருமணக் கோலாகலமாக இருந்தாலும்?

கைக்கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்துவிட்டு, “இதற்கு மேல் தாமதிக்க முடியாது உதயா. என்ன, என்ன என்று பெரியவர்கள் கலங்கத் தொடங்கியிருப்பார்கள். போகலாமா?” என்று அழைத்தான் அவன்.

தலையாட்டி உடன் செல்லும்போதே உதயாவுக்கு குழப்பம்தான்! இத்தனைக்கும் மேல், இவன் எந்தத் தைரியத்தில் அவளை மணக்கிறான்?

உண்மைத் திருமணம் அல்லதான். ஆனாலும் மனைவி ஆகும்போது, எத்தனையோ உரிமைகள்...



ஓகோ... அதற்காகத்தான் உண்மைத் திருமணம் வேண்டாம் என்கிறானா? ஆனால் இந்த அளவுக்கு வருவதற்கே, பெரும் துணிச்சல் வேண்டும்.

தாயாரின் முகம் மலர்ந்த விதத்துக்காவே, இந்தத் திருமணத்தைச் செய்து கொள்ளலாம் என்று உதயாவுக்குத் தோன்றியது!

இந்த மூத்த மகளின் கதியைப் பற்றி, அவ்வளவு கவலைப்பட்டிருக்கிறாள் பாவம்!

திருமணத்தை விரைவிலேயே நடத்தவேண்டும் என்பதிலும், விஜயாவை விடவும் ரேவதி அதிகப் பிடிவாதமாக இருந்தாள்!

நிச்சயத்துக்கே சின்ன மகள் வரட்டும் என்று காத்திருந்தவள், இப்போது திருமணத்துக்குப் பானு வருவதைப் பற்றி அக்கறையே இல்லாமல் அவசரப்பட்டாள்.

காரணம் புரியாதபோதும், அடுத்த இரு மாதங்களில் பானு வரும்போது, இன்னொருவருடைய மனைவியாக அவனை எதிர்கொள்வது நல்லது என்றே உதயாவுக்கும் தோன்றியது. அப்போதுதானே, பானு தயக்கமோ, குற்ற உணர்வோ இல்லாமல் செல்வத்தை மணப்பாள்!

எனவே, திருமணம் பற்றிய பெரியவர்களின் பேச்சில், அவள் குறுக்கிடவே இல்லை.

பெண், பிள்ளை இருவருமே மறுக்கவில்லை எனவும், பதினைந்தே நாட்களில் திருமணம் என்று முடிவு செய்தார்கள்.

இவ்வளவு குறுகிய அவகாசத்தில் நல்ல திருமண மண்டபம் எதுவும் கிடைக்காது என்பதால், திருமணத்தைக் கோயிலில் நடத்துவதாகவும், வரவேற்பு ஒன்றைப் பெரிதாக நடத்தி விடுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

'ஸ்பீக்கர் ஃபோனில்' நாராயணமூர்த்தியையும் கலந்தே எல்லாம் திட்டமிட்டனர்.

அவர் மகிழ்ச்சியோடு ஆசீர்வதித்தபோதுதான், உதயாவுக்குப் பதில் சொல்ல முடியாத தடுமாற்றம்!

நல்ல முதலாளியாக மட்டுமின்றி, பரிவும் பாசமும் உள்ள பெரியவர் அவளுக்காக, மகனிடமே வாதாடி இருக்கிறாரே!

நல்லவேளையாக அருகில் இருந்த யோகேந்திரன், “உதயா வீட்டில் அருமையாக வளர்த்திருக்கிறார்கள், அப்பா. திருமணம் பற்றிப் பேசுவதற்கெல்லாம், அவள் இன்னமும் வெட்கப்படுகிறாள்” என்று கேலி போலப் பாராட்ட, எல்லோருக்கும் சிரிப்பும் வேடிக்கையாகவும் இருந்தது!

எல்லாமே கிட்டத்தட்டத் திட்டமிட்டு முடித்த பிறகே, முதலில் அவர்கள் திருமணம் பற்றி என்ன யோசனை வைத்திருந்தார்கள், ஏன்

தள்ளிப் போட வேண்டும் என்றா... ...வர்களிடம் விவரம் கேட்டார்.

உண்மையைச் சொல்லவா முடியும்?

"அது ஒன்றுமில்லை அம்மா, இந்த வேலையை எல்லாம் முடித்துவிட்டால், நடத்துவதை வேறு யாரிடமாவது ஒப்படைத்துவிட்டுத் தேனிலவு என்று உலகம் முழுவதையும் சுற்றி வரலாம் என்று ஓர் ஐடியா! இப்போதானால் என் திருமணத்துக்காக நிறுவனங்களின் இணைப்புவேலையைத் தள்ளிப் போடு என்று அந்த நிறுவனத்திடம் சொல்ல முடியாது அல்லவா? இருவரும், வேலையைப் பார்த்தாக வேண்டும். அதற்காக யோசித்தால், அங்கே அப்பாவைப்பார்க்க நீங்கள் போக முடியாமல் திண்டாடினீர்கள். அதனால்தான், பெரியவர்கள் விருப்பப்படி, திருமணத்தை நடத்தி விடுவோம். அப்புறம் வேலையைப் பார்த்து முடித்துவிட்டு, நம் தேனிலவை வைத்துக் கொள்ளலாம் என்றாள் உங்கள் மருமகள். அவளும் இப்படிச் சொன்ன பிறகு நான் மறுத்துப் பேச முடியுமா? சரிதான் என்று நன்றாகத் தலையை உருட்டி விட்டேன். இப்படி எடுத்த எடுப்பில் மாமியாருடன் சேர்ந்து கொண்டு, 'சேம் சைடு கோல்' போடுகிற ஒருத்தியைக் கட்டிக் கொண்டு, வாழ்க்கையில் என்ன பாடு படப் போகிறேனோ?" என்று யோகேந்திரன் சோகம் காட்டிப் பேசவும் எல்லோருக்கும் சிரிப்பு வந்தது.

அந்தச் சிரிப்பின் நடுவே, "ஒரு விஷயம் அம்மா, இப்போது உங்கள்திருமணத்துக்கு ஏற்றபடி, இனிவேலைத் திட்டத்தையும் நாங்கள் மாற்றி அமைக்க வேண்டும். அதனால், இந்தக் கல்யாண வேலைகள் அனைத்தையும் நீங்களும், மாமா அத்தையும் பார்த்துக் கொள்ள வேண்டும். எங்களுக்கு அலுவலகத்தில் வேலை தலைக்கு மேல் கிடக்கிறது" என்று திருமண வேலைகளில் கலந்து கொள்ள முடியாது என்று நாசூக்காக தெரிவித்துவிட்டான்.

பெரியவர்கள் மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

பிறகு, "எல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்வோம் யோகன். ஆனால், உங்கள் இருவருக்கும் துணிமணிகள், உதயாவுக்கு நகைகள் எல்லாம் நீங்கள் இருவரும் பார்த்துத்தானே வாங்கியாக வேண்டும்! அதற்காக ஓரிரு நாட்களேனும் ஒதுக்கி வை" என்றாள் அவனுடைய தாயார்.

"ஆமாம்... உதிக்குச் சட்டைகள், கொஞ்சம் புது சல்வார்கள் எல்லாம் தைக்க வேண்டும் அல்லவா? அவள் இல்லாமல் எப்படி?" என்றாள் ரேவதி கவலையோடு.

"அந்த ப்ளீஸ்!" என்று கெஞ்சலாகக் கரம் குவித்தான் யோகேந்திரன். "எல்லாம் நீங்களே பார்த்துச் செய்யுங்கள். வீட்டில்



தைத்து வைத்திருக்கும் எதையாவது அளவு கொடுத்துத் தைக்கச் சொல்லுங்கள். அவளது ஆடைகள் எல்லாமே, அவளுக்குப் பொருத்தமாகவும் அழகாகவும்தானே இருக்கின்றன. அதிலும், நீங்கள் பார்த்து வாங்குவது உதயாவே வாங்குவதை விடவும் சிறப்பாக இருக்கும் என்பது, என்னுடையது மட்டும் அல்லாமல், உதயாவின் கருத்தும் கூடத்தான். அதனால், இப்போது எங்கள் வேலைக்கு இடையூறின்றி விட்டுவிடத்தான் வேண்டும். வேறு வழியில்லை" என்று அவன் சற்றுப் பிடிவாதமான குரலில் சொல்லி முடித்துவிட்டான்.

ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்ட போதும், "சரி மாப்பிள்ளை. தொழில் முக்கியம்தான். அத்தோடு இது முக்கியமான வேலை என்றும் உதயா சொல்லியிருக்கிறாள். அதனால் இதையெல்லாம் நாங்களே பார்த்துக் கொள்கிறோம். ஆனால், திருமணம், வரவேற்பு இரு நாட்களும் நீங்கள் விடுமுறை எடுத்துத்தான் ஆக வேண்டும். மற்றபடி, உங்களைத் தொல்லை செய்ய மாட்டோம்" என்று கேசவன், தன் ஒப்புதலைத் தெரிவித்தார்.

இலகுவாகப் பேச முயன்றாலும், வேறு வழியின்றிச் சொல்வது நன்றாகவே தெரிந்தது.

இது பற்றிப் பிறகு பேசுகையில், "உனக்காகத்தான் எல்லாம்" என்றான் யோகேந்திரன்.



## இந்த மனம் எந்தன் சொந்தம் 11

திருமண உடைகளைத் தேர்வு செய்யக் கூட வரவில்லை என்று பெற்றோருக்குக் கொஞ்சம் வருத்தம்தான் என்று, உதயாதான் அந்தப் பேச்சைத் தொடங்கியது.

மாலையில் வேலை முடிந்து செல்லும்போது கூடக் கடைகள் எல்லாம் திறந்திருக்கும் நேரம்தான். அப்போது போய் வாங்கலாமே. அதை விட்டு, வரவே முடியாது என்று எதற்காகச் சொன்னான்?

இப்படிக் கேட்டபோதுதான், அவளுக்குத்தான் பிடிவாதம் காட்டியதாக யோகேந்திரன் கூறி, அவளைத் திகைக்க வைத்தான்.

கடை கண்ணிக்குப் போய், பிடித்தது பார்த்து அலசி ஆராய்ந்து அழகான ஒரு பொருளை வாங்கிச் சொந்தமாக்கிக் கொள்வது, உற்சாகமான பொழுது போக்குத்தானே? சொல்லப் போனால், உற்சாகமூட்டும் பொழுதுபோக்கும் கூட....

அதை அவளுக்காகத் தவிர்த்தானா?

அவள் புரியாமல் பார்க்கவும், "மிஸ்டர் செல்வத்தோடு சேர்ந்து சுற்றி, இருவருக்கும் பிடிக்காதத் திருமண உடைகளைத் தேர்வு செய்வது

பற்றிக் கனவு கண்டிருப்பாய். அந்த நினைவில் அனாவசியமாக நீ வேதனைப் படக் கூடாது என்றுதான் இதையெல்லாம் பெரியவர்கள் பார்த்துக் கொள்ளட்டும் என்றேன்" என்று அவன் விளக்கவும், தன்னையறியாமல் உதயாவின் இமைகள் நனைந்தன.

அவளுக்காக இவ்வளவு யோசித்தானா?

இவனைப்போய் மனிதன் மென்மை புரியாத இயந்திரம் என்று எண்ணினாளே.

"பார்த்தாயா? அது பற்றிச் சொல்வதற்குள் அழுகிறாய்? அவர்களோடு செல்ல வேறு நேர்ந்திருந்தால், நிச்சயமாக விஷயத்தைப் போட்டு உடைத்திருப்பாய். நம் திட்டமெல்லாம் வீணாகிப் போயிருக்கும்!" என்று யோகேந்திரன் கூறவும், அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது.

ஆக, அவளது வேதனை அவனுக்குப் பெரிதல்ல வேதனையின் பலனாக அவனது திட்டம் கெட்டுப்போய் விடக் கூடாது என்பதுதான் முக்கியம்.

சற்று முன் இருந்த நெகிழ்ச்சி மறைந்துவிட, "சார், வேலையைப் பார்க்கவென்று வந்துவிட்டு, வளவளவென்று வெற்று விஷயம் பேசி, எதற்காக நேரத்தை வீணடிப்பது? வேலையைப் பார்ப்போம்!" என்று அவள் எரிச்சலுடன் கூற, "ஓ! பார்க்கலாமே" என்று மறுப்பின்றி ஒத்துக் கொண்டான் யோகேந்திரன்.

என்னவோ, அதுவும் அவளுக்கு எரிச்சலாகத்தான் இருந்தது!

நல்லவேளையாக மறுநாள் ஞாயிற்றுக்கிழமை.

பொதுவாக மாதத்தில் ஒரு ஞாயிறன்று, மற்ற 'ஃப்ளாட்' பிள்ளைகளை வீட்டுக்குக் கூட்டிவந்து கொட்டமடிப்பது, உதயாவின் வழக்கம்.

பானுரேகா வெளிநாடு சென்ற புதிதில், விடுமுறை நாட்களில் தங்கைக்காக ரொம்பவும் ஏங்குவாள். அப்போது.. இப்படித் தொடங்கியது இந்தப் பழக்கம்.

ஆனால், முப்பது வீடுகள் அடங்கிய அந்தக் குடியிருப்பில், மகள் அல்லது மகனை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டுத் தனியே வாழ்ந்த பல முதியோரைத் தவிர்த்து, சின்னப் பிள்ளைகள் இருந்த வீடுகள் ஏழெட்டுத்தான்.

எல்லோருடனும் கேசவன் குடும்பத்துக்குச் சுமுக உறவாக இருக்கவே, அந்தப் பெற்றோருக்கும், உதயாவின் பழக்கம் வசதியாகிப் போக, பிள்ளைகளை அவளிடம் ஒப்படைத்துவிட்டு, ஓய்வு நாளைக்காக ஒதுக்கி வைத்திருக்கும் வேலைகளை நிம்மதியாகச் செய்வார்கள்.

இந்த ஏழெட்டு பேருக்கு சேர்த்து ரேவதி உணவு சமைத்துவிட, பிள்ளைகளோடு சேர்ந்து ஆட்டம், பாட்டு, விளையாட்டு என்று உதயா



கூத்தடிப்பாள்.

கிரிக்கெட், கபடியிலிருந்து, பல்லியடிப்பது, ட்விஸ்ட், ராக் என்று எதையும் விடுவதில்லை. ஆடிக் களைத்துப் போனால் அந்தாக்ஷரி. சினிமாப்பாட்டுக்கள் அந்தப் பாடுபடும். இந்தக் கடைசிப் பகுதியில், சில பெரிய தலைகள் கூட சேர்வதுண்டு!

அன்று அப்படித்தான், கிரிக்கெட் ஆட்டம் போரடித்துவிட, கபடி தொடங்கி முழு வேகத்தில் நடந்து கொண்டிருந்தது.

உதயா பெரிய பெண் என்பதால், அவள் பக்கம் இரண்டு சின்ன நண்டுகள் மட்டுமே. ஆறு, எட்டு, பத்து வயதுப் பிள்ளைகள் ஆறு பேரும் ஒரு செட்.

நிரைக் கட்டாகக் கட்டிய கூந்தலும், பழைய ஜீன்சும், குட்டைக் கையுடன் இன்னொரு பழைய டாப்புமாக பிடிக்க வந்த அவளை, ஆறுபேருமாகச் சேர்ந்து, 'உப்பை'த் தொடவிடாமல் பிடித்து அமுக்க, விடாமல் மூச்சைப் பிடித்து "கபடிக் கபடி" என்றபடி, விடுவித்துக் கொள்ள முயன்று கொண்டிருந்தாள் உதயா.

இன்னும் ஓர் எம்பலில் உப்பைத் தொட்டுவிடலாம் என்கிற நிலையில், "நான் வேண்டுமானால் உதவி செய்யட்டுமா?" என்றொரு குரல் கேட்கத் திடுக்கிட்டுத் திகைத்தாள் உதயா!

தன்னையறியாமல் 'கபடிக் கபடி' நின்று போயிற்று.

"ஹேய்ய, நாங்கள்தான் ஜெயித்தோம்" என்ற கூச்சலைக் கவனியாது திரும்பிப் பார்த்தால், யோகேந்திரன்.

அவனும், இலகுவாக ஜீன்சில்தான் இருந்தான். டீ ஷர்ட்.

ஆனால், அவளை விடப் பளிச்சென்றிருந்தது.

கலைந்து காற்றில் பறந்த கூந்தலும், சாயம்போன டாப்பும், சின்னப் பிள்ளைகளுக்குச் சரியாக உருண்டு புரண்டதில் ஒட்டியிருந்த மணலும்.

தரைக்குள்ளேயே போய்விட மாட்டோமா என்றிருந்தது அவளுக்கு!

எப்படியோ சமாளித்து "வா... வாருங்கள்" என்றாள் அவள்.

"அய்யோ! உனக்கு கெண்டாக்கா?" என்று ஏமாற்றத்துடன் கேட்டது ஒரு வாண்டு!

துணிச்சல் மிகுந்த இன்னொன்று முன்னே வந்து, "அங்கிளும், ஆன்ட்டியும் வெளியே போயிருக்கிறாங்க. நீங்க போயிட்டு, அப்புறமாக வாங்களேன்" என்று யோகேந்திரனுக்கு யோசனை சொன்னது!

"ஆமாம், ஆமாம்.. போயிட்டு அப்ப்...பறமா வாங்க" என்று கோரஸ் கிளம்ப, "ஷ் அப்படியெல்லாம் சொல்லக் கூடாது" என்று அவர்களை அடக்க முயன்றாள் உதயா!

"அவர்களை அடக்காதே உதி!" என்றான் அவன். சிறுவர்களை

நோக்கி, போய்விட்டு வருவது கஷ்டம். ஆனால், என்னையும் உங்கள் விளையாட்டில் சேர்த்துக் கொள்வீர்களா, ப்ளீஸ்யா?" என்று சிநேகத்துடன் கேட்டான் அவன்.

"இந்த விளையாட்டு உங்களுக்கு விளையாடத் தெரியுமா?" என்று கேட்டுத் திருப்தியடைந்தபின், "ஓகே" என்று மீண்டும் செட் பிரித்தார்கள்.

"விளையாட வேண்டும் என்று கட்டாயமில்லை," என்று அவன் காதருகில் மெல்லச் சொல்லிப் பார்த்தாள் உதயா.

"தோற்று விடுவாய் என்று பயமா?" என்று அவன் சிரிக்கவும், அவளுக்கும் தயக்கம் பறந்தது.

தலையைச் சிலுப்பிக் கொண்டு அவள் தயாராக, இரு பிரிவுகளாக விளையாட்டைத் தொடர்ந்தனர்.

யோகேந்திரனின் ஆட்டமும், ஓட்டமும், சின்னப் பிள்ளைகளுக்குச் சரியாகத் தன் முழுப் பலத்தை காட்டாமல் அவன் விளையாடிய விதமும், உதயாவைக் கவர்ந்தன!

அது மட்டுமல்ல அவளைத் தொட்டுப் பிடிப்பதற்கு வாய்ப்பு இருந்தபோதும், கையை மட்டுமே பற்றி இழுத்து, மற்றவர்களைக் கொண்டு பிடிக்க வைத்தானே தவிர, அளவு மீறித் தொடாமல் நாகரீகமாக நடந்ததும், அவளுக்குப் பிடித்தது.

அங்கங்கே போக, வர விளையாட்டை எட்டிப் பார்த்த பெரியவர்கள், காவலாள் யாருமே, அவனைப் பற்றிக் குறைவாக எண்ண வழியிராதவாறு ஆனால், பிள்ளைகளுக்குச் சரியாக விளையாடினான் அவன்.

ஒரு வழியாக, ஆளுக்கு ஒரு கேம் வென்றதும், எல்லோருக்கும் உடம்பும் அலுத்து விட்டவே, இந்த விளையாட்டு போதும் என்று முடிவு கட்டுகையில், அருகே வேலையாகச் சென்றிருந்த கேசவன்தம்பதி திரும்பி வந்தனர்.

கூடச் சேர்ந்து விளையாடிய அடையாளங்களுடன் பிள்ளைகளோடு யோகேந்திரனைப் பார்த்ததும், இருவரும் அதிர்ந்து போயினர்!

"என்னம்மா, மாப்பிள்ளையை போய், இந்த மண்ணிலும் புழுதியிலும்... போ.. போ.உள்ளே கூட்டிப் போய் உடம்பு முகம் கழுவிக் கொள்ளச் சொல்லு.அவருக்கு உடை... நல்ல வேளை அளவு கொடுப்பதற்காக வாங்கி வந்து இருக்கிறது. வாருங்கள். குளித்துவிட்டு அதை மாற்றிக் கொள்ளுங்கள்" என்று அவனை அழைத்தார் கேசவன்.

"அந்த அளவுக்கு அவசியம் இல்லை, மாமா. சின்னப் பிள்ளைகள் விளையாடுவதற்காக, சுத்தமான மணல்தானே போட்டு வைத்திருக்கிறீர்கள். சும்மா கைகால் கழுவிக் கொண்டால் போதும்."



என்றவன், சிறுவர்களுக்கு "பை" சொல்லிக் கையாட்டினான்.

ஆனால், முகத்தில் ஏமாற்றத்துடன், "அப்போ இன்னைக்கு விளையாட்டு அவ்வளவுதானா? 'அந்தாக்ஷரி' ஒன்றும் கிடையாதா?" என்றாள் ஒரு சிறுமி.

"ஃப்ரைடு ரைஸ், சிப்ஸ்... அதுவும் கிடையாதா?" என்றான் ஒரு சாப்பாட்டு ராமன்.

கேசவனும் ரேவதியும் தடுமாற, உதயா, யோகேந்திரனைப் பார்த்தாள். "வழக்கமாக இன்று மதிய உணவு வரை, எல்லோரும் என்னோடுதான் இருப்பது வழக்கம்" என்றாள் சிறு குரலில்.

"பின்னே, அது மாறுவானேன்?" என்றான் அவனும் இலகுவாக. பாட்டுப் பாடுவது, வீட்டுக்குள்ளேயே? அல்லது, இங்கேயேதானா? இப்போது பாட்டைத் தொடங்குவோமா? அல்லது சாப்பிட்ட....." என்றபடியே மணிக்கட்டைத் திரும்பிப் பார்த்தவன், "இன்னும் சாப்பிடுகிற நேரம் ஆகவில்லையே. அப்போது, 'அந்தாக்ஷரி' யைத் தொடங்குவோமா?" என்று கேட்டான்.

"மாப்பிள்ளை..." என்று தொடங்கிய கேசவன், பக்கம் திரும்பி, லேசாகத் தலையசைத்துவிட்டுப் பிள்ளைகளிடம் திரும்பினான் யோகேந்திரன்.

உற்சாகத்துடன், "எல்லோரும் இரண்டு செட்டாக உட்காருங்கள்" என்றாள் உதயா!

பாட்டுத் தொடங்கவும் எட்டிப் பார்த்த சில பெரிய தலைகளிடம், "சொன்னேனே, உதிக்குத் திருமணம் என்று. இவர்தான் மாப்பிள்ளை" என்று விளையாட்டைக் கெடுக்காமல், மெதுவாக விளக்கம் கொடுத்தார் கேசவன்.

ஏற்கனவே, மணமகன் மாற்றம் பற்றித் தகவல் பரப்பியிருந்தார், என்பது வந்த மற்றவர்களின் பார்வையில் புரிந்தது.

கூடவே, சற்றும் பந்தா காட்டாமல், உதயாவைப் போலவே யோகேந்திரனும் அங்குள்ள சிறுவர் சிறுமியரோடு பழகியது, எல்லோருக்கும் அவன் மீது பிரியத்தை ஏற்படுத்தியது என்பதும் புரிய, உதயாவுக்கு ஆனந்தமாக இருந்தது.

இந்த ஒரு வகையில் மட்டும், செல்வம் இவர்களிடம் மைனஸ் மதிப்பெண்கள்தான் வாங்கியிருந்தான். எந்த நேரமும் கச்சிதமாக உடையணியும் அவனை, இப்படிப் பிள்ளைகளோடு மணலில் உருண்டு புரண்டு விளையாடு என்றால், அதிர்ச்சியில் அவனுக்கு நெஞ்சு வலியே வந்துவிடக் கூடும்!

பெருமையோடு அவள் யோகேந்திரனைப் பார்த்தாள், அவள் பக்கத்து பிள்ளைகள் எல்லோரும் அவளைப் பாடச் சொல்லிக் கத்தினர்.

"எ..என்ன..." என்று ஒரு கணம் அவள் திகைக்குமுன்,

"தோற்றாயிற்று தோற்றாயிற்று..." என்று யோகேந்திரன் தரப்பில் கூச்சல் கிளம்பியது.

உச்சியிடே "பாயில் தொடங்கு அக்கா!" என்றான் அருகில் இருந்தவன்.

"யாருக்கு மாப்பிள்ளை யாரோ, அவர் எங்கே பிறந்திருக்கிறாரோ?" என்று உதயா பாட, "போங்கடா! இன்னுமா சந்தேகம்?" என்றுவிட்டு "நானேதான் உனக்கு மணவாளன்..." என்று யோகேந்திரன் பாட, பார்த்திருந்த பெரியவர்கள் எல்லோரும் கைகொட்டிச் சிரிக்கலாயினர்.

உதயாவுக்கு முகம் சிவந்துவிட அதற்கும் கைதட்டல்தான்.

இதற்கிடையில் "தப்பு.தப்பு..." அக்கா 'ரோ' என்று முடித்தாள். அண்ணா பாடினது தப்பு..." என்று ஒரு சின்னது முழங்கியது.

'அண்ணா'வா என்று உதயா எண்ணமிடும்போது, "எல்லாம் சரிதான். சும்மா இரு" என்று அந்தக் குழந்தையுடைய தாயார் புன்னகையோடு அதட்டினாள்.

"இல்லை... தப்புதான்" என்று இன்னொருத்தியும் சேரவும், "சின்னப் பிள்ளைகள் சரியாகத்தான் சொல்லுவார்கள். என்ன எழுத்தும்மா? ரோவா? 'ரா'வும் வரலாம்தானே? ரைட்டா, ராஜாவின்பார்வை ராணியின் பக்கம்..." என்று யோகேந்திரன் பாட, இன்னொரு சிரிப்பலை பெரிதாக எழும்பியது.

சற்றுநேரம், இந்தப் பக்கம், அந்தப் பக்கம் என்று இல்லாமல் பெரியவர்கள், சின்னவர்கள், எல்லோரும் சேர்ந்து பாடிக் கொண்டிருந்தனர்.

ஒருவாறு சாப்பாட்டுப் பிரியனைப் பசி கிளப்பி விட்டுவிட, அவனோடு மேலும் ஓரிருவர் சேர சாப்பாட்டு கடை தொடங்கியது.

கேஷுக்கு வீட்டு மாப்பிள்ளை வந்திருக்கிறார் என்ற ஒரோர் வீட்டிலிருந்து ஸ்பெஷல் அயிட்டங்கள் சில வந்தன.

யோகேந்திரனும் பீட்சா, பர்கர் என்று ஏதோ வாங்கி வந்திருந்தான். எல்லாமாகச் சேர்ந்து, அவனுக்கு ஒரு சகம்ப விருந்தே நடந்தது.

அவனும் எளிதாகப் பழகவும், சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, அவரவர் மக்களோடு மற்றவர்கள் கிளம்பினர். எல்லோருமே, திருமணத்தை ஆவலாக எதிர்பார்ப்பதாகக் கூறியே கலைந்து சென்றனர்.

உதயாவின், காதில், ஒரு "லக்கி உதி, நீ" என்று பெண்கள் பலர்.

மொத்தத்தில், பல நாட்களுக்குப் பிறகு, மனசு பறக்கிற மாதிரி, உதயா மிகவும் குதூகலமாக உணர்ந்தாள்.

கேசவன், ரேவதி பற்றிக் கேட்கவே வேண்டாம்.

மூத்த மகளின் கதி என்ன ஆகுமோ என்று கலங்கிக் கொண்டிருந்தது மாறி, அவள் மிகமிக மகிழ்ச்சியோடு வாழப் போகிறாள்



என்று எண்ணி அகமகிழ்ந்து போனார்கள்.

யோகேந்திரன் இவ்வளவு கலகலப்பாக எல்லோருடனும், அதிலும் சின்னப் பிள்ளைகளிலிருந்து பெரியவர்கள் வரை எல்லோருடனும் கலகலப்பாக பழகுவான் என்று யாரால் நினைக்க முடியும்?

இந்த ஆறுமாதப் பழக்கத்தில், வேலை, தவிர அவன் மனதை வேறு எதுவுமே தொடுவது இல்லை என்றுதானே, உதயா நினைத்திருந்தாள்!

இது, இனிமையான அதிசயம்!

யோகேந்திரன் கிளம்பும்போது, இயல்பாக வழியனுப்ப உதயா அவனோடு வாயில் வரை செல்ல, இங்கிதமாக மற்றவர்கள் ஒதுங்கிக் கொண்டனர்.

பெற்றோர் மட்டுமல்ல, நட்பின் அடிப்படையில், இடையிடையே ஏதாவது காரணத்தைச் சொல்லிக் கொண்டு வந்து, யோகேந்திரனைப் பார்த்துவிட்டுப் போன மற்ற குடியிருப்புவாசிகளும், கிட்டத்தட்ட எல்லோருமே, அவனை ஒருதரம் பார்த்துவிட்டார்கள் எனலாம்.

குடியிருப்பின் காவலாளும், அவனுக்கு ஒரு சல்யூட் அடித்துவிட்டு ஒதுங்கிவிட மலர்ந்த முகத்துடன் யோகேந்திரனுக்கு நன்றி சொன்னாள் உதயா.

புன்னகையுடனேயே "எதற்கு?" என்று வினவினான் அவன்.

"நீங்கள் பழகிய விதத்தில், குடியிருப்பில் எல்லோருக்குமே உங்களை மிகவும் பிடித்துப் போயிற்று. அப்பா, அம்மாவுக்கும் மிகவும் மகிழ்ச்சி" என்று காரணம் சொன்னாள்.

முறுவல் மாறாமலே, "உனக்கு?" என்று மேலும் விவரம் கேட்டான் யோகேந்திரன்.

"எனக்கும்தான்!" என்றாள் அவள் குதூகலத்துடன். "நீங்கள் இப்படிப் பழகுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை!"

"நானும் எதிர்பார்க்கவில்லைதான். இதுவரை, வெறும் அலுவல் இயந்திரமாகப் பார்த்துப் பழகிவிட்டு, இப்படி ஜீன்சும் டாப்புமாக பிள்ளைகளோடு பிள்ளையாக... ஜகஜம்... ஆனந்தமான அதிசயம்!" என்றான் அவன் ஆச்சரியத்தோடு.

உதயாவின் கண்களும் அகல விரிந்தன.. "ஹைய்யோ... நானும் இதையேத்தான் நினைத்தேன். இனிமையான அதிசயம் என்று!" என்று அவள் வியப்போடு கூற, இருவருக்குமே சிரிப்பு வந்து விட்டது.

அவன் கிளம்பிச் சென்ற பிறகும், வெகுநேரம், அந்தப் புன்னகை, அவன் முகத்தில் பசை போட்ட மாதிரி ஒட்டியிருந்து, அவனுடைய பெற்றோரை மகிழ்வித்தது.

இரவு படுக்கையில் விழும்வரை, உதயாவின் இந்த சந்தோஷம் நீடித்தது.

அன்றைய வேடிக்கை விநோதங்களை அசைபோட்டு

மகிழ்ந்தபோது திருமணம் ஆன பிறகும், இன்னும் ... முடியும் என்று நினைத்து சந்தோஷப்பட்டான்.

செல்வத்தோடு திருமணம் பற்றி யோசிக்கும்போது, இந்த சிறுவர்களை அடியோடு துறக்க நேருமே என்று வருத்தப்படுவான். ஆனால் இனி அந்த வேதனை இடையாது அல்லவா?

அவ்வப்போது இப்படி வந்து சந்தோஷமாகக் கலந்து உரையாடிவிட்டுப் போகலாம்.

விளையாடக் கூடச் செய்யலாம்.

எதிர்த்த நினைவுகளில், எப்படி வரலாம் என்று அவள் யோசித்தபோதுதான், இன்று யோகேந்திரன் ஏன் வந்தான் என்ற கேள்வி தோன்றியது.

அவள் மேல் உள்ள காதலினால், அவன் ஓடி வந்தான் என்று சொல்வதற்கு, இது ஒன்றும் உண்மைத் திருமணம் அல்ல.

போடுகிற வேஷத்தை ஒழுங்காகப் போட்டு முடிப்போம் என்று வந்திருக்கிறான்.

அது புரியாமல், இப்படி மகிழ்ந்து போனாளே!

யோகேந்திரனைப் பொறுத்த வரையில், அவனுக்கு இன்றைய இளம் பெண்களைப் பிடிக்காது.

அதற்கு நீதா மாதிரியாக சில பெண்கள் காரணமாக இருக்கலாம்.

ஆனால், அவளைப் பற்றி அறியாமலே, காதலனோடு சுற்றுவதற்கா, பார்லருக்குப் போவதற்கா என்று, அவளிடம் இளக்காரமான தொனியில், அவ்வப்போது பேசியவன்தானே? பானுவைக் கூட மட்டம் தட்டித்தானே பேசுவான்.

வருங்கால மனைவியைப் பார்க்க போவதாகத் தாயாரிடம் பறை சாற்றியிருப்பான். அல்லது, விஜயா அம்மாவே, போகவில்லையா என்று கேட்டு அனுப்பியும் இருக்கலாம்.

அதன்படி வந்தவன், இங்கேயும் மற்றவர்களின் எதிர்பார்ப்புக்குப் பொருத்தமாக நடித்திருக்கிறான். அவ்வளவே.

இதில், உதயாவின் உள்ளம் மகிழ்ந்து போவதற்கு ஒன்றுமே இல்லை!

ஒரு பெருமூச்சுடன் திரும்பிப் படுத்து, உறங்க முயற்சி செய்தாள் உதயா.

மறுநாள் அலுவலகத்தில் பார்த்ததுமே, "என்ன? அலுவலகம் போனால், சிரிக்கக் கூடாது என்று புதுச் சட்டம் ஏதேனும் போடப்பட்டிருக்கிறதா, என்ன?" என்று இலகுவாகவே விசாரித்தான் யோகேந்திரன்.

உதயாவுக்குச் சிரிப்பு வரவில்லை.

உள்ளே வரும்போதே, வாயில் காவலாளி சற்று அதிகப்படி



மரியாதை கொடுப்பது போலத் தோன்றிற்று. ஆனால், அது உள்ளத்திலிருந்து வந்த மரியாதை அல்ல என்பதும் நன்றாகவே தெரிந்தது.

அலுவல் அறைக்குள் வந்தால், கார சாரமாக நடந்து கொண்டிருந்த ஏதோ பேச்சு, சட்டென நின்று போயிற்று.

நடந்து கொண்டிருந்தது, அவளைப் பற்றிய பேச்சு என்பது புரிய, பிரமாதமான மூளை தேவையில்லை.

கவனியாதது போல, அவளது வேலைப் பகுதிக்குள் சென்றவள், கதவைச்சரியாக பொருத்த மூடாமல், நூலக ஓர் இடைவெளி விட்டு மூடிவிட்டு, வெளிப் பேச்சை கவனித்தாள்.

அவள் எண்ணியது சரிதான்.

"வேலை செய்கிற மாதிரிக் கூடவே இருந்து, ஆளைக் கவிழ்த்துவிட்டாளே!" என்றது இன்னொரு குரல்.

"ரொம்ப நாளாகவே, தனி வேலை என்னவோ என்று சொல்லிக்கொண்டு... கொட்டம்தானாம். கார்ச் சவாரியெல்லாம் உண்டு என்று வாட்ச்மேன் சொன்..." என்று பேச்சு இடையில் நின்று, "குட்மார்னிங், சார்" என்று பல குரல்கள் சேர்ந்து ஒலித்தன.

யோகேந்திரன் வந்து கொண்டு இருக்கிறான்!

அவன் கவனிக்கவில்லை போலும். சிரித்த முகமாகத்தான் வந்தான். அவளது சிரிப்பின்மைக்குக் காரணமும் கேட்டான்.

என்ன சொல்வது? இரவின் மன உளைச்சலைச் சொல்ல இயலாமல், சற்று முன் காதில் விழுந்ததைச் சொன்னாள் அவள்.

"ஸோ வாட்?" என்றான் அவன். "விஷயம் வெளியே தெரியத் தொடங்கிவிட்டது. அவ்வளவுதானே? தெரிய வேண்டும்தானே? நாளைக்கு வரவேற்புக்கு வருமாறு அழைப்புக் கொடுக்கும்போது, எல்லாம் சரியாகிவிடப் போகிறது. இதற்குக் கவலைப் படுவானேன்?" என்று சர்வ சாதாரணமாகக் கேட்டான் அவன்.

எல்லாம் எப்படிச் சரியாகும்?

அவளுக்கு நம்பிக்கை வர மறுத்தது.

விஷயம் தெரிந்ததும், செல்வம் சந்தோஷமாக வாழ்த்த வந்தான்.

"பானு கெட்டிக்காரி! உதயா. அவள் அப்போதே முதல்நாளே சொன்னாள், உன்னைப் பிடித்து வைக்க, அலுவலகத்தில் இன்னமும் அதிக அழகான முகம் இருக்கிறதோ என்று. சரியாகத்தான் சொல்லியிருக்கிறாள். அப்போது நான் அதை நம்பவே இல்லை. ஆனால் இப்போது எவ்வளவு நிம்மதியாக இருக்கிறது, தெரியுமா?" என்று சிரித்தான் அவன்.

எப்படி முடிகிறது என்று ஒரு கணம் உதயா தவித்துப் போனாள்.

தேவி என்றதும், மகாராணி என்று அழைத்ததும், மணக்கச் சொல்லிக் கேட்டதும் அப்படியே மறந்து போகும்?

விரைவிலேயே அதை மீறத் ... அந்த இன்னும் அதிக அழகான முகம்' அவனது மனதை உறுத்த, அதற்கு முந்தைய தவிப்பு மறந்தே போயிற்று.

இந்த வார்த்தைகளில் என்ன இருக்கிறது?

ஏதோ இருக்கிறது என்று அவனது உள்மனம்!



# இந்த மனம் எந்தன் சொந்தம் 12

குறுகிய கால அவகாசம்தான் என்றாலும், அந்தக் குறுகிய காலமும் படு வேகமாகப் பறந்து போய்விட்டது போலத் திருமண நாள் விரைவிலேயே வந்து சேர்ந்தது.

எல்லாம் திட்டமிட்டபடிதான் என்றாலும், இதில் உதயாவுக்கு ஒரே ஒரு குறை இருந்தது. பானு! அவளுடைய ஒரே தங்கையான பானுவுக்குத் திருமண விவரம் குறித்துத் தெரியப்படுத்தவே இல்லை.

தெரியப்படுத்துவதும் கடினம்தான்.

சிங்கப்பூருக்குப் பறந்து சென்ற பானு, அங்கே போய்ச் சேர்ந்ததைத் தெரிவித்ததன் பிறகு வீட்டாரைத் தொடர்பு கொள்ளவே இல்லை.

வீட்டாரை மட்டுமல்ல, செல்வத்தையும்.

பானுவிடமிருந்து தகவல் வந்ததா என்று பாக்கியம் ஆன்ட்டி தினமும் விசாரித்தது, செல்வத்தின் தூண்டுதலின் பேரில்தான் என்பது உதயாவின் ஊகம். நேரில் வந்து பானு பற்றி விசாரிப்பதற்கு, இன்னமும் செல்வத்துக்கு தைரியம் வரவில்லை.

வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதன் காரணமாகவும், அவளுக்குப் பேச நேரம் இல்லாதிருக்கலாம்.

ஆனால், அக்காவுக்கு அநியாயம் செய்துவிட்டோம் என்ற குற்ற உணர்ச்சிக் காரணமாக, செல்வம் உட்பட எல்லோரையும் தவிர்க்கிறாளோ என்ற சந்தேகம் தோன்றிவிடவே, உதயாவுக்கு வேதனையாக இருந்தது!

அவளது நிம்மதிக்காக ஒன்று செய்யப் போய், அது அவளுக்குத் தெரியவே இல்லை என்றால், எப்படி?

பானு வேலை செய்யும் நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு, அவர்கள் மூலமாகப் பானுவிடம் சொல்லலாம் என்றால், ரேவதி அதற்கு ஒத்துக் கொள்ளவே இல்லை.

"எதற்கம்மா, அவ்வளவு கஷ்டம்? ஒரு ஃபோன் கூடப் பண்ண முடியாமல் மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருப்பவளைத் தொல்லைச்



செய்ய வேண்டாம். அப்புறம் திருமணத்துக்கு வர முடியவில்லையே என்று, அது வேறு வருத்தப்படப் போகிறாள்! அதைவிட, அவள்வந்ததும் சொல்லி, சந்தோஷ அதிர்ச்சி கொடுப்போம்" என்று முடித்துவிட்டாள்.

தங்கையின் குற்ற உணர்ச்சிப் பற்றித் தாய் தந்தையிடம் எடுத்துச் சொல்வது இயலாத காரியம். அப்புறம் அதிலிருந்து நூல்பிடித்து, இந்தத் திருமணத்தின் அடிப்படை, அவர்களுக்குத் தெரிந்துவிடக் கூடும்.

எல்லோருக்கும் வீண் மனக் கஷ்டம்! விஜயாவுக்குத் தெரிந்தால், அவர் திருமணத்தையே நிறுத்தி விடக் கூடும் என்று நினைக்கும்போதே திக்கென்று இருக்க, அதற்குமேல், இது பற்றி யோசிப்பதையே உதயா விட்டுவிட்டாள்.

எல்லாம் நடக்கிறபடி நடக்கட்டும். நம் கையில் என்ன இருக்கிறது. கடவுளாகப் பார்த்து, என்ன நடக்க வேண்டுமோ, அதை நடத்தி வைக்கட்டும்.

'ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரோ கண்ணா...'' என்ற பாட்டு எங்கிருந்தோ கேட்டு, உதயாவை மேலும் அமைதியடைச் செய்தது!

எதெது.. எப்படியெப்படி நடக்க வேண்டும் என்பது கடவுளின் தீர்மானம். அதன்படிதான் எல்லாம் நடக்கும். மற்றபடி, செல்வத்தோடு நிச்சயம் நடப்பதற்கே பானு வரவேண்டும் என்ற தாயார், இப்போது திருமணத்தைக் கூட அவளுக்குச் சொல்லத் தேவையில்லை என்பாளா?

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது. எது நடக்கவேண்டுமோ அது நன்றாகவே நடக்கும் என்று பகவத் கீதையில் ஒரு வாசகம் வரும் என்று சொல்வார்கள்.

நடப்பது நடக்கட்டும் என்று அமைதியுற்றாள் உதயா!

கிட்டத்தட்ட இதே போல, ரேவதியும் ஒன்று சொன்னாள். "பார், உதி. முன்னே உன் நிச்சயதார்த்தம் பற்றி பாக்யத்துடன் பேச முயன்ற போது, தடை, தடையாக வந்தது. ஃபோன் கிட்டே போன போதே, சமையல் காஸ் வந்தது. அப்புறம் அவளும் ஃபோனில் கிடைக்கவே இல்லை. ஏன், முதலில் நானே, பானு வரட்டும் என்று தள்ளிப் போட்டதே, அப்படி ஒரு தடைதானோ என்னவோ? இப்போது பார், சம்பந்தியம்மா ஃபோன் செய்து கூப்பிட்டார்கள். உடனே போனோம். திருமணப் பேச்சு நடந்து, எல்லோரும் ஒத்து, இதோ நாளை திருமணம் என்கிற வரை,தங்குதடையே இல்லாமல், இலகுவாக வந்துவிட்டது. உங்கள் இருவருக்கும்தான் திருமணம் என்று கடவுள் விதித்திருக்கிறார் என்று இப்போதல்லவா தெரிகிறது" என்று மகிழ்ச்சியோடு மகளிடம் கூறினாள்.

யோகேந்திரன், உதயரேகா திருமணம் [illegible] நடந்தது.

திருமண வரவேற்பும் வெகு சிறப்பாகவே நடந்தேறியது!

முறைப்படியாக எல்லாச் சடங்குகளும் யாருக்கும் குறையில்லாமல் நல்லபடியாக நிறைவேறின!

மகனுக்குத் திருமணம் செய்து வைத்துவிட்ட மகிழ்ச்சியோடு, விஜயா வீட்டுப் பழக்க வழக்கங்களை மருமகளுக்குக் கற்றுக் கொடுத்துவிட்டு, கணவரோடு, ஊட்டி எஸ்டேட்டுக்குக் கிளம்பிச் சென்றார்.

யோகேந்திரன் சொன்னது போல், அவன் வீட்டிலிருந்து அவனோடு உதயா அலுவலகம் செல்லலானாள்.

இந்த ஒரு மாற்றம் தவிர, வாழ்க்கை முறை முன் போலவே செல்லலாயிற்று.

வெளித் தோற்றத்தில்...

ஆனால், மனதளவில் சந்தோஷமாகவும், சங்கடமாகவும் வாழ்வில் பல மாற்றங்கள் நேர்ந்திருப்பதாக உதயாவுக்குத் தோன்றியது.

காலையில் எழுந்தால், சற்று நேரம் தோட்டத்தில் ஓடிவிட்டு, யோகேந்திரன் வீட்டில் வைத்திருந்த 'ஜிம்'முக்குள் சென்றுவிடுவான்.

உதயாவையும் அழைத்தான்தான். ஆனால் தான் பயின்று வைத்திருந்த பயிற்சியே உடலைப் புத்துணர்ச்சியோடும், அழகாகவும் வைத்திருப்பதாக எண்ணியதால், உதயா தன் பழைய பயிற்சிகளைத் தன் அறையிலேயே செய்து விடுவாள்.

வியர்வை வடிய, இருவரும் பத்திரிகைப் படிப்பார்கள்.

அந்த நேரத்தில், இருவருக்கும் ஏலக்காய் வாசனையுடன் சத்துமாக் கஞ்சி வரும்.

இருவரும் குளித்துவிட்டு தயாராகி வரும்போது, காலை உணவு தயாராக இருக்கும்.

இருவரும் உணவை முடிக்கிற வேளையில், மறு நாளைக்கான உணவு மெனுவை, உதயாவும், சமையல்காரம்மாவும் தயாரிப்பார்கள்.

மேலே கணவனும் மனைவியுமாகப் பணிக்குக் கிளம்பிச் செல்வார்கள்.

மற்றவர்கள் அவளுக்கும் மரியாதை கொடுத்தாலும், வேலையைத் தொடங்கியதும் எல்லாம் பழைய மாதிரியேதான் தோன்றும். ஒரே ஒரு மாற்றமாக, யோகேந்திரனும் உதயாவும் சேர்ந்து சாப்பிடுவார்கள்.

மாலையில் நேரத்தைப் பற்றி கவலையின்றி, வேலையை முடித்துவிட்டு இருவருமாக வீடு திரும்புவார்கள்.

இருக்கும் அவகாசத்தைப் பொறுத்து, சற்று நேரம் டி.வி.



இரவு உணவு முடிந்ததும் தோட்டத்தில் சிறு உலாவல்.

அந்த நேரம் உதயாவுக்கு ரொம்பப் பிடிக்கும்.

மல்லிகை, ஜாதிக் கொடிகள் பக்கம் நின்று வாசனை பிடிப்பார்கள். புதர் போல இருக்கும் செடிகளின் பக்கமாய், உதயா அதிகம் ஒட்டிப் போய்விடாமல் வழி நடத்திக் கூட்டிப் போவான். வாழ்வில் நடந்த ஏதாவது ரசனைக்குரிய சம்பவங்கள் பற்றி யோகேந்திரன் கூறுவான். அவளும் ஏதாவது சொல்லுவாள். சற்று இறுக்கம் தளர்ந்து, இயல்பாக இருப்பது போலத் தோன்றும். பேச்சு சுவாரசியமாக இருந்தால், அங்குள்ள கல் பெஞ்சின் மீது அமர்ந்து, கூடக் கொஞ்ச நேரம் பேசுவார்கள்.

உலா முடிந்து திரும்பி வந்தால், ஒரு 'குட்நைட்'டுடன் அவரவர் அறைக்குள் முடங்கிக் கொள்வார்கள்.

ஒன்றும் பிரச்சினையில்லை. அவன் வாக்களித்தது போலத்தான் எல்லாம் நடந்தது.

ஆனால், என்னவோ ஒரு குறை இருப்பதாக... நாள் முழுவதும் அலுவலகத்தில் இருப்பது போன்ற உணர்வு உதயாவுக்கு அடிக்கடி உண்டாயிற்று. மணிக்கணக்குப்படி வேலைக்குப் போய் அதே போல் வேலையை முடித்துக் கிளம்புவது போல ஓர் இயந்திரத்தனம்.

இரவு உலவும் நேரம் தவிர...

ஒரு தரம் தொழில்முறை 'லஞ்ச்'க்குப் போக நேர்ந்தபோது, உதயாவை அவளுடைய பிறந்த வீட்டில் விட்டுவிட்டு, யோகேந்திரன் சென்றான்.

எல்லோரும் ஆவலாக வந்து அவளுடன் பேசிச் சிரித்தார்கள்தான். ஆனால், அங்கேயும் பழைய சுகம் இல்லாதது போலத்தான் அவளுக்கு இருந்தது.

முக்கியமாக, மற்றவர்களின் கேலிகளும் ஜாடையான துருவல்களும், உரியவாறு பதில் சொல்ல முடியாததாலேயே, அவளைச் சங்கடப்படுத்தின.

இது உண்மையான திருமணமாக இருந்திருந்தால், இந்தக் கேலிகளையும் துருவல்களையும் ரசிக்கத் தோன்றியிருக்குமோ, என்னவோ? இப்போது உண்மை நிலையைக் காட்டிக்கொள்ளாமல், அவைகளை நல்லபடியாகச் சமாளித்து முடிக்குமுன், அவளுக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது.

விஜயா அடிக்கடி ஃபோன் செய்வார், மாமியாரிடமும், உதயாவுக்கு இதே சமாளிப்பு வேலைதான்.

இந்த சமாளிப்பு வேலை இவ்வளவு கடினமாக இருக்கக் கூடும்

என்று எண்ணிப் பார்க்கவே இல்லையே!

ஆனால், அவனது பிரச்சினை தீரவேண்டும், அவளும் விரும்பி ஏற்ற

என்பதால், குறைப்படவும் முடியாத நிலைமை

அவனது பிரச்சினை தீரவேண்டும்!

தன் திருப்தியற்ற மனநிலையின் காரணம், இப்போது உதயாவுக்குப் புரிந்தது.

அவனது பிரச்சினை தீர்ந்தால் அல்லவா, திருப்தி ஏற்படும்.

அவளைப் பொறுத்தவரையில், வேறு ஒருவனைத் திருமணம் செய்துகொண்டு, பானு செல்வத்தின் வாழ்வில் குறுக்கே நில்லாமல் வழி விலகி விட்டாள்தான்.

ஆனால், அதன் பலனாக, பானுரேகாவும் செல்வமும் மணந்து இணைந்து சுகமாக வாழ்ந்தால் அல்லவா, பிரச்சினை முடிவுக்கு வந்து, அவளுக்கு நிம்மதி கிடைக்கும்?

பானு இன்னும் திரும்பியே வராதபோது, செய்தது எல்லாம் முக்கால் கிணறு தாண்டிய நிலைதானே? இதில் திருப்தி எங்கிருந்து வரும்?

காரணம் கண்டுபிடித்துவிட்டது ஓரளவு அமைதியைத் தந்த போதும், தங்கையின் வரவுக்காகக் காத்திருப்பதும், உதயாவின் பொறுமையை ரொம்பவே சோதித்தது.

பாவம்! செல்வம் எப்படித் தவிக்கிறானோ?

இப்படி ஒரு சிறு தகவல் கூடத் தராமல் பானு இருப்பது, கொஞ்சமும் நியாயம் இல்லை.

அவன் இப்படித் தவித்துக் கொண்டு இருக்கும்போது, சிறு கவலைகூட இல்லாதவன் போல யோகேந்திரன் உற்சாகமாக இருப்பதைப் பார்க்கும்போது, அவளுக்கு எரிச்சலாக இருந்தது.

ஆனால், அவனுக்கு உற்சாகத்துக்கு என்ன குறை?

அவன் விரும்பியது போல, நீதாவோடு திருமணத்தைத் தவிர்த்துவிட்டான். எந்தப் பெண்ணிடமும் மாட்டிக் கொள்ளாமல், இது வெறும் பெயரளவுத் திருமணம். என்றைக்கு வேண்டுமானாலும், இது உண்மைத் திருமணமே அல்ல என்று, இந்தப் பிணைப்பிலிருந்தும் அவன் இலகுவாக வெளியேறி விட முடியும்.

அவனுக்கு மட்டும் நினைத்ததெல்லாம் நடக்கிறதே என்று பொறாமையோடு நினைத்தாள் உதயா.

இப்படி பொறாமைக்கும் பொறுமையின்மைக்கும் இடையே உதயா தத்தளித்துக் கொண்டிருந்தபோது திடுமென ஒரு நாள் ரேவதியிடமிருந்து உதயாவுக்குப் ஃபோன் வந்தது.

பானுரேகா தாயகம் திரும்பி வந்துவிட்டாளாம். உதயாவின்



திருமணம் பற்றித் தெரிந்ததும், அவளை உடனே பார்க்க வேண்டும் என்கிறாளாம்.

"செல்வத்திடம் சொல்லிவிட்டீர்களா, அம்மா?" என்று கேட்டாள் மகள்.

அதுவல்லவா முக்கியம்!

சற்றுத் தயங்கி, "அதை அப்புறம் பேசுவோம், உதிம்மா. இப்போது... கல்யாண ஆல்பத்தைப் பார்த்ததில் இருந்து, அவள் உன்னைத்தான் உடனே பார்த்தாக வேண்டும் என்கிறாள்" என்றாள் அன்னை சலிப்பாக.

பானு பிடிவாதம் பிடித்திருக்கிறாள்.

"யோகனிடம் பேசிவிட்டுச் சொல்கிறேன் அம்மா." என்று செல்லை வைத்தாள் பெண்.

தங்கைக்குத்தான் அவளிடம் எவ்வளவு அன்பு என்று உதயாவின் உள்ளம் பூரித்தது!

யோகேந்திரனிடம் சொன்னபோது, "நல்லது" என்றான் அவன் சுருக்கமாக.

அவள் யோசனையாகப் பார்க்கவும், "ராஜபாட்டை போட்டாயிற்று என்று தெரிவித்தாயிற்றா?" என்று கேட்டான்.

இதை எப்படி எடுத்துக் கொள்வது என்பது புரியாமல், "திருமணம் பற்றித் தெரியும். தெரிந்ததும், என்னைப் பார்க்க வேண்டும் என்கிறாளாம்." என்று சிறு பெருமையுடன் பதிலுறுத்தாள் மனைவி.

"மாலையில் வீட்டுக்குச் செல்லும்போது, போய் பார்த்துவிட்டுப் போகலாம்" என்றான் அவன்.

"அவள் உடனே என்னைப் பார்க்க வேண்டும் என்கிறாளாம்" என்று மீண்டும் பெருமிதத்துடனேயே தெரிவித்தாள் உதயா.

தங்கையின் பாசம் பற்றியும் அவனுக்குத் தெரியவேண்டும்தானே?

அவன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

அவனைத் தொடர்ந்து அவளும் மணியைப் பார்த்தாள், அப்போதே நாலு மணிக்கு மேல் ஆகியிருந்தது.

பானு விமானத்தில் வரக்கூடிய நேரம் என்று அவன் பார்த்து வைத்திருந்தது, மதியம் சுமார் ஒரு மணி என்று. வெளி நாட்டுப் பயணத்திற்காகச் சோதனைக்கு நேரம் ஒதுக்கியும்தான் அப்படி.

இப்போது தங்கை வந்துவிட்டாள் என்று தாயார் சொன்னது, உதயா மனதில் அந்த நேரம்தான் தோன்றியது.

ஆனால், கிட்டத்தட்ட நாலரை ஆகிறது என்றால், விமானம் தாமதமாக வந்திருக்கும் போல.

யோகேந்திரன் எதுவும் சொல்லும் முன்பு அவளாகவே "சாரி, நேரத்தைக் கவனிக்கவில்லை நீங்கள் சொல்வது போல, அலுவலக நேரம் முடிந்து கிளம்பிப் போகலாம். அம்மாவிடம் சொல்லி விடுகிறேன்" என்றாள் சற்று இறங்கிய குரலில்.

குரலைக் கவனியாதவன் போல, "செய்மா!" என்றான் அவன், இயல்பாக.

தொடர்ந்து "உதயா, இதுவரை பீட்ரோவுக்குக் கொடுத்திருக்கும் 'கமிஷன்' பற்றித் தேதி வாரியாக ஒரு 'லிஸ்ட்' தயார் பண்ணிக் கொண்டு வருகிறாயா? பீட்ரோவின் அலுவலகத்திலிருந்து வந்திருப்பதோடு ஒத்துப் பார்க்க வேண்டும். கொஞ்சம் குறைத்து எழுதியிருப்பது போலத் தெரிகிறது. இவர்களிடம் பண விஷயத்தில் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்." என்று யோகேந்திரன் கூற, உள்ளூர நன்றியுடன், அவன் கேட்ட பணியில் உதயா ஈடுபட்டாள்.

அவளது குன்றலை மறக்கடிப்பதற்காக இடப்பட்ட பணி.

மணமான இந்த இரு வாரங்களில், இதுபோன்ற பல சம்பவங்களைப் பார்த்துவிட்ட உதயாவுக்கு, நெஞ்சு விம்மிதமுற்றது.

ஏதேதோ காரணங்களுக்காக, அவர்கள் திருமணம் நடந்திருக்கலாம். ஆனால், அவளுடைய கணவன் ஒரு ரத்தினம். அவளை வருத்தப்பட விட மாட்டான்!

அலுவலகம் முடிகிற நேரத்திலேயே, யோகேந்திரனும் எழுந்துவிட்டான்.

கடைப் பழங்களை வைத்துவிட்டு டிரைவர் செல்ல, "வாருங்கள் மாப்பிள்ளை" என்று ரேவதி வரவேற்கையிலேயே, அக்கம்பக்கத்துச் சிறுவர் சிறுமியர், "அக்கா... அண்ணா" என்று ஓடி வந்தனர்.

"அக்கா.. அண்ணா எல்லாம் அப்புறம்! அவர்கள், என்னைப் பார்க்க வந்திருக்கிறார்கள். தொல்லை பண்ணாமல் ஓடுங்கள்!" என்றாள் பானுரேகா.

"இருங்கம்மா..." என்று உள்ளிருந்து, திருமணத்தின்போது மிச்சமான தாம்பூலப் பைகள் சிலதை எடுத்து வந்து, உதயாவும் உதவி பண்ண, பைகளில் கொஞ்சம் பழங்களைப் போட்டுக் கொடுத்து, அவர்களை அனுப்பி வைத்தாள் ரேவதி.

"தாங்க் யூ ஆன்ட்டி" என்று அவர்கள் முக மலர்ச்சியுடன் ஓடுவதைப் புன்னகையோடு பார்த்தவாறே திரும்பினால், சின்ன மகளின் பார்வையில் கண்டனம் தெரிந்தது.

சங்கடத்துடன் "மாப்பிள்ளை எப்போதுமே.. அந்தப் பிள்ளைகளுக்குப் பழம்.." என்று தாயார் தடுமாறுகையிலேயே,



"ஹலோ புது மாப்பிள்ளை!" என்று பளீரென்ற புன்னகையோடு, யோகேந்திரனின் கையைப் பற்றிக் குலுக்கினாள் பானுரேகா.

"ஹலோ" என்று அவனும் முறுவலிக்க, பிடித்த கையை விடாமலே, "இவ்வளவு உயரம் இருக்கிறீர்கள். நானே சற்று விழி உயர்த்திப் பார்க்க வேண்டியிருக்கிறது. என் அக்கா உங்கள் பக்கத்தில்... ஏன் உதி, இப்போதெல்லாம் 'ஹீல்ஸ்' செருப்பைக் கழற்றுவதே இல்லையோ?" என்று கிண்கிணியாகச் சிரித்தாள் பானுரேகா. "இல்லாவிட்டால், அண்ணாந்து பார்த்தே, உனக்குக் கழுத்து வலி வந்துவிடும்" என்று மேலும் நகைத்தாள்!

இந்த வேடிக்கைப் பேச்சில் கலந்துகொண்டு, கூடச் சேர்ந்து சிரிக்க முடியாமல் உதயாவின் தொண்டையில் ஏதோ அடைத்தது.

யோகேந்திரனின் உயரத்துக்கு அவள் பொருத்தமில்லை. அதிகக் குள்ளம் என்கிறாளா?

பானுவுக்கும் அவளுக்கும் மிஞ்சி மிஞ்சி இரண்டு சென்டி மீட்டர்தானே வித்தியாசம்?

அத்தோடு, அப்படி ஒன்று அவள் கழுத்தைப் பின்னே அதிகம் வளைத்துக் கஷ்டப்பட்டுப் பார்க்கும் படியும் இல்லை!

ஆனால், இதையெல்லாம் எடுத்துச் சொன்னால், சாதாரணப் பேச்சைத் தப்பாக எடுத்துக் கொண்டு சச்சரவு கிளப்புவது போல் இருக்கும்!

அதுவும், சொன்னவள் கள்ளமின்றி, வேடிக்கையாகப் பேசும்போது....

பதில் சொல்ல முடியாமல் உதயா வாயடைத்து நின்றபோது, "உதி ஒன்றும் குள்ளம் இல்லையாதே, பானுரேகா. அத்தோடு ஒரு பெண் என்ன உயரம் இருந்தாலும் பரவாயில்லை. கணவனின் இதயத்தைத் தொடும் உயரம் இருப்பதுதான் முக்கியம் என்று படித்திருக்கிறேன். அந்த வகையில், உதி எனக்கு அதி பொருத்தம்!" என்றான் யோகேந்திரன் புன்னகையோடு.

அந்த விநாடியில், கணவனைக் கட்டி அணைத்துக் கொள்ள வேண்டும் போல உள்ளூரத் துடித்தாள், உதயா ஒவ்வொர் அணுவும்!

இதுவே மேலை நாடுகளாக இருந்தால், செய்து இருக்கலாம்.

அத்தோடு, அவன் சொன்ன அதி பொருத்தமும் நிஜமாகவே இருந்திருந்தால்... என்று ஏக்கமும் வந்தது.

"அடேயப்பா! மனைவிக்காகப் பெரிதாக வக்காலத்து வாங்குகிறீர்களே! அவள் அதிருஷ்டக்காரிதான் போல. ஆனால், உங்கள் அதிருஷ்டம் எப்படி, இந்திரன்? உங்களோடு ஆறு மாதம் பழகியும்,

இப்போதுதான் காதல் என்று சொல்லத் தோன்றியிருக்கிறது? இங்கே, பக்கத்தில் அதிக அழகான முகம் ஒன்று அவளைத் தடுத்துக் கொண்டே இருந்திருக்கும் என்று தோன்றுகிறது. என்னக்கா, அப்படித்தானே?" என்று குறும்புக் கண்களில் ஆர்வப் பளபளப்போடு கேட்டாள் பானுரேகா.

இன்னமும் அதிக அழகான முகம்!

திகைத்து விழித்தாள் உதயரேகா.



# இந்த மனம் எந்தன் சொந்தம் 13

முன்பு செல்வத்திடம் பானு சொன்னதாக அவன் கூறிய அதே வார்த்தைகள்.

இப்போது ஏன் சொல்கிறாள்?

உதயா திகைத்து பார்க்கும்போதே, "அழகு என்பதைவிட இதுதான் உண்மையான ஆண்மையுள்ள முகமாக எனக்குத் தெரிகிறது. பெரிய நெற்றி.. நேர் மூக்கு.. அழுத்தமான கன்னத்து எலும்புகள்.. உறுதியான தாடை... செதுக்கியது போல உதடுகள்....." என்று யோகேந்திரனின் முகத்தைத் தொட்டு தடவியவாறே சொன்னாள் மற்றவள்.

கடைசியாக "இந்த உதடுகளில் முத்தமிடப்படக் கொடுத்து வைக்க வேண்டும்!" என்று பானுரேகா எம்பவும், உதயாவின் தலை விண்விண்ணென்று தெறித்தது!

இவன் ஏன் இத்தனைக்கும் விட்டுக் கொடுத்துக்கொண்டு அசையாமல் நிற்கிறான் என்று அவள் தவிக்கும்போதே, யோகேந்திரனின் தலை வாயிற்புறம் திரும்ப, "ஹல்லோ கிருட்டி..... என்ன தனியாக நிற்கிறாய்? இன்று விளையாட யாரும் வரவில்லையா?" என்று கேட்டபடி கதவோரம் வந்து நின்ற சிறுமியை நோக்கி நடந்தான் அவன்.

தடைப்பட்டிருந்த உதயாவின் மூக்க நேராக, "எனக்கு மட்டும் பழமே.. தரலை அந்த குண்டு கிரேப் கொடுத்திங்கன்னு சௌந்தரியா சொல்கிறா.... ஆனா, வந்து கேட்கக்கூடாதுன்னு அம்மா சொல்கிறா...." என்று உதடு பிதுக்க மழலையில் கூறியது குழந்தை.

மற்ற சிறுவர் சிறுமியர் வந்தபோது, இந்த கிரி வரவில்லை என்பது நினைவு வர, "உனக்கு இல்லாததா, செல்லம்? நீ அப்போது வரவையே என்று, உனக்கு வீட்டுக்கு வந்து தரலாம் என்று எடுத்து வைத்தேன். அதைக் கொண்டு வந்து தரட்டுமா?" என்று கணவனைக் குறிப்பாக பார்த்துவிட்டு, உள்ளே சென்றாள் உதயா.

உதயாவோடு உள்ளே ஓட இருந்த சிறுமியைத் தடுத்து நிறுத்தி



யோகேந்திரன் கொஞ்சிப் பேசிக் கொண்டிருக்க, உதயா உள்ளே சென்று அவசரமாகப் பையில் பழங்களை எடுத்து வைத்தாள்.

ஹாலை எட்டிப் பார்த்துவிட்டு, "செல்வத்தை பற்றிப் பேசவே விடமாட்டேன் என்கிறாளம்மா, உன் தங்கை. திருமணம், அவளது சொந்த விஷயமாம். அதில் தலையிட யாருக்கும் உரிமை இல்லையாம். இந்தப் பாடாவதிச் சென்னையில் அவள் முடங்கப் போவது இல்லையாம். என்னென்னவோ சொல்லுகிறாள்!" என்று இளைய மகளைப் பற்றிப் புகார் படித்தாள் ரேவதி.

டெலிஃபோனில் செல்வம் பற்றியும், அப்புறம் பேசுவோம் என்று தாய் சொன்னதன் காரணம், உதயாவுக்குப் இப்போது புரிந்தது.

தங்கையைப் பற்றியும் மனம் தெளிய, "உள்ளம் வளர்கிற நாளில், வெளிநாட்டில் தனியாக இருந்தவள் அல்லவா? அந்தக் கலாச்சாரம் படிந்து போயிருக்கிறது. அவளிடம் நான் பேசுகிறேன் அம்மா" என்று தாயைச் சமாதானப்படுத்தினாள் பெண்!

பானுவிடம் தனியாகப் பேச வாய்ப்பைப் பற்றி யோசித்தவாறே வெளியே சென்று, கிரியிடம் பழப் பையைக் கொடுத்து, "அண்ணா கூப்பிட்டு, அக்கா கொடுத்தாள் என்று அம்மாவிடம் சொல்லுடா கிரி செல்லம்!" என்று கூறி அனுப்பி வைத்தாள்.

"என்ன? எல்லாம் காலியா? அல்லது, அய்யோ பாவம் கூடப் பிறந்தவள் எனக்கும் ஏதேனும் மிச்சம் வைத்திருக்கிறாயா?" என்று இண்டல் போலக் குறைப்பட்டாள் பானுரேகா.

தன்னந்தனியே கிடந்தவளுக்கு, இப்படியெல்லாம் யார் பரிவுக் காட்டி வாங்கிக் கொடுத்திருப்பார்கள்? அவளாகப் போய் வாங்கினால்தானே உண்டு? தானே சம்பாதித்து, தானே வாங்கி... பாவம் என்று எண்ணினாள் உதயா.

"எல்லாப் பழமும் நிறைய இருக்கிறது, பானு. போதாது என்றால், ஒருநாள் எங்கள் வீட்டுக்கு வாயேன். திரும்பி வரும்போது, இதே போல வாங்கிக் கொடுக்கும்படி, டிரைவரிடம் சொல்லி அனுப்புகிறேன்" என்றான் அவன்.

பழத்தை விட்டு, "அப்பாடி, ஒரு வழியாக வீட்டுக்குக் கூப்பிட்டு விட்டாய். கூப்பிடுவாய், கூப்பிடுவாய் என்று காத்திருந்து, வரச் சொல்லவே மாட்டாயோ என்று கூட எண்ணிவிட்டேன் தெரியுமா? அது போகட்டும். இப்போதுதான் கூப்பிட்டு விட்டாயே. என்றைக்கு வரட்டும்? நாளைக்கா? நாளன்றா?" என்று, சிறு குழந்தைப் போலக் கை கொட்டி, ஆர்வத்துடன் அவசரப்பட்டாள் பானு.

'கடவுளே சீக்கிரம்'

"நாளைக்கே கூப்பிடட்டுமா?" என்று கணவனைக் கேட்டாள் உதயா.

"என்ன? இதற்கெல்லாம் கூட, இந்தரைக் கேட்க வேண்டுமா?" என்று சற்றே இளக்காரமாகக் கேட்டாள் பானு.

"அதற்காக இல்லை நான் விடுமுறை எடுக்க வேண்டியிருக்கும் அல்லவா?" என்றாள் உதயா.

"முதலாளியிடம் விடுமுறை கேட்கிறார்கள், முதலாளியம்மா!" என்று கிண்டலடித்தான் யோகேந்திரன்.

தட்டில் சூடான பணியாரம், வடையுடன், புதிதாக எடுத்த பழச்சாறு நிறைந்த கண்ணாடி தம்ளரையும் வைத்துக் கொணர்ந்து மருமகன் முன்பு வைத்தாள் ரேவதி.

"அடடா! எனக்காக, உங்களுக்கு இவ்வளவு வேலையாகி விட்டதே. அத்தை. வெறும் பழச்சாறே போதுமே!" என்றான் யோகேந்திரன்.

"சாப்பிடுங்கள் மாப்பிள்ளை. நீங்கள் என்ன தினமுமா வருகிறீர்கள்? அத்தோடு எங்கள் மருமகன். இது கூடச் செய்யாமல் எப்படி? சாப்பிடுங்கள். உதி, உனக்கும் செய்திருக்கிறேன். கண்ணு, உனக்கும்தான் பானு. இரண்டு பேரும் போய், அவரவருக்கு எவ்வளவு வேண்டுமோ, எடுத்து வந்து விடுங்கள்" என்றாள் ரேவதி.

பெண்கள் இருவரும் உள்ளே சமையலறைக்குச் சென்றதும், "மாப்பிள்ளை, என் பெண்களில் ஒருத்திக்கு நம் கலாச்சாரமே தெரியவில்லை. இன்னொருத்திக்கு தங்கையிடம் மிகுந்த பாசம். இரண்டு பேரையும் புரிந்து பார்த்துக் கொள்ளுங்கள், மாப்பிள்ளை!" என்று கெஞ்சும் குரலில் அவசரமாகப் பேசினாள்.

"இதை நீங்கள் என்னிடம் கேட்க வேண்டுமா, அத்தை! என்னையும் ஒரு மகனாக நினையுங்கள்!" என்று முறுவலித்தான் மருமகன்.

தலையசைக்க, மாமியார் முகத்திலும் புன்னகை மலர்ந்தது.

"என்ன சொன்னாலும் புரியாமல், என்னைப் பலகாரமாகவே செய்வதை பார். கூடக் கொஞ்ச நாள் இருந்தால், என் உடைகள் ஒன்றைக் கூட போட முடியாது!" என்ற குரலைத் தொடர்ந்து, பெண்கள் இருவரும் வரவேற்பறைக்கு வந்து சேர்ந்தனர்.

பானுவின் தட்டில் குவியலாக இருந்த பணியாரத்தைப் பார்த்துவிட்டு, முறுவலோடு "நீங்கள் சாப்பிடுங்கள் மாப்பிள்ளை!" என்று, மருமகனை ரேவதி உபசரித்தாள்.

மறுநாள் உதயா விடுமுறை எடுப்பதாகவும், பானுவுக்குக் கார் அனுப்பி அழைத்துக் கொள்வதாகவும் முடிவாயிற்று.

"உனக்குக் கொஞ்சம் பூண்டு குழம்பு செய்து கொண்டு வரவா, உதி?" என்று ரேவதி கேட்க, "அம்மா உதயா அழைத்திருப்பது என்னை மட்டும்தான். நீங்கள் வேறு ஒட்டிக் கொள்ள வேண்டாம்!" என்றாள் பானு சற்றுக் கடுமையான குரலில்.

"சரிம்மா, நீங்கள் அக்காவும் தங்கையுமாகவே கொஞ்சுங்கள், நான்



குறுக்கே வரவில்லை!" என்று விளையாட்டுப் போலப் பேசினாலும் தாயின் கண்களில் வலியைக் கண்டுகொண்ட உதயா, கிளம்புமுன், அன்னையிடம் தனியே பேசினாள்.

"பானு தனியே வந்தால்தானே அம்மா, நானும் அவளிடம் வெளிப்படையாக எல்லாவற்றையும் கேட்க முடியும்? அதனால், அவள் தனியாகவே வரட்டும்மா!" என்று பரிவான குரலில் பெரிய மகள் கூறவும், ரேவதியும் சமாதானம் ஆகிவிட்டாள்.

"அதுவும் சரிதாம்மா! சின்ன வயதிலேயே பானு கொஞ்சம் முரடுதான் என்றாலும், இப்போதெல்லாம் அவளிடம் பேசவே என்னால் முடியவில்லை. ஆனால், கண்ணு..." என்ற தாய் மேலே பேச முடியாமல் சற்றுத் திகைத்தாள்.

"என்னம்மா?"

ஒன்றுமில்லை என்பது போலத் தலையசைத்துவிட்டு "நீ... நீ வந்து உன்னையும் பார்த்துக்கொள். அப்புறம் பூண்டுக் குழம்பு செய்து, பானுவிடம் கொடுத்தனுப்புகிறேன்" என்று முடித்தாள் தாய்.

உன்னையும் பார்த்துக் கொள் என்றால்?

தாயார் என்ன சொல்ல முயன்றாள்?

"அங்கேயும் இங்கேயுமாக எனக்கு இன்னமும் பகல், இரவு சரியாகப் பழகவில்லை. அதனால், தாமதமாகத்தான் விழித்து எழ முடிகிறது. அப்புறம் கிளம்பி வரத் தாமதம் ஆகும்?" என்று பானு சொல்லியிருந்தது போல, மறுநாள் மதிய உணவு நேரத்துக்குத்துதான் அவளை அழைத்து வருவதற்காகக் கார் அனுப்பப் பட்டது.

வந்ததும், "பசி... பசி" என்று உணவை முடித்துக் கொண்டாள்.

நன்றாகச் சாப்பிட்டு விட்டு, "வீட்டோடு இருக்கும் சமையல்காரியா? சுவை பரவாயில்லை. நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், இவளுக்கு அங்கே உள்ள மாதிரி உணவெல்லாம் செய்யத் தெரியாதா?" என்று கேட்டாள்.

"தெரியாது... இதெல்லாம் நன்றாகச் செய்வார்கள் என்று அத்தை சொல்லியிருக்கிறார்கள்" என்றாள் உதயா.

"இதை செய்தால், அதுவும் வரும். கற்றுக் கொள்ளச் சொல்லு... தேவைப்படும்!" என்றாள் தங்கை, பேச்சுவாக்கில் சொல்வது போல!

"எ...எதற்கு தேவைப்படும்?" என்று தமக்கைப் புரியாமல் கேட்க, "எனக்குச் செய்ய வேண்டும் என்றுதான். மக்கு மாதிரி... என்று கேள்வியெல்லாம் கேட்கிறாய்!" என்று எரிச்சல்பட்டாள் பானு.

இப்போதும், உதயாவுக்குப் புரியவில்லைதான். எத்தனை ஆண்டுகளுக்கோ ஒரு முறை வருகிறவளுக்காகத் தனிச் சமையல் படிக்கச் சொல்வார்களா? ஆனால், இன்னொரு மக்குப் பட்டம் வாங்க

மனமில்லாமல், ஒன்றும் சொல்லாமல் சும்மாவே இருந்துவிட்டாள். கூடவே தங்கையின் மனநிலையை நல்லபடியாக வைத்துக் கொள்ளவும் ஆசை!

அன்னைக்கு வாக்குக் கொடுத்தபடி அவளிடம் முக்கியமான விஷயம் பேச வேண்டியிருக்கிறதே.

ஆனால், "வாயேன் பானு என் அறைக்குப் போகலாம். உன்னுடன் நிறையப் பேச வேண்டும்" என்று அவளை உதயா அழைத்தபோது, "முதலில் வீட்டைச் சுற்றிக் காட்டு" என்றாள் தங்கை.

உதயா பார்த்து ரசித்த கலை பொருட்கள், பானுவையும் பிரமிக்க வைத்தன. "இதெல்லாம் இவ்வளவு செலவு செய்திருக்கிறார்களே" என்று ஆச்சரியப்பட்டாள் அவள். "பெரிய பணக்காரர்கள் என்று அம்மா சொன்னார்கள்!"

"ஆமாம்" என்று பதில் சொல்லி, தன் முதல் தவறை, உதயா அப்போது செய்தாள்.

அது மட்டுமின்றி, இப்போது பத்திரிகையில் வந்துவிட்ட செய்தி என்பதால் இத்தாலிய நிறுவனத்தோடு இணைப்பு பற்றியும், இவர்களுக்கே வெளிநாடுகளில் இருக்கும் கிளைகள் பற்றியும் மகிழ்ச்சியோடு தெரிவித்தாள்.

"ஓ" என்ற பானு, யோகேந்திரனின் அறையைப் பார்க்க வேண்டும் என்றாள். "இந்த மாதிரிப் பணக்காரர்கள், அவர்களது அலுவல் பற்றி, அறையிலும் ஏதாவது வைத்திருப்பார்கள். பார்க்கலாம் வா!" என்று ஆவலோடு தமக்கையை அழைத்தாள்.

"சேச்சே! யோகன் இல்லாதபோது, அவர் அறைக்குள் போய் நோண்டுவதா? நான் போவது கூடக் கிடையாது" என்று இன்னொரு தவறையும் உதயா செய்தாள்.

"போனதில்லையா?" என்று விழி சுருக்கித் தமக்கையைப் பார்த்தாள் பானு. "பரவாயில்லை, நானே போய்ப் பார்க்கிறேன். எது இந்தரின் அறை?" என்று கேட்டாள் அவள்.

கணவனை இந்தர் என்று அழைத்த இன்னொருத்தியின் நினைவு எரிச்சலூட்ட, "அவரை, யோகன், யோகேந்தர் என்று எப்படியாவது கூப்பிடேன் இந்த 'இந்தர்' நன்றாகவே இல்லை" என்று வெளிப்படையாகச் சொன்ன உதயா, கணவனின் அறைக்குள் சென்று பார்ப்பதற்குத் தங்கையை அனுமதிக்கவில்லை.

"அவரிடம் கேளாமல் போகக் கூடாதும்மா..." என்று மென்மையாக சொல்லி முடித்துவிட்டு "இனி நாம் செல்வத்தைப் பற்றிப் பேசுவோம்!" என்று தொடங்கினாள்.



வெற்றாய் நோக்கி, "யாரது செல்வம்?" என்று அவள் கேட்கவும் உதயாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது!

சற்றுத் திகைத்துவிட்டு "ஏய், பானு, என்னடி விளையாட்டு? நிஜத்தைச் சொல்லு உனக்கு செல்வத்தைத் தெரியாது? போன முறை முழுக்க அவரோடு சுற்றிவிட்டு" என்ற தமக்கையைப் பானு இடைமறித்து, "இப்போது நினைவு வருகிறது!" என்றாள்.

மற்றவள் புன்னகையோடு பார்க்க, பானு பேசினாள்.

"அந்த செல்வம் உன் ஆள் இல்லை? அம்மாவுடைய பிளேனிங். அந்தப் பாக்கியம் ஆன்ட்டியுடைய மகன். காதலர், மணக்கப் போகிறவர் என்று அவரோடு சுற்றிவிட்டு 'டக்'கென்று அவரைக் கழற்றி விட்டுவிட்டு, இந்தரை மணந்து கொண்டாயே. பரிதாபத்துக்குரிய அந்த ஆள்தானே?" என்று பானுரேகா கேட்க, உதயா அதிர்ந்து போனாள்.

கீழே தள்ளியதோடு, குழியையும் பறித்த கதையாக, "இந்தரின் பணத்தைக் கண்டதும் மனதை மாற்றிக் கொண்டாயா, அக்கா?" என்று வேறு, பானு கேட்டாள்.

மறுபடியும் திகைத்துப் போன தமக்கைக்கு, தங்கையின் இந்தப் பேச்சு இங்குள்ள யார் காதிலாவது விழுந்தால் என்ன நினைப்பார்கள் என்று விதிர்விதிர்த்துப் போயிற்று.

"சின்னம்மா!" என்று பணிவோடு அழைப்பவர்களின் மரியாதை பறந்து போய்விடாதா?

அவசரமாகச் சுற்றுமுற்றும் பார்த்தவள், "சே என்ன பேச்சு இது, பானு? முதலில் என் அறைக்குள் வா.." என்று உள்ளே இழுத்துச் சென்று கதவைச் சாத்தினாள்.

"பானு, என்ன விளையாட்டு இது? சென்ற முறை வந்திருந்தபோது, உன் வேலைக்காக செல்வம் உன்னை எல்லா மெகா கடைகளுக்கும் கூட்டிப் போகவில்லை? அப்போது அவரை..."

"ஆமாம்... அவரை என் தலையில் கட்டிவிட்டு, நீ இந்தரைக் கணக்கு பண்ணினாய் போல... பலே ஆள்தான் நீ... அம்மா என்னவோ, நீ வாயில் விரலைக் கொடுத்தால் கடிக்கத் தெரியாத பச்சைப் பிள்ளை என்று சொல்கிறார்கள். யம்மாடியோவ்!" என்றவள், உதயாவின் அறையைச் சுற்றிப் பார்க்கத் தொடங்கினாள்.

"வாவ்... உனக்கா இவ்வளவு வசதிகள்? எல்சிடி, ம்யூசிக் சிஸ்டம், ஏ.சி.... இதையெல்லாம் பயன்படுத்துகிறாயா? அல்லது, தொட்டுக் கும்பிடுவதோடு சரியா?"

கேலியா? அல்லது உதாசீனமா?

உதாசீனத்துக்குக் காரணமே இல்லையே!

பாவம்! இன்னும் கேலியுமாகப் பேச முயற்சிக்கிறவளைத் தப்பாக நினைக்கக் கூடாது.

ஆனால், இதில் செல்வம் பேச்சை விட்டுவிடக் கூடாது. அம்மாவிடம் சொல்லிவிட்டு வந்திருக்கிறாள்.

மீண்டும் பிடிவாதமாக, செல்வத்தின் பேச்சை எடுத்தாள் உதயா.

"பானு, செல்வம் உனக்காக ஏங்கிக் கொண்டு இருக்கிறார்..."

உதயாவின் அறையில் இருந்த மியூசிக் சிஸ்டத்தை நோண்டிக் கொண்டிருந்த பானு, அரைக் கவனமாகத்தான் பதில் சொன்னாள்.

"ஒரு பெண் அழகாக இருந்தால், எத்தனையோ அசடுகள் ஏங்கத்தான் செய்யும்கள்! அதற்கு நான் என்ன பண்ண முடியும்?" என்றாள் விட்டேற்றியாக.

"அவர் மட்டுமாக அப்படி இருக்கவில்லையே! நீயும்தானே, அவரோடு பழகினாய்...?"

"எனக்கு வேலை இருந்தது. அதில் உன் ஆள் எனக்கு உதவி செய்தார். அதற்காக கொஞ்சம் சகஜமாகப் பழகினேன். அத்தோடு, உனக்காகச் சிரித்தும் பேசினேன். விஷயம் அவ்வளவுதான். அத்தோடு முடித்தது. இதை வைத்துக் கொண்டு, ஏக்கம் கிக்கம் என்றால், நான் என்ன பண்ண முடியும்?"

தங்கை ஏன் இப்படிக் காதில் பூ சுற்றுவதிலேயே பிடிவாதமாக இருக்கிறாள் என்று உள்ளூர அலுத்துக் கொண்டாள் உதயா.

விளையாட்டு போதும் என்று முடிவு கட்டியவளாக, "செல்வம் மட்டுமில்லையே பானு, நீயும்தானே அவரோடு சுற்றினாய்?" என்று கேட்டாள் தமக்கை.

"அதுதான் வேலைக்காகப் போக வேண்டியிருந்தது என்று இப்போதுதானே, சொன்னேன்"

"சுற்றினாய் என்று நான் சொல்லியிருக்கக் கூடாது. நெருங்கிப் பழகினாய் என்றிருக்க வேண்டும்" என்றாள் உதயா.

"யார் சொன்னது? அவனா? நாலும் நான் சேர்ந்து போவதற்குள் 'ஜொள்ளு' என்று தொடங்கிவிட்டான். நான்தான் அவன் உலகமாம். அதெல்லாம் முடியாதுப்பா... என் அக்காவுக்கு துரோகம் பண்ண என்னால் முடியாது என்னை மறந்து விடு என்று அவனுக்குப் புத்தி சொன்னேன். உனக்கு வேறு மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் செய்து வைப்பதாகக் கூட, அவன் சொன்னான். அதெல்லாம் நடக்காது. நீயே மாப்பிள்ளை பார்த்தால், உதயாவைத் தப்பாக நினைப்பார்கள். அதனால், அவனையே மணந்து கொள் என்றுகூட, எடுத்துச் சொல்லி விட்டுத்தான் நான் சிங்கப்பூருக்குக் கிளம்பினேன். அதற்குப் பிறகுமா, அந்த அசடு



என்னை நினைத்துக் கொண்டிருக்கிறது? என்ன மடத்தனம்?" என்று ஓரக் கண்ணால் தமக்கையைப் பார்த்தபடி அலுப்பும் சலிப்புமாக கூறினாள் உதயரேகா.

ஒரு கணம் உதயா பிரமித்துப் போனாள்.

அவளது காது கேட்கச் சொன்னதுதான். சொல்லப்பட்டதும் இவ்வளவுதான்.

செல்வத்துக்குப் புத்தி கூறியதாக அல்லவோ சொல்கிறாள். அதைப் போய் உதயாதான் தப்பாக எண்ணி விட்டாளா?

சேச்சே! என்ன முட்டாள்த்... இல்லை... அது மட்டும் அல்லவே உதயா. அவளது கண்ணாலேயே பார்க்கவில்லையா?

இப்போது, செல்வத்தின் மேல் ஏதோ கோபத்தில், பானுரேகா இப்படியெல்லாம் கூறுகிறாள். அவ்வளவே.

மற்றபடி, பானு காதலிப்பது செல்வத்தைதான். ஏனோ உதயாவை முட்டாளடிக்கிறாள்.

வேறென்ன? அவளுக்குத் தெரியப்படுத்தாமலே, உதயா திருமணம் செய்த கோபம் ஒன்று இருக்கிறதே.

இந்தப் பாசம், என்னவெல்லாம் செய்கிறது!

"என்ன, இப்போது திருப்தி ஆயிற்றா? அந்த செல்வம் சரியான முட்டாள், உதயா. நல்லவேளை தப்பித்தாய்" என்றாள்.

"செல்வம் ஒன்றும் முட்டாளல்ல. நீதான் ஏனோ என்னை முட்டாளடிக்க முயற்சி செய்கிறாய். ஆனால் அது நடக்காது. நான் நேரிலேயே பார்த்தவளாக்கும்" என்று சிரித்தாள் உதயா.

"என்னப் பார்த்தாய்?"

தங்கை மாட்டிக் கொண்டாள் என்ற குதூகலத்தில், "என்னவோ? ஐஸ்கிரீம், அம்மா ஐஸ்கிரீம்! பூங்காவில் உட்கார்ந்து, ஐஸ்கிரீம் சாப்பிட்டதை. அப்புறம் செல்வத்தின் உதட்டிலிருந்து எடுத்து 'இது ரொம்ப ருசி' என்று சாப்பிட்டதை.. எல்லாம் நீ செய்துவிட்டு உனக்கு ஒன்றும் இல்லை செல்வத்துக்குத்தான் அசட்டு ஏக்கமாக்கும்? நல்ல கதைம்மா... "ஒரு வினாடி, என்னை குழப்பிவிட்டாயே!" என்று சிரித்தாள் உதயா.

தலைசரித்து தமக்கையைக் கூர்ந்து நோக்கினாள் பானுரேகா. "ஓகோ... இப்போது அல்லவா, இந்த அவசரக் கல்யாணத்தின் அடிப்படை புரிகிறது! நானும் செல்வமும் காதலிப்பதாக நினைத்து, எங்களுக்காக உன் வாழ்வைத் தியாகம் செய்து, இந்த யோகேந்திரனைத் திருமணம் செய்தாயா? ச்சச்ச... மனதில் ஒருவனை வைத்துக் கொண்டு, பிடிக்காத ஒருவனோடு வேண்டா வெறுப்பாக வாழ்ந்துகொண்டு...

என்ன வேதனை... எப்பேர்ப்பட்ட தியாகம். எனக்காக உன் வாழ்வையே அழித்துக் கொண்டுவிட்டாயே அக்கா...!" என்று ஓடி வந்து உதயாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டாள்.

உதயாவே திட்டத்திட்ட இந்த வார்த்தையைச் சொன்னவள்தான்.

ஆனால், அதைத் தொடர்ந்து யோகேந்திரன் தீனக் குரலில் பேசிக் கெஞ்சல் செய்ததை நினைக்கையில் இப்போதும் சிரிப்பு வந்தது.

அவளது வாழ்வு முழுமையானதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், யோகேந்திரனைப் போலக் கணவன் யாருக்குக் கிடைப்பான்?

தங்கை அழுதுகொண்டு அணைத்திருப்பது பொருத்தமற்றுத் தோன்ற, தன்னை விடுவித்தபடி, "நீ நினைக்கிற மாதிரி இல்லை, பானு..." என்று அவள் தேறுதலாகக் கூறும்போது, பானுவும் விலகி, "ஆனால், இந்த நிலை நீடிக்கவிட மாட்டேன், அக்கா. நீ செய்த தியாகம் நான் செய்ய மாட்டேனா? முதலில் உன்னை இந்தச் சிறையிலிருந்து விடுவிக்கிறேன். அப்புறம்..." என்று குமுறைப்பது போல வீரமாகப் பேசலானாள்.

அன்பால் வந்த பேச்சுதான்....

ஆனால், உதயாவுக்கு மேலும் சிரிப்புதான் வந்தது. "ஏய் அசடு, சிறையாவது, இன்னொன்றாவது? நான் நன்றாகத்தான் இருக்கிறேன். 'காட், பிராமிஸ்!' இதில் மாற்றம் எதுவும் தேவையே கிடையாது! இனிமேல் பார்க்க வேண்டியது, உன் விஷயம் மட்டும்தான். பேசாமல் ஆன்ட்டி, அம்மாவின் ஆசைப்படி, செல்வத்தை திருமணம் செய்து கொள். எனக்கு அது போதும், புரிகிறதா?" என்று அன்பு அக்காவாகச் செல்லமாக அதட்டிச் சொன்னாள் உதயா.

தமக்கையை வெறித்துப் பார்த்தாள் பானுரேகா. மேலே அவள் பேசியபோது, அவளது குரலே மாறிவிட்டிருந்தது.

"நீ ரொம்பக் கெட்டிக்காரி, அக்கா. உனக்கு ஆறு தேசங்களில் பெரிய வியாபாரம் செய்யும் யோகேந்திரன் கணவனாக்கும்; எனக்கு வெறும் மாதச் சம்பளக்காரன் புருஷன்? சேச்சே, என்ன சுயநலம். என்னமோ, ஐஸ்கிரீம் சாப்பிட்டதைப் பார்த்துவிட்டானாம். அங்கே ஓர் இரவு முழுவதும் ஒன்றாக இருந்துவிட்டு, காதலிக்கவில்லை என்பார்கள்! ஒரு சொட்டு ஐஸ்கிரீமைத் தொட்டு வாயில் போட்டதற்காக, அவனைக் கட்டிக் கொள்ள வேண்டுமா? பட்டிக்காட்டு இந்தியா என்றால், சரியாகத்தான் தெரிகிறது. ஆனால் ஒன்று. நீயும் உன் ஜால்ராவாக அம்மாவும் நினைப்பது ஒருபோதும் நடக்காது! என் விஷயம் நான் நினைப்பது போலத்தான் நடக்கும். நினைவில் வைத்துக் கொள். இதற்குமேல் இங்கே இருந்து உன் அறுவையைத் தாங்குவதைவிட, நான்



ஓடியே போகிறேன்!" என்று கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றுவிட்டாள்.

செய்வதறியாமல், ஒன்றும் புரியாமல் திகைத்து விழித்தாள் உதயா.



## இந்த மனம் எந்தன் சொந்தம் 14

பானுரேகா என்ன சொன்னாள், அவளுக்கு என்ன கோபம் என்று, சற்று நேரம், உதயாவுக்கு ஒன்றுமே புரியவில்லைதான்.

அவள் பேசியது போல வேறுபாடாக, உதயா நினைக்கவே இல்லையே.

யோகேந்திரனை மணக்கும்போது கூட, அவனது செல்வநிலை பற்றி அவள் ஒரு முறைகூட எண்ணிப் பார்த்தது இல்லையே.

பானு, செல்வத்தின் வாழ்வுக்கு இடையூறாக இருக்கக் கூடாது என்று ஒன்று மட்டும்தானே, அவளது குறிக்கோளாக இருந்தது.

தங்கையின் நலம் கருதி அவள் செய்தது, கடைசியில் சுயநலமாகி விட்டதா?

தன் சுகம் பற்றி, நினைக்கவே இல்லாத அவள் சுயநலக்காரி!

சின்ன மகளின் வாழ்க்கையும் நல்லபடியாக அமைய வேண்டும் என்று விரும்பும் தாயார், உதயாவுக்கு ஜால்ரா!

யார், என்ன என்று இல்லாமல், சட்டென்று என்னவெல்லாம் பேசிவிட்டாள்!

அதுவும், எவ்வளவு இலகுவாகத் தன்னை மாற்றிக் கொள்கிறாள்.

இல்லையில்லை. யோகேந்திரனின் செல்வ நிலை பற்றி அறிந்ததும், ஏற்பட்ட ஒரு சிறு அதிர்ச்சி. அக்காவை விட அதிகம் கீழிறங்கி விடுவோமோ என்ற அச்சம்!

எப்போதுமே பானுவுக்கு முதல் இடத்தில் இருக்க வேண்டும். அப்படியே இருந்து பழக்கமும் கூட. அதனால் ஏற்பட்ட சஞ்சலத்தில் பேசியதைப் பெரிதாக எடுக்கக் கூடாது.

இப்போது பாக்கியம் ஆன்ட்டியின் திட்டம் அறிந்தால், அதன்படி செல்வமும் அவளோடு வெளிநாடு சென்று சம்பாதிக்கும்போது, அவர்களுக்கு நிறைய பணம் வரும் என்று புரிந்து முழுக்க மாறிவிடுவாள்.

என்ன இருந்தாலும், செல்வத்திடம் காதல் இருக்கும்போது... அவனோடு இவ்வளவு தூரம் நெருங்கிப் பழகிவிட்டு, நேசம் இல்லை என்று சொன்னதே சும்மா அந்த அதிர்ச்சியின் பலன்தான்.

தனக்குள் இப்படியெல்லாம் சொல்லிக் கொண்டாலும், தங்கையிடம் இது பற்றித் திரும்பப் பேச, உதயாவுக்குப் பயமாகத்தான் இருந்தது.

எப்படி, என்ன பேசுவது என்று புரியாமல் சற்று நேரம் உட்கார்ந்திருந்தாள் உதயா.

ஆனால், இப்படியே இருக்க முடியாதே.

எப்படியும், இன்று பானு அவள் வீட்டுக்கு விருந்தாளி.

மாலையில் அவளை வெளியே கூட்டிப்போய் ஏதாவது வாங்கிக் கொடுக்கலாம் என்று, கணவனையும் சற்று சீக்கிரமாக வருமாறு கேட்டிருந்தாள். அவனும் ஒத்துக் கொண்டிருந்தான்.

அப்படி அவன் வரும்போது வீட்டில் சுமுகமான சூழ்நிலை இருக்க வேண்டாமா என்றெண்ணி எழுந்து தங்கையைத் தேடிச் சென்றாள் உதயா.

ஒருவேளை, பின்னர் பானுவுக்கு எடுத்துச் சொல்லும்படிக் கணவனிடமே கேட்கலாம். அவன் ஒரு மாதிரி, ஒத்துக்கொள்ளும் படியாகப் பேசி விடுவான்.

அவன் பேச்சைக் கேட்டு, உதயா அவனைத் திருமணம் செய்து கொள்ளவில்லையா? அதேபோல, பானுவின் கல்யாணமும் நல்லபடியாக நடக்கும்!

ஏதேதோ திட்டமிட்டு, மனதில் நம்பிக்கையை வளர்த்துக் கொண்டு, தங்கையிடம் சென்றாள் உதயா.

நல்லவேளையாக, அவளும் இந்த மாதிரி யோசித்திருப்பாள் போல, பொதுவான விஷயங்களைப் பற்றி, இருவரும் சாதாரணமாக பேசிக் கொண்டிருந்தனர்.

யோகேந்திரன் வரும் வரை இது நடந்தது.

அவன் வருவதாகத் தகவல் வந்ததும், கைப்பையுடன் குளியலறைக்குள் சென்று பானுரேகா, வெளியே வந்தபோது, பளீரென்று டாலடித்தாள்!

"ஹலோ இந்தர் டியர்!" என்றபோது, அவளது புன்னகையும் பளீரென்றது.

'அப்பாடி' என்று உதயாவுக்கு நிம்மதியாக இருந்தது. யோகேந்திரனின் முன்னிலையில் பானு நல்லபடியாகத்தான் பழகப் போகிறாள்.

மூவரும் அமர்ந்து, சிற்றுண்டியோடு காபி அருந்தியபோது, பானுரேகா, யோகேந்திரனிடம் ஓர் உதவி கேட்டாள்.

"என் வேலை பற்றி, அக்கா உங்களிடம் சொல்லியிருக்கிறாளோ,



என்னவோ? அது தொடர்பாக எனக்கு உங்களால் உதவி செய்ய முடியுமா, இந்தர்? ப்ளீஸ்" என்றாள் கெஞ்சுதலாக.

சாதாரணமாக உறவினரிடம் உதவி கேட்பதுதான். ஆனால், என்னவோ, உதயாவின் நெஞ்சுக்குள் அபாய மணி அடித்தது.

அது எதனால் இருக்கும்?

அவள் யோசிக்கையில், "அதுதான் செல்வம் முன்பே, உன் வேலையில் வேண்டிய உதவி செய்தார் என்று கேள்விப்பட்டேனே" என்றான் யோகேந்திரன்.

அலட்சியமாக உச்சுக் கொட்டினாள் பானுரேகா. "அவர் என்னை, இங்குள்ள பெரிய 'ஷாப்பிங் மால்'களுக்குக் கூட்டிப் போனார். அங்கே போய், என்னவோ மெய்காப்பாளன் மாதிரி, பக்கத்திலேயே அசையாமல் நின்று என்னையே பார்த்துக் கொண்டு இருப்பார். நான் ரொம்ப அழகாக இருப்பது, எப்போதும் இது ஒரு தொல்லை எனக்கு. என் அழகைப் பார்ப்பது அவருக்கு ஆனந்தமாக இருக்கலாம்! ஆனால், எனக்கு என்ன லாபம், சொல்லுங்கள்? அவர் என் அழகை வர்ணிப்பதில், பாதி நேரம், என் வேலைதான் கெட்டுப் போகும். சும்மா.. எல்லா வாடிக்கையாளரும் போல, நானும் போனேன். அவர் செய்த உதவி அவ்வளவுதான்" என்றவள் எழுந்து, யோகேந்திரனின் அருகில் போய் அமர்ந்தாள்.

அவனது தோளைப் பற்றித் தன்புறம் திருப்பி, "பாருங்கள் இந்தர். நீங்கள் என்னோடு வந்தால், நேரே நிர்வாகிகளிடம் பேசலாம். உங்கள் பேரைச் சொன்னால், அவர்களும் மதிப்புக் கொடுத்து பேசுவார்கள். அப்படியே, அவரவர் வியாபார உத்திகளைத் தெரிந்து கொள்ளலாம். அது என் வேலைக்கு மிகவும் முக்கியம். அதற்காகத்தான் டியர், கேட்கிறேன்" என்று அவன் மீது பாதி சாய்ந்து, கொஞ்சும் குரலில் கேட்டாள்.

உடம்பு உரசும்படி, அவள் அசைந்து பேசிய விதத்தில், உதயாவினுள் தீப்பற்றியது.

இது என்ன அசிங்கப் பழக்கம் இவளுக்கு? முன்பு செல்வத்திடம் இப்படித்தான் செய்தாள்.

இன்றையப் பெண்களைப் பற்றி, யோகேந்திரன் மோசமாகச் சொல்வானே, அதற்கு பானுதான் உதாரணமா?

தங்கை மேல் உள்ள பாசத்தால், உதயாவுக்குத்தான், இதுவரை கண்கள் மூடியிருந்தனவா?

ஆனாலும் இவ்வளவு மட்டமாகிவிட்டாளே!

ஆனால், பெண்களைப் பற்றி அவ்வளவு வெறுப்பாக பேசிய இவன், யோகேந்திரன் ஏன், இப்படிச் சும்மா உட்கார்ந்து

கொண்டிருக்கிறான்?

செல்வத்தைப் போல, இவனுக்கும் இது சுகமாகவா இருக்கிறது?

ஆனால், விநாடிக்கு விநாடி, உதயாவின் காந்தல் அதிகரித்துக் கொண்டே போயிற்று.

இதற்குமேல் பொறுக்க முடியாது என்று தோன்றிவிடவும், கணவனை நோக்கி, "என்ன யோகன், நேரமாகி விட்டதே. கிளம்பவில்லை? உடை மாற்றிக் கொண்டு வாருங்கள். போகலாம்" என்று கூறி, அவனை எழுப்ப முயன்றாள்.

ஆனால், தொத்தும் கிளியாக அவன் தோளைப் பற்றியிருந்தவள், "எங்கே கிளம்ப வேண்டும்?" என்று தமக்கையை அலட்சியமாக நோக்கி வினவினாள்.

மைத்துனியின் கைகளை மெல்ல விலக்கியவாறு யோகேந்திரன் எழ, "உனக்குத்தான். உனக்குத்தான் ஏதாவது பரிசு வாங்கிக் கொடுக்கலாம் என்று வரச் சொன்னேன்" என்று எரிச்சலை மறையாத குரலில் வெடுக்கென மொழிந்தாள் உதயா.

அவளது பேச்சின் பின் பகுதியைக் கண்டுகொள்ளாமல் ஒதுக்கி, "ஹையோ... எனக்குப் பரிசா? உங்களுக்குத்தான் என்மேல் எவ்வளவு அன்பு" என்று யோகேந்திரனைப் பார்த்து, விழி விரித்து, இமை கொட்டி வியந்தாள் பானுரேகா.

"இதையெல்லாம், உன் அக்காவிடம் சொல்லும்மா..." என்றவாறே யோகேந்திரன் சென்றுவிட, உதயா ஆத்திரத்துடன் தங்கையை உறுத்து விழித்தாள்.

"பானு, நீ நடந்துகொள்வது கொஞ்சமும் நன்றாக இல்லை. கொஞ்சம் அடக்கத்துடன் குடும்பத்துப் பெண்ணாக நடந்துகொள்" என்றாள் கோபத்துடன்.

அலட்சியமாக அவளைப் பார்த்தாள் பானுரேகா.

"ஏது? யாரிடம் இந்த அதட்டல், உருட்டல் எல்லாம்? வழக்கம்போல வாயை மூடிக்கொண்டு இராமல், ரொம்பத்தான் துள்ளுகிறாயே. திடீரென்று பேய், கீய் ஏதேனும் பிடித்துவிட்டதா?" என்று அவள் ஏளனமாகக் கேட்கவும் உதயா பிரமித்தாள்.

வழக்கம் போல் வாயை மூடிக் கொண்டு இராமல்!

ஆமாம்... பானு சொன்னது சரிதான். முன்பு செல்வத்திடம் இவள் இப்படிப் பழகியபோது, அமெரிக்காவில், ஆண், பெண் வேறுபாடின்றிப் பழகிய பழக்கம் என்று எண்ணினாளே தவிர, இப்படி உள்ளே தீ எரியவில்லையே.

என்ன காந்தல்! என்ன தவிப்பு!



ஏன்?

திடுமெனத் துலாம்பரமாய்த் தெரிந்த உண்மையில், உதயா தடுமாறிப் போனாள்.

ஆனால், இது நிஜம்.

கொஞ்ச நாட்களாகத் தலை தூக்கியிருந்த திருப்தியின்மை. தங்கையிடம் இந்த அனல் பறக்கும் கோபம்.

எல்லாவற்றுக்கும் இதுதான் காரணமா?

வாட்டி வதைத்த எல்லாவற்றுக்கும் என்ன காரணம் என்று புரிந்துவிட்டதாலோ என்னவோ, உதயாவின் மனதில் ஓர் அமைதி பரவியது.

இன்னமும் எல்லாம் சரியாகி விடவில்லைதான். ஆனாலும் சரியாகி விடும் என்ற நம்பிக்கை இருந்தது. அந்தத் திடத்தில், "ஏன் பானு. இப்படிச் செய்கிறாய்?" என்று தங்கையிடம் நேரடியாகக் கேட்டாள்.

தமக்கையின் அமைதி இன்னமும் ஆத்திரமூட்ட, அவளைக் குத்திக் கிழித்து விடுவாள் போலப் பார்த்து, "பின்னே?" என்றாள் சின்னவள் கொதிப்புடன். "யோகேந்திரனுக்கு சிங்கப்பூர், மலேஷியா, சிலோன் என்று இந்தப்பக்கம் எல்லா இடங்களிலும் தொழில் இருக்கிறதாமே. இனி, ஐரோப்பாவிலுமாம். ஊரில் கிடந்த பத்திரிகையில் இப்போதுதான் படித்தேன். உனக்குத் தெரியும்தானே? முன்னே வந்தபோதே, என்னிடம் நீ ஏன் சொல்லவில்லை? இங்கே உள்ளதை மூட்டைக் கட்டி விட்டு, நானும் அவரும், அங்கே பெரிய பெரிய ஊர்களில் ஜாலியாக வாழ்ந்திருப்போமே. ஆள் வேறு கம்பீரமாக இருக்கிறார். உதயா, நான் சொல்வதைக் கேள். எனக்கு யோகேந்திரனைப் பிடித்துப் போய் விட்டது. விட்டுக் கொடுத்து, நீ ஒதுங்கிவிடு. நீ நேரடியாகக் கேட்டாய். நானும் வெளிப்படையாகச் சொல்லிவிட்டேன். இனி, உன் வேலைதான் பாக்கி!" என்று முடித்தாள்.

என்ன துணிச்சல். இப்படிக்கூடப்., பேசுவாளா என்று தன் காதுகளையே நம்ப முடியாத நிலை உதயாவுக்கு!

அதுவும், உடன் பிறந்த அக்காவிடம்... தங்கை... தங்கை என்று உயிரையே விட்டதற்கு, நல்ல பலன் கிடைத்திருக்கிறது!

ஒருவாறு சமாளித்து "எங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதை மறந்து பேசுகிறாயே பானு?" என்று, மறந்ததை நினைவுப்படுத்தினாள் அவள்.

"பெரிய திருமணம். அதை உடைக்கத்தான் விவாகரத்து என்று ஒன்று இருக்கிறதே. அமெரிக்காவானால், அரை மணி நேரத்தில் கிடைக்கும்.

"ஆனால், இது இந்தியா. அத்தோடு, நான் அவரை நேசிக்கிறேன், பானு" என்று எடுத்துச் சொன்னாள் உதயா.

ஆனால், அதைக் காதுக் கொடுத்தே கேளாமல், "மற" என்றாள் பானுரேகா. "நீயாக விட்டுக் கொடுத்து விலகிவிடுவது உனக்கு நல்லது. அல்லது, உனக்கு வீண் வேதனைதான் மிஞ்சும்" என்றாள் மிரட்டலாக.

முன்னே என்றால், என்ன செய்திருப்பாளோ? இப்போது உள்ளிருந்த நேசம் திடம் தர, தலையைத் திருப்பிக் கொண்டு "உறவாதே" என்றாள் உதயா.

"உறவா?" என்று பானுவின் பார்வையில் பாம்பின் விஷம் தெறித்தது. செல்வம் வாயாலேயே சொன்னார், என்னை அறிந்த பிறகு உன்னை மணக்க முடியாது என்று! என்னோடு ஒத்துப் பார்க்கும்போது உன்னை யார் சீந்துவார், சொல்லு? என் இந்தரும், அப்படியேதான். என்னை அறிந்த பிறகு உன்னோடு வாழ முடியாது என்றுதான் கூறப் போகிறார். அதைக் கேட்டுத்தான் ஆக வேண்டும் என்றால், அந்த வேதனையையும் படு..."

அவள் சொல்வது போல ஆகாது என்ற நம்பிக்கை, உதயாவுக்கு இருந்தது.

ஆனால், இந்தத் தங்கையிடம் அவள் எவ்வளவு அன்பு வைத்திருந்தாள்! இவளுக்காக என்னவெல்லாம் செய்தாள்!

"அக்கா என்கிற பாசமே, உனக்கு இல்லையா, பானு?" என்றாள் உதயா வருத்தத்துடன்!

"பாசமா? இந்த நாலு ஆண்டுகளாக, அப்பா, அம்மாவுக்கு ஒரே பெண் போலச் செல்வம் கொஞ்சிக் கொண்டு இருந்தாயே. அங்கே நான், தன்னந்தனியே என்ன பாடு பட்டு, எனக்கு வேண்டியதைத் தேடிக் கொள்ள வேண்டியிருந்தது தெரியுமா? ஒத்துப் பார்க்கும்போது, எப்படி அன்பு வரும்?" என்று பதிலுக்குக் கேட்டாள் தங்கை.

என்னவோ, அவர்கள் ஆசைக்கு, வலுக்கட்டாயமாக, அனுப்பியது போலப் பேசுகிறாளே. அனுப்பாவிட்டால் உயிரை விட்டுவிடுவேன் என்று என்ன பிடிவாதம் பிடித்துப் போனாள்!

பொறுக்க மாட்டாமல், "ஆனால் உன் விருப்பப்படித்தானே, நீ போனதே. என் படிப்பைக் கூடப் பாதியில் நிறுத்தி..." என்றவளை இடைமறித்தாள் சின்னவள்.

"அதற்காகத் தியாகப் பட்டம் வேண்டுமாக்கும்? நீ தொடர்ந்து படித்திருந்தாலும் உன் களிமண் மண்டையில் படிப்பே ஏறியிருக்காது. அத்தோடு அதனால் உனக்கு என்ன குறைந்துவிட்டது? ஒரு பி.ஏ. வேலைப் பார்க்கத்தானே செய்தாய்? உன் அழகுக்கும் தகுதிக்கும்



அதற்குமேல் என்ன கிடைக்கும்? பெரிய பாசத் திருவுரு போலப் பேசுகிறாயே. எனக்குத் தகவலே தெரிவிக்காமல், அவ்வளவு அவசரமாக இந்தரைத் திருமணம் செய்து கொண்டாயே! ஏன் என்று எனக்கும் தெரியாது என்றா எண்ணினாய்? மணமாகுமுன் என்னைப் பார்த்துவிட்டால், அப்புறம், இந்தரும் செல்வத்தைப் போல உன்னைப் பிடிக்காமல் கைவிட்டு விடுவார் என்றுதானே?" என்றாள் உதாசீனமாக.

பானுரேகா பேசப் பேச, உதயாவுக்குத் துலாம்பரமாக இன்னொன்றும் தெரிந்தது.

தங்கை, தங்கை என்று, உடன் பிறந்தவளிடம் அவள் உயிரை வைத்திருக்க, அந்தத் தங்கை பானுவுக்கு, அவளிடம் பாசம் கொஞ்சம் கூட இருக்கவில்லை. ஒரு நாளுமே.

எல்லாம் தனக்கே வேண்டும் என்கிற சுயநலவெறி.

அதைவிடவும், உதயாவுக்கு ஒன்றுமே கிடைக்கக் கூடாது என்ற வெறி அதிகம்.

சின்ன வயதில் விளையாட்டுப் பொருட்களில் இருந்த வெறி, இப்போது, மனிதர்கள் வரை வந்திருக்கிறது!

கிட்டத்தட்ட நிச்சயிக்கப்பட்டிருந்த செல்வத்தை, வேண்டும் என்றே மயக்கி இழுத்திருக்கிறாள்!

இப்போது திருமணம் என்பதையே மதிக்காமல், யோகேந்திரனையும் எப்படியாவது கைப்பற்றி ஆக வேண்டும் என்ற வேகத்தில் இருக்கிறாள். பணம் அதிகப்படி தூண்டுதல்!

'உன்னையும் பார்த்துக் கொள் கண்ணு' என்று தாய் சொன்னது, உதயாவுக்கு நினைவு வந்தது.

'தாய்க்கு ஒளித்தொரு சூல் இல்லை' என்பது. இதைத்தான் போலும். பானுவைப் பற்றி அம்மாவுக்குச் சந்தேகம் தட்டியிருக்கிறது!

பாவம்! இவளால் இன்னும் என்ன வேதனைப் படப் போகிறார்களோ.

மற்றபடி யோகேந்திரன் பானுவிடம் மயங்கக் கூடும் என்ற பயம், உதயாவுக்கு வரவில்லை.

சும்மாவே, அவனுக்கு இன்றையப் பெண்களிடம் மதிப்புக் கிடையாது. அத்தோடு, பானுவின் தன்மையையும் அவன் ஏற்கனவே, சரியாகக் கணித்து வைத்துவிட்டான் என்பது, அவள் ஊகம்.

பானுவின் பெயரை எடுத்தாலே, ஏளனம் இழையோடப் பேசுவானே.

அதனால், அவளிடம் மயங்கமாட்டான் என்று எண்ணினாள்.

ஆனால், அவன் என்ன மாதிரி விஷயத்தை ஏற்றுவானோ? என்ன

மாதிரி இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்துவாளோ என்று, அதுதான் உதயாவுக்குக் கவலையாக இருந்தது.

இவளும் அப்படித்தான் என்று, யோகன் தன்னையும் வெறுத்து ஒதுக்கிவிட்டால்? இந்த ஒப்பந்தத் திருமணத்தையும் இவள் உடைத்துவிடுவாளோ என்று எண்ணும்போதே, உதயாவின் மனம் தவியாய்த் தவித்தது.

ஆனால், விடக்கூடாது. பானு என்ன சொன்னாலும் தன்னாலும் பேச முடியும்தானே?

உடை மாற்றப் போனவன் சீக்கிரமாக வந்துவிட்டால் நன்றாயிருக்கும் என்றிருந்தது அவளுக்கு!

ஆனால், அவன் வந்ததும், இவள் என்ன ஆட்டம் போடுவாளோ என்றும் இருந்தது.

இப்படி ஆவலும் பயமுமாக உதயா பார்த்துக் கொண்டிருக்க யோகேந்திரன், உடை மாற்றிக் கொண்டு, படியிறங்கி வந்தான். "சாரிம்மா. ஒரு ஃபோன் வந்ததால், சற்றுத் தாமதம் ஆகிவிட்டது" என்றபடி.

யோகேந்திரனின் எல்லாத் துணிகளுமே, சற்று உயர் தரமாகத்தான் இருக்கும். அந்த வகையில் பார்த்தால், இப்போது சாதாரண டீஷர்ட் தான் அணிந்திருந்தான்.

ஆனால், உதயாவின் தெளிவுபட்ட மனநிலை காரணமாகவோ என்னவோ, யோகேந்திரன் அவளது கண்களுக்கு மன்மதனாகக் காணப்பட்டான்.

ஆனால், இதையெல்லாம் வெளிப்படையாகப் பேசியோ, நெருங்கி உறவாடியோ பழக்கம் இல்லாததால், அவள் தயங்கி நிற்க, பானு அவனை நோக்கி வேகமாகச் சென்றாள்.

"இந்தர் டியர்" என்று ஆவலாகக் கையைப் பற்றி, "பயங்கரமான ஆளையா நீங்கள். இப்படிப்பட்ட உங்களை போய்ச் 'றேம் புலி முகம்' என்று..." என்று இழுத்தவள் உதயாவின் பக்கம் திரும்பி, "எப்படிக்கா, இந்த மாதிரி முகத்தை உன்னால் றேம் புலி... அதுவும் வெறும் புலி கூட இல்லை, றேம் புலி என்று உன்னால் சொல்ல முடிந்தது? ஒரு வேளை.... இன்னொருவர் மீது ஆசை வைத்திருந்ததால், உனக்கு அப்படியே தோன்றியிருக்குமோ?" தீவிர சிந்தனையோடு கேட்டாள்.

குரல் அப்படியிருக்க, யோகேந்திரனுக்கு முதுகு காட்டி நின்ற அவளது கண்கள் எகத்தாளமாக நகைத்தன.

பாவி! பயந்ததற்குச் சரியாகப் போட்டுக் கொடுத்துவிட்டாளே!

அன்று தங்கை என்று வேடிக்கையாகப் பேசியது...

இதில் எதை மறைப்பது?



இமை கூடத் தட்டாமல் பொய் சொல்லுகிற கலை, மகாபாவி இவளைப் போல, உதயாவுக்குக் கைவசமாகவில்லையே!

மீண்டும் யோகேந்திரன் புறமாகத் திரும்பி, "அது ஒன்றும் பெரிய விஷயம் அல்ல இந்தர் டியர், ஊரெல்லாம் அறிந்த விஷயம்தான். எங்கள் அம்மாவுடைய சிநேகிதி மகனிடம் அக்காவுக்கு பயங்கரமான 'இது' உண்டு. கல்யாணப்பேச்செல்லாம் கூட இருந்தது என்று கேள்வி. அப்புறம், நீங்கள் இவ்வளவு பெரிய காரில், இப்படி விலை உயர்ந்த வாட்ச்சும் உடையுமாக வந்து, மணக்கக் கேட்கவும், அக்காவுக்கு, மற்றது எல்லாமே மறந்து விட்டது! கூடப் பிறந்த ஒரே பிறவி! எனக்குக் கூடத் திருமணத்தைத் தெரிவிக்கவில்லையே! அப்புறம் காதல் மட்டும் எப்படி நினைவிருக்கும்?" என்றவள், பட்டென்று, வாய் மீது கையால் ஒன்று போட்டுக் கொண்டாள்.

"ஐயோ இந்தர், இதை உங்களிடம் சொல்லக் கூடாதோ? அக்காவைத் தப்பாக நினைப்பீர்களோ? அடடா. மறந்துவிடுங்கள் ப்ளீஸ். உங்கள் காலில் வேண்டுமானாலும் விழுகிறேன். தயவு பண்ணி மறந்து விடுங்கள்..." என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டாள்.

"ஆனால்... ஒரு விஷயத்துக்கு நான் 'காரண்டி' கொடுக்க முடியும், டியர்.. மனம் எப்படியிருந்தாலும் , முகம் மாறாமல் கடமை செய்வதில் என் அக்காவை யாரும் மிஞ்ச முடியாது. அந்த வகையில் நீங்கள்ரொம்ப அதிருஷ்டசாலி!" என்று தமக்கையைப் பாராட்டியும் பேசினாள் பானுரேகா.

உதயா பணத்துக்காக அன்பு காட்டுகிறவள் என்று, இதைவிடத் தெளிவாக யாரால் சொல்ல முடியும்?

அயர்ந்து போய் நின்றாள் உதயா!

செல்வத்தைப் பற்றி, யோகேந்திரனிடம், உதயாவே சொல்லியிருக்கிறாள்தான். அதிலும் கூட ஒரு கஷ்டம். திருமணப் பேச்சுவரை வந்ததையும் அவளே ஒப்பித்திருக்கிறாள்.

அதுவும் அழுதழுது!

அவனுக்காக அப்படி அழுதுவிட்டு, அது காதல் இல்லை, வெறும் தட்டிக் கழித்த உணர்வினால் ஏற்பட்ட வேதனையில் வந்த கண்ணீர் என்றால் கணவன் எப்படி நம்புவான்?

அத்தோடு, பானு சொன்ன 'றேம் புலி முகத்தை'யும் 'கடமை செய்யும் திறனை'யும் எப்படி மறுப்பது?

அவள் இணறுகையில், "கிளம்புவோமா?" என்று வாயிலை நோக்கி நடந்தான், யோகேந்திரன்.

மனைவி பேரில் இத்தனை குற்றம் சொல்லியிருக்கிறேன், வெறும் பாறாங்கல் போலப் போகிறானே, என்று முறைத்தாள் பானுரேகா.

கோபமாக.

வெளியே காட்டாதபோதும், யோகன் என்ன எண்ணுகிறானோ என்று கலங்கினாள் உதயா.

ஆசைப்பட்ட அவள் திட்டமிட்டிருந்த அன்றைய 'ஷாப்பிங்' அவளுக்குச் சித்திரவதையாக முடிந்தது.

அன்பான தங்கைக்கு நகைப்பரிசு கொடுக்க எண்ணியது.

இப்போது, அவள் விரோதியாகிவிட்டாள் வேண்டாம் என்று கணவனிடம் சொல்லவும் முடியாமல், பரிசு கொடுக்கவும் பிடிக்காமல் தவித்தது ஒரு பக்கம் என்றால், இங்கே, அங்கே என்று பானுரேகா, யோகேந்திரனை இழுத்துப் போக, லொங்கு லொங்கென்று அவர்கள் பின்னோடு வால் மாதிரி ஓட நேர்ந்ததை, மிகவும் அவமானமாகவும் உணர்ந்தாள் அவள்.

செல்வத்தோடு, பானுவை அனுப்பிவிட்டு நிச்சிந்தையாக இருந்தது போல இப்போது இருக்க முடியவில்லையே.

பிறகும், அவனுக்காகச் சொந்தத் தங்கையோடு போட்டிப் போட அசிங்கப்பட்டு அது வேண்டவே வேண்டாம் என்று ஒதுங்கிவிட்டாளே!

ஆனால், இப்போது என்ன அவமானமாக இருந்தபோதும், தங்கையையும் கணவனையும் பின்தொடர்வதை, அவளால் நிறுத்த முடியவில்லையே!

கையைப் பிடித்திருக்கிறானே, ஒட்டி நிற்கிறானே என்றெல்லாம் தவித்த ஒவ்வொரு வினாடியும், அவளுக்குப் பாடம் புகட்டுவதாகவே அமைந்தது.

பள்ளிப் பாடங்களில், இரு பொருட்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை விளக்குக என்று வருமே, அதுபோல, சேர்ந்து வளர்ந்த செல்வத்திடம் அவள் வைத்திருந்த அன்புக்கும், தாலி கட்டிய கணவனிடம் கொண்டிருந்த நேசத்துக்கும் உள்ள வேறுபாடு, அணு அணுவாகப் பிட்டுப் பிட்டு வைத்தாற்போல உதயாவுக்குப் புரிந்து போயிற்று.

ஆனால், தோளோடு சாய்ந்து நின்று, யோகேந்திரனின் காதுகளில் பானுரேகா, ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருப்பதை, அடிக்கடி பின்னிருந்து பார்க்க நேர்ந்தபோது, இந்த அன்பின் எதிர்காலம் ஒரு பெரிய கேள்விக் குறியாக தோன்றி, உதயாவைக் கவலையில் ஆழ்த்தியது.

அவளது கவலைக்கு அவசியமும் இருந்தது!

ஏனெனில், அவளது எதிர்காலத்தை அடியோடு இருட்டடித்து விடுவதற்கான திட்டத்தைத்தான், வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம், பானுரேகா, யோகேந்திரனின் காதுகளில் ஓதிக் கொண்டிருந்தாள்!

அதன் பலனாக, அடுத்தநாள் மாலையில் வேறு வேலை இருப்பதாகச் சொல்லி யோகேந்திரன் உதயாவை மட்டும் வீட்டுக்கு அனுப்பிவிட, அவள் வீடு சேர்ந்த சற்று நேரத்துக்கெல்லாம், செல்வம் அவள் முன்னே வந்து நின்றான்!





# இந்த மனம் எந்தன் சொந்தம் 15

**வே**லை இருப்பதாக கூறி யோகேந்திரன் அலுவலகத்தில் தங்கிவிட, தனியே வீடு திரும்பிய உதயாவுக்கு வழியெல்லாம் ஒரே யோசனை.

யோகேந்திரனுடைய பி.ஏ. அவள். அவளுக்குத் தெரியாமல், அவனுக்கு என்ன வேலை?

இதைப்பற்றி விடாப்பிடியாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும், அவளுக்குத் தைரியம் வரவில்லை.

சும்மாவே, இது வெறும் சிலபல வசதிகளுக்காகச் செய்த திருமணம்.

அதை உடைக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் பானு வேறு. யோகேந்திரனின் காதில் என்னென்ன ஓதினாளோ....?

தனியாக ஓதுவது என்ன முன்தினம், உதயாவின் முன்னிலையில் கூறியிருப்பதே போதாதா?

என்ன வேலை என்று கேட்பது போல, இரண்டொரு முறை பார்த்தால், யோகன் அந்தப் பார்வையைக் கண்டுகொள்வதாகவே இல்லை!

சற்று நின்று பார்த்துவிட்டு வழியின்றி வீட்டுக்குக் கிளம்பினாள் உதயா.

அவள் காரில் ஏறிக் கிளம்புவதை அலுவலறை ஜன்னல் வழியே பார்த்துவிட்டு, செல்ஃபோனை எடுத்தான் யோகேந்திரன்!

காரில் ஏறிய உதயாவின் மனம் அலைபாய்ந்து கொண்டே இருந்தது.

இரவு எவ்வளவு நேரம் ஆனாலும், அவன் வீடு திரும்பியதும் அவனிடம் தங்கையைப் பற்றித் தெளிவாகப் பேசிவிட வேண்டும்.

அப்படியே, அவனிடம் அவளது அன்பையும் கோடி காட்டி... காட்டலாமா, கூடாதா?

அவளும் பணத்துக்காக வருவதாக நினைத்தால்?

கட்டாயம் நினைப்பான். அதுதான், அந்தக் குரோதி, சொந்தத் தங்கை, தெள்ளத் தெளிவாகச் சொல்லி வைத்திருக்கிறாளே!

பல்வேறு சிந்தனைகள் அலைக்கழிக்க, தலையைப் பிடித்துக் கொண்டு உதயா அமர்ந்திருந்தபோது "உங்களைப் பார்க்க வந்திருக்கிறாங்கம்மா!" என்று பணிப்பெண் வந்து நின்றாள்.

வந்து பார்த்தால் செல்வம்!

அவளைப் பார்த்ததுமே, "உன்னிடம் தனியே பேசவேண்டும்" என்று கேட்டான் அவன்.

பாவம்! பானுவைப் பற்றிக் கேட்க போகிறான். இவன் மனதையும்

எவ்வளவு புண்படுத்தினாளோ என்று எண்ணியவாறே, அவளை மாடிக்கு அழைத்துச் சென்றான் அவன்.

அங்கேயும் பெரியதாக ஓர் அறை உண்டு. பெரும்பாலும் விருந்தினர் அறையாகப் பயன்படுவது.

வேலை நிமித்தம் இடையே குறுக்கும் நெடுக்கும் நடமாடும் பணியாட்கள், மாடிக்கு அழைத்தாலன்றி வருவதில்லை.

பானுவுக்காக, செல்வத்தின் மனம் உடைந்து, அவன் வருந்துவதை, அடுத்தவர் கேட்பது சரியில்லை என்று, அவளை அங்கே அழைத்துச் சென்றால், அவன் வேறு பேசினான்.

உதயாவைத் தன்னோடு கிளம்பி வந்து விடும்படி, அவன் அழைத்தான்.

"என்னது!" என்று அதிர்ந்து அவள் திகைத்தபோது, "ஆமாம் உதி. என்னால்தானே, உனக்கு இந்த வேதனை? எனக்காகத் தியாகம் செய்யப் போய்தானே, நீ இந்த முரடனிடம் மாட்டிக் கொண்டு வேதனைப்படுகிறாய்? போதும் இந்தத் துன்பம். பானு சொன்னபோது கூட நான் முழுதுமாக நம்பவில்லை. ஆனால், சோர்வாக உன்னைப் பார்த்த உடனேயே அவள் சொன்னதெல்லாம் உண்மை என்று எனக்குப் புரிந்து போயிற்று. உன்னை நான் காப்பாற்றுகிறேன் வா" என்றான் அவன்.

பானு சொன்னது என்றதுமே, தங்கையின் இன்னொரு முயற்சி என்று, உதயாவுக்குப் புரிந்து போயிற்று. பழைய உணர்வுகளைத் தூண்டிவிட முயற்சிக்கிறாள் போலும்.

ஆனால், அதற்கு இடம் தர, இவனுக்கு மூளை எங்கே போயிற்று?

"பானுவும் நீங்களும் காதலித்தீர்களே?" என்று வேண்டுமென்றே கேட்டாள் உதயா.

சற்றே அசடு வழிய, "அது... அது ஒரு மயக்கம் உதி! அசட்டு மயக்கம்! அதுபற்றிக் கூடப் பானு விளக்கிய பிறகுதான் எனக்கும் தெளிந்தது. அவளும் நானும் மணந்தால், அது, தவளையும் எலியும் இணைந்த மாதிரிதான் ஆகும். வாழ்க்கைக்குச் சரியே வராது. ஆனால் அதற்காக நீ இப்படி உன் வாழ்க்கையை தியாகம் பண்ண வேணுமா? என்மேல் எவ்வளவு அன்பிருந்தால் இப்படிச் செய்வாய்? இந்த அன்பே நம்மை வாழ வைக்கும் உதி!" என்று உருகினான் செல்வம்.

இவன் என்ன, யோசிக்கவே மாட்டானா என்றிருந்தது உதயாவுக்கு!

முதலில் தாயார் சொல்லி, உதயாவை மணக்கக் கேட்டான். பிறகு, பானுவின் நடவடிக்கையில் அவள் பக்கம் சாய்ந்தான். இப்போது அவள் வேறுமாதிரிப் பேசினால், அதையும் அப்படியே ஏற்றுக் கொண்டு வந்து நிற்கிறான்!

"எனக்கு மணமாகிவிட்டது என்று மறந்துவிட்டீர்களா செல்வம்?" என்று இவனுக்கும் நினைவுபடுத்தினாள் அவள்.

"பெரிய கல்யாணம்" என்றான் அவன் உதாசீனமாக. "அமெரிக்காவில் அரை மணி நேரத்தில் வெட்டிவிடலாம்."



அப்படியே பானு!

"அத்தோடு அத்தையையும் மறந்து பேசுகிறீர்களே!"

தாயின் நினைவில் செல்வத்தின் முகம் வெளுக்கத்தான் செய்தது! ஆனாலும் வீரமாக, "அம்மாவிடம் எடுத்துச் சொன்னால் புரிந்து கொள்வார்கள். முதலில் நீ இந்த நரகத்திலிருந்து கிளம்புவதுதான் முக்கியம். கிளம்பு... கிளம்பு.. உதி.. மணவிலக்கு, அது இது என்றால் பயமாக இருக்கிறதா? ஒன்றும் பயமில்லை, நானே துணிந்துவிட்டேன்...." என்று அவன்பேசப் பேச அவளுக்கு ஒரே வெறுப்பாக இருந்தது.

அதை அப்படியே முகத்தில் காட்டி "போதும் செல்வம்" என்றாள் அவள். "ஒரு காலத்தில், எப்படித்தான் உங்களை மணக்க நினைத்தேனோ என்று, இப்போது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. தயவு செய்து போங்கள்... செல்வம், உடனே போய்விடுங்கள்!" என்று அலுப்புடன் அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அறை வாயிற்புறமாக அரவம் கேட்டுத் திரும்பிப் பார்த்தால், பானுரேகாவும், யோகேந்திரனும் அங்கே நின்றனர்.

நாட்டியக்காரி போலக் கையைக் காட்டி "நீங்கள் இல்லாத நேரங்களில், இங்கே இப்படியா நடக்கிறது? இரண்டு பேரையும் விரட்டியடியுங்கள்.. இந்தர் டியர்" என்று உரிமையோடு, யோகேந்திரனுக்கு உத்திரவிட்டாள் பானு.

"ஆமாம்.. இரண்டு பேரும் போக வேண்டியதுதான்" என்றான் யோகேந்திரனும் தெளிவாக.

கணவனையும், தங்கையையும் பார்த்ததுமே, செல்வத்தைக் கீழேயே வைத்துப் பேசியிருக்க வேண்டுமோ என்று யோசித்துக் கொண்டிருந்த உதயா, கணவன் இப்படிக் கூறவும், இடி விழுந்தாற்போல அதிர்ந்து போனாள்.

**யோ**கேந்திரனின் இந்த அறிவிப்பின் பின்னே ஒரு சவால் இருந்தது.

முந்திய நாள் பானுவுக்குப் பரிசு வழங்குவதற்காக நகைக் கடையில் சுற்றிக் கொண்டிருக்கும்போது, யோகேந்திரன் அவளிடம் ஒரு கேள்வி கேட்டான்.

"பானு ரேகா, உதயா உன் சகோதரி. அவளைப் பற்றித் தப்பாக நினைக்கத் தூண்டும் விதமாக, நீ ஏன் பேசினாய்?" என்று அவளிடம் நேரடியாகக் கேட்டான்.

வெகுளித்தனமாகப் பேசுவது போல, ஜாடையாகக் குறிப்புக் காட்டி, ஒன்றுக்கு பத்து மடங்காக ஊதிக்கும்படி அழகாகப் பேசலாம். ஆனால், நேராகக் கேட்கும்போது, இந்த அலங்கார வேலைகள் செல்லுபடியாகாது.

என்ன சொல்வது என்று அவள் யோசிக்கையில், "ஒன்று நினைவில் வை, பானுரேகா. என் மனைவி, எப்போதும் என் மனைவியாகத்தான் இருப்பாள்!" என்று தெளிவாகச் சொன்னான் அவன்.

மனைவியாக இருப்பாளாமா? மாற்றிக் காட்டுகிறேன் என்று மனதிற்குள் சூளுரைத்தாள் பானுரேகா.

இதற்கு மேல், வெகுளிப் போர்வை தேவையில்லை என்று தோன்றிவிட்டது அவளுக்கு.

எனவே, பின்புறம் பார்த்து, உதயா இருக்கும் இடத்தைக் கண்டுகொண்டு, "அந்த நகையைப் பார்ப்போம்," என்று யோகேந்திரனைச் சற்றுத் தள்ளி அழைத்துச் சென்றாள்.

அங்கே நின்றுகொண்டு, "நீங்கள் மனைவி என்கிறீர்கள். ஆனால், கணவன் மனைவிக்குள்ள உறவு உங்களுக்குள் இல்லையே. உங்கள் அறைக்குள் சென்றதே இல்லை என்கிறாளே. நான் அழைத்தபோதுகூட, வர மறுத்துவிட்டாள்" என்றாள் அவள்!

உள்ளூரக் கடுத்தபோதும், "இது பெரிய விஷயமா? நான் உதயாவின் அறைக்குச் சென்றதில்லை என்றா நினைத்தாய்?" என்று இலகுவாகக் கேட்டான் அவன்.

கொஞ்சம் திகைத்தபோதும், கிடைத்த பிடியை அவள் விடுவதாக இல்லை. "எப்படியும் அவளுக்கு ஆர்வம் இல்லை என்பதுதானே, விஷயம்?" என்று விடாமல் கேட்டாள்.

"அதாவது?"

"சொல்ல வருத்தமாகத்தான் இருக்கிறது. உதயா வேண்டா வெறுப்பாக உங்கள் வீட்டில் இருக்கிறாள். அவள் மனசெல்லாம் செல்வத்திடம் இருக்கிறது. சமயம் கிடைத்தபோதெல்லாம் பழைய காதலனைச் சந்திக்கிறாள். ஒருநாள் பெரும் அதிர்ச்சி அடைவதற்குமுன், நீங்கள் முந்திக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் கவலைப்படுவீர்கள் என்று, வரப்போகும் பயங்கரத்தை எடுத்துச் சொல்லி எச்சரித்தாள் அவள்."

அவன் நம்பாமல் நோக்கவும், "நிரூபித்துக் காட்டுகிறேன்!" என்றாள் பானுரேகா.

"செய்து காட்டு!" என்றான் யோகேந்திரன் பதிலுக்கு!

இந்த வாய்ப்பை விடக் கூடாது என்று நினைத்தாள் பானுரேகா.

அவளுக்கு அமெரிக்காவில் தன் வேலையைத் தானே செய்து வெறுத்துப் போயிருந்தது. அந்த வேலைகளைச் செய்ய ஆள் தேடினால், சம்பாதிப்பதையெல்லாம் கொடுக்க நேர்ந்தது. நிறையப் பணம் கிடைத்தது. ஆனால், அதற்குக் கடுமையாக உழைக்க வேண்டியதாக இருந்தது.

யோகேந்திரன் மனைவியாக, உதயாவின் போகச் சிறப்பைப் பார்த்தாள்.

எல்லா வசதிகளுடனும் கூடிய பெரிய வீடு! திரும்பிப் பார்க்கும் இடமெல்லாம் கண்ணைக் கவரும் அழகிய கலைப் பொருட்கள்! ஏவியதைச் செய்யக் காத்திருக்கும் எத்தனையோ ஆட்கள்! உலகம் சுற்ற வாய்ப்பு!



எல்லாம் இவளுக்கா என்ற காந்தல்! எல்லாம் தனக்கே வேண்டும் என்ற ஆவல்! பேராவல்!

இரண்டும் சேர்ந்துகொள்ள, செல்வத்தைப் போய்ப் பார்த்தாள்.

அவனது செம்மறியாட்டு புத்தியைப் பயன்படுத்திக் கொண்டு, அவனைக் கிளப்பிவிட்டாள்.

உனக்காகத் தியாகம் செய்து, ஒரு முரடனிடம் மாட்டிக் கொண்டு உதயா தவிக்கிறாள் என்றதும் அவன் உருகிவிட்டான்!

உதயா பழமைவாதி, ஊர் உலகத்துக்கு பயந்து, முக்கியமாக யோகேந்திரனுக்குப் பயந்து, தான் கஷ்டப்பட்டாலும், பரவாயில்லை என்று இன்னமும் இதிலேயேதான் கிடந்து உழல எண்ணுவாள்... நீதான் பழசை நினைவுப்படுத்தி, அவளை அங்கிருந்து மீட்டு வர வேண்டும் என்றும் உசுப்பேற்றி, அவள் வீட்டில் தனியாக இருக்கும் நேரத்தில், அவளிடம் அவனை அனுப்பி வைத்தாள்.

உதயா தனியாக இருக்கும் நேரத்தை, தன் சொல்லை நிரூபிப்பதற்காக என்று யோகேந்திரன் உதவியுடனேயே உருவாக்கினாள்!

பானுரேகாவின் இளமை மலர்ந்த பருவத்தில் அவளைச் சுற்றிலும் அவள் பார்க்க நேர்ந்தது, வேறு விதமான கலாச்சாரத்தை.

கிட்டத்தட்ட திருமணம் வரை சென்ற உதயா, செல்வமும் ஓரளவேனும், அது போலப்பழகித்தான் இருப்பார்கள் என்ற அனுமானத்தில் தன் திட்டம் நிச்சயமாக வெற்றி பெற்றே தீரும் என்கிற நம்பிக்கையில், யோகேந்திரனோடு வீட்டுக்கு வந்தாள்.

அவள் எதிர்பார்த்தது போல, அவர்கள் இருவரும் கட்டிப் பிடித்துக் கொண்டு அழவில்லை என்றாலும், தனியறையில் இருந்ததே வெற்றியென்று கருதிப் பேசினாள்!

அதற்கேற்ப யோகேந்திரனும், இரண்டு பேரும் போக வேண்டியதுதான் எனவும் வெற்றிக் கனியை பறித்துவிட்டதாகவே எண்ணினாள்!

ஆனால், அறையினுள் சென்ற யோகேந்திரன், உதயாவின் அருகே சென்று அவளது தோளை அணைத்தபடி நின்று "முதலில் நீ" என்று பானுவை நோக்கிக் கையைக் காட்டவும், எல்லோரும் மீண்டும் ஒரு தரம் அதிர்ந்தனர்.

கணவன் முகத்தை அண்ணாந்து பார்த்துவிட்டு, உதயா ஒரு விசிப்புடன் அவன் தோளில் முகம் புதைக்க, "எ...எ...என்னது? நா...நானா..?" என்று திக்கித் திகைத்தாள் பானுரேகா.

"ஆமாம். நீயேதான். இனி உன் வேலைகளை, இந்த வீட்டுக்கு வெளியே வைத்துக்கொள்!" என்று இன்னமும் அழுத்தமாகவும் தெளிவாகவும் தெரிவித்தான் யோகேந்திரன்.

மனைவியை அணைத்திருந்த கை, அவளை மென்மையாக வருடியவாறு இருப்பதைப் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்த செல்வத்திடம் அடுத்துப் பேசினான், யோகேந்திரன்.

"மீண்டச் செல்வம்" என்று அழைத்து "நீங்கள் சீக்கிரமே ஒரு நல்ல பெண்ணைப் பார்த்து திருமணம் செய்து கொண்டு, அப்புறமாக, மனைவியோடு எங்கள் வீட்டுக்கு வாருங்கள். வெளியே உங்கள் காரைப் பார்த்தேன். இப்போது நீங்கள் செல்லும்போது இந்தப் பெண்ணைப் பரிதாபத்துக்குரிய அவளுடைய பெற்றோர் வீட்டில் கொண்டு விட்டுவிட்டுப் போங்கள்" என்றாள்.

மற்ற இருவரும் கண்ணுக்கு மறைந்ததும், மனைவியைப் பார்த்து "என்ன பயந்துவிட்டாயா?" என்று கனிவுடன் கேட்டான்.

"பின்னே நீங்க என்று வந்து பானு அப்படிச் சொல்லவும், நீங்கள் ஒத்துப் பாடுகிற மாதிரிச் சொன்னால், வேறு எப்படி இருக்கும்?" என்று பதிலுக்குக் கேட்டாள் அவள். "ஏன் அப்படிச் சொன்னீர்களாம்?" என்று சுருக்கக் குரலில் குறைப்பட்டாள்.

"என்ன செய்வது! அப்படி ஓர் அதிர்ச்சி கொடுத்தால்தான், அம்மையார் இப்படி நிற்கிறாள்! இல்லாவிட்டால், எவ்வளவு தூரத்தில் நீ நான் எப்போதும் அருகாமையில் இருக்கிற மாதிரி பக்கத்தில் வரவே பயந்து கொண்டல்லவா இருந்தேன்!" என்று கணவன் கூறவும் அதிசயமாக அவனைப் பார்த்தாள் உதயா.

"உங்களுக்குப் பெண்களைப் பிடிக்காதே" என்று வியப்புடன் வினவினாள்.

"அப்படித்தான் நானும் நினைத்துக் கொண்டிருந்தேன். ரத்தன் டாடா மாதிரித் தொழிலை மட்டும்தான் பார்க்க வேண்டும் என்று கூட எண்ணியிருந்தேன். அந்தகாலத்தான் ஆஹா! நல்ல வாய்ப்பு! கல்யாணமே இல்லாத கல்யாணம். அதுவும் உலக அதிசயமான ஒரு நல்ல, புத்திசாலியாகத் தொழிலைக் கவனிக்க உதவக் கூடிய ஒரு பெண்ணுடன் என்பதாக, அன்று உன்னை மணக்க முடிவு செய்தேன். ஆனால் யோசித்துப் பார்த்தால், அன்றைக்கே ஏதோ ஒரு விதமாக நீ இங்கே..." என்று நெஞ்சைத் தொட்டுக்காட்டி... "உள்ளே புகுந்து விட்டாய் என்று தோன்றுகிறது. அப்புறம்தான்..." என்று நிறுத்தி, ஒரு குறுகுறுப்போடு அவளைப் பார்த்தான் அவன்.

"அப்புறம்?"

"அப்புறமா? அதைச் சொல்லவேண்டுமானால் முதலில்..." என்று அவளை இறுக அணைத்து முத்தமிட்டான் யோகேந்திரன்.

சற்றுப் பொறுத்து, "இதைத் தொடங்கினால், அதை முடிக்கவே முடியாது போல இருக்கிறதே" என்று அவன் சிரிக்க, சிவந்த முகத்தை அவன் தோளிலேயே அழுத்திக் கொண்டு, "ப்ளீஸ், சொல்லுங்கப்பா" என்று ஆவலாகக் கேட்டாள் உதயா.

"சொல்லுவதற்குச் சரியாக, அங்கிருந்தும் வர வேண்டும். நினைவிருக்கட்டும்" என்று நிபந்தனையோடு பேசவே சொல்லலானான் யோகேந்திரன்.

"அன்று உன் வீட்டில் சிறிது விளையாடினோம், பார். உன்னை



இப்படி செல்லாம் பண்ண வேண்டும் என்று நாடி நரம்பெல்லாம் துடிக்க, ஒரே ஆசை. ஒரு சின்ன பிசகு நேர்ந்தாலும், நீ ஒரேயடியாக ஒதுக்கி, கல்யாணத்தையே நிறுத்தி விடுவாயோ, என்ற பயம்தான் என்னைக் கட்டுப்படுத்தியது என்று நினைக்கிறேன். கஷ்டப்பட்டுக் கட்டுப்படுத்திக்கொண்டு பார்த்தால், நன்றும் சென்றுமாக, நம் பிள்ளைகளோடு நீ நிற்பது போலப் பிரமை. அன்றிரவு பொட்டுத்தூட்ட நான் தூங்கவே இல்லை, தெரியுமா?"

"அன்றைக்குத்தான் உங்களைப் பற்றி என் அபிப்பிராயமும் அவ்வளவு உயரப் போனது" என்று ஒரு விரலால் வானத்தைக் காட்டினாள் உதயா. "மகாக் கண்ணியமான கணவன். அதே சமயம் சின்னப் பிள்ளைகளோடும் பிரியமாகப் பழகும் நல்லவர்... அப்படி இப்படி என்று...."

"என் மனம் மட்டும் தெரிந்திருந்தால்... ஆனால் என் மனைவியைப் பற்றி, நான் அப்படி நினைத்தது ஒன்றும் தப்பில்லையே!" என்று அவன் தனக்குத்தானே வக்காலத்து வாங்கிக் கொள்ள அவள் சிரித்தாள்.

"ஆனால் இவ்வளவு நினைத்தவர், ஒன்றுமே காட்டிக் கொள்ளவில்லையே" என்று கேட்டாள்.

"அதுதான் சொன்னேனே, பயம் என்று. ஆனால், சின்னச் சின்ன விஷயங்களிலும், எவ்வளவோ பார்த்துப் பார்த்துப் பரிவாக நடந்தபோதும், அது உன்னைத் தொட்ட மாதிரியே தெரியவில்லை. நீ கவனித்த மாதிரியே தெரியவில்லை...."

"இல்லை.... இல்லை.. கவனித்தேன். நல்ல குணம் என்று எண்ணினேனே தவிர, எனக்காகச் செய்ததாக எதையும் நினைக்கவில்லை. அம்மா, அப்பாவிடம் கூடப் பிரியமாக இருக்கவில்லையா?"

"ஆனால், அவர்கள், உன் அம்மா, அப்பா இல்லையா?" என்று அவன் கேட்கவும் "ஓஹோ!" என்று அவளது கண்கள் விரிந்தன.

புன்னகை செய்து, "நம்மை நினைவிலேயே இருக்கிறாய். அவள் வந்து போன பிறகு, உன்னிடம் நம்மைப் பற்றிப் பேச நினைத்தேன். ஆனால், அவள் என்னிடம் பழகுவதைப் பார்க்கும்போது உன் மாற்றம், எனக்கு எவ்வளவு நம்பிக்கையைக் கொடுத்தது தெரியுமா? ஆனால், உன் அந்த மாற்றங்களின் காரணம், உனக்குப் புரிய வேண்டுமே. நல்ல வேளையாக, அதற்கும் அந்தப் பெண் பானுவே ஏற்பாடு செய்தாள். ஆனால், உன்னை விரட்டி விடலாம் என்று அவள் திட்டமிட்டது தெரிந்தே அதை என் வசதிக்குப் பயன்படுத்திக் கொண்டேன். எப்படி?" என்று சிரித்தான்.

"எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், நான் செல்வத்திடம் இணங்கியிருந்தால்?" என்று கேட்டாள் உதயா.

"மாட்டாய் என்பது எனக்கு நிச்சயம். முதலில் இருந்து நினைத்துப் பார். உன் தங்கை அப்போதே இப்படித்தான் இருந்திருப்பாள். இந்த

தொட்டுத் தடவலைச் சொல்லுகிறேன். ஆனால், அவனோடு, செல்வத்தை அனுப்பியதாக என்னிடம் சொன்னாயே. அப்புறமும் பாறுவை விலக்கி, செல்வத்தை மணக்க வேண்டும் என்று ஒரு தரம் கூடக் கூறவில்லையே. அழுதாலும் கூட, அவர்களுக்கு வசதியாக விலகிவிடத்தானே முடிவு செய்தாய்? அதிலிருந்தே தெரியவில்லையா?" என்று அவன் கேட்கவும் ஒப்புதலாகத் தலையாட்டினாள் உதயா.

"ஆனால், அது உனக்குச் சரியாகப் புரிந்ததா என்பது மட்டும்தான் என் பிரச்சினை!" என்றான் யோகேந்திரன் தொடர்ந்து.

"நீங்கள் சொல்வது சரிதான். என்னை நான் முழுமையாக உணர்ந்ததே அதில்தான். அதற்குமுன், வாழ்க்கையில் ஒரு மாதிரியான திருப்தியின்மை தோன்றியபோதும், இன்னதுதான் என்று புரியாமல்தான் இருந்தேன். ஆனால், பாறு உங்களைத் தொட்டுத் தடவிப் பேசியபோது, என் உடம்பெல்லாம் காந்தியது, பாருங்கள். அப்ப்...பா... அப்போதும், அவன்தான், முன்னே மாதிரி சும்மா இருப்பதுதானே என்றபோதுதான், என் மனம் எனக்குத் தெளிவாகப் புரிந்ததே. அவள் கேளாமலே செல்வத்தை விட்டுக் கொடுத்த எனக்கு, இப்போது நேரடியாக விட்டுக் கொடு என்று கேட்டபோதும் முடியாது என்றுவிட்டேன். அந்த வகையில் அவள் நமக்கு நல்லதுதான் செய்திருக்கிறாள்!" என்றாள்.

"ஐயோ! அதற்காக அவளுக்கு இன்னும் ஏதேனும் நல்லது செய்யக் கிளம்பி விடாதேம்மா... ஒரு லட்ச ரூபாய்க்கு நகை வாங்கிப் பரிசு கொடுத்தாயிற்று. அது போதும். ஆனால் ஒரு குறை! உன் தங்கை என்கிற ஒரே காரணத்துக்காக, அவ்வளவு பணம் செலவு செய்து பரிசு வாங்கிக் கொடுத்திருக்கிறேன். நன்றி என்று கூட ஒரு.... அதிகமில்லை, இந்த கையில் ஒரு சைவ முத்தமேனும் கொடுத்திருக்கலாமில்லையா?" என்று குறைப்பட்டான் அவன்.

"அடடா! அதற்கெல்லாம்தான் அப்போது, தைரியமே இருக்கவில்லையே. இப்போது வேண்டுமானால்..." என்று கணவனின் கையைப் பற்றினாள் உதயா.

"ஊகூம். இனிமேல் வெறும் சைவம் எல்லாம் தாங்காதம்மா!" என்று மனைவியை இறுக அணைத்தான் யோகேந்திரன்.

// முற்றும் //

---

விவேக் பப்ளிகேஷன்ஸ் சார்பில் வெளியிடுபவரும், ஆசிரியரும்:
எஸ்.பி. ராமு, 6/84, மல்லன் பொன்னப்பன் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
அச்சிட்டவர் : எஸ்.பி. மெய்யப்பன், எஸ்.பி.எம். பைன் ஆர்ட் பிரிண்டர்ஸ்,
சென்னை - 600 005. ஆசிரியர் எஸ்.பி. ராமு.
தொலைபேசி : 28487533, 28483163.